www.tamilarangam.net

# சிந்தனை

தொகுதி -IX
இதழ்-I

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பங்குனி -2004

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொகுதி -IX பங்குனி -2004 இதழ்-I

# சிந்தனை

ஆசிரியர்
பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன்

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
மார்ச்-2004

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come from University scholars and the National scholarly community.

**Editor** **Prof.Karthigesu Kugabalan,**
B.AHons(Cey) M.A, Ph.D(Jaf)
Post M.A Dip.in Population Studies (Madras)
Dept of Geography, University of Jaffna.

**Associate Editor** **Dr.S.Sivalingarajah,**
B.A Hons, M.A, Ph.D (Jaf),
Dept of Tamil, University of Jaffna.

**Managing Editor** **Prof.S.Krishnarajah**
B.A Hons(Jaf), M.A (Mysore)
Dept. of History,
University of Jaffna,

**Editorial Board**
**Prof.N.Ganakumaran** M.A, Ph.D
**Dr.M.Vedanathan** M.A, Ph.D
**Mrs.S.Krishnakumar** M.A
**Dr.P.Pushparatnam** M.A, Ph.D
**Mr.M.Sinnathamby** M.A, M.Phil,
**Dr.K.Visakaruban** M.Phil, Ph.D
**Mrs.K.Reveendra** M.Phil,
**Mr.T.Sanathanan** M.Phil,

Editorial Communications should be addressed to the Editor.

Business Communications should be addressed to the Managing Editor

Books for review should be sent to the Editor.

**Annual subscription** Local: Rs 600/= Foreign: £ 20 : $30

**Published by** The Faculty of Arts, University of Jaffna, Jaffna, SriLanka.

**Printed by** Harikanan Printers, K.K.S Road, Jaffna.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிந்தனை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜூலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்: பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, சமயம், நாகரிகம் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

- **சிந்தனை**யில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி, பல்கலைக்கழக சிரேஷ்ட ஆய்வாளர்களாலும், இலங்கையின் ஏனைய சிரேஷ்ட ஆய்வாளர்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

- **சிந்தனை**யில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைத் தட்டச்சில் பதிப்பித்து ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

- **உசாத்துணை** விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள்.

  நூல் எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, பதிப்பு விபரம், வெளியிடப்பட்ட இடம், வெளியிட்டோர் விபரம்.

- **கட்டுரை** அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள், பதவிகள், அலுவலக முகவரி ஆகிய விபரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தாளில் குறித்து அனுப்புதல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

- **சந்தா** கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு இலங்கையில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும் பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்பு கொள்க.

- **ஆண்டுச் சந்தா** விபரம்: உள்ளூர் ரூபா 600.00 வெளியூர்: £ 20 அல்லது : $30

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கட்டுரை ஆசிரியர்கள்

01) கலாநிதி நா.ஞானகுமாரன்
B.A Hons(Kelaniya), M.A,(Jaffna),
PhD(Jabalpur)
இணைப்பேராசிரியர்,
மெய்யியற்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

02) திருமதி சிவராணி சிறீசற்குணராசா
B.A Hons, M.Phil (Jaffna)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்- II
யாழ். பல்கலைக்கழகம்.

03) க.இரகுபரன்
B.A Hons (Jaffna),
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை
தென்கிழக்குப்பல்கலைக்கழகம், ஒலுவில்.

04) திருமதி.சிறிகலா ஜெகநாதன்,
B.A Hons, M.Phil(Jaffna)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்- II
தலைவர், சமஸ்கிருதத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

05) கலாநிதி.கி.விசாகரூபன்
B.A Hons, M.Phil(Jaffna),
P.G.Dip.in.J.M.C(Madurai)
P.G.Dip.in.T.A(Karaikkudi)
Ph.D(Thanjavur)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்- II
தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

06) திருமதி.விஜயலட்சுமி சிவச்சந்திரன்,
B.A Hons,(Cey), M.A(Jaffna)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்- I
சமஸ்கிருதத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

07) மா.சின்னத்தம்பி,
B.A, B.Phil(Hons) (Colombo)
M.A, (Econ) M.Phil (Edu) (Jaffna)
Dip.Ed (Jaffna)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்-I
தலைவர், கல்வியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

08) கலாநிதி மா.வேதநாதன்,
B.A Hons, M.A(Jaffna)
Ph.D(Thanjavur)
Dip.in.Saivasiddhanta (Annamalai)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்- I
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

09) கலாநிதி ம.இரகுநாதன்,
B.A Hons, M.A, Ph.D(Jaffna)
சிரேஷ்டவிரிவுரையாளர், தரம்- I
தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

10) ஸ்ரீர.தர்ஷனன்,
B.Music
விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

11) கலாநிதி கா.குகபாலன்
B.A Hons(Cey), M.A, Ph.D(Jaffna)
Post. M.A. Dip.in.Population Studies(Madras)
இணைப்பேராசிரியர்,
தலைவர், புவியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்

01) சமகால நோக்கில் இலங்கையில் சைவசமயம் - ஓர் ஆய்வு 01
**நா. ஞானகுமாரன்**

02) யாழ்ப்பாணத்தமிழில் பால்காட்டும் பெயராக்க உருபுகள் 16
**சிவராணி சிறீசற்குணராசா**

03) தமிழிலக்கணப்பாற்பகுப்பின் அடிப்படை 23
**க. இரகுபரன்**

04) மிருச்சகடிகம் சமகாலசமூகத்தைப் பிரதிபலிக்கும் சமஸ்கிருதநாடகம் 35
**சீறிகலா ஜெகநாதன்**

05) நடப்பியல் - ஓர் அறிமுகம் 45
**க. வீசாகரூபன்**

06) சிவானந்தலஹரி காட்டும் பக்திநெறி 54
**விஜயலட்சுமி சிவச்சந்திரன்**

07) தொழில்வாய்ப்பு மற்றும் பல்கலைக்கழகங்கள்: அடிப்படையும் பிரச்சினைகளும் -வளர்முக நாடுகளை அடிப்படையாகக் கொண்டது 62
**மா. சின்னத்தம்பி**

08) கந்தபுராணம் காட்டும் முருகவடிவங்கள் 76
**மா. வேதநாதன்**

09) டானியலின் படைப்புக்களில் நடைநயம் 94
**ம. இரகுநாதன்**

10) தென்னிந்திய சாஸ்திரீய இசையில் 32 தாய்ராகப் பட்டியலை நடைமுறைக்குக் கொண்டுவருதல் - ஓர் ஆய்வுக்கண்ணோட்டம். 105
**ஸ்ரீர. தர்ஷணன்**

11) மாறிவரும் பால்விகிதமாற்றத்தில் பெண்கள்: ஒரு சமூக குடிப்புள்ளியியல் நோக்கு 111
**கா. குகபாலன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமகால நோக்கில் இலங்கையில் சைவசமயம் - ஓர் ஆய்வு

பேராசிரியர் நா.ஞானகுமாரன்,


## ஆய்வுச்சுருக்கம்

*இலங்கையில் தொன்மை கொண்டமைந்த சைவநெறியானது சமகாலச்சிந்தனைப் போக்கில் எவ்வாறான செல்நெறியைக் கொண்டு விளங்குகின்றதென்பதுடன் அதன் வளர்ச்சிப் பாங்கினையும் ஆராய்கின்றது. இலங்கையில் நிலவும் பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களில் சைவசமயத்தின் தாக்கங்களும் செல்வாக்குகளும் எவ்வகையில் அமைந்துள்ளமை என்பதனைச் சுருக்கமாக எடுத்தாளும் வகையில் சமகால நோக்கில் சைவசமயத்தின் போக்கினை விளக்கி நிற்பதாகின்றது.*


**சைவசமயமும் அதன் வளர்ச்சியும்**

சைவ சமயமானது இந்தியாவில் தொன்மைக்குரிய ஒரு நெறியாக விளங்கி வந்துள்ளமை காணலாம். இந்து எனும் பதமானது இந்து நதிக் கரையில் வாழ்ந்த மக்களைச் சுட்டிய வகையில் இந்திய மக்களைச் சுட்டிய ஒரு பொதுப் பெயராக திகழ்ந்தமை யைக் காணலாம்.[1] இந்து நதிப் பள்ளத் தாக்கில் அமைந்த நாகரிகமானது உலக நாகரிக வளர்ச்சியில் தொன் மைக்குரிய தென்பதில் ஆய்வாளர் களிடையே கருத்து வேறுபாட்டின் மைக்குரியதாகும். இந்தியாவில் நிலவிய வைதிக, அவைதிக தத்துவங்களானவை இந்து தத்துவங்கள் அல்லது இந்திய தத்துவங்கள் அல்லது இந்து சமயங்கள் அல்லது இந்திய சமயங்கள் என அழைக்கப்பட்டன. இந்து சமயமானது சைவம், சாக்தம், வைஷணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. சைவ சமயமானது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் நெறியாகும் சாக்தம் வைஷ்ணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், ஆகிய நெறிகளும் சக்தி, வாசுதேவன், கணபதி, முருகன், சூரியன் ஆகியன வற்றை முறையே முழுமுதற்கடவுளரா கக் கொண்டு விளங்குபனவாகும்.

சிவசம்பந்தமுடைய நெறி சைவ மாகும். சைவ சமயத்திலும் பல்வேறு பட்ட பிரிவுகளைக் காணலாம். இப் பிரிவினர்கள் தம்முள் வேறுபட்டு அமைவதற்கு அவர்களது தத்துவச் சிந்தனைகளும் நடைமுறைக் கிரிகை களும் காரணங்களாயின. இவர்களில் சில பிரிவினர் காத்திரமான வகையில் செல்வாக்குப் பெற்றவர்களாக அமைந் தனர். சிலர் குறிப்பிட்ட காலங்களில்

www.tamilarangam.net

செல்வாக்குக்கு உரியவர்களாக விளங்கிப் பின்னர் செல்வாக்கற்று வழக்கொழிந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். சில பிரிவினர் பற்றி கேள்வியறிவு நிலையில் அதாவது அவர்களின் சிந்தனை, வழிபாட்டு முறை ஆகியன பற்றிப் போதிய தகவல்களின்றி அறியப் பெறும் துரதிஷ்ட நிலைக்குரியதாகும். எனினும் இப்பிரிவினர் அனைவரும் சிவனை முழுமுதற் கடவுளராக ஏற்று நிற்கின்ற நிலையில் சைவர்களாக எடுத்தாளத்தக்கதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இச் சைவர்கள் சிவனைப் பொதுவில் உருத்திரன், சர்வன், உக்ரன், பவன், ஓம்காரன், பிரமா, பசுபதி, மகாதேவன், பரமேஸ்வரன், வாமதேவன், சிவரிஷி, ஈசானன், அசனி, சங்கரன், பரமசிவன், மகேஸ்வரன், ஈஸ்வரன் எனப் பல நாமங் கொண்டழைத்தனர்.

கடந்த நூற்றாண்டுகளில் சிந்துவெளிப் பள்ளத்தாக்குகளில் குறிப்பாக மொகஞ்சதாரோ (Mohenjodaro) ஹரப்பா (Harappa), சன்குதாரோ (Chanhudaro) ஆகியவிடங்களில் நிகழ்ந்த அகழ் வாராய்வுகள் சைவத்தின் பழமையை எடுத்தாண்டன.[2] இதன்வழி வேத உபநிடத காலத்திற்கும் முற்பட்டதான காலத்திற்கு உரியதெனச் சைவம் எடுத்தாளப்படுவதாயிற்று. திரிசூலம் கொண்டதும், மூன்று தலைகளைக் கொண்டதும், அரைக்கண் திறந்த நிலையில் யோக நிலைக்குரிய வகையில் அமைந்ததும், ஒளிக்கதிர்கள் சுற்றியமைய நடன நிலையைக் கொண்டதுமான உருவங்கள் சிவனைக் குறித்து நிற்கின்றன என ஆராய்ச்சியாளர்களால் சுட்டப்பட்டன. மேலும் அங்கு கிடைக்கப்பெற்ற அதிக எண்ணிக்கையான இலிங்கங்களும் சைவசமயக் கிரிகைகள் தொடர்பான பல சான்றாதாரங்களும் இக் கருத்தினையே வலியுறுத்துவதாக அமைந்தது. இச் சிந்துவெளி நாகரிகமானது ஏறத்தாள கி.மு.3000 - கி.மு.1500 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குரியன என அகழ்வாராய்ச்சியாளர்கள் எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுண்மையானது சைவத்தின் தொன்மையினைத் தெளிவுற எடுத்தாள்வதுடன் உலகச் சமயங்களுள் பழமைக்குரிய ஒரு நெறியாகவும் எடுத்தாளத்தக்க வகையில் அமைந்தமை அறியத்தக்கதாகும்.

வேதங்களில் உருத்திரன், பசுபதி ஆகிய கடவுள் பற்றிப் பெரிதும் பேசப்பட்ட தன்மையைக் காணலாம். வேதங்களில் உருத்திரன் பற்றிப் பேசப்பட்டதே பின்னர் சிவனென வழங்கப்பட்டதாகப் பல ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். எனினும் பிஸ்வால் போன்ற ஆய்வாளர்கள் இருக்கு வேதத்தில் சிவ எனும் சொல்லாட்சியானது இடம் பெற்றுள்ளமையினைச் சுட்டுதல் காணலாம். இருக்கு வேதத்துதிப் பாடலில் பதினொரு இடங்களில் இச்சொல்

www.tamilarangam.net

லாட்சியானது அமைவது காணலாம்.[3] வேதத்துதிப்பாடல்களில் இடம் பெற்ற சிவ எனும் சொல்லாட்சிகளானது பெரிதும் அடைச் சொற்களாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. சிவன் எனும் சொல் உருத்திரனைக் குறித்து நிற்கும் ஒத்த சொல்லாக எடுத்தாளப்ப டாவிடினும் வேதக் கடவுளரின் பண் பிற்குரிய விவரணப் பெயராகச் சுட்டப் பெற்றமை அறிதற்குரியதாகும். சுவே தாஸ்வர உபநிடதத்திலும் உருத்தி ரனின் இயல்பினைச் சுட்டுவதாய் சிவன் எனும் பெயர் பல பகுதிகளில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[4] உருத்திரன் துன்பத்தை நீக்குதலும் இன்பத்தை அருளுதலும் ஆகிய இருநிலைத் தொழிலைச் செய்பவராக உள்ளார் என வேதவாக்குகளைக் கொண்டு நாராயணஐயர் எடுத்தாண்டார்.[5] சிவன், உருத்திரன் ஆகிய இரு சொற்களும் பாவம் அல்லது துன்பத் தைத் துடைப்பவர் என்பதை விளக்கு கின்றது. இதுபோலவே சிவனும் செம்மை உணர்த்தவும் மங்கலப் பொருள் உணர்த்தவும் எடுத்தாளப்படுதல் ஒப்பு நோக்கத்தக்கதாகும். உருத்திரன் சில சந்தர்ப்பங்களில் தீய, கொடுஞ்சின முடையவனாக வேதங்களில் எடுத் தாளப்படுதல் காணலாம். இத் தன்மைக் குப் பொருந்துவதுபோல சிவன் சினங் கொண்டவனாகவும் சிவந்த நிலைக் குரியவனாகவும் அர்த்தப்படுத்துதல் காணலாம்.

வேத உபநிடதங்களில சைவசமயக் கடவுளர்களின் கருத்தமைவுகள் காணப்படுவது போல பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம் ஆகிய னவற்றிலும் சிவன் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருத்தல் காணணுதற்குரி யதாகும்.[6] சங்க இலக்கியங்களில் சிவ எனும் சொல்லானது நேரடியாகப் பயன்படுத்தப்படாது விட்டபோதிலும் வேறு பல சொற்களால் சுட்டப்பட்டி ருத்தல் காணலாம். ஐம்பெரும் காப்பி யங்களில் ஒன்றான மணிமேகலையில் சமயக் கணக்கா தம்திறங்கேட்ட காதையில் சைவவாதியின் கொள்கை எடுத்துரைக்கப்படுதல் காணலாம். 'இறைவன் ஈசன் என நின்ற சைவ வாதி' எனக் குறிப்பிடப்படுவதன் வழி ஈசனை முழுமுதற் கடவுளராகக் கொண்டவர்கள் சைவவாதி என்பது தெளிவுறுத்தப்படுகின்றது.[7] மேலும் 'துயர்தீர் தோற்றத்தோனும்' எனும் கூற்றும் சிவனது இயல்பினை எடுத் தாள்வதாகின்றது. சிலப்பதிகாரத்தி லும் சிவன் பற்றிய செய்திகள் இரு விடத்தில் வருவது காணலாம்.[8] இவ்வா றான வளர்ச்சியின் தொடர்ச்சியில் சைவசமயமானது ஏழாம் நூற்றாண்டு களில் தேவார முதலிகளாலும் இதர நாயன்மார்களின் பங்களிப்புகளாலும் மறுமலர்ச்சி கண்டதெனலாம். பதினெண்ணாயிரம் பாடல்களுக்கு மேலாக உள்ள திருமுறைகளுக்கு பிற்படத் தத்துவ ரீதியான செழுமைக் குரியதாய் பல நூல்கள் சைவம் சார்ந்ததாய் தென்னாட்டில் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

**இலங்கையில் சைவம்**

இந்தியத் துணைக்கண்டத்தில் எழிச்சி கண்ட சைவமானது அயல் நாடுகளான இலங்கை, நேபாளம், இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், மாலைதீவு, போன்ற பல நாடுகளிலும் பரவிச் செல்வாக்கோடு விளங்கியமை காணலாம். பிற்பட சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் பல்வேறு காரணங்களினால் இடம் பெயர்ந்து பிற நாடுகளில் குடிபெயர்ந்த போதில் அங்கும் இச்சமயம் செல்வாக்குற் குரியதாக விளங்கியதுடன் வளர்ச்சிக் குரியதாக அமைந்தமை குறிப்பிடத் தக்க தாகும். இவ்வகையில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன், அவுஸ்ரேலியா, கனடா, போன்ற நாடுகளிலும் தற்சமயம் சைவர்கள் பரவி வாழ்ந்து வருதல் காணலாம். இலங்கையைப் பொறுத்த வரை சைவமானது தொன்மை சான்ற ஒன்றாக விளங்கியமை குறிப்பிடத்தக்க தாகும். தென்னிந்தியாவில் சைவமா னது செழிப்போடு வாழ்ந்த நிலையில் புவியியல் ரீதியாக இந்தியாவிற்கு அயலாக விளங்கிய இலங்கையிலும் சைவத்தின் வளர்ச்சி தொன்மை சான்ற வகையில் தாக்கத்தினை ஏற்படுத் தியிருந்த தெனக்கருதவிடமுண்டு. பழம்பெரும் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் தீவிர சிவபக்தனாக இராவணன் எடுத்தாளப்படுகின்றான். இலங்கையை ஆட்சி செய்த இராவணன் இலங்கேஸ்வரன் என அழைக்கப்பட்டான். இவன் சிவனை மெய்யன்போடு வழிபட்டு சிவனிட மிருந்து பல வரங்களைப் பெற்றதாக இராமாயணம் எடுத்துரைப்பது காண லாம். ஆறாம் நூற்றாண்டுகளின் பின்னர் சைவ வளர்ச்சியானது நாயன் மார்களினால் பெரிதும் வழிநடாத் தப்பட்டது எனலாம். நாயன்மார்களி னால் பாடப் பெற்ற திருப்பாடல்கள் சைவசமய எழிச்சிககு வழிவகுத்தன. சமய குரவர்களில் முதன்மைக்குரியவரான திருஞானசம்பந்தர் இலங்கையில் உள்ள இரு சிவதலங்களையிட்டுப் பாடல்கள் பாடியமை காணலாம். திருக்கோணா மலையில் உள்ள திருக்கோணேஸ்வரப் பதியையும் மன்னாரில் மாதோட்ட நகரில் அமைந்துள்ள திருக்கேதீச்சரப்பதியையும் முன்னிட்டுப் பத்துப் பாடல்கள் கொண்ட திருப்பதிகங்கள் பாடியமையைக் காண லாம். பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளுக்குள் இவ்விரு திருப்பதிகங்களும் உள்ளடங்குதல் காண லாம். மேலும் அருணகிரிநாதரும் திருக்கோணாமலை திருத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளமை காணலாம். இராவணன் வழிபட்டதலம் என இதனைப் புராணங் களிலும் தேவாரங்களிலும் சுட்டப்படும் வகையில் இவ்வாலயத்தின் சைவம் சார்ந்த பெருமை கி.மு.6000 ஆண்டு களுக்கு முற்பட்டதெனக் கருதவிட முண்டு.[9] திருக்கோணேஸ்வரப் பதிகத் தைப் போல திருக்கேதீச்சரத்திருத்தலம் பற்றி திருஞானசம்பந்தநாயனார் பாடி யது போல சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரத்திருப்பதிகம் பாடியுள்ளமை நோக்கத்தக்கதாகும். திருமந்திரம்

www.tamilarangam.net

படைத்த திருமூலநாயனார் தனது நூலில் ஈழத்தைச் 'சிவபூமி' என அழைத்தமை காணலாம். இது ஈழத்தில் சிறப்புடன் விளங்கிய திருத்தலங்கள் பற்றிய சிறப்பினையும் சைவம் கொண்டிருந்த உயர்வினையும் சுட்டாமல் சுட்டும் தரத்திற்குரியதெனலாம். மேலும் தமிழகத்தில் இருந்த பல சைவ அருளாளர்கள் ஈழத்தில் உள்ள பல திருத்தலங்கள் பற்றி அவ்வப்போது பாடியுள்ளமையும் காணலாம். அருணகிரிநாதர், குமாரகுருபரர் ஆகியோர் ஈழத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கதிர்காமக்கந்தன் பற்றிய அருட்பாடல்கள் பாடியுள்ளமை ஈங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை ஒரு சிறு தீவாக விளங்குகின்ற போதிலும் பல சமயங்கள் நிலவும் ஒரு நாடாகும். பௌத்த மதம் பெரும்பான்மையான மக்களினால் கைக் கொள்ளப்படுகின்ற போதிலும் இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியனவும் இங்கு விளங்குதல் அறிதற்குரியதாகும். தொன்மையான காலத்திலேயே பௌத்தமும் இந்துமதமும் இந்தியாவிலிருந்து இங்கு வந்தவையாகக் கொள்ளப்படுகின்றன. பௌத்த மானது சிங்கள இனத்தவராலும் இந்துமதமானது தமிழர்களாலும பின பற்றப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கதாகும். கிறிஸ்தவமும் இஸ்லாமும் அந்நியரின் படையெடுப்புக்களுடன் சில நூற்றாண்டுகளுக்கு முற்படவே இங்கு செல்வாக்குக்கு உட்பட்டவையாக அமைந்தன. இலங்கையில் வாழும் மக்கள் தொகையில் ஏறத்தாள பதினைந்து வீதமானவர்கள் இன்று சைவர்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில், குறிப்பாகத் தமிழர் அதிகமாகச் செறிந்து வாழும் பகுதிகளில், சைவர்கள் அதிகம் விளங்குகின்றனர். எனினும் ஏனைய பகுதிகளிலும் சைவக்கோவில்கள் விளங்குவதுடன் சைவம் சார்ந்த செயற்பாடுகளும் விளங்கி வருதல் காணலாம். தொன்மைக்குரிய சைவத்தலங்களில் சிவனுக்குரிய திருத்தலங்களாகத் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தான்தோன்றீச்சரம் ஆகிய ஐந்து தலங்களும் சிறப்புடையனவாக ஈழத்தில் விளங்கியமை அறிதற்குரியதாகும். இன்றும் இவற்றின் பெருமை பேணும் வகையில் இவை சிறப்புடைத் திருத்தலங்களாக விளங்கு கின்றன. இதனுடன் விநாயகர், முருகன். அம்மன், விஷ்ணு, நாகதம்பிரான், வைரவர், போன்ற தெய்வங்களை முதன்னிலைப்படுத்தியும் பல ஆலயங்கள் சிறப்புக்குரியவையாக விளங்குதல் குறிப்பிடத்தக்கதாகும். 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்னும் முதுமொழிக்கமைய சமயப்பற்று மிக்கவர்களாக தம் வாழ்விடங்களுடன் கோவில்களை இணைத்துக் கொண்டவர்களாக அக்கால மக்கள் விளங்கினர். குறிப்பாகச் சிறு கிராமங்கள் முதலாக நகரங்கள் ஈறாகக் கோயில்கள் இணைந்ததொரு வாழ்வினைக் கொண்டவர்களாகச் சைவர்கள் விளங்கியமை காணலாம். கோயில் இணைந்த சமய

www.tamilarangam.net

வாழ்வானது தேவார முதலிகளின் வாழ்வியல் காலத்திலிருந்து எடுத்தாளும் வகையில் விளங்கிற்று. குறிப்பாக தேவார முதலிகள் கோவில் கோவிலாகச் சென்று வழிபட்டதுடன் கோவில்களில் எழுந்தருளியிருந்த இறைவனின் புகழ் கூறும் வகையில் எண்ணற்ற திருப்பதிகங்களைப் பாடியுள்ளமையைக் காணலாம். அந்நிய ராட்சியின் போது இலங்கையில் விளங்கிய பல சைவக்கோயில்கள் இடித்து அழிக் கப்பட்டமை அறிதற்குரியதாகும். எனினும் மக்களின் மனந்தளரா நம்பிக்கையானது இவ்வாலயங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றுவதற்கும் சைவம் செழிக்கவும் வழிகோலியதைக் காணலாம்.

**சைவப் பிரிவுகளும் சைவ சித்தாந்தமும்.**

இலங்கையில் சைவர்களாக விளங்குகின்றவர்கள் இறுக்கமான வகையில் தென்னிந்தியாவில் விளங்கும் சைவர்கள் போலச் சைவ சித்தாந்த நெறிக்குரியவர்களாக அமைந்தனர். சிவனை முழுமுதற் கடவுளராக ஏற்று நிற்கும் சைவ சித்தாந்தமானது சைவம் சார்ந்த, சாராத சமயங்களை நான்கு வகையாகப்பகுத்து விளக்கி நின்றது. இப் பகுப்பானது புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், அகச்சமயங்கள் என அமைந்தது.[10] புறப்புறச் சமயங்கள் ஆறும் அவைதிக சமயங்களாகும். புறச்சமயங்கள் ஆறும் வைதிக சமயங்களாகும். அகப்புறச் சமயங்களான பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் (வீரசைவம்) ஆகிய ஆறும் சைவசமயத்தின் பிரிவுகளாக எடுத்தாளப்படுகின்றன. அகச்சமயங்கள் என எடுத்தாளப்படும் பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், ஈஸ்வர அவிகாரவாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், சிவாத்துவித சைவம் ஆகிய ஆறும் சைவ சமயத்தின் உட்பிரிவுகளாகக் கொள்ளப்படுகின்றன. அகப்புறச் சமயத்தவர்கள் அறுவரும் சைவசமய நிலைக்குரியவர்களாக அமைந்த போதிலும் வேதாகமங்களுக்கு புறம்பான நூல்களைச் சிறப்புப் பிரமாணமாக ஏற்று நின்றதால் வேறுபடுத்தப்பட்டனர். அகச்சமயத்தவர்கள் அறுவரும் சைவசித்தாந்தத்தோடு நெருங்கியவர்களாக விளங்கிய போதிலும் குறிப்பாக முத்தி நிலையில் சைவசித்தாந்திகளது விளக்கத்திலிருந்து வேறுபட்டு விளக்கியதன்மையால் சைவசித்தாந்தத்திலிருந்து வேறுபட்டவர்களாகக்கணிக்கப்பட்டனர்.

பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவாசாரியார் தனது சர்வதரிசன சங்கிரகத்தில் நான்கு வகையான சைவ தரிசனங்களைக் குறிப்பிட்டுள்ளார்.[11] இவை நகுலீச பாசுபதம், சைவதரிசனம், பிரத்தியாபிஞ்ஞானம், இராசேஸ்வரம் என்பனவாகும். எனினும் இவர் சுட்டிய இச் சைவதரிசனம், பிரத்தியாபிஞ்ஞானம், இராசேஸ்வரம் என்பனவாகும்.

www.tamilarangam.net

எனினும் இவர் சுட்டிய இச் சைவப் பிரிவுகளுள் சைவ தரிசனமும் பிரத்தி யாபிஞ்ஞானமும் ஆகிய இருநெறிகள் மாத்திரமே இன்றும் நிலைத்திருப் பதாகவுள்ளன. நகுலீச பாசுபதம், இராசேஸ்வரம் ஆகிய இரண்டும் செல்வாக்கொழிந்தவையாகக் கொள் ளக் கிடக்கின்றன. சைவதரிசனம் சைவசித்தாந்தத்தையும் பிரத்தியா பிஞ்ஞானம் காஷ்மீர் சைவத்தையும் சுட்டி நிற்பதெனப் பொதுவில் கருது வர். காஷ்மீர் சைவமானது பிரத்தியா பிஞ்ஞானம், கிரமதரிசனம், குலதரிச னம் எனும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியிருந்தமை காணலாம்.[12] எனினும் மாதவாசாரியாருக்கு முற்ப டவே விளங்கிய அகப்புறச் சமயங் களில் ஒன்றாகிய வீரசைவம் பற்றி ஏன் இவர் குறிப்பிடவில்லை என்பது தெரிய வில்லை. வீரசைவமானது 12ம் நூற்றாண்டில் கன்னடத்தில் வாழ்ந்த பசவரால் (1137 - 1167) தோற்றுவிக் கப்பட்டதாகக் கொள்ளப்பட்டது. எனினும் பசவருக்கு முன்னரே வீரசைவ நெறியிருந்திருக்க வேண்டு மெனவும் கொள்ளலாம்.[13] இந் நெறி தமிழ்நாட்டிலும் பல காலமாகச் சிறப்புற்றிருந்தமை காணலாம். இன்று நிலைத்திருக்கின்ற சைவப் பிரிவு களில் இந்தியாவின் தமிழ் நாட்டிலும் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் பெரிதும் நிலவும் சைவசித்தாந்தமும், இந்தியாவின் வடக்குப் பகுதியான காஷ்மீரத்திலும் அதனை அண்டிய பகுதிகளில் விளங்கும் காஷ்மீர் சைவமும் கன்னட மாநிலத்தில் விளங்கும் வீரசைவமும் குறிப்பிடத்தக்கன. எனினும் சைவ தத்துவ வரலாறு பற்றிய நூலில் கே.சி.பாண்டே எட்டு வகையான சைவப் பிரிவுகள் இருந்ததாகக் குறிப்பிடுதல் காணலாம். இவற்றில் சில வழக்கொழிந்த சமயங்களாகும். தத்துவலிங்கதேவர் தனது தத்துவ நிஜாநுபோகசாரத்தில் சைவசமயப் பிரிவுகளாகப் பதினாறைச் சுட்டுதல் காணலாம், அவை ஊர்த்த சைவம், அநாதி சைவம், ஆதி சைவம், மகா சைவம், பேத சைவம், அபேத சைவம், அந்தர சைவம், குண சைவம், நிர்க்குண சைவம், அத்துவா சைவம், யோக சைவம், ஞான சைவம், அவந்தர சைவம், கிரியா சைவம், நாலுபாத சைவம், சுத்த சைவம் ஆகும்.[14] தமிழ்பேரகராதி அகராதி, வின்சுலோ தமிழ் ஆங்கில அகராதிகளும் பதினாறு சைவப் பிரிவினைச் சுட்டுதல் காண லாம். இங்கு ஒரு சில பிரிவுகளிலேயே மாறுபாடிருத்தல் அவதானிக்கத்தக்கது. இதற்கு மாறாக ஞானாவரண விளக்கம் பதின்னான்கு பிரிவுகளைச் சுத்த சைவப் பிரிவுகளாகக் குறிப்பிடுதல் நோக்கலாம். மறைஞான சம்பந்தரின் சைவநெறியானது வர்ண அடிப்படை யில் அநாதி சைவர், ஆதிசைவர், மகா சைவர், அணு சைவர், அவந்தர சைவர், பிரவர சைவர், அந்திய சைவர் எனும் ஏழுவகையான பகுப்புக்களைச் சுட்டு தல் காணலாம். தத்துவலிங்க தேவரின் பகுப்பில் இறுதியாகச் சுட்டப்படும்

www.tamilarangam.net

பிரிவாகச் சுத்த சைவம் அமைகின்றது. திருமூலர் சைவத்தின் வகையினை சுத்தசைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என நாலாக எடுத்தாளுகையில் சுத்தசைவத்தை ஒன்றாக சுட்டி நிற்றல் காணலாம். தத்துவப் பிரகாசமும் சைவத்தினை ஏழாக எடுத்தாளுகையில் சுத்த சைவத்தையொன்றாகச் சுட்டுதல் அறியலாம். சிவஞான சுவாமிகள் சுத்தசைவமானது கருத்தியல் ரீதியில் சைவசித்தாந்தத்திலிருந்து வேறுபட்ட தல்ல எனக் குறிப்பிடுகின்றார். சைவத்தின் பதினாறு பிரிவில் சுத்தசைவ மானது குறிப்பிடத்தக்கதெனவும் நீதியானதெனவும் தத்துவலிங்கதேவர் சுட்டுதல் காணலாம்.[15] திருமூலரும் சுத்தசைவம் பற்றிக் குறிப்பிடுகையில் 'மேலான தற்பரங்கண்டுள்ளோர் சைவசித் தாந்தரே' என முதன் முதலாகத் தமிழில் சுட்டியமை யைக் காணலாம். இதனின்று ஆரம்பத்தில் சுட்டப்பட்ட சுத்தசைவமே பிற்பட சைவசித்தாந்தமாக அமைந்ததென எண்ணத் தோன்றுகிறது.

சைவசித்தாந்தமானது இந்தியாவின் தென்பகுதியான தமிழகத்திலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும், செல்வாக்குடைய நெறியாக விளங்கியது. சைவசித்தாந்தமானது சைவம்+சித்தம்+அந்தம் எனும் பகுப்பிற்கு உட்படவல்லதாகும். சைவம் சிவசம்பந்தத்தையும் சித்தம் முடிவான உண்மை என்பதனையும் அந்தம் முடிபு என்பதையும் சுட்டும். சுருங்கக்கூறின் சைவத்தின் முடிந்த முடிபை எடுத்தாளும் வகையில் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையாய் சைவசித் தாந்தம் விளங்குகின்றது. நாயன்மார் களினால் வளர்ச்சி கண்ட சைவமானது சிவஞானபோதம் முதலான பதின்னான்கு மெய்கண்ட சாஸ்திரங் களினோடு தத்துவரீதியான செழுமை பெற்ற சைவ சித்தாந்தமாகச் சிறப்புப் பெற்ற தெனலாம். மெய்கண்டதேவரின் சிவஞானபோதமானது பதினமூன்றாம் நூற்றாண்டில் எழுந்த தாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த திருக் களிற்றுப்படியாரும் திருவுந்தியாரும் மெய்கண்ட சாத்திரங்களுள் உள்ள டங்குவனவாகும்.

**இலங்கையில் சமகால நிலையில் சைவம்**

இலங்கையில் தொன்று தொட்டு சைவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பது ஏலவே அறிதற்குரியதாயிற்று. எனினும் முன்னர் குறிப்பிட்டது போல் இன்று இலங்கையில் பல இனத்தவர் களும் பல சமயத்தவர்களும் வாழ்ந்து வருதல் காணலாம். இம் மக்கள் வேறுபட்ட சமயங்களைக் கைக்கொள் ளுகின்ற வேளையிலும் சமயம் சார்ந்த வாழ்க்கை முறை இறுக்கமான வகையில் விளங்கி வருகின்றதெனக் குறிப்பிடலாம். அரச ஆதரவானது பௌத்த சமயத்திற்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னர் நிலவியது போல இன்றும் விளங்குவது காணலாம்.

www.tamilarangam.net

எனினும் கடந்த பல வருடங்களாகச் சைவ ஆலயங்களின் புனருத்தாரணத் திற்கும் வளர்ச்சிக்கும் அரச ஆதரவானது மட்டுப்பட்ட அளவில் கிடைத்து வருவதும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இதன் விளைவாகப் பல ஆலயங்கள் புதுப்பொலிவுடன் தோற்றம் பெற்று விளங்குவதனையின்று காணலாம். அரச ஆதரவின்றிக் கோவில் சார்ந்த நிறுவனங்கள் தமது விரிந்து செயற்பாடுகளைத் தனித்துவமான அமைப்புக்கள் போல பதிப்பகம், கல்யாண மண்டபங்கள், பொது மண்டபங்கள், சிறுவர் நலவாழ்வகங்கள், போன்றவற்றை அமைத்து செயற்படுதனைச் சமீப காலங்களில் காணக் கூடியதாகவுள் ளது. அதே வேளை இந்தியாவில் உள்ள பல சைவ ஆலயங்கள் நிர்வகிப்பது போன்ற பாரிய நிறுவன அமைப்புக்கள் இங்கில்லை என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

சிறிய தீவாக விளங்குகின்ற போதிலும் எண்ணற்ற ஆலயங்கள் கொண்ட சிவபூமியாகவே இலங்கை விளங்குகின்றதெனலாம். புகழும் புராதனப் பெருமையும் கொண்ட சிவ ஆலயங்கள் மட்டுமன்றி இங்கு அம்மன், பிள்ளையார், முருகன், விஷ்ணு போன்ற இதர வழிபடு தெய்வங்களை மூல மூர்த்தங்களாகக் கொண்டமைந்த ஆலயங்கள் பல விளங்குதல் காணலாம். இவை சிவ வழிபாட்டில் இன்றியமையாது கலந்த மூர்த்தங்களாகியமை நோக்கத்தக்கதாகும். சிவனுக்குரிய ஆலயங்கள் குறைந்த எண்ணிக்கைக் குரியனவாக விளங்கிய போதிலும் பழம் பெருமைக் குரியதாக அமைந்திருந்தமை காணலாம். முருகன் புகழ் பேசும் ஆலயங்களாக நல்லூர் கந்தசாமி, மாவிட்டபுரம் கந்தசாமி, கதிர்காமக் கந்தன், செல்வச் சந்நிதி முருகன் போன்ற ஆலயங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இம் முருகன் ஆலயங்களை நோக்குகின்றபோது சில இறுக்கமான வகையில் ஆகம மரபிற் குரியனவாகவும் சில ஆகம மரபிற்குட் படாதனவாகவும் சில ஆகமமரபு சார்ந்ததும் சாரததுமான பண்புளைத் தன்னகத்தே கொண்டதாகவும் அமைந்துள்ளன.

சிறப்புடைக் கோவில்களாக மேற் சுட்டியவை விளங்கிய போதிலும் பிள்ளையார், அம்மன் ஆகிய தெய்வங்களுக்காக எழுந்த ஆலயங்களே எண்ணிக்கை நிலையில் அதிகம் காணப்படுவதாகக் குறிப்பிடலாம். பொதுவாக பிள்ளையார், அம்மன் கோவில்கள் இல்லாத கிராமங்களே இல்லையெனும் வகையில் செறிந்து விளங்குகின்றன. விநாயகர் பொதுவில் வினை தீர்க்கும் தெய்வமாகக் கருதப்படுவதுடன் அனைத்துச் செயல்களின் ஆரம்ப நிலையும் விநாயக வணக்கத்துடனேயே ஆரம்பிப்பதும் சைவர்களின் பாரம்பரியம் ஆகும். இந்நிலையில் மக்களின் தொழில்களைப் பேணி வினை தீர்க்கும் கடவுளராகப்பிள்ளையார் இடம் பிடித்

www.tamilarangam.net

துள்ளமையால் மக்களின் மனதிலும் அவர்கள் வாழும் இடங்களிலும் பெரிதும் இடம் பிடித்துள்ளமையைக் காணலாம். இவ் வகையில் ஆலமர, அரசமர நிழலிலும் வழியிலும் ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும் அங்கும் இங்குமென பிள்ளையார் வீற்றிருத்தல் அறிதற்குரியது. விநாயகரையடுத்து அதிக நாட்டமுடையவராக அம்மன் அமைந்துள்ளமை கவனிக்கற்பாலது. இவ்வம்மன் பல்வேறுபட்ட நாம ரூபங்களில் ஏற்றிப் போற்றப்பட்டவளாக விளங்குகிறாள். முத்துமாரியாகவும் பத்திரகாளியாகவும், காளியாகவும், பண்டாரியம்மனாகவும், வாலாம்பிகையாகவும் குகனேஸ்வரியாகவும், நாகபூசனியம்மனாகவும் அம்மன் வணக்கத்திற்குரியவளாக விளங்குதல் காணலாம்.

சைவமரபிற்குரியதான கோவில்களைவிட வைஷ்ணவ மரபின் தாக்கத்திற்குரியதான விஷ்ணு கோவில்களும் ஈழத்தில் விளங்குகின்றன. குறிப்பாக தட்சண கைலாய மான்மியம் குறிப்பிடும் துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவிலும் பொன்னாலை வரதராஜா பெருமாள் கோவிலும் சுட்டத்தக்கன. அத்துடன் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில், திருகோணாமலை ஸ்ரீகிருஷ்ணன் கோவில், களவாஞ்சிக்குடி ஸ்ரீமகா விஷ்ணு கோவில், வந்தாறு மூலை கிருஷ்ணன் கோவில் ஆகியனவும் மகாவிஷ்ணுவை மூலமூர்த்தமாகக் கொண்டமைந்தவையாகும். இவை இந்தியாவில் உள்ளது போல வைஷ்ணவ சம்பிரதாயங்களுக்கு உரிய வகையில் செயற்படுவதில்லை. மேலும் இவ்வாலய பூசகர்கள் வைஷ்ணவ சிவாசாரியார்களாக இன்றி சைவமரபிற்குரியவர்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவிலில் சிவவழிபாட்டிற்குரிய திருநீறும் வைஷ்ணவ மரபிற்குரிய நாமமும் வழங்கப்படுதல் இன்றும் காணலாம். மேலும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவிலிலே சக்கரத்தையே மூலஸ்தானத்தில் வைத்து பூசிக்கப்படுதல் இன்றும் தொடர்கின்றது. சமகால சமயச் செயற்பாடுகளில் ஒன்றாக ஆஞ்சனநேயர் ஆலயத் தோற்றமும் வழிபாடும் சில சைவர்கள் மனதில் விமர்சனங்களை எழுப்பியிருத்தலும் அவதானிக்கலாம். இது வைஷ்ணவ பாரம்பரியத்தின் வெளிப்பாடாக எடுத்தாளப்படுதல் காணலாம். எனினும் இலங்கையைப் பொறுத்தவரை விஷ்ணு கோவில் வளர்ச்சியும் வழிபாட்டு நிலையும் சைவத்தோடு இணைந்து கொண்ட போக்கிற்குரியதாகவே வழிபடு மக்களால் பெரிதும் கருதப்பட்டது.

விஷ்ணு ஆலயங்களைவிட வீரபத்திரர், வைரவர், சனீஸ்வரர், நாகதம்பிரான், பெரியதம்பிரான் போன்ற தெய்வங்களுக்கும் தனித்துவமான ஆலயங்கள் விளங்குவது

www.tamilarangam.net

காணலாம். நாகதம்பிரான் வழிபாடானது அருகியிருந்தாலும் நாகர் கோவில் நாகதம்பிரான், பண்டாரியா வெளி நாகதம்பிரான், திருமலை நாகதம்பிரான் என்பன குறிப்பிடத் தக்கனவாகும். நாகதம்பிரான் வழிபாடானது விஷ்ணு வழிபாட்டுடன் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதாக மக்கள் கருதுவது காணலாம். ஒவ்வொரு சிற்றூர்களிலும் பலவேறான சிறு தெய்வ வழிபாடுகள் நிலவி வந்துள்ளமை காணலாம். இவ்வகையில் பேச்சியம்மன், அடுப்பனாச்சியம்மன், முதலிப் பேத்தியம்மன் போன்ற சிறு தெய்வ ஆலயங்கள் விளங்குவது காணலாம். மேலும் சில கோவில்கள் சில சமூகங்களுக்குரிய வழிபாட்டாலயங்களாகவும் சில கோவில்கள் பல சமூகங்களும் இணைந்த வழிபாட்டாலயங்களாகவும் விளங்கி வருகின்றன. சிறு தெய்வ வழிபாடுகளும் குறிப்பிட்ட சமூகங்களுக்குரியன போல் பேணப்பட்டன. ஐயனார், அண்ணமார், பணிக்கர், காளி, கொத்தி போன்றன இந்நிலை சார்ந்தனவாக இனங் காணப்பட்டன.[16]

சமய நம்பிக்கைகளின் மத்தியில் ஆலயங்கள் இணைந்த சமய வாழ்வானது அந்நியராட்சியின் தாக்கத்தினால் குறிப்பாக ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் பலவிதமான இன்னல்களைச் சந்திக்க நேரிட்டது. கிறிஸ்தவ சமய மாற்றமும் பிறசமயம் பற்றிய இழியுரைகளும் சமயக் காழ்ப்பின் தன்மையைத் தெளிவுற அக்காலத்தில் காட்டிற்று. ஆறுமுகநாவலர் போன்றோர் சமயத்தின் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துரைக்க முயன்றமை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வாக இலங்கைச் சமய வரலாற்றில் அமைந்தது. சமயப் பிரசங்கம், சமய நூற்பதிப்புக்கள். சமயநூல் வெளியீடுகள், சமய கண்டன கண்டனங்கள், சமயக் கல்வி, பாடசாலை என்பன சமய நிலையை ஸ்திரப் படுத்தவல்ல சாதனங்களாக இவருக்கு அமைந்தன. சமய வழிபாட்டில் இலயித்த மக்கள், இறைவன் புகழ் பாடும் கந்தபுராணத்தைப் பாட்டும் பயனுமாகச் செவிமடுத்து தூய்மையும் இன்பமும் அடைவதற்கு அன்றைய புராணபடன நிகழ்வுகள் வாய்ப்பளித்தன. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், போன்ற புராண படனங்கள் பெரும்பாலான கோவில்களில் நிகழ்ந்தமை இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருதல் குறிப்பிடத் தக்கதாகும். இந்நிலை இன்றும் தொடரபட்டு வருதல் காணலாம்.[17]

ஆறுமுகநாவலர் குறிப்பிடுகையில் ஈழத் தேசத்தில் எங்கணுமுள்ள சிவாலயம், விக்கினேஸ்வராலயம், சுப்பிரமணியராலயம் என்னும் திருக்கோயில்கள் எல்லாவற்றிலும் இக் கந்தபுராணம் பண்டைக்காலம் தொடங்கி வருடந்தோறும் தவறாது

www.tamilarangam.net

வாசித்துப் பொருள் சொல்லப்பட்டு வருகிறது என்றார். சைவசமயப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கும் ஈழத்தவர்கள் பெரிதும் சைவசித்தாந்த தத்துவப் பொருளை உணர்ந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவராக விளங்கினர் என பண்டிதமணி கணபதிப்பிள்ளை கருதினார். சைவசித்தாந்த நுண்பொருளைத் தெளிவுற அறிந்து கொள்ளும் சிரத்தை அவர்களின் செயற்பாடுகளில் விளங்கிற்று என்பார். இதனாலேயே 'கந்தபுராணத்தைப் பெண்களுள் அறியாதார் இலர்' எனப் பண்டிதமணி சுட்டுதல் காணலாம். நாவலர் தமது காலத்தில் சைவத்திற்கு வந்த இடுக்கண்ணை நீக்க அரும்பாடு பட்டார். குறிப்பாக நாவலருக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி எங்கிருந்து வந்தது எனப் பண்டிதமணி வினவிய துடன் அதற்குக் காரணம் கந்தபுராணத்திலிருந்தே எனக் கருதினார். 'அதையவர் அறியாதிருக்கலாம். கந்தபுராணம் நாவலர் இரத்தத்தில் ஊறியிருந்தது எனச் சுட்டுதல் காணலாம். இவ்வாறாக கந்தபுராணபடன ஈடுபாடானது தமிழகத்தில் பெருமளவு இல்லாத நிலையிலும் இன்றும் ஈழத்தில் பேணப்பட்டு வருவது சுட்டத்தக்க பண்பெனலாம். சமகாலப் பகுதியில் சைவசமயக் கல்வியும் புராணபடன முறைமையும் சுன்னாகம் குமாரசாமிப் புலவர், புலோலி கதிரைவேற்பிள்ளை, புலோலி குமாரசாமிப்புலவர். கணேசையர், பண்டிதமணி கணபதிப் பிள்ளை, புலோலி சிவபாதசுந்தரம், கந்தையாபிள்ளை, முத்துக்குமாரசாமிக் குருக்கள், போன்றோர் பலரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டமை காணலாம்.[18] சைவ சித்தாந்தச் சிந்தனையானது பல சிந்தனையாளர்களினால் எடுத்தாளப்பட்டமையும் நோக்குதற்குரியது. காசிவாசி செந்தில் நாதையர், கதிரைவேற்பிள்ளை, நாவலர், சிவசங்கர பண்டிதர், போன்ற பலரும் சைவசித்தாந்தத்திற்கு முரணாக எழுந்த கருத்துக்களைத் திடமாக விமர்சித்து ஆக்கபூர்வமான பல நூல்களைப் படைத்து சைவ சமய மறுமலர்ச்சிக்கு உதவியமை காணலாம். மேலும் சைவசித்தாந்த சாத்திர நூல்களுக்கு உரை எழுதிய ஈசான சிவன் எனும் திக்கம் செல்லையா, திருவிளங்கம் போன்றோரின் பங்களிப்புக்களும் குறிப்பிடத்தக்கன.

இலங்கையில் சைவசித்தாந்தநெறி செழித்து வளர்ந்த போதிலும் வேதாந்தச் சிந்தனைகளும் விரவியிருந்தமை காணலாம். இந்தியாவில் சமகாலச் செல்நெறியில் வேதாந்தச் சிந்தனையானது இராமகிருஷ்ண மன்றத்தின் வழிநடத்தலில் பெரிதும் வளர்த்துச் செல்லப்பட்டது. கொழும்பிலும் பிற்பட மட்டக்களப்பிலும் இவை அமைந்திருந்தன. வேதாந்த நெறியானது இராமகிருஷ்ண நிறுவனங்களினால் ஓரளவிற்கு எடுத்தாளப்பட்ட போதிலும் ஈழத்தில் வாழ்ந்த சித்தர்களினால் பெரிதும் பேணப்பட்டன. பெரும்பாலன சித்தர்கள் வேதாந்த

www.tamilarangam.net

நெறி மரபினைப் பின்பற்றியவர்களாகவும் சிலர் சித்தாந்தம் சார்ந்தவர்களாகவும் சிலர் இரு நெறிகளினை இணைவுறக் கொண்ட சமரச நோக்கம் கொண்டவர்களாகவும் விளங்கினர். வேதாந்த மரபின்வழி விளங்கிய மகாதேவசுவாமிகள், சின்னத்தம்பி சுவாமிகள், கனகரத்தினம் சுவாமி, குழந்தைவேற் சுவாமிகள் போன்றோரின் செல்வாக்கினால் வேதாந்த மடமொன்று கந்தர் மடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணச் சுவாமிகள் எனப் பாரதியால் போற்றப்பட்ட அருளம்பல சுவாமிகள் எழுதிய பதின்மூன்று நூல்களில் பெரும்பாலானவை வேதாந்த பொருள் உரைப்பனவாக விளங்கியமை சுட்டலாம். இவ் வேதாந்தமடம் கந்தர் மடம், யாழ்ப்பாணத்தில் இன்றும் நிலைத்திருப்பதுடன் செயல்படுவது காணலாம்.

இலங்கையில் விளங்கும் தொன்மைக்குரியதான சைவ சமயம் இந்தியாவில் விளங்குகின்ற சைவச் செழுமை யோடு பேணப்படுகின்ற தன்மையில் சிறப்புக்கு உரியதாகவும் பிறரின் கவர்ச்சிக்குரியதாகவும் விளங்குகின்ற தென்றால் மிகையாகாது. இத் தன்மையினால் சைவசமயம் சார்ந்த செல்வாக்கானது இலங்கையில் நிலைத்திருக்கின்ற இதர சமயச் செயற்பாடுகளிலும் ஒரளவிற்குச் செல்வாக்குச் செலுத்தி நிற்பது நுணுகியாராய்வோர்க்குப் புலனாவதொன்றாகும். பௌத்தமும் சைவமும் பழமை கொண்ட சமயங்களாக விளங்குகின்ற போதிலும் அதனைப் பேணுகின்ற மக்களின் நெருக்கமானது ஒரு சமயத்தின் சடங்காசாரங்களையோ அல்லது நம்பிக்கைகளையோ மற்றச் சமயமானது காலவோட்டத்தில் தம்முடன் இணைத்துக் கொள்வது சாத்தியம் என்பதற்கு இலங்கையில் நிலவும் தன்மையை உதாரணமாகக் குறிப்பிடலாம். பௌத்த சமயமானது பொதுவில் சடங்காசாரங்களை ஏற்பதில்லை என்பது பாலி மூலத்திலிருந்து பெறப்படவல்லது. இந்து சமூகத்தில் நிலவும் தெய்வவழிபாட்டினை இவர்கள் வெளிப்படையாக எதிர்த்து நிற்பர். பௌத்த நூல்களின் கருத்துக்களுக்கு எதிராக அன்றாட வாழ்வில் பௌத்தமானது சடங்கா சாரங்களையும் கிரியைகளையும் ஏற்று நிற்பது காணலாம். இந்தக் கிரியைகளை பின்வருமாறு வகுத்து நோக்கலாம். உத்தியோக பூர்வமாக ஏற்கப்பட்ட சடங்குகள். இது பௌத்த பிக்குகள் ஆற்றும் பூஜை, பிரீத் ஒதல், போன்ற சடங்குகளை குறிப்பதாகும். இரண்டாவதாக பௌத்த தத்துவத்தில் சுட்டப்படாவிடினும் பிக்குகளினால் நிராகரிக்கப்படாதவை யாகும். இங்கு இந்து மதத்தில் உள்ள விஷ்ணு, லக்சுமி, சரஸ்வதி, கணபதி, முருகன் ஆகிய கடவுளரை வழிபடுவதனைத் தடை சொல்லாத தன்மையைக் குறிப்பிடலாம். இன்றைய காலத்தில் இவ்வாறான வழிபாட்டு நிலைகளுடன் தீ மிதித்தல், காவடி எடுத்தல், கரகம் போன்ற இந்து

www.tamilarangam.net

சமயாசாரங்கள் பெரிதும் பௌத்தர் களால் பேணப்படுவது குறிப்பிடத் தக்கது. கதிர்காம ஆலயத்தின் விழாக் களை நோக்குகின்றபோது அது பெரி தும் பௌத்தர்களின் வழிபாட்டிற்குரிய தலமாக மாறிவிட்டமை பல ஆராய்ச்சி யாளர்களால் சுட்டப்படும் வகையில் விளங்குவது இன்று காணலாம். மேலும் சமகாலத்தில் சைவ ஆலயங்களில் பல பௌத்தர்கள் வழிபடுவதும் நேர்த்தி வைத்து நிறைவேற்றுவதும் சாதாரண நிகழ்வுகளாக விளங்குவது இங்கு காணலாம். அத்துடன் பௌத்தத்தின் படி சோதிடவியல் ஏற்புடையதல்ல. ஆனால் இன்று பௌத்த குருவானவர் களே சோதிடம் பார்க்க முனைவது இந்து சமயச் செல்வாக்கின் வெளிப்பா டெனலாம்[19]

பௌத்தத்தின் செல்வாக் கினைப் போல கிறிஸ்தவமும் சிற்சில செல்வாக்கினைச் சைவப் பண்பாட்டி னின்று பெற்றுக் கொள்வது காணலாம். சைவசமய கோவில்களில் நிகழும் வருடாந்த உற்சவ விழாக்கள் போலக் கிறிஸ்தவர்களும் பத்து நாட்கள் அல்லது கூடிக் குறைந்த நாட்களைக் கொண்ட உற்சவ விழாக்களை நடாத்து கின்ற முறைமை சைவ சமயத்தின் தாக்கத்தின் விளைவால் சமீப காலங் களில் எழுந்ததெனக் கூறலாம். இத் தன்மை இந்தியாவிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். சமய நம்பிக்கையின் அடிப்படையில் இளைக் கட்டுவது போன்ற கிராமிய மக்களின் நம்பிக்கைச் சடங்குகளும் சில கிறிஸ் தவ ஆலயங்களில் அமைவது குறிப் பிடத்தக்கதாகும். சைவ சமயத்தின் தாக்கம் போல அண்மித்து வாழும் சமயங்களின் நல்ல சில இயல்புகளும் சைவத்தில் செல்வாக்குச் செலுத்தியி ருக்கிற தென்பதை நுணுகி ஆராய்ந் தோர்க்குப் புலனாகும். இஸ்லாமியர் தமது இறுக்கமான நடைமுறைகளைப் பெரிதும் கைக்கொள்வதனால் இதர சமயத்தின் செல்வாக்கு குறைந்த அளவிலேயே அவர்களைப் பாதிப்ப தாக அமையும் எனலாம். சகோதரத்து வம் பற்றிப் பேசும் இஸ்லாமும் பிறர் நலம் பேணும் கிறிஸ்தவமும் உலக நாகரிகத்திற்கு மானிடத்தின் சிறப்பு நிலையை எடுத்துரைத்தன வெனலாம். இவ் வியல்புகள் சைவம் சார்ந்த வாழ்வியல் போக்கிலும் ஓரளவு செல்வாக்கினைச் செலுத்தியிருந்தன என்பது மறுப்பதற் கில்லை. தனிமனித ஈடேற்றத்திற்கு வழிகாட்டுவதா யமைந்த சமய வாழ்வானது பொது நலச் சேவையினாலும் உயர்வடைய லாம் எனும் வகையில் சிறப்பு நிலை பெற்றமை காணலாம். சமகாலச் செல்நெறியிலும் சமயம் சார்ந்த சிந்தனைகள் காத்திரமானவகையில் வளர்ச்சி கண்டு மேன்மை கொண்ட தெனலாம்.

www.tamilarangam.net

## அடிக்குறிப்புக்கள்

01. Stert, David (1983) Religious Studies, Made simple book, London p. 131
02. Ross, Nancy Wilson (1973) Hinduism Buddhism Zen, Faber & faber, London. p.33
03. Biswal,B (1988) Cult of Siva, Punthi Pustak, Calcutta. pp.31 -32
04. Chakaravarthi, M (1986) The Concept of Rudra Siva through the ages, Motilal Banarsidass. Delhi p. 21
05. தேவசேனாதிபதி.வ.ஆ (1981) சைவசித்தாந்தத்தின் அடிப்படைகள், டாக்டர் இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப்பல்கலைக்கழகம் ப.2
06. ஞானகுமாரன். நா (1994) நயன்தரும் சைவசித்தாந்தம், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை பக். 5 - 8
07. மணிமேகலை 27 - 86,87ம் பாடல்கள்
08. சிலப்பதிகாரம் ஊர்காண் காதை 7
09. வடிவேல்; திருக்கோணாமலை மாவட்டத் திருத்தலங்கள்
10. ஞானகுமாரன்.நா. (1994) சைவசித்தாந்தத் தெளிவு. செல்வம் வெளியீடு. இலங்கை , ப.11
11. Margaret Stutley, (1985) Hinduism, the aguaraian press London p.110
12. Dunuvila, R. (1985) Saiva Siddhanta Theology, Motilal Banarsidass, Delhi. p.27
13. ஞானகுமாரன்.நா (1994) நயன்தரும் சைவசித்தாந்தம்,நியூசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை, ப.23
14. Gnanakumaran,N (1995) An Analysis on Sects of Saivism, Lady Ramanathan Memorial Lecture University of Jaffna, p. 9
15. Tattuvalinga Tevar, Tattuvanijanupo kasaram, Verse 207
16. ஞானகுமாரன்.நா (1999) "வடமராட்சியில் சைவசமயம்", பருத்தித் துறை பிரதேச மலர், உள்ளுராட்சித் திணைக்கழகம், யாழ்ப்பாணம் பக். 158 - 163.
17. ஞானகுமாரன். நா (1999) பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் சமய தத்துவ நோக்கு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கருத்தருங்குக் கட்டுரைகள். யாழ்ப்பாணம். ப.190
18 கனகரத்தினம். இரா.வை (1985)ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு, புவனேஸ்வரி அம்பாள், ப.29
19. Richard Gombrich (1988), Buddhism Transformed, Religious changes in Srilanka Princton University press, U.S.A p 327

www.tamilarangam.net

# யாழ்ப்பாணத் தமிழில் பால்காட்டும் பெயராக்க உருபுகள்

திருமதி.சிவராணி சிறிசற்குணராசா.

## ஆய்வுச்சுருக்கம்

*'யாழ்ப்பாணத் தமிழில் பால்காட்டும் பெயராக்க உருபுகள்' என்னும் இவ்ஆய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமானது யாழ்ப்பாணத் தமிழில் வழங்கும் பால்காட்டும் பெயராக்க உருபுகளையும், அவை அடிச்சொல்லுடன் சேர்வதன் மூலம் தோன்றும் ஆக்கப் பெயர்களையும் ஒலிமாற்றம் மூலம் அமையும் ஆக்கப் பெயர்களையும் விவரித்துக் கூறுவதேயாகும். இவ்வாய்வானது ஓர் அமைப்பு முறையடிப்படையிலமைந்த விவரண ஆய்வாகும்.*

மொழியில் ஓர் தனி அடிச்சொல் அல்லது கூட்டு அடிச்சொல் மேலும் ஆக்க ஒட்டு ஏற்பதன் மூலமோ சொல்லில் உள்ள உயிர் ஒலியில் அல்லது மெய்யொலியில் மாற்றம் பெறுவதன் மூலமோ சொற்பெருக்கத்திற்கு இடமளிக்கின்றது. அடிச்சொல்லும் ஆக்க உருபும் ஒரே இலக்கண வகையைச் சேர்ந்தனவாகவோ வெவ்வேறு இலக்கண வகையைச் சேர்ந்தனவாகவோ இருக்கலாம். சில ஆக்க உருபுகள் அடிச்சொல்லின் இலக்கண வகையை மாற்றி விடுகின்றன. சில மாற்றுவதில்லை ஒரு சொல்லுடன் ஒன்றும் பலவுமாக ஆக்க உருபுகள் சேர்ந்து புதிய சொற்கள் பிறப்பது பெரும்பான்மை வழக்காகும். இவ்வாறு ஆக்க உருபுகளைச் சேர்த்துச் சொற்களை ஆக்குதல் தமிழில் தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வந்த ஒரு சொல்லாக்க உத்திமுறையாகும். இங்கு யாழ்ப்பாணத் தமிழில் வழங்கும் பால்காட்டும் பெயராக்க உருபுகளும் அவை அடிச்சொல்லுடன் சேர்வதன் மூலம் தோன்றும் ஆக்கப் பெயர்களும் ஒலி மாற்றம் மூலம் அமையும் ஆக்கப் பெயர்களும் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணத் தமிழில் ஆக்கப் பெயர்கள் பெயர், வினை, பெயரடை போன்றவற்றை அடியாகக் கொண்டு பிறக்கின்றன.

### பெயராக்க உருபுகள்

வெவ்வேறு வகையான சொற்களோடு- அன்,- ஆன், - அர்,- ஆர் -இ,-ஆள்,-ச்சி, - ஆடிச்சி -ஆத்தி, -ஆட்டி,-த்தி,- வன்,- வர்,-வி,- காரன், -காரர்,-காரி,-இ,-ஆள்,- ஆளி,-சாலி -மான், -வார், -மாரி, - வந்தர், -வாதி, -பிள்ளை, -ஞன், - ஞர்,-நர், -னர் -கன், -கர், -கை, -கி, வன்,- -வர்,-வள், -வா போன்ற

www.tamilarangam.net

உருபுகள் சேர்க்கப்படும் போது பால் காட்டும் ஆக்கப் பெயர்கள் உருவாக்கப்படு கின்றன.யாழ்ப்பாணத் தமிழில் பால் காட்டும் ஆக்க உருபுகள் அனைத்தும் சொற்களில் கடைசி உருபாகவே (ஒட்டாகவே) வருகின்றன.

**பெயரடி**

சில பெயரடிகள் ஆண்பால், பெண் பால் ஆகிய இரண்டினதும் உருபு களைப் பெறுகின்றன. பால்காட்டும் உருபுகளுள் பெண்பால் உருபுகள் பெயரடியைப் பொறுத்து வேறுபடு கின்றன.

-அன், -ஆன், -அர், -ஆர், -இ, -ஆள், -ச்சி, - ஆடிச்சி, -ஆத்தி, -ஆட்டி, -த்தி,

-அன், -ஆன், என்பன ஆண்பால் ஒருமையையும் -அர், -ஆர் என்பன ஆண் பால் -பெண்பால் பன்மையை யும் -இ -ஆள், -ச்சி, -ஆடிச்சி, -ஆத்தி, -ஆட்டி, -த்தி என்பன பெண்பால் ஒருமை ஆகிய இலக்கணப் பொருள்களை உணர்த்துகின்றன. இவ்வாக்க உருபுகள் பெயரடிகளோடு சேர்ந்து பிற ஆக்கப்பெயர்களை உரு வாக்குகின்றன.

பெயரடி +ஆக்கஉருபு >ஆக்கப்பெயர்

செகிடு +அன் / அர் / இ > செகிடன் / செகிடர் / செகிடி

விசர் + அன் / அர்/ இ >விசரன் / விசரர் / விசரி

காதல் +அன் / அர் / இ > காதலன் / காதலர்/ காதலி

பிறத்தி + ஆன் / ஆர் / ஆள் >பிறத்தியான் / பிறத்தியார் /பிறத்தி யாள்

தீவு + ஆன் / ஆர் / ஆள் > தீவான் / தீவார் / தீவாள்

கட்டை + அன் / அர் / ச்சி > கட்டையன் / கட்டையர் / கட்டைச்சி

பேய் + அன் /அர் / ச்சி >பேயன் / பேயர் /பேச்சி

கரை + ஆன் / ஆர்/ ஆடிச்சி> கரையான் / கரையார் / கரையாடிச்சி

சீம் + ஆன் / ஆட்டி > சீமான் / சீமாட்டி

பண்டாரம் + த்தி > பண்டாரத்தி

மேலே காட்டிய எடுத்துக் காட்டு கள் போன்று பல பெயரடிகள் யாழ்ப்பா ணத்தமிழில் காணப்படுகின்றன. ஆண்பால், பெண்பால் ஆகிய ஆக்க உருபுகளை ஏற்கும் பெயரடிகளுள் பல மரியாதையற்ற பொருள் குறிக்கும் ஆண்பால் பன்மை, மரியாதையற்ற பொருள் குறிக்கும் பெண்பால் பன்மை, மரியாதைப் பொருள் குறிக்கும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் - பெண்பால் பொதுப்பன்மை ஆகிய உருபுகளைப் பெறுகின்றன.

மரியாதைப் பொருள் குறிக்கும் ஆண் பால் ஒருமை ஆக்க உருபு சந்தர்ப்பத் தைப் பொறுத்து, ஆண்பால் -பெண் பால் பொதுப்பன்மைப் பொருளையும் தருகின்றது. ஏற்கும் வினை முற்றி னைப் பொறுத்து வேறுபடுகின்றது.

www.tamilarangam.net

எ.கா.

திருடர் வாறார் திருடர் வரீனம்
குருடர் போறார் குருடர் போயினம்

பால்காட்டும் ஆக்க உருபுகளைப் பெறுவனவற்றுள் சில பெயரடிகள் மட்டும் பெண்பால் ஆக்க உருபுகளை ஏற்பதில்லை.

எ.கா.

பெயரடி + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

மாடு + அன் / அர் > மாடன் / மாடர்
காடை + அன் / அர் > காடையன் / காடையர்
கிறுக்கு + அன் / அர் > கிறுக்கன் / கிறுக்கர்
மொறடு + அன் / அர் > மொறடன்/ மொறடர்
பனி + அன் / அர் > பனியன் / பனியர்

**-வன், - வர்**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் -வன் ஆக்க உருபும் ஆண்பால் -பெண்பால் ஒருமையை உணர்த்தும் -வர் ஆக்க உருபும் ஏனைய பெயர்களுடன் இணைந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றன.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

தலை + வன் / வர் > தலைவன் / தலைவர்
முதல் + வன் / வர் > முதல்வன் / முதல்வர்
ஒரு + வன் / வர் > ஒருவன் / ஒருவர்

**-வி**

-வி என்பது பெண்பாலை உணர்த்தும் ஆக்க உருபு ஆகும். இது தலை, மனை, துணை போன்ற பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் +ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

தலை + வி > தலைவி
மனை + வி > மனைவி
துணை + வி > துணைவி

**-இ**

-அம் ஈறு பெற்றுத்தமிழில் அமைந்தசொற்கள் இ விகுதி பெற்றுள்ளன. ஆண்பால் பெண்பால் ஆகிய இரு பாலையும் இவ் ஆக்க உருபு பிற பெயர்களோடு இணைந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர்+ஆக்க உருபு > ஆக்கப்பெயர்

ஞானம் + இ > ஞானி
தியாகம் + இ > தியாகி
பாவம் + இ > பாவி

**-ஆள்**

ஆண்பால், பெண்பால் ஆகிய இரு பாலையும் உணர்த்தும் - ஆள் என்னும் ஆக்க உருபு பிற பெயர்களோடு சேர்ந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

www.tamilarangam.net

பெயர் + ஆக்க உருபு > ஆக்கப்பெயர்

வேலை + ஆள் > வேலையாள்
கூலி + ஆள் > கூலியாள்

**-ஆளி**

-ஆளி என்பது ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்தும். இவ் ஆக்க உருபு பிற பெயர்களோடு இணைந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கடன் + ஆளி > கடனாளி
குற்றம் + ஆளி > குற்றவாளி
கூட்டு + ஆளி > கூட்டாளி
முதல் + ஆளி > முதலாளி

**-சாலி**

-சாலி என்பது ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்தும் ஆக்க உருபாகும். இவ்வுருபு பிறபெயர்களோடு இணைந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

அனுபவம் + சாலி > அனுபவசாலி
குணம் + சாலி > குணசாலி
புத்தி + சாலி > புத்திசாலி
பொறுமை + சாலி > பொறுமைசாலி

**-மான்**

-மான் என்பது ஆண்பாலை உணர்த்தும் ஆக்க உருபாகும். இது பிற பெயர்களுடன் சேர்ந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்
கல்வி + மான் > கல்விமான்
பக்தி + மான் > பக்திமான்
நீதி + மான் > நீதிமான்
புத்தி + மான் > புத்திமான்

**-வான்**

-வான் என்பது ஆண்பாலை உணர்த்தும் ஆக்க உருபாகும். இது பாக்கியம், சத்தியம் புண்ணியம், யோக்கியம் போன்ற பெயர்ச் சொற்களுடன் இணைந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

புண்ணியம் + வான் > புண்ணியவான்
யோக்கியம் + வான் > யோக்கியவான்
சத்தியம் + வான் > சத்தியவான்
பாக்கியம் + வான் > பாக்கியவான்

**-மாரி**

-மாரி என்பது பெண்பாலை உணர்த்தும் ஆக்க உருபாகும். இது ஆண் என்ற சொல்லுடன் மட்டும் இணைந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்
ஆண் + மாரி > ஆண்மாரி

www.tamilarangam.net

**-வந்தர்**

ஆண்பால் , பெண்பால் ஆகிய இரு பாலையும் உணர்த்தும் வந்தர் என்னும் ஆக்க உருபு செல்வம், தனம் என்ற பெயர்ச்சொற்களுடன் இணைந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப் பெயர்

செல்வம் + வந்தர் > செல்வந்தர்
தனம் + வந்தர் > தனவந்தர்

**-வாதி**

ஆண்பால் , பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்துவதற்கு வாதி என்னும் ஆக்கஉருபு பயன்படுகின்றது. இது பிற பெயர்களோடு இணைந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

அரசியல் + வாதி > அரசியல்வாதி
பயங்கரம் + வாதி > பயங்கரவாதி
சந்தர்ப்பம் + வாதி > சந்தர்ப்பவாதி
தீவிரம் + வாதி > தீவிரவாதி

**-ஞன், -ஞர்**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் ஞன் - என்பதும் ஆண்பால், பெண்பால் பன்மையை உணர்த்தும் -ஞர் என்பதும் பெயர்ச் சொற்களோடு சேர்ந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கலை + ஞன் / ஞர் > கலைஞன் / கலைஞர்
கவி + ஞன் / ஞர்> கவிஞன் / கவிஞர்

**-பிள்ளை**

ஆண்பாலை உணர்த்தும் ஆக்க உருபான -பிள்ளை கணக்கு என்ற பெயர்ச் சொல்லுடன் இணைந்து ஆக்கப் பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கணக்கு + பிள்ளை > கணக்குப்பிள்ளை

**வினையடி**

பெயரடிகள் போன்று வினையடிகளும் பால் காட்டும் ஆக்க உருபுகளைப் பெறுகின்றன.

-அன் / -ஆன், -அர் / -ஆர், -ஆத்தி, -ச்சி

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் - அன், - ஆன் என்னும் ஆக்க உருபும், ஆண்பால் -பெண்பால் பன்மையை உணர்த்தும் - அர், - ஆர் என்னும் ஆக்க உருபும் பெண்பாலை உணர்த்தும் - ஆத்தி, -ச்சி என்னும் ஆக்க உருபும் வினைச் சொற்களோடு சேர்ந்து ஆக்கப் பெயர்களை தோற்றுவிக்கின்றன.

வினையடி + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

www.tamilarangam.net

கொதி + அன் / அர் > கொதியன் / கொதியர்

தட்டு + ஆன் / ஆர் / ஆத்தி > தட்டான் தட்டார்/ தட்டாத்தி

**-நர் - னர்**

-நர், -னர் என்னும் ஆக்க உருபுகள் ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்துகின்றன. இவ்வுருபுகள் வினைகளுடன் சேர்ந்து ஆக்கப் பெயர்களைத் தருகின்றன.

வினை + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்.

இயக்கு + நர் / னர் > இயக்குநர் / இயக்குனர்

பெறு + நர் /னர் > பெறுநர் / பெறுனர்

பொருத்து + நர்/ னர் > பொருத்துநர் / பெருந்துனர்

எழுது + நர்/ னர் > எழுதுநர் / எழுதுனர்

**-கன் , -கர் - கை - கி**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் -கன் என்னும் ஆக்க உருபும் ஆண்பால் - பெண்பால் பன்மையை உணர்த்தும் கர் என்னும் ஆக்க உருபும் பெண்பால் ஒருமையை உணர்த்தும் -கை, -கி என்பவையும் நடி, பாட என்னும் வினையடி, வினையெச்சம் ஆகியவற்றுடன் சேர்வதனால் பெயராக மாற்றமடைகின்றன.

வினை + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

நடி + கன் / கர்/ கை > நடிகன் / நடிகர் /நடிகை

வினையெச்சம் + ஆக்கஉருபு > ஆக்கப் பெயர்

பாட + கன் / கர் / கி > பாடகன் / பாடகர் / பாடகி

**-ஞன், -ஞர்**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் -ஞன் என்பதும் ஆண்பால் - பெண்பால் பன்மையை உணர்த்தும் -ஞர் என்பதும் அறி எனற வினைச் சொல்லுடன் சேர்ந்து ஆக்கப் பெயரை உருவாக்குகின்றது.

வினை + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

அறி + ஞன் / ஞர் > அறிஞன் / அறிஞர்

**பெயரடை அடி**

யாழ்ப்பாணத்தமிழில் பெயரடிகள், வினையடிகள் போன்று பெயரடை அடிகள் சிலவும் பால்காட்டும் ஆக்க உருபுகளைப் பெறுகின்றன.

**-வன் - வர்,- வள் ,- வா**

-வன், -வர், -வள், -வா போன்ற உருபுகள் முறையே ஆண்பால், மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை, பெண்பால், மரியாதைப் பொருள் தொனிக்கும் பெண்பால் ஒருமை ஆகிய இலக்கணப் பொருள்களை உணர்த்துகின்றன. இவை பெயரடை அடிகளுடன் சேர்ந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றன.

பெயரடை அடி + ஆக்க உருபு > ஆக்கப் பெயர்

www.tamilarangam.net

பெரிய + வன் / வர் / வள்/ வா> பெரிய வன் / பெரியவர் / பெரியவள் / பெரிய வா

சின்ன + வன் /வர்/ வள் / வா > சின்ன வன் / சின்னவர் / சின்னவள் / சின்ன வா

நல்ல + வன் / வர் / வள் / வா> நல்லவன் /நல்லவர் / நல்லவள் / நல்லவா

இவ்வாறு ஆக்கப் பெயர்களின் அமைப்பு, அவற்றின் வழக்கு போன்ற வற்றை ஆராய்வதன் மூலம் தமிழ் மொழியின் தொழிற்பாடு பற்றிய அறிவு தெளிவடைகின்றது. சமுதாய வளர்ச்சியின் காரணமாகத் தோன்றும் புதிய எண்ணங்களையும் கோட்பாடு களையும் வெளியிடுவதற்கு ஏற்ற புதிய சொற்களையும் முறைப்படி உருவாக் கிக் கொள்ள முடியும்.

## உசாத்துணை நூல்கள்


1. கோதண்டராமன் , பொன் . (1973), இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி 1 பாவை பிரிண்டர்ஸ் (பிர லிட், சென்னை)

2. கோதண்டராமன், பொன், (1981), இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி11 பாவை பிரிண்டர்ஸ் ( பிர லிட் . சென்னை )

3. தமிழியல் ஆய்வு இன்றைய போக்குகள், (2002), முதுபெரும் பேராசிரியர், முனைவர் சு.இராசாராம் அவர்களின் மணிவிழா ஆண்டுச் சிறப்பு வெளியீடு. பதிப்பாசிரியர்கள் , வே. சா. அருள்ராஜ், கா. இராமையா, இரா. முரளிதரன் , இரா. அறவேந்தன் , திருமதி செண்பகம் சுப்பையா அறக்கட்டளை தஞ்சாவூர் - 5

4. Suseendirarajah,S. (1993), Jaffna Tamil , Phonology and Morphology, University of Jaffna Publication.

5. Suseendirarajah, S. (1998), Studies in Srilankan Tamil linguistics and culture. Professor Swaminathan. Suseendirarajah sixty fifth birthday commemoration volume (eds), Balasubramanian, K. Ratnamalar, R. Subathini.

www.tamilarangam.net

# தமிழிலக்கணப் பாற்பகுப்பின் அ∴டிப்படை

திரு.க.இரகுபரன்,


## ஆய்வுச்சுருக்கம்

*தமிழ்மொழியின் பாற்பகுப்பை இலக்கண ஆசிரியர்கள் என்ன அடிப்படையில் மேற் கொண்டார்கள் என்று ஆராய்வதாய் அமைவது இக்கட்டுரை. தமிழின் பாற்பகுப்பு விடயத்தில் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டும் விமர்சனங்கள் மறுதலிக்கப்படுகின்றன. அதேவேளை தமிழின் பாற்பகுப்பு, பொருட்களின் இயற்கைத்தன்மை கண்டே மேற்கொள் ளப்பட்டது என்றவாறான பாராட்டுரைகளும் பொருத்தமானவை அல்ல என்பதை உணர்த்துவதாக, சொற்களின் அமைப்பின் அடிப்படையிலேயே வாக்கிய அமைப்பின் பிரதான உறுப்பான வினைமுற்றின் ஈறுகளை அடிப்படையாகக் கொண்டே தமிழின் பாற்பகுப்பு மேற்கொள்ளப்பட்டது என்ற உண்மை ஆதாரபூர்வமாக இக்கட்டுரையில் நிறுவப்பட்டுள்ளது.*


சொற்களை உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன என வகுத்த தமிழிலக்கண நூலார் அந்த இரு திணைச் சொற்களையும் ஐம்பாலாக வகுப்பர். உயர்திணைச் சொற்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்றாகவும், அஃறிணைச் சொற்கள் ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டாகவும் வகுக்கப்படுகின்றன. தமிழிலக்கண நூல்களால் இந்த ஐம்பாற்பாகுபாடு பொருள்களின் இயற்கைத்தன்மை கண்டே மேற் கொள்ளப்பட்டது என்றவாறான பாராட்டுரைகள் வழங்கும் அதே வேளை மறுதலையான விமர்சனங் களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

"உயர்திணைச் சொற்களில் ஆண் பால், பெண்பால், பலர்பால் என்ற பாகுபாடும் அஃறிணைச் சொற் களில் ஒன்றன்பால், பலவின்பால் என்ற பாகுபாடும் உண்டு. பொருள் களின் இயற்கைத் தன்மை கருதியே திணை, பால் வகுக்கப்படுகின்ற தென்பது முழு உண்மையல்ல என்று இங்கே தெரிகி றது. பறவைகள், மிருகங்கள், மரங்கள் முதலியன ஆண், பெண்ணென அடைமொழி கொடுத்துக் கூறப்படுவது முண்டு. பிடி, களிறு, எருது, பசு என அஃறிணைப் பொருள்கள் சிலவற்றில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு பெயர் கூட உண்டு. அப்படிப்பட்ட இடங்களிற் கூட இவையாவும் அஃறிணையாகவே கொள்ளப்படுகின்றன. சுட்டுப் பெயர் கூட ஒன்றன்பாலாகவே பெரும்பாலும் அமைகிறது. பன்மையைப் பொறுத் தவரையில் உயர்திணையிலோ, அஃறிணையிலோ ஆண் - பெண் வேறுபாடு கொள்வதில்லை. ஆண் பாற் பன்மை, பெண்பாற் பன்மை, இருபாலுக்கும் பொதுவான சொற் களின் பன்மை யாவும் உயர்திணைப்

www.tamilarangam.net

பலர்பாலில் அடங்குகின்றன. மரியாதைப் பன்மைகூட பலர்பால் விகுதிகளையே கொள்ளுகின்றது" (வேலுப்பிள்ளை 1979, பக.140)

மேற்படி விமர்சனம் தமிழிலக்கணகாரர் செய்த பாற்பாகுபாட்டில் சிலகுறைபாடுகள் இருக்கின்றன என்ற தொனியில் அமைகிறது. தமிழிலக்கண நூல்கள் கூறும் "பால்" என்பது சுட்டும் பொருள் யாது என்பதை விளங்கிக் கொள்ளும்போதே மேற்படி விமர்சனத்தின் வன்மை, மென்மைகளைத் தீர்மானித்துக் கொள்ளல் சாத்தியமாகும்.

பால் என்ற சொல் Sex என்ற ஆங்கிலச் சொல் சுட்டும் பொருளை உடையதாகவே இன்று பலரும் கருதுகின்றார்கள். இது ஐரோப்பியர் வருகையின் பின் - குறிப்பாக ஆங்கிலேயர் வருகைக்குப் பின் தமிழில் நிகழ்ந்த சொற்பொருள் மாற்றம் ஒன்றின் விளைவேயன்றி வேறில்லை. உண்மையில் நெடுங்காலமாக தமிழின் இலக்கிய வழக்கிலும், இலக்கண நூல் வழக்கிலும் காணும் பால் என்ற சொல் குறிக்கும் பொருள் "பகுதி" என்பதேயாம். அப்பால், இப்பால் என்ற மொழி வழக்குகளிலும் திருக்குறள் முதலான நூல்களிற் காணப்படும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் முதலான தொடர்களிலும் உள்ள "பால்" போலவே ஆண்பால், பெண்பால் முதலான தொடர்களிலும் உள்ள "பால்" என்ற சொல் "பகுதி" என்ற பொருளினை உடையதேயாம். அச்சொல்லின் பிறப்பு பற்றிய பொற்கோவின் விளக்கம் இக்கருத்தை மேலும் தெளிவாக்கும். "பகு என்ற அடிச்சொல்லும் அல் என்ற விகுதியும் சேர்ந்து பகல் என்ற சொல்லையும் பால் என்ற சொல்லையும் உருவாக்கியிருக்கிறது. பால் என்ற சொல்லின் வேர்ப்பொருள் பகுதி தான்..." (பொற்கோ - 1988. பக்.43), (பகு + அல் = பகல் < பால்; இணைக் குறிலை அடுத்து மெய்யெழுத்து வரும்போது, இணைக்குறிலில் இரண்டாம் குறில் கெட்டுப்போக, முதலில் நின்ற குறில் நெடிலாக மாறுதல் தமிழிற் பரவலாகக் காணப்படும் ஓர் அமைப்பு. துகள் - தூள், பகுதி - பாதி, பொழுது - போது என்பவற்றை நோக்குக.) "பால்" என்பது "பகுதி" என்ற பொருளை உடையதே என்பதை உணர்ந்து கொள்ளும் அதேவேளை தமிழிலக்கண நூலார் செய்த பாற்பாகுபாடு பொருள்களின் ஆண்தன்மை, பெண் தன்மை (Sex) என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளும் நோக்கத்தை உடையதல்ல என்பதையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறாயின் எந்த நியதியின் அடிப்படையில் அப்பாற்பாகுபாடு மேற்கொளப்பட்டது? இந்த வினாவுக்கு விடை காணுமுன் மொழியிலக்கணமானது மொழிக்குரிய பாகுபாடேயன்றி (பௌதீகவியல், உயிரியல் என்பன போன்று) பொருளாராய்ச்சியின் அடிப்படையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொள்ளப்படுவது அல்ல என்பதை மனங்கொள்ள வேண்டியவர்களாகி றோம்.

தமிழ்ச் சொற்களின் பாற்பாகுபாட்டை உணர்த்த முற்பட்ட தொல்காப்பியர், னகர ஈறு ஆண்பாலையும், ளகர ஈறு பெண்பாலையும், ரகர, பகர, மார் ஈறுகள் பலர்பாலையும் தகர, றகர, டகர மெய்களை ஊர்ந்த குற்றியலுகர ஈறுகள் ஒன்றன் பாலையும் அ, ஆ,வ என்னும் ஈறுகள் பலவின் பாலையும் அறியச்செய்வன எனக்குறிப்பிட்டார். (தொல். சொல். 5முதல் 9 வரையான நூற்பாக்கள்)

உதாரணம்:

1. ஆண்பால்:
   (ன்) உண்டனன், உண்டான், உண்ணா நின்றனன், உண்ணா நின்றான், உண்பன், கரியன், கரியான்.

2. பெண்பால்:
   (ள்) உண்டனள், உண்டாள், உண்ணா நின்றனள், உண்ணா நின்றாள், உண்பள், உண்பாள், கரியள், கரியாள்.

3. பலர்பால்:
   (ர்) உண்டனர், உண்டார், உண்ணா நின்றனர், உண்ணா நின்றார், உண்பர், உண்பார், கரியர், கரியார்.
   (ப) கூறுப, வருப
   (மார்) கொண்மார், சென்மார்

4. ஒன்றன்பால்:
   (து) வந்தது, வரா நின்றது, வருவது, கரிது.
   (று) கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று
   (டு) குண்டுகட்டு, கொடுந்தாட்டு, குறுந்தாட்டு.

5. பலவின்பால்:
   (அ) உண்டன, உண்ணா நின்றன, உண்பன, கரியன.
   (ஆ) உண்ணா, தின்னா.
   (வ) உண்குவ, தின்குவ

மேற்படி உதாரணங்கள் பால் காட்டும் ஈறுகள் பற்றிய தொல்காப்பிய விதிகளுக்கு சேனாவரையர் தந்தவை. தொல்காப்பியர் சுட்டிய ஈறுகளிற் சில இக்காலத்தில் வழக்கிழந்துவிட்டன. ஆயினும் அடிப்படை விதியில் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை. தமிழின் சொற்றொகுதி இன்றும் இந்த ஐந்து பகுதிக்குள் அடங்கக் கூடியதாகவே உள்ளது.

"னகர" ஈறுகொண்டு முடியும் முதலாம் தொகுதிச் சொற்கள் ஆண்மையைச் சுட்டி நிற்றலால் அவை ஒருபாற் படுத்தப்பட்டு ஆண்பாற் சொற்கள் எனப் பெயரிடப்பட்டன. இரண்டாம் தொகுதிச்சொற்கள் ளகர ஈறுகொண்டு முடிவன. அவை பெண்மை சுட்டி நிற்றலால் அவற்றை ஒருபாற்படுத்தி பெண்பாற் சொற்கள் எனக் குறிப்பிட்டனர். மூன்றாம் தொகுதியுள் அடங்

www.tamilarangam.net

கும் ரகர ஈற்றுச் சொற்கள் உயர்திணை சார்ந்த பலரைச் சுட்டி நிற்றலால் அவற்றைப் பலர்பாற் சொற்கள் என வேறொருபாற் படுத்தினார்கள். அவ்வாறே நான்காம் தொகுதியுள் அடங்குவன உயிருள்ள, உயிரற்ற அஃறிணை சார்ந்த தனியன்களைக் குறித்தனவாய் நிற்றலால் "ஒன்றன்பால்" எனவும், ஐந்தாம் தொகுதியுள் அடங்குவன அஃறிணை சார்ந்த உயிருள்ள, உயிரற்றவற்றின் கூட்டத்தை - பன்மையை உணர்த்தி நிற்றலால் "பலவின்பால்" எனவும் வேறுவேறு பாறபடுத்தினார்கள். உயர்திணையில் தனி ஆளைக் குறிப்பனவாய் இருந்த போதும் சொல்லமைப்பில் பன்மை விகுதிகளையே உடையனவாய் அமையும் சொற்றொகுதியும் ஒன்றுண்டு. சொல்லமைப்பில் பலர்பாற் சொற்களை ஒத்ததாகவே அமைவதால் அத்தகு சொற்களும் பலர்பாற்றொகுதியுள்ளேயே அடக்கப்படுகின்றன. ஆயினும் தெளிவு கருதி அவற்றை மரியாதைப் பன்மை எனச் சுட்டும் வழக்கம் உண்டு. இந்தத் தெளிவோடு தமிழின் பாற்பாகுபாடு குறித்த மேற்படி விமர்சனத்தின் வன்மை, மென்மையை இனி நோக்குவோம்.

"உயர்திணையில் ஆண், பெண் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பாற்பாகுபாடு அஃறிணை உயிர்கள் (பறவைகள், மிருகங்கள், மரங்கள்) குறித்து மேற்கொள்ளப்படவில்லை" என்ற குற்றச்சாட்டை இங்கு எடுத்துக் கொள்வோம். அஃறிணை உயிர்ப்பொருள்களுக்கு ஆண், பெண் என அடைகொடுத்துச் சுட்டுதலும் சிலவற்றுக்கு களிறு - பிடி என்பனபோல ஆண், பெண் பாகுபாடு சுட்டும் விசேட சொற்கள் இருத்தலும் உண்மையே. அவ்வழக்கு அஃறிணை உயிர்த்தொகுதியை நோக்கும்போது புறக்கணிக்கத்தக்க அளவு சிறுபான்மை உயிர்கள் பற்றியே நிலவுகிறது. அன்றியும் அஃறிணை உயிர்களில் ஆண், பெண் வேறுபாடு குறித்து சிறுபான்மை நிலவும் அத்தகு வேறுபாடு கூட பெயர்ச்சொல் அளவிலன்றி வினைச்சொல்லைப் பொறுத்த அளவில் முற்றாகவே இல்லாமற் போய்விடுகிறது. "யானை" என்ற ஆணுக்கும் பெண்ணுக்குமான பொதுப் பெயராயினும் சரி களிறு, பிடி என்னும் சிறப்புப் பெயர்களேயாயினும் சரி ஒரே வினைமுடிவையே பெறுகின்றன.

யானை வந்தது
களிறு வந்தது
பிடி வந்தது

"ஆண்பாற்பன்மை, பெண்பாற் பன்மை, இருபாலுக்கும் பொதுவான பன்மை யாவும் உயர்திணைப் பலர்பாலில் அடங்குகின்றன" என்பது தமிழின் பாற்பகுப்பிற் சுட்டிக் காட்டப்படும் மற்றொரு குறைபாடு. உண்மையில் சொல்லமைப்பால் ஆண்கள் மாத்திரம் அடங்கிய பன்மையையோ, பெண்கள் மாத்திரம் அடங்கிய பன்மையையோ குறித்த சொற்கள் என்று தமிழில் இல்லை. சொல்லமைப்பால்

www.tamilarangam.net

இயலாநிலையில் அப்பொதுப்பாற் சொற்கள் ஆண்களையோ, பெண் களையோ மாத்திரம் சுட்டியது என்று கொள்ள குறிப்புணர்வினாவிலேயே இடமுண்டாகின்றாகிறது. (ஆயிரம் மக்கள் போர் செய்யப் போயினர் என்றவிடத்து மக்கள் என்ற பொதுப் பெயர் பெண்களை ஒழித்து ஆண் களையே குறித்தது என்று உதாரணம் காட்டப்படும். இத்தகு உதாரணங்கள் எல்லாக் காலத்துக்கும் எல்லா இடத்துக் கும் பொருந்துவன அல்ல) "தோழி யர்" என்பது முதலாயின விதி விலக்குகள்; அத்தகையனகூட பொது வான வினை முடிவையே கொள்ளு கின்றன.

மக்கள் வந்தனர் (ஆண், பெண் இருபாலுக்கும் பொதுவானது)
ஆண்கள் வந்தனர்
பெண்கள் வந்தனர்

தோழர் வந்தனர் (தோழர் என்பது சொல்லமைப்பால் இருபாற்கும் உரிய தாயினும் இன்று பெரும்பாலும் ஆண்கள் குறித்தே வழங்குகின்றது)
தோழியர் வந்தனர்.

இதுவரை நோக்கியவற்றால் ஓர் உண்மை புலனாகின்றது. வினை முற்றுக்களின் அடிப்படையிலேயே தமிழின் பாற்பாகுபாடு மேற்கொள்ளப் படுகின்றது என்பதே அவ்வுண்மை. பால் உணர்த்தும் ஈறுகளாக பதினொரு ஈறுகளைச் சுட்டிய தொல்காப்பியர் தொடர்ந்து கூறும் செய்தியும் இந்த உண்மையையே வலியுறுத்துகின்றது.

"இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈறுநின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்
தோற்றும் தாமே வினையொடு வருமே"
(தொ.சொல்.10)

சேனாவரையர் தந்த உதார ணங்களும் வினைச்சொற்களாகவே அமைந்தமை அவதானிக்க வேண்டி யது.

பொருளைச் சுட்டுவனவான பெயர்ச் சொற்கள் இருக்க பொருள்களின் செயற்பாடுகளைச் சுட்டும் வினைச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு ஏன் பால் வகுக்கப்படல் வேண்டும் என்ற கேள்வி இங்கு எழலாம். வினைச்சொற்களிற் காணப்படாத சில விகுதிகள் பெயர்ச்சொற்கள் சில வற்றில் பால்காட்டுவனவாய் அமை வதுண்டு. இகர ஈறு பெண்பாலையும் (தோழி, பாடினி, வேலைக்காரி) "வை" விகுதி பலவின் பாலையும் (அவை, நடந்தவை) உணர்த்துவன. தொல்காப்பியர் அவற்றையெல்லாம் கவனத்திற் கொள்ளாதது ஏன்? இந்த வினாக்களுக்கு விடை கூறுவதாய் அமைவது பெயரிலக்கண நூற்பா ஒன்றுக்குச் சேனாவரையர் அளித்த விளக்கம்.

www.tamilarangam.net

"அவன் பெண்மகன் சாத்தன் என னகரவீறு ஆடுவிற்கும் அஃறிணை யாண்பாற்கும் உரித்தாய் வருதலானும். அவள், மக்கள் மகள் என ளகரவீறு மகடுவிற்கும், பல்லோர்க்கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும் பெண் டாட்டி நம்பி எனவும் ஆடு, மகடு எனவும் இகரவீறும் ஊகாரவீறும் இருபாற்கும் உரியவாய் வருதலா னும் வினைச்சொல் போல இன் னவீறு இன்னபாற் குரித்தெனப் பெயர்ச் சொல் ஈறுபற்றி உணர்த் தலாகாமையின் உரியவையுரிய வென்றார்" (தொல்.சொல், 191 சேனாவரையர் உரை).

பாலுணர்த்துவதில் பெயரீறுகள் வினையீறுகளில் உள்ளது போன்று பொதுத்தன்மையினை உடையன அல்ல என்பதே மேற்படி சேனாவரை யர் கூற்றின் சாரம். எந்த மொழியிலும் பெயர்ச் சொற்களின் உருவாக்கத்துக்கு வரையறை இல்லை. புத்தாக்கச் சொற்களும் மொழிபெயர்ப்புக்களும் பிறமொழிச் சொற்களின் உள்வாங் கல்களும் இடுகுறிப்பெயர்களுமாக எல்லையற்ற பெயர்ச்சொற்கள் உருவா கிக் கொண்டேயிருக்கும். அன்றியும் அவையெல்லாம் திணைபால் உணர்த் தும் தன்மை உடையனவாய் இருத்த லும் அரிதே. ஆனால் வினைச்சொற் களின் நிலைமை அவ்வாறானதல்ல. அன்றியும் தமிழ் மொழியைப் பொறுத் தவரையில் புதிதாக உருவாகின்ற வினைச்சொற்கள் கூட ஒரே தன்மைத் தான அமைப்பிலேயே உருவாகின்றன. படர்க்கை நிலையில் இயங்கும் வினைமுற்றுக்களில் வியங்கோள் வினை முற்றுக்களும் செய்யும் என்னும் வாய்ப்பாட்டுத் தெரிநிலை வினை முற்றும் தவிர்ந்த ஏனையவெல்லாம் மிகத் தெளிவாகப் பாலை உணர்த்துவ னவாய் விளங்குகின்றன. (சொற்கள் திணைபாலுணர்த்துவது படர்க்கை நிலையிலேயாம்; தன்மை முன்னிலை நிலைமைகளில் அவற்றை உணர்த்து வதில்லை. எண்ணை மாத்திரமே உணர்த்துகின்றன. இது உலகமொழி கள் அனைத்தினதும் பொதுத்தன்மை யாக இருத்தல் கூடும்.)

தமிழின் பெயர்ச் சொற்களோ வெனின் அவற்றுள் மிகப் பெரும்பாலா னவை திணை, பால் உணர்த்துவது இல்லை. இந்த விதிக்கு விலக்கான சிறுபான்மைச் சொற்களிற்கூட பல சொற்கள் பாலை மாத்திரமே உணர்த் துகின்றன (இருதிணைவிரவுப் பெயர் கள்). பாலை உணர்த்தும் சொற்கள் கூட அதை உணர்த்துவதில் நியமத்தன் மையினை உடையனவல்ல. அதானா லேயே பெயரிலக்கணம் கூறமுற்பட்ட தொல்காப்பியர்,

"இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும் உரியவை உரிய பெயர் வயினான" (தொல்.சொல் 161).

என்றார். பெயர்ச் சொல்லானது சொல்லின் தன்மையாலும் அச்சொல் வெளிப்படையாகவும், குறிப்பாகவும்

www.tamilarangam.net

சுட்டும் பொருளின் தன்மையாலும் திணை, பால் வேறுபடக் கூடியதாம். பெரும்பாலான பெயர்ச்சொற்களின் திணை, பால் தீர்மானிக்கப் பெறுவது தனிச்சொல் நிலையிலல்ல; தொடர் நிலையிலேயாம். உதாரணமாக மாருதி என்ற பெயர்ச்சொல் எந்தத் திணைசார்ந்தது எந்தப் பால் சார்ந்தது என்று தனிச் சொல்லாய் நிற்கும் நிலையில் கூறுதற்கு இயலாது. வினைமுற்றோடு கூடிய சொற்றொடராக, வாக்கியமாக அமையும் நிலையிலேயே அதனாற் குறிப்பிடப்படும் பொருள் எது என்பது தெரியப்படும்.

மாருதி வந்தான்

மாருதி வந்தது.

என்னும் இரு தொடர்களில் முதலாவதில் உள்ள "மாருதி" உயர்திணை ஆண்பால் குறித்ததென்பதும் இரண்டாம் தொடரிலுள்ள "மாருதி" (மாருதி என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு வாகனம்) அஃறிணை ஒன்றன்பால் என்பதும் அவ்வத்தொடர்களிலுள்ள வினைமுற்றுக்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு மொழியில் வழங்கும் எண்ணுக்கணக்கற்ற இடுகுறிப்பெயர்களின் நிலைப்பாடு இதுவே. தமிழில் குறிப்பிட்ட சில பெயர்ச்சொற்களே தனிச்சொல் நிலையில் திணை, பால் தீர்மானிக்கக் கூடியனவாய் உள்ளன. ஆகையால் அவற்றை மாத்திரம் பெயரியலில் பட்டியலிட்டுக் கூறினார் தொல்காப்பியர். பட்டியலிட்டாரேயன்றி திணை, பால் பற்றிய பொதுவிலக்கணம் கூறவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது.

தனித்தனிச் சொற்கள் எந்தத் திணையாக எந்தப் பாலாக இருப்பினும் அதனால் எந்த இலாபமோ நட்டமோ விளைந்துவிடப் போவதில்லை. உண்மையில் திணை, பால் பாகுபாடு வேண்டப்படுவது தொடரிலக்கணத்துக்கேயன்றி பெயருக்கோ வினைக்கோ அல்ல. தொடரமைப்பில் திணை, பால் வழுக்கள் ஏற்படாமற் காத்தலே திணை,பால் ஆராய்ச்சியின் நோக்கமாம். அதனாலேதான் தொல்காப்பியர் திணை, பால் பற்றிய செய்திகளை பெயரியலிலோ வினையியலிலோ கூறாது தொடரிலக்கணம் கூறுவதாய் அமைந்த "கிளவியாக்கம்" எனும் இயலிலே கூறினார்.தமது நோக்கத்தை ஓரளவு வெளிப்படையாகவும் கூறியுள்ளார்.

"வினையில் தோன்றும் பாலறி
கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி
கிளவியும்
மயங்கல்கூடா தம்மரபினவே"
(தொல்.சொல்.11)

திணை, பால் உணர்த்துவதில் வினைச்சொல்லுக்குள்ள அதிகாரத்தைக் கண்டே பெயர், வினை என்ற வழக்கமான நிரலைமாற்றி இந்நூற்பாவில் முதலில் வினைச்சொல்லை எடுத்துரைத்தார் என்பதையும் இவ்விடத்தில் உணர்ந்து கொள்வது நன்று.

www.tamilarangam.net

திணைபாற் பாகுபாட்டின் நோக்கம் தொடரமைப்பில் வழுக்களேற்படாமற் காத்தலே என்ற தொல்காப்பியர் கருத்தை பின்வந்த இலக்கணவாசியர் களோ, நவீன மொழியியலாளர்களோ எவரும் கருத்திற்கொண்டதாகத் தெரிய வில்லை. இது தமிழறிவுலகம் முற்காலத்தில் வடமொழிவாண ருக்கும், நவயுகத்தில் ஐரோப்பிய மொழிவாணருக்கும் ஆட்பட்டதன் விளைவுபோலும். தமிழ்மொழியை நோக்காது பயனற்ற பாற் பாகு பாட்டை மேற்கொள்ளும் - அதையும் பெயர்ச்சொற்களுக்கே மேற்கொள்ளும் அம்மொழிகளின் இலக்கணமரபையே நோக்கியவர்களாய் நன்னூலார் முதற் கொண்டு திணைபால் இலக்கணத்தை பெயரியலிலேயே அடக்கிக் கூற முற்படுகிறார்கள். தமிழில் திணை பால் நிருணயம் செய்வதில் வினைச் சொல்லுக்கே சிறப்பாகவுரிய அதிகாரத்தை எவரும் உணர்ந்து கொண்டதாக இல்லை.

> "சொற்கள் பொதுவாக ஐந்து பாலாகப் பிரிக்கப்படும் என்று இலக் கணங்கள் கூறினாலும் இந்தப்பாற் பகுப்பும் திணைப்பகுப்பும் சிறப் பாகப் பெயர்கட்கே உரியன என்பது எல்லோர்க்கும் தெளிவாக விளங்கிய செய்தி"
>
> (பொற்கோ - 1989, பக்.43)

மேற்படி கூற்று திணைபாற்பகுப்புப் பற்றிய தமிழாய்வுலகின் நிலைப் பாட்டைத் தெளிவுறுத்துவதாய் அமை வது. இத்தகைய விளக்கத்தின் அடிப் படையிலேயே பொற்கோ தமிழின் பாற்பாகுபாடு "பதில்மாற்றக் கொள் கை'யின் அடிப்படையிலே மேற்கொள் ளப்பட்டது என்று கூறமுற்பட்டார்.

> "இலக்கிய வழக்கில் நாம் காணும் பெயர்ச்சொற்களில் இடப்பெயர்கள் தவிர ஏனையவற்றையெல்லாம் அவன், அவள், அவர், அது, அவை முதலாகிய ஐந்து பெயர்களையும் கொண்டு பதில் மாற்றம் (அல்லது பதிலீடு) செய்யலாம். அப்படிப் பதில்மாற்றம் செய்யும் பொழுது அவன் என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாவற்றையும் ஆண்பால் என்ற பெயரால் சுட்டினர். அவ்வாறே அவள் என்ற பெயரால் பதில் மாற்றம்செய்யத்தக்க எல்லாப் பெயர் களையும் பெண்பால் என்றும், அவர் என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லா வற்றையும் ஒன்றன் பால் என்றும் அவை என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாவற்றையும் பலவின் பால் என்றும் பிரித்தனர். அஃறிணையில் ஆண்பால் பெண்பால் என்று இரு பிரிவை அமைக்காமல் ஒன்றன்பால் என்று ஒரு பிரிவை மட்டுமே அமைத் தமைக்குக் காரணம் என்ன என்பது இப்போது விளங்கும். இதையே மேலும் விளக்கமாகக் காண்போம்.

www.tamilarangam.net

களிறு, பிடி, ஆகியசொற்கள் முறையே ஆண் யானையையும் பெண்யானையையும் குறிக்கும். இப்படி ஒரு சில அஃறிணைப் பெயர்கள் தனித் தனியே ஆணையும் பெண்ணையும் சுட்டுவனவாக அமைந்திருந்தாலும் கூட நமது இலக்கணங்கள் அஃறிணைப் பெயர் களில் ஆண்பால் பகுப்பை அமைக்க வில்லை. ஏனென்றால் களிறு, பிடி, சேவல், பெடை ஆகிய பெயர்கள் அதுவென்னும் பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்கன. ஆகவே தான் அஃறிணை ஆண்பால், பெண் பால் இரண்டையும் ஒன்றன் பால் என்ற ஒரு பகுப்பிலேயே அடக்கிக் கொண்டனர். (பொற்கோ, 1989, பக்.4).

பெயர்ச் சொற்களெல்லாம் சுட்டுப் பெயர்களான அவன், அவள், அது, அவை என்பவற்றில் ஏதோ ஒன்றால் பதில் மாற்றம் செய்யத்தக்கனவாய் இருக்கும் நிலைமையே அப்பெயர்ச் சொற்களை ஐம்பாலாக வகுக்கும் தமிழ்ப் பாற் பகுப்பிற்கான அடிப்படை என்று கொள்ளும் பொற்கோவின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில் ஒரு பெயர்ச் சொல் குறிக்கும் பொருளை எந்தச் சுட்டுச்சொல்லினால் குறிப்பிடுவது என்பதை எதைக் கொண்டு தீர்மானிப்பது? முன்பு ஓரிடத்திற் காட்டப்பட்ட மாருதி என்ற பெயரையே நோக்கலாம் "மாருதி"யை "அவன்" என்று சுட்டுவதா "அது" என்று சுட்டுவதா என்பதை அச்சொல் தொடர் நிலையில் அமையும் பொழுதே தெரிந்து கொள்ளலாம். அதாவது தொடரின் வினைமுற்றை வைத்தே தெளியலாம். அன்றியும் சுட்டுப் பெயர்கள் ஓர் உரையின் தொடக்க நிலையில் அமைவது இல்லை. இரண்டாம் வாக்கிய நிலையிலேயே முதலாம் வாக்கியத்தில் எழுவாயாக அமைந்த பெயரை சுட்டுப் பெயரால் குறித்தல் இயலும். ஒரே வினைமுடிபு கொள்ளும் நிலையில் மாத்திரமே ஒரே வாக்கிய அமைப்பில் இயற்பெயரும் சுட்டுப்பெயரும் அடுத்தடுத்து வருதல் இயலும். அந்நிலையிற்கூட இயற் பெயரை அடுத்தே சுட்டுப்பெயர் வரும் சாத்தியப்பாடு உண்டு. (தொல். சொல்.39) இவற்றால் பாற்பகுப்புக் கான அடிப்படையாக அமையத்தக்க ஆற்றல் சுட்டுப்பெயருக்கு இல்லை என்பதும் அவ்வாற்றல் படர்க்கை வினை முற்றுக்கே உண்டு என்பதும் பெறப்படும்.

இன்றுள்ள தமிழிலக்கண நூல்களுக் கெல்லாம் அடிப்படையாய் விளங்கும் தொல்லிலக்கண நூலாகிய தொல் காப்பியமே வினையீறுகள்தான் பாற் பகுப்பின் அடிப்படையாய் அமைவன என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறி யுள்ள நிலையில், முயன்று வேறோர் அடிப்படையை ஆராய வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் இல்லாமலில்லை. பாற்பகுப்பானது மொழிக்கே உரியது என்பதை உண

www.tamilarangam.net

ராது அது பொருள்களுக்குரியதென்றும் பொருள்களைச் சுட்டுவன பெயர்ச் சொற்களேயென்றும் ஆகையால் அவற்றை அடிப்படையாகக் கொண்டே பாற்குப்புச் செய்யப்படும் என்றும் கருதியமையின் விளைவே இது. இது முன்பு குறிப்பிடப்பட்டது போன்று இடைக்கால, பிற்காலத் தமிழ்ப்புலமை உலகம் வடமொழி, ஐரோப்பிய மொழிகளுக்கு ஆட்பட்ட காரணத்தின் காரியமாதல் கூடும்.

அஃறிணை ஒன்றன் பாலில் ஆண், பெண் வேறுபாடு கருதப்படாமைக்கு சுட்டுப்பெயரின் அடிப்படையில் பொற்கோ அளித்த விளக்கம் படர்க்கை வினைமுற்றின் அடிப்படையிலும் பொருந்துவது முன்பே அவதானிக்கப்பட்டது. இவ்விடத்தில் நமது நோக்குக்குத் தேவையற்றதெனினும் தெளிவுகருதி பொற்கோ கூறியவற்றில் உள்ள வேறு இரு குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஒன்று மேற்படி மேற்கோளின் தொடக்கத்தில் "இலக்கிய வழக்கில்" என்று பிரித்துச் சுட்டப்பட்டிருப்பது பொருத்தமானதல்ல. ஏனெனில் பொற்கோ கூறவரும் செய்தி உலகவழக்குக்கும் பொருந்துவதே. மற்றைய தவறு "இடப்பெயர்கள் தவிர" என்று இடப்பெயரை விலக்கியுரைப்பதாகும். எவ்வகைப் பெயரையும் சுட்டுப்பெயர்களுள் பொருத்தமான ஒன்றினால் சுட்டலாம். சுட்டுப்பெயரின் பயன்பாடு தொடர்நிலைக்குரியது என்பதைக் கருதாமையே இத்தவறு நிகழக் காரணமாய் இருந்திருக்கலாம். உண்மையில் ஒரு தொடரில் முதன்மைப்படுத்தப்பட்டு (எழுவாயாக) வரும் எந்தப் பெயரையும் அடுத்த தொடரில் பொருத்தமான ஒரு சுட்டுப்பெயரினால் பதிலீடு செய்யலாம் என்று கூறுவதே சரியானதாகும்.

சுட்டுப்பெயர்பற்றிய ஆராய்ச்சி அதிகாரப்பட்ட நிலையில் சுட்டுப் பெயரின் அடிப்படையில் வேலுப்பிள்ளை முன்வைத்த ஒரு கருத்தையும் நோக்குதல் நன்று.

"ஆதிகாலத்தில், தமிழில் செய்து அவன் என்று வாக்கியம் அமைந்திருத்தல் வேண்டும். அவன் என்பது ஆண்பாற்சுட்டுப்பெயர். தனியே ஆண்பாலைக் குறித்த பழைய வடிவம் அன் ஆக இருந்திருக்கலாம். அன்னும் ஆனும் மாற்று வடிவங்கள். எனவே செய்து ஆன் என்பதே புணர்ந்து செய்தான் எனவும் வழங்கியிருக்க வேண்டும். சொற்களைப் புணர்த்தி எழுதுதலே பழைய தமிழ் முறை: பிரித்தெழுதும் வழக்கம் ஐரோப்பியராலேயே ஆரம்பிக்கப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது. வடமொழியில் பெயரைத் தொடர்ந்து வினைமுற்றுப் பயனிலையாக வருவது வழக்கம். அம் முறையைப் பின்பற்றித் தமிழில் வினைச்சொல்லைக் காலமுன்னாகக் கொண்டு விளங்கிய பழைய வாக்கியத்தின் முன் பெயர்ச்சொல் வழங்கப்பட்டது.

www.tamilarangam.net

ஆகவே இன்றைய தமிழ் வாக்கிய அமைப்பு அவன் வந்தான் He came he என்றாகிவிட்டது" (வேலுப் பிள்ளை 1979 பக்.180,181).

"மலையாள மொழியில் வினை முற்றுக்கள் பால்வேறுபாடு காட்டாது நிற்றல் பண்டய தமிழின் அமைப்பை அறியத்துணை செய்ய உதவும்" என்று கருதுகின்றார் வேலுப்பிள்ளை. ஆனால் பண்டைய மலையாளம் பாலுணர்த்தும் ஈகளோடு கூடிய வினை முற்றுக்களைக் கொண்டதாகவே இருத்தல் வேலுப்பிள்ளையின் ஆராய்ச் சியிலுள்ள வரலாற்று முரணைத் தெளிவாக உணர்த்தும். வடமொழி வழக்கை அடியொற்றியே பெயரைத் தொடர்ந்து வினைமுற்றுப் பயனிலை யாக வரும் வழக்கம் தமிழில் ஏற்பட்டது என்ற கூற்று வடமொழிச் செல்வாக் குக்கு முந்திய தமிழிலக்கியங்களை நோக்காது கூறப்பட்டது போலும்! அன்றியும் இலட்சக்கணக்கான மக்கள் காலங்காலமாகப் பேசி வந்த ஒரு மொழியை வடமொழியறிந்த ஒருசில பண்டிதர்கள் தலைகீழாக மாற்றி யமைத்தார்கள் என்பது மொழியிய லுக்குப் பொருந்தாதது.

"இன்றைய தமிழ் வாக்கிய அமைப்பு He came he என்றாகிவிட்டது" என்ற கருத்து சுட்டுப்பெயரை எழுவாயாகக் கொண்டமையும் வாக்கியத் தொகு தியை மாத்திரமே மனங்கொண்டு கூறப்பட்டதொரு கருத்து. ஒரு மொழி யில் சுட்டுப்பெயரை எழுவாயாகக் கொண்டமையும் வாக்கியத் தொகுதி யோடு ஒப்பிடுகையில் இயற்பெயரை எழுவாயாகக் கொண்டமையும் வாக்கி யங்களின் எண்ணிக்கை மிக அதிக மானது. ஆனால் அந்த இயற் பெயர்களோ வெனின் அவற்றுட் பெரும்பாலானவை பால் உணர முடியாதவையே. அந்நிலையிலெல் லாம் பால் உணர்த்தும் வேலையை வினைமுற்றுக்களே தனித்து நின்று செய்கின்றன. ஆகையால் வினை முற்றுக்கள் உணர்த்தும் பாலும் (பாலீறும்) சுட்டெழுத்தும் சேர்ந்தே சுட்டுப்பெயர்கள் தோன்றின. வினை முற்றே பெயராக மாறித் தொழிற்படும் அமைப்பு (வினையாலணையும் பெயர்) இருத்தலும் நோக்கத்தக்கது. அன்றி யும் பெயர்த்தன்மை உடையனவான குறிப்பு வினை முற்றுக்களெல்லாம் அமைவதும் கருதத்தக்கதே. இவற்றா லெல்லாம் தமிழ்மொழியைப் பொறுத்த வரையில் வினைச் சொல்லுக்கு இருக் கும் முக்கியத்துவமே உணரப்படு கின்றது. ஒரு பொருளின் திணைபால் என்பன அப்பொருளைச் சுட்டும் பெய ரால் நிருணயிக்கப்படாது, அப்பொரு ளின் தொழிற்பாட்டை உணர்த்தும் வினைச்சொற்களாலேயே நிர்ணயிக் கப்படுகின்றது என்பதே தமிழிலக்கண மரபு உணர்த்தும் உண்மை.

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'**

www.tamilarangam.net

**உசாத்துணை**

தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையம், (1938) கணேசையர் பதிப்பு, திருமகள் அச்சகம், (1989).

பொற்கோ, (1989) இலக்கண அடிப்படைகள், சென்னை

வேலுப்பிள்ளை, ஆ.(1966) வரலாற்றுத் தமிழ் இலக்கணம், பாரதி நிலையம், சென்னை.

www.tamilarangam.net

# மிருச்சகடிகம் சமகால சமூகத்தைப் பிரதிபலிக்கும் சம்ஸ்கிருத நாடகம்

திருமதி.சிறிகலா ஜெயநாதன்.

## ஆய்வுச்சுருக்கம்

*மிருச்சகடிகம் (பொம்மை வண்டி) என்ற சூத்திரகரால் இயற்றப்பட்ட சம்ஸ்கிருத நாடகம் சமகால சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் ஒரு நாடகமாகும். நாடகவகை பத்தினுள் இது பிரகரணம் என்ற வகையைச் சேர்ந்தது. சூத்திரகரின் காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நாடகம் மூலம் அக்கால மக்களின் சமூகநிலை, சமயம், இந்துச்சட்டம், நீதி பரிபாலனம், சமுதாய நம்பிக்கைகள், இசை, நடனம், பொழுதுபோக்கு போன்ற பல்வேறு அம்சங்களையும் அறிந்து கொள்ள முடியும்.*

## பொது

சம்ஸ்கிருத நாடகங்கள் மனித வாழ்வுக்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருடார்த் தங்களை எடுத்துரைப்பனவாகவும், இலக்கியச்சுவை பயப்பனவாகவும் விளங்குகின்றன. சூத்திரகரால் இயற்றப்பட்ட மிருச்சகடிகம் என்னும் சம்ஸ்கிருத நாடகம் சமகால சமுதா யத்தைப் பிரதிபலிக்கும் ஒரு நாடக மாகும். இந்நாடகம் யதார்த்த சமுதாயத்தைப் படம் பிடிப்பது பற்றி "காளே" என்ற அறிஞர் That the Mrichhakatika draws a realistic picture of society" எனக் குறிப்பிடுவது நோக் கத்தக்கது.[1] சம்ஸ்கிருத நாடகவகை பத்தினுள் பிரகரணம் என்ற நாடக வகையைச் சேர்ந்தது இந்நாடகம். **"பவேத் பிரகரணம் கவி கல்பிதம்"** எனச் சாகித்திய தர்ப்பண ஆசிரியர் விசுவ நாதர் பிரகரண நாடகவகை உலகியல் வழக்குப் பற்றியதாகவும், கவியின் கற்பனையானதாகவும் இருக்கவேண் டும் என்று கூறுகின்றார்.[2] இந்த நாடகங்கள் உயர்ந்த நாயகனையோ, தெய்வத்தின் பெருமையினையோ பேசுவதற்காக இயற்றப்பட்டனவல்ல. இவற்றுக்கு அப்பாற்பட்டவர்களின் வாழ்க்கையுடன் இவை தொடர்புடை யவை.

**"நோதாத்த நாயகம் ந திவ்யம் சரிதம் ந ராஜ்யம் சம்போகம்"/**

**பாஹியஜன சம்பிரயுக்தம் தத்ஞேயம் பிரகரணம் தஜ்ஜைஹி"//**[3]

பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள விரும்பிய சூத்திரகர், அந்தண வணிகனான சாருதத்தன், கணிகையான வசந்த சேனை என்பவர்களோடு திருடன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வண்டிக்காரன் போன்ற சிறு பாத்திரங்களூடாக அக்கால சமூகத்திலே நிலவிவந்த வர்ணம், சமயம், சட்டம், நிர்வாகம், கலை, பொழுதுபோக்கு முதலிய நாகரிக அம்சங்கள் பற்றியும் குறிப்பிடத்தக்க அளவு சித்தரிக்கின்றார்.

இந்நாடகத்தின் முகவுரையிலே இந்நாடக ஆசிரியரான சூத்திரகர் பற்றிய குறிப்பு உண்டு. "இதை எழுதிய நாடகவாசியர் இருபிறப்பாளரில் சிறந்தவர். அளக்கமுடியாத ஆற்றலுடைய புகழ்பெற்றவர்: ரிக்வேதம், சாமவேதம், கணிதம், கணிகையர்க்கு உரிய நாட்டியம், சங்கீதம் முதலிய கலைகள் யானையேற்றம் முதாலியவற்றை நன்கு அறிந்தவர். இவர் எழுதிய இந்நாடகத்தில் இளமையும், அழகும், வறுமையுமுள்ள சாருதத்தன் என்ற அந்தண வணிகன் அவந்தியில் வாழ்கின்றான். அவனுடைய நற்குணங்களில் வசந்த காலத்து அழகைப்போன்ற வசந்தசேனை ஈடுபட்டான். இவ்விருவருடைய காதல் வைபவத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் போக்கு, நீதிபிழைத்தமை, கயவர் இயல்பு, ஊழ்வினை வந்து ஊட்டுதல் என்பவற்றைப் பொருளாக வைத்து சூத்திரகர் இதனை இயற்றியுள்ளார்." [4]

## காலம்

சூத்திரகரின் காலம் குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. மக்டொனால்ட், சூத்திரகர் கி.பி ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார்.[5] கி.பி 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த காவிய தரிசம் என்ற நூலின் ஆசிரியர் தண்டியே சூத்திரகர் என மேலும் அவர் கருதுகிறார்.[6] பாஸருடைய சாருதத்தம் என்ற நாடகத்தின் முதல் நாங்கு அங்கங்களைப்பின்பற்றியே மிருச்சகடிகம் இயற்றப்பட்டது. பாஸருடைய காலம் கி.பி 3ம் நூற்றாண்டாக கருதப்படுகிறது.[7] பாஸருடைய சாருதத்தம் என்ற நாடகத்தைத் தழுவி எழுதப்பட்டதே மிருச்சகடிகம் என்ற இந்நாடகம். காளிதாசருடைய மொழி நடைக்கு முற்பட்ட மொழி நடையினையே இது குறிக்கிறது. காளிதாசருடைய காலம் கி.பி 5ம் நூற்றாண்டாகும்.[8] எனவே சூத்திரகரை கி.பி 3ம் நூற்றாண்டிற்கும், 5ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவராகக் கருதலாம்.

## வர்ணம்/வருணம்

இந்நாடகம் சித்தரிக்கும் சமூகம் பற்றிக் கூறும்போது அக்கால இந்து சமுதாயத்தின் அம்சமான வர்ணம் பற்றியும் முதலில் குறிப்பிடலாம். வர்ணப்பாகுபாடு இந்திய சமுதாயத்தில் முதலிடம் பெற்றமையை மிருச்சகடிகம் நாடகம் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. அந்தணர் சமுதாயத்தில் கூடிய சலுகைகள் பெற்றிருந்தனர். "பசுவின் விருப்பத்தையும் பிராமணனின் விருப்பத்தையும் புறக்கணிக்கக்கூடாது"[9] எனவும் மனதில் இருப்பதை நிறைவேற்றும் நோக்கமுடையவர் பிராமணர்க்கே முதலிடம் அளிக்க வேண்டும்[10] எனவும் குறிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேள்விகளையும், வீட்டுச்சடங்குகளையும் திறம்படச் செய்ய வல்லவன் பார்ப்பான். அவனுக்குப் பூநூல் ஒன்றே சிறந்த அணிகலன். "**யக்ஞோப வீத அமௌக்திகமசவ் வர்ணம் பிரக்மணாநாம் விபூஷணம்**" என மிருச்சகடிகம் கூறும்[11] விரத காலங்களில் பிராமணர் தக்ஷிணை முதலியவற்றை தமது செல்வதுக் கேற்றபடி வழங்கினார். அந்தணர் அரசாங்க வேலையில் உயர் பதவி பெற்றும் சிறந்த வணிகராயும் விளங்கினார்.

அரசன் ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றவனாக இருக்க வேண்டும். இந்த நாடகம் குறிப்பிடும் பாலகன் என்ற மன்னன் யதேச்சதிகாரம் உள்ள மன்னான விளங்கினான். அவனிடத்தில் மக்கள் திருப்தியற்ற முறையில் காணப்பட்டனர். தேவைப்பட்ட இடங்களில் புரட்சி மூலம் ஆட்சியைக் கவிழ்க்கும் போக்கு காணப்பட்டது.

வணிகர் பெரும் செல்வம் படைத்தவராய் இருந்தனர் சாருதத்தன் என்ற அந்தண வணிகன் பெரும்செல்வம் படைத்தவனாய் ஒருகால் விளங்கினான். உச்சையினி நகரிற் புதுக்குடியிருப்புக்களையும், தேவர் கோட்டங்களையும் அமைப்பித்தான்.[12] நல்ல கட்டமைப்புள்ள தோணிகள் பற்றியும் மிருச்சகடிகத்தில் குறிப்புண்டு.[13] வணிகர் தம் செல்வம் காரணமாக பொன்னாலான விளையாட்டு வண்டிகளை தம் மைந்தர்க்கு வாங்கித்தந்திருந்திருந்தனர் என அறியலாம்.[14]

நாலாம் வர்ணத்தவரான சூத்திரர் வேதம் ஓதுவது தடை செய்யப்பட்டுள்ளது.[15] சண்டாளர் சுடலையின் அருகில் வாசித்தனர். இறந்தவர்களின் இறுதிக்கிரியைகளுக்கு உதவுவதும், இடுகாட்டைக்காப்பதுவும் மரண தண்டனை பெற்றவர்களின் உயிரைப் போக்குவதும் இவர்களின் கடமைகளில் அடங்குவன. இந்த நாடகத்தில் மரண தண்டனை பெற்ற சாருதத்தனைச் சண்டாளர் மயானத்துக்கு அழைத்துச் செல்கின்றனர்.

இந்நாடகத்தின் மூலம் பிறப்பால் மட்டும் ஜாதியுரிமைகள் ஏற்படாமல் அவரவர் ஒழுக்கம், செய் தொழில் வேற்றுமைகளால் வருணமுறை வரிசையுரிமைகள் வழங்கப்பெறும் வழக்காறுண்மையும் வலியுறுத்தப்படுவதையும் அறிந்து கொள்ளலாம். கணிகைகள் குலத்துதித்த வசந்தசேனை தன் தூய ஒழுக்கத்தால் குலமகளாய் மதிக்கப்படுகிறாள். ஆரியகன் இடையனாயினும் அரசனாக அங்கிகாரம்பெறுகின்றான். கணிகையார் வீட்டு அடிமைத்தாசியான மதனிகை பார்ப்பானாகிய சர்விலகனுக்கு மனைவி ஆகிறாள். நாவிதனான சம்வாகன் சூதாட்டத்தில் பொருளையிழந்து பௌத்த பிக்குவாகினான்.

www.tamilarangam.net

பொற்கொல்லர், நாவிதர் இடையர், சட்ட அறிஞர், தூதுவர், நீதிபதிகள் என்ற பல்வேறு பிரிவினரையும் மிருசச்கடிகம் கூறும். அடிமைகள் பற்றிய குறிப்புக்களையும் இந்நாடகத்தில் காணலாம். கணிகையர்களும் அடிமைகள் வைத்திருந்தனர். வசந்தசேனையிடமிருந்த மதனிகை என்ற அடிமையை மீட்பதற்காக மதனிகையின் காதலனான சர்விலகன் திருடச் செல்கிறான்.

**சமயம்**

இந்திய நாகரிகத்தின் பிறிதொரு சிறப்பம்சம் சமயம் ஆகும். சமயம் இன்றி இந்திய நாகரிகம் பொருளற்றது. சமயம் உணர்த்தும் இறைவன், வினை, மறுபிறவி ஆகிய கோட்பாடுகள் அனைத்தும் இந்திய நாகரிகத்தில் அடங்கியுள்ளன. மிருச்சகடிகம் நாடகம் மூலம் இது இயற்றப்பட்ட இடத்தில் நிலவிய அக்காலச் சமயம், வழிபடு தெய்வங்கள், மக்களது சமய நம்பிக்கைகள் போன்றவற்றை நன்கு தெரிந்து கொள்ளலாம். ருத்திரன், பிரம்மா, விஷ்ணு, இந்திரன், அக்கினி, முதலிய கடவுளர் மட்டுமன்றி சாதாரண மக்கள் வழிபடும் இல்லுறை தெய்வங்களும் குறிப்பிடப்படுகின்றனர். இல்லுறை தெய்வங்களை வழிபடுதல் இல்லற தர்மமாகச் சொல்லப்படுகின்றது. ''தவம் தியானம் தோத்திரம் என்பவற்றை எவன் மனவமைதியுடன் செய்கிறானோ அவனைத் தேவதைகள் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுவர்'' என்று சாருதத்தன் விதுாஷகனுக்கு கூறுகினான்.

**''தபசா, மனசா, வாக்பிஹி பூஜிதா பலிகர்மபிஹி/**

**துஷ்யந்தி நித்யம் தேவதாஹா கிம் விசாரிதைஹி''**//[16]

விரதங்களை அனுட்டிப்பது பற்றியும் மிருச்சகடிகம் கூறும். நல்ல மணாளனை வேண்டி மங்கையாரால் அதிரூபபதி என்ற விரதம் அநுட்டிக்கப்பட்டது.[17] இரத்தினசட்டி என்ற விரதத்தையும் பெண்கள் அநுட்டித்தனர்.[18] விரதகாரியங்களில் சுண்ணமித்தல், மாலை தொடுத்தல், பஞ்சவர்ணப் பூக்களால் நிலத்தை அலங்கரித்தல் போன்ற காரியங்கள் நடைபெற்றன.[19]

இறந்த மூதாதையர் நினைவுக் கொண்டாடு முகமாக செய்யப்பட்ட சிரார்த்தம் என்னுமொரு கருமம் குடும்பத்தைப் பிணைத்து வைத்தது. இறந்தவருடைய புதல்வர், பேரப்பிள்ளைகள் ஒருங்கு கூடி இச்சிரார்த்தத்தைச் செய்தனர். இறந்த கூதாதையர் இச்சடங்கின் பலனை எய்தினர் என நம்பப்பட்டது. சாருதத்தன் தான் இறந்த பின் தன் மகன் தனக்கு நீரும் உணவும் அளிப்பான் என நம்புகிறான்.[20]

சைவமும் பௌத்தமும் போட்டியின்றி இருத்தமையை இந்நாடகம் சுட்டும் பிக்குவான சம்வாகன் ''தக்கன் வேள்வியை அழித்த இடபக்கொடியோன் வெல்க. கிரௌஞ்ச மலையைத் துளைத்த சண்முகனவெல்க உலகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வென்று சத்துருக்களை நாசம் செய்து வெள்ளிமலைக் கொடியுயர்த்திய சூரியன் வெல்க'' என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[21]

சூத்திரகர் சைவர் எனினும் பௌத்தக் கோட்பாடுகளிலும் நம்பிக்கையுடையவர். ''தருமத்தை தேடுங்கள், தியானம் என்ற பறையை முழக்கி எப்போதும் விழிப்பாய் இருங்கள். ஐம்புலன்கள் என்ற திருடர்கள் நீண்ட காலமாக தேடிய தருமநிதியை களவாடி விடுவார்கள். எல்லாம் அநித்தியம், அவித்தை என்ற பெண்ணைக் கொன்றால் காயம் என்ற பட்டினத்தை அடையலாம்'' என்று குறிப்பிடுகிறார்.[22] இவை இந்து சமயத்திற்கும், பௌத்தத்திற்கும் உரிய பொதுவான கருத்துக்களாகும்.

## இந்துச் சட்டம் நீதிபரிபாலனம்

இந்து சட்டம் நீதிபரிபாலனம் பற்றிய முக்கியமான சில விடயங்களையும் மிருச்சகடிகம் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. **''அதிகரணிகன''** என்ற தலைமை நீதிபதியும், **சிரேஷ்டின்** என்ற வணிகப்பெருமகன் ஒருவனும், ஏடெழுதும் வகுப்பாரின் பிரதிநிதியொருவனும் **(காயஸ்தன்)** நீதிமன்றத்திற்கு தலைமைதாங்குவர்.[23] வணிகன் பணத்தை எண்ணுவது. நகைகளைப் பரிசோதிப்பது போன்ற தொழில்களைச் செய்தான். நீதிமன்றச் சாட்சியங்களை ஏழுத்தாளனான காயத்தன் பதிவு செய்தான். நீதி முறை ஊழல் பற்றி மிருச்சகடிகத்தில் குறிப்பு உள்ளது.

ஆராயாமல் தீர்ப்புக் கூறும் அரசனாலும், அவனுக்கு நேர்மையற்ற முறையில் புத்தி கூறும் ஆலோசகர்களாலும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள்[24]

**ஈத்ருஸைஹி ஸ்வேதாகாகீயைஹி**
**ராக்ஞஹ ஸாசன தூஷகைஹி/**
**அபாபாநாம் சஹஸ்த்ராணி ஹன்யந்தே**
**ஹதாநி ச//**

அரச நிர்வாகத்தை மாசுபடுத்தும் இந்த வஞ்சனை நிறைந்த ஆலோசகர்களை சாருதத்தன் வெண்காகங்களுக்கு ஒப்பிடுகின்றான். மஹாபாரதம் இத்தகைய வெண்காகங்களான ஆலோசகர்களைப் புகழை விரும்புவார்கள் என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[25] மனுவும் ஆராயாமல் **'குற்றவாளிகளைத் தண்டிக்கும் அரசன் அபகீர்த்தி அடைவான்''** என்று குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.[26] சட்டத்தின்படி இருவித வழக்குகளை மிருச்சகடிகம் கூறுகிறது. வாக்கை அநுசரித்தும், சந்தர்ப்பங்களை அநுசரித்துமென்ற இருவகை வழக்குகளில் சந்தர்ப்பங்களை அநுசரிக்கும் வழக்கு நீதிபதின் யோசனைப்படியே தொடுக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.[27]

## இந்துப்பெண்கள்

சாருத்தனின் மனைவி தூதை இலட்சிய இந்துப் பெண்ணாக மிருச்சகடிகத்தில் சித்தரிக்கப்படுகிறாள். தனது

www.tamilarangam.net

கணவனை மகிழ்விப்பதே அவளது வாழ்வின் இலட்சியமாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. தனது கணவனாகிய சாருதத்தனின் இறப்புப்பற்றிய செய்தியை கேட்பதிலும் தான் இறப்பதே மேல் என்று எண்ணுகிறாள்.[28]

### கணிகையர்

வரைவின் மகளிர் பற்றிய குறிப்புக்கள் பல இந்நாடகத்திலுண்டு. இவர்கள் அழகியராயும், பொருள்வம் படைத்தவராயும், அருங்கலைப் பயிற்சி கைவந்தவர்களாயும் காணப்பட்டனர். அவர்கள் தம் தொழிலுக்கு இன்றியமையாத கலைகளுட்பட ஆயகலைகள் அறுபத்தி நான்கிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

கணிகையரது சுயதொழிலான பரத்தமை குறித்து இந்நாடகம் எடுத்துக் கூறுகிறது. **அவர்கள் வழியில் படரும் கொடி: நீரிலே செல்லும் தோணி: கிணறு என்பனவற்றுக்கு ஒப்பிடப்படுகின்றனர். கொடியிலே காகமும் மயிலும் இருந்து கொடியை வளைக்கும். தோணியிலே பிராமணர், ஷத்திரியர், வைசியர் என்ற மூன்று ஜாதியினரும் கரையைக் கடப்பர். கிணற்றிலே இரு பிறப்பாளரும், மூர்க்கரும் குளிப்பர். கணிகையரும் இளைஞர்க்குச் சகாயம் செய்ய வேண்டும்''** என்று கூறப்படுகின்றது.[29]

வசந்தசேனை பெரும் செல்வம் படைத்திருந்தாள். அவளது மாளிகையில் பொன்னால் செய்த வைரமிழைத்த கதவுகள் பெரிய அசுரனின் மார்பகங்கள் போல் விளங்கின.[20] தந்தத்தினால் செய்த தோரணங்கள் யானை போல் விளங்கின[31]. குபேரனுடைய மாளிகைக்கு இணையாக வசந்த சேனையின் மாளிகை விளங்கியது.[32]

இந்நாடகத்தால் கணிகையரும் இல்லறத்தான் ஒருவனை மணந்து ஒழுங்கான வாழ்க்கை மேற்கொள்ளக் கூடும் என்பது தெளிவு. சாருதத்தனை இரண்டாம் தாரமாக மணந்து வசந்த சேனை ஒழுங்கான வாழ்க்கை மேற்கொள்கிறாள்.

### கலைகள்

காளிதாசர், பவபூதி போன்ற சமஸ்கிருத கவிகளில் ஆக்கங்களில் காணப்படுவது போன்று சூத்திரகரின் நாடகத்திலும் கலைகள் பற்றிய குறிப்புக்களைக் காணமுடிகிறது. கணிகையான வசந்தசேனை கலைகளில் தேர்ச்சியும், அரங்கப் பயிற்சியும் பெற்றிருந்தாள். "**இயம் ரங்கபிரவேசேன கலாநாம் உபசிஷ்யா ச**" என சூத்திரகர் இதனைத் தெரிவிக்கிறார்.[33] அவள் தனது மாளிகையில் இசைமண்டபம் அமைத்திருந்தாள். அங்கே மேகம்போல் ஒலிக்கும் மிருதங்கங்களை வனிதையர் வாசித்தனர்.[34] வண்டுகள் இசைப்பதுபோல் புல்லாங்குழல் கேட்டது.[35] தாரகைகள் விழுவது போன்று தாளங்கள் கேட்டன.[36] சிருங்காரசம் பொருத்த கணிகையர் ஆடவும், பாடவும், செய்தார்கள்[37] ரேபிலனுடைய இசைக்கச்சேரி பற்றிய குறிப்பும் உள்ளது.[38] களவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு கலையாகச் சொல்லப்பட்டுள்ளது. **கன்னம் வைக்கும்போது அலர்ந்த தாமரை போலவும், சூரியன் போலவும், பிறை போலவும் துவாரம் அமைக்க லாம் என்று சொல்லப்படுகின்றது.**[39]

**கேளிக்கைகள்**

காதல் கடவுளாகிய காமன் பொருட்டு எடுக்கப்பட்ட வேனில் விழா பண்டைய மக்களால் சாலவும் விரும்பிக் கொண்டாடப்பட்டது. காமன் மக்களால் பெரிதும் நயக்கப்பட்ட ஒரு தெய்வமாகும். செல்வரும், வறியவரும் வேறுபாடின்றிக் கலந்து கொண்ட இவ்விழாவில் இன்பக் கேளிக்கைகளும், ஊர்வலங்களும் நடைபெற்றன. காமதேவன் கோயிலருகே ஒரு நந்தவனமும் அமைந்திருந்தது. கோயிலுக்கு வழிபாடு இயற்ற வந்த வசந்தசேனை சாருதத்தனைக் கண்டு காதல் கொள்வதை இந்நாடகத்தில் காணலாம்.

**சூது**

பண்டைய இந்தியாவில் சூதாடுதல் பெரும் பொழுது போக்காக இருந்தது. சூதாடும் மனைகள் அரசினால் நிறுவப்பட்டிருந்தன. சூதாடு சபைக்கு பொறுப்பாளராக இருந்தவன் சபிகன் எனப்பட்டான்[40] சூதாடுசபை **தியூதகர மண்டலி** என அழைக்கப்பட்டது.[41] சூதாட்டத்தில் ஈடுபடுவோர் சூதாட்டச் சம்பிரதாயத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும். ஏமாற்றுவோர் சபிகனுடைய கடுந்தண்டனைக்கு உள்ளாவார்கள் மிருச்சகடிக நாடகத்தில் இரண்டாம் காட்சி சூதாடி ஒருவன் தோற்றபின் பணம் கொடாது தப்பி யோடுவதைக் காட்டுவதுடன் தொடங்குகிறது. தப்பியோடும் அவன் அழிந்த கோயில் ஒன்றில் மறைந்து கடவுள் சிலையென நடித்துக் கொண்டு பயத்துடன் நிற்கிறான். அதிலே தோற்றவனான இந்த சம்வாகனை சபிகன் நோக்கி "**நீ பாதாளத்துக்குப் போனால் என்ன? இந்திரலோகத்துக்குப் போனால் என்ன? சபிகனைத் தவிர இந்த ருத்திரனால் கூட உன்னைக் காப்பாற்ற முடியாது**" என்று கூறுவது நோக்கத்தக்கது[42] சபிகன் சூதாட்டத்திலே பெற்ற முக்கியத்துவத்தையும் இது காட்டுகிறது. "சூதாட்டம் ஒருவனுக்கு சிங்காசனம் இல்லாத ராச்சியம் போன்றது" சூதினால் செல்வம் கிடைக்கிறது. மனைவியும் நண்பரும் கிடைக்கின்றனர். சூதினால் எல்லாம் அழிகிறது, எனத் தருத்துரகன் சூதாட்டம் பற்றிக் கூறுகின்றான்.[43]

**சில நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள்**

அக்கால சமூதாயத்தில் காணப்பட்ட சில நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றையும் மிருச்சகடிகம் மூலம் அறிந்து கொள்ளமுடியும் "**குளிர்காலத்திலே தண்டிலே பூசப்பட்ட பூசணிக்காயும், இரவிலே சமைக்கப்பட்ட அன்னமும், பொரித்த மாமிசமும் பழுதுபடாது**" என்பது அக்கால நம்பிக்கையாகும்.[44] பட்ட மரத்தில் இருந்து கரையும் காகம்

www.tamilarangam.net

இடக்கண்ணால் சூரியனைப் பார்ப்பது தீயசகுனம் என்று சொல்லப்படுகின் றது.45

**சுக்ஷ்கவ்ருஷஸ்திதோ த்வாங்ஷ ஆதித்ய பிமுகஸ்ததா/**

**மயி சோதயதே வாமம் கூஷர்கோர சம்சயம்//**

ஆண்களுக்கு இடக்கண் துடித்தாலும் சமணத்துறவிகள் செல்லும் வழியில் செல்லுதலும் தீய நிமித்தங்கள் என்று சொல்லப்படுகின்றன.[46]

**அறிவியல்**

அறிவியல் ரீதியில் அக்காலமக்கள் பெற்ற வளர்ச்சியினை காட்டும் முக மாக இயந்திரவாளி பற்றிய குறிப்பு ஒன்று உள்ளது. "**இறைக்கும் இயந்திர வாளிகள் சில நீரை நிரப்பும்; சில உயரும்; சில விழும்; சில சரியும்** என சாருதத்தன் குறிப்பிடுகின்றான்[47]

"**எட்டாம் இடத்தில் சூரியன், ஐந்தில் செவ்வாய், இலக்கணத்தில் ஆறாம் இடத்தில் வியாழன், ஜன்மத்தின் ஒன்பதாம் இடத்தில் சனிஇவை யாரு டைய ஜாதகத்தில் இடம்பெறுகிறதோ அவர்களுக்கு அழிவு திண்ணம்**"[48] என்ற கருத்து இடம்பெறுகின்றது. வானியல் சாஸ்திரம் பற்றியும் மிருச்சடி கத்தில் குறிப்புண்டு.

**முடிவுரை**

மிருச்சகடிக நாடகம் மூலம அக்கால சமுதாயம் பற்றி நன்கு அறிய முடியும். பல்வேறு ஜாதிப்பிரிவுகள் அக்காலத் தில் இருந்தன. உயர் வர்ணத்தார் மட்டுமன்றி சாதாரண மக்கள் வழிபடும் இல்லுறை தெய்வங்களும் குறிப்பிடப் படுகின்றன. பௌத்தமும், இந்துசமய மும் போட்டியின்றி நிலவின. கணி கையர் பற்றிய பல்வேறு குறிப்புக் களையும் இந்நாடகத்தில் காணலாம். சூது விளையாட்டு அக்காலத்தில் மிகவும் முக்கிய பொழுதுபோக்காக இருந்தது. இசை, நடனம், இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்களையும் இந்நாடகத்தில் காணலாம். சமுதாய நம்பிக்கைகள், அறிவியல் கருத்துக்கள், வானசாஸ்திரக் கருத்துக்கள் என்பவற் றையும் சூத்திரகர் இந்நாடகத்தில் தருகின்றார். சமகால சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற சம்ஸ்கிருத நாடகங் களுள் மிருச்சகடிகம் குறிப்பிடத்தக்கது.

**சுருக்கங்கள்**

1. Adi - Adipavan
2. Manu - Manusmriti
3. N.S - Natyasastra
4. S.D - Sahitya darpana

www.tamilarangam.net

**அடிக்குறிப்பு**

1. The Mricchakatika of sudraka, Kale, M.R(Ed), Sellers publishing Co, Bombay, 1924, p.59. See foot notes.
2. S.D 6.224
3. N.S 18.40
4. Mricchakatika Karmakar, R.D(Ed), Arya bhushan Prss, Poona, 1937, P.1-(3,4,5)
5. Macodonnell A:A History of Sanskrit Literature, London, 1990, Page 60.
6. Mricchakatika op.cit.,P.X,
7. Keith A.B, Sanskrit Drama Its Origin and Development, Theory and Practice, London, 1954, P.95.
8. Keith A.B, Ibid., P.146
9. Mricchakatika, op.cit., 3,18,17.
10. Ibid., 10,57,27
11. Ibid.,10,18
12. Ibid.,9,30,17
13. Ibid.,4,30,5
14. Ibid.,6,76
15. Ibid.,9,21
16. Ibid.,1,16
17. Ibid.,1,8,54
18. Ibid.,3,26,34
19. Ibid.,1,8,51
20. Ibid.,10,17
21. Ibid.,10,46
22. Ibid.,8,3-5
23. Ibid.,9,2,24
24. Ibid.,9,42
25. Adi 1,47,11
26. Manu,8,12
27. Mrichchakatica op.cit..9,7,39-40
28. Ibid.,10,56
29. Ibid.,1.32
30. Ibid.,4,27,30
31. Ibid.,4,27,29
32. Ibid.,4,30,14



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

33. Ibid.,1,42
34. Ibid.,4,27,79
35. Ibid.,4,27,81
36. Ibid.,4,27,80
37. Ibid.,4,27,82,83
38. Ibid.,3,3,11
39. Ibid.,3,13
40. Ibid.,2,09-10.
41. Ibid., 2,06-21
42. Ibid.,2,03
43. Ibid.,2,08
44. Ibid.,1,51
45. Ibid.,7,9,1
46. Ibid.,6,9
47. Ibid.,10,50
48. Ibid.,6,10.,7-8

**உசாத்துணை நூல்கள் (சம்ஸ்கிருதம், ஆங்கிலம்)**


1. , Ramachandra Dandekar Narayan (Ed);(1966) Adiparvan Bhandarkar Oirgental Research institute, Poona
2. Keith A.B (1954) The Sanskrit Drama is its origin development theory and practice, London
3. , Pranjiwan Harihar Pandya (Ed). (1931) Manusmriti The Gujarati Printing press,
4. Kale M.R(Ed), (1924) The Mrchchakatika of Sodrka Sellers publishing co, Bombay .
5. Karmarkar R.d (Ed), (1937) Mrchchakatika, Arybhusan Press, Poona,
6. Sivadutta & Kasinath pandurang (Ed), (1931) Natya Sastra, The Gujarati printing press, .
7. Kane V.P (Ed) (1923); The Sahityadarpana, (Paricchedas I-X) and history of alankara literatue, Nirnayasagar press, Bombay,


## தமிழ்


1. கதிரேசஞ்செட்டியார் மு.(தமிழாக்கம்)(1933) மண்ணியல் சிறுதேர், மலைச்சிவபுரி சன்மார்க்கச்சபை,
2. நடராசன் சோ. (தமிழாக்கம்) (1903). பொம்மை வண்டி, யாழ்ப்பாணம்,
3. பாசம் ஏ.எல். (1986) வியத்தகு இந்தியா, தமிழாக்கம் செ.வேலாயுதபிள்ளை பாலகிருஷ்ணன், அரசகரும மொழித்திணைக்கள வெளியீடு, கொழும்பு,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'நடப்பியல்' - ஓர் அறிமுகம்

கலாநிதி கி. விசாகரூபன்

## ஆய்வுச்சுருக்கம்

*தமிழ் இலக்கிய வடிவங்களில் 'நாவல்' (Novel) என்பது கணிசமான செல்வாக்கு உடைய ஒரு இலக்கிய வடிவமாக உருவெடுத்து வருகிறது. மனித வாழ்க்கையினை அதன் பலம், பலவீனங்களோடு புரிந்துகொள்ள பிற கலை வடிவங்களைவிட நாவலிலேயே அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதலாம். மனிதர்கள் தாம் வாழும் சூழல்களில் இயங்கும் முறையை அப்படியே சித்திரித்துக் காட்டும் பொழுதுதான் குறித்த நாவலை நுகர்கின்ற வாசகனுக்கும் அது உண்மையானதாகப்படும். படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களில் நடப்பியல் நெறிகளை உள்வாங்கிப் படைக்கும் போதுதான் மேற்குறித்த நிலை சாத்தியம் ஆகும். நடப்பியல் நெறிகளை உள்வாங்கி நாவல்களைப் படைக்கும் போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இக்கட்டுரையானது நடப்பியலுக்கான விளக்கம், நடப்பியலின் தோற்றம், நடப்பியலின் அடிப்படையான பொதுப்பண்புகள், நடப்பியல் வகைகள் முதலான கூறுகளை விளக்குவதனூடே நடப்பியலை அறிமுகம் செய்வதாக அமைகிறது.*

### 1. நடப்பியல் :

ஆங்கிலத்தில் "Realism" எனக் கூறப்படும் சொல்லுக்குத் தமிழில் நடப்பியல், யதார்த்தம், எதார்த்தம், உண்மையியல், மெய்யியல் எனப்பல சொற்கள் கூறப்படுகின்றன.

'நடப்பியல்' என்பது வாழ்க்கையினை வாழ்கின்ற நிலைகளோடு இணைத்துச் சித்திரிப்பதான ஒரு செயற்பாடு எனக் கருதிக்கொள்ளலாம்.

நாவல் என்பதற்கு விளக்கம் தரும் ஆர்னால்டு கெட்டில் (Arnold Kettle) என்பார்,

'இருக்கும் வாழ்க்கையை நடப்பியலாகக் காட்டும் உரைநடைக் கதையே நாவல்'[1] என்கிறார்.

சிறந்த நாவல் என்பது மனிதனுடைய வாழ்க்கையை அவன் வாழ்கின்ற சூழல்களோடு சித்திரித்து அதிலிருந்து பொருண்மையிகைக் காட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.[2]

நடப்பியலுக்கு விளக்கம் தரும் சி.கனகசபாபதி:

'நடப்பதை அல்லது உள்ளதைப் பற்றிய உணர்வுப் பதிவைச் சாதாரண மனிதனுக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிப் படைத்துத் தரும் கலைக் கூறு அமைந்தது தான் நடப்பியல் இயக்கம்'[3] என்கிறார்.

உள்ளதை உள்ளவாறே சித்திரிக்கும் படைப்புக்களின் வழியே மனிதன் சுபாவ ரீதியாகத் தன்னை ஒன்றுபடுத்திக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்வது சாத்தியமாகும். 'நடைமுறையின் அனுசரணை' என்பது நடப்பியலின் அடிப்படைப் பண்பாகக் காணப்படுகிறது.

**2. நடப்பியலின் தோற்றம்:**

மனிதன் தன்னுடைய குடும்பம், வர்க்கம், சூழ்நிலை முதலானவை சார்ந்த சமூக, பொருளாதார அம்சங்களினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறான் என்பதனைக் காணும் முயற்சியில் தோற்றம் பெற்றதே நடப்பியல் நெறியாகும்

மிகு உணர்ச்சி நிலையிலிருந்து கலையைக் காப்பாற்றும் எண்ணத்தில் உருவானதே 'நடப்பியல்' என்பார் சி.சு.செல்லப்பா.

'மிகு உணர்ச்சி இயல்'' செய்கையானது நைந்துபோன லட்சியப்பாங்கானது. அதிலிருந்து கலையைக் காப்பாற்றுவது தான் நடப்பியல் என்று வாதிக்கப்பட்டது. உண்மையைச் சொல்லுதல் என்ற இரண்டே சொல் கோஷம்தான் இதன் தோரணை. சொல்வதை எளிமையாகவும், மனப்பூர்வமாகவும் சொல்ல வேண்டுமே தவிர சிக்கலானதாகவும் திருகலானதாகவும் வெளியிடக் கூடாது. யாரும் எளிதில் புரிந்து கொள்ளும்படியாக இருக்க வேண்டும்.[4]
எனவரும் அவரது கூற்று இவ்விடத்தில் அவதானிக்கத்தக்கது.

இலட்சிய நெறிப்பட்ட சிந்தனை நெறியையும் தொல்சீர் காவிய அமைப்பிற் காணப்பட்ட கதைப்பின்னலையும் பாரம்பரிய உண்மைகளையே உண்மையின் உரைகல்லாகக் கொள்ளும் பண்பினையும் விடுவித்து பல்வேறுபட்ட மனித அனுபவங்களைத் தனிமனித சமூக இயக்க அடிப்படையில் ஆராயும் பண்பை ஏற்றுக்கொள்வதான முயற்சியில் உருவானதே நடப்பியல் நெறி என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

நடப்பியல் இயக்கம் என்பது இலக்கியத்தை மரபாகிய அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் மேற்கிளம்பிய ஒன்றாகவே கருதப்படுகிறது.[5]

**3. நடப்பியலின் அடிப்படைப் பொதுப் பண்புகள்:**

நடப்பியல் நெறியானது பல்வேறு பண்புகளைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. அவற்றில் சிலவற்றை இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமானதாகும்.

**3:1 உள்ளதை உள்ளவாறே சித்திரித்தல்.**

உள்ளதை உள்ளவாறே சித்திரிப்பது என்பது இயற்பண்பாகும். இவ்வாறான ஒரு சித்திரிப்பில் சமூக ஆய்வையும் முதன்மைப்படுத்தி நிற்பது நடப்பியல் நெறியின் பிரதான பண்பாகும்.

'நாவல்களில் கற்பனையின் பயனால் உள்ளதை உள்ளவாறே சித்திரிப்பது தான் நடப்பியல் நெறி'[6] என்றும், வாழ்க்கையில் தொடர்ந்து ஆற்றொழுக்காக நடைபெறும் நிகழ்ச்சிகளின் நடப்பு நிலையை உள்ளது உள்ளபடியே இலக்கியத்தில் வடித்துத்தரும் பொழுது அது நடப்பியல் நாவல் வகையாக அமைகிறது.[7] என்றும், மேற்குறித்த

www.tamilarangam.net

பண்பை அறிஞர் பலவாறு விளக்கி யுரைத்துள்ளனர்.

சமுதாயத்தில் உள்ள குற்றங்கள், குறைகள், அழகுகள், விகாரங்கள், பெருமைகள், சிறுமைகள் அனைத்தையும் எந்தவிதமான தணிக்கைக்கும் இடமின்றி நுணுக்கமாக எடுத்துரைக்கும்.[8] இச்செயற்பாடானது, வாழ்க்கையை எழுதிப் பதிவுசெய்யும் கொள்கை அல்லது உத்தி என்பதாக அமைகிறது.

நடப்பியல் முதலில் நாவல்களில் இடம்பெறத் தொடங்கியபோதும் நாளடைவில் அது, சிறுகதை, நாடகம் முதலியவற்றிலும் முனைப்புப் பெறலாயிற்று.

**3:2 காரணகாரிய உறவுநிலை.**

படைப்பு ஒன்றில் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகள் நிகழத்தக்கவையாக இருத்தல் வேண்டும் அவ்வாறு காட்டப்படும் நிகழ்ச்சிகளுக்கான காரணகாரியத் தொடர்பை முன்னிறுத்துவது நடப்பியலின் பண்புகளில் ஒன்றாகும்.

'ஒவ்வொரு சமூக நிகழ்ச்சியையும் காரணகாரியத் தொடர்புடன் புரிந்து கொள்வது எதார்த்தவாதத்தின் ஒரு முக்கிய அம்சம்''[9] என்பார் எஸ்.தோதாத்திரி.

நடப்பியலின் மேற்குறித்த பண்பினை விளக்கும் ந.பிச்சமூர்த்தி,

'எதார்த்தவாதம் முதலாளித்துவ சமுதாய அமைப்பின் கொடுமைகளைக் காரண காரியத் தொடர்புகளுடன் விளக்குகிறது. விமர்சனம் செய்கிறது.'[10] எனக் குறிப்பிடுகிறார்.

**3:3 நிகழ்ச்சிகளின் ஏற்புடைத் தன்மை.**

நிகழ்ச்சிகளின் ஏற்புடைத் தன்மையும் நடப்பியல் நெறியின் பிறிதொரு பண்பாகும். நாவல்கள் சித்திரிக்கும். சம்பவங்கள் நிகழத்தக்க வையாக இருத்தல் வேண்டும். 'ரியலிசம்' பற்றிக் குறிப்பிடும் க.கைலாசபதியும் இதனையே வலியுறுத்துகின்றார்.[11]

"ஒருமனிதனின் அனுபவ விளிம்பிலிருந்து எல்லா மனிதர்களினதும் அனுபவத் தொகுதியை அறிந்து கொள்ளும் நிலைமையை ஏற்படுத்துவதற்கு, யதார்த்தம் என்னும் நோக்கமுறைமை வரலாற்று நெறிகளை, சமூக வளர்ச்சிப் படிகளைச் சுட்டிக்காட்டத் தக்கதாக இருத்தல் வேண்டும்" என கா.சிவத்தம்பி குறிப்பிடுகிறார்.[12]

மனிதன், தன்கால மனிதனாகத் தன்னை உணரும் போது, வாழும் போது அவன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வடிப்பதே நடப்பியல் எனலாம். மக்களையும் அவர்களுடைய வாழ்க்கை நிலைகளையும் உண்மையாக மேல்பூச்சு எதுவும் பூசாமல் சித்திரித்துக் காட்டுவது நடப்பியலாகும்.

**3:4 சமூகத்தைப் புறவயமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு.**

நடப்பியல் நெறியில் புறவயப் பார்வை (Objectivity) பிரதானமானது. புறவயமான சமூக யதார்த்தவாதத்தைப்

www.tamilarangam.net

புரிந்துகொள்வது, பிரதிபலிப்பது, விளக்குவது என்பதில் தான் நடப்பியலின் அடிப்படையே அடங்கியுள்ளது.[13]

மனித சமூகத்தை நாம் உண்மை என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை உணரமுடியும், ஆராய முடியும், அதனை நமது மனதின் புறத்தேயுள்ள ஒன்றாகக் காணவேண்டும்[14] என்பது நடப்பியலின் அடிப்படைகளில் ஒன்றாகச் சுட்டப்படுகிறது.

சமூக முரண்பாடுகள், மாறுதல்கள் முதலானவற்றையும் புறவயமாகக் காணவேண்டிய கடப்பாடு நடப்பியலுக்கு உண்டு. புறவயமாகச் சமுதாயத்தை அணுகும்போது ஒரு நடப்பியற் படைப்பாளி அதைப் பிரதிபலிக்க முற்படுகிறான். இப்பிரதிபலிப்புக்கு அடிப்படையாக சமூக முரண்பாடுகளும் அதன் காரணமாக அமையும் மாறுதல்களும் விளங்குகின்றன.

**3:5 உண்மையை அறிதல்.**

படைப்பாளியின் முன்னால் விரிந்திருக்கும் பரந்துபட்ட அனுபவத்தளத்தில் உண்மைகளை இனங்கண்டு கொள்வது நடப்பியலின் பண்புகளில் ஒன்றாக உள்ளது.

படைப்பாளி ஒருவன் தன் அனுபவத்தில் காணும் அனைத்தையும் படைப்பாக உருவாக்குவதில்லை. தான் கைக்கொண்ட நடப்பியல் நெறிக்கு அவசியமானவற்றைத் தேர்வு செய்வதிலேயே அவனது படைப்பின் வெற்றி தங்கியுள்ளதாக் குறிப்பிடலாம்.

'யதார்த்தவாதம் என்பது உண்மையைத் தேடிக்காணும் நெறி. உள்ளதை உள்ளவாறே படம் பிடித்துவிடின் உண்மை துலங்கும் என்பதில்லை. இயற்கையில் முக்கியமானதும், முக்கியமற்றதும், பயனுள்ளதும், பயனற்றதும், செத்ததும், உயிருள்ளதும் கலந்து விரவிக் கிடக்கின்றன. இவற்றை நுணுக்கமாக வருணித்து விடுவதால் ஒரு பொருளின் உள்ளியல்பு அல்லது சிறப்பியல்பு தெளிவாகாது. தள்ள வேண்டியதைத் தள்ளி, கொள்ள வேண்டியதைக் கொள்ள வேண்டும். இது எதார்த்த இலக்கிய நெறி'[15] என்று மேற்படி பண்பைக் க.கைலாசபதி விரிவாக எடுத்துரைப்பார்.

**3: 6 பாத்திரத் தேர்வும் சூழல் தேர்வும்.**

படைப்பொன்றின் கருவினை விளக்குவதற்குப் பொருத்தமான பாத்திரங்களையும் சூழல்களையும் படைப்பாளி இனம் கண்டு தெரிதல் வேண்டும்.

யதார்த்த நெறி என்பது நுணுக்க விபரங்களின் உண்மையுடைமை.தவிர வகை மாதிரிக்குப் பொருத்தமான பாத்திரங்களை வகைமாதிரிக்குப் பொருத்தமான நிலைமைகளுக்கு இணங்க மெய்ம்மை குன்றாத வகையில் சித்திரித்தல் ஆகும்.[16]

என ஏங்கெல்ஸ் இப்பண்பு குறித்துக் குறிப்பிடுவது கருதத்தக்கதாகும்.

படைப்பாளி தான் எடுத்துக் கொண்ட கருவை விளக்குவதற்கேற்ற வகையில் பொருத்தமான சூழலையும்

www.tamilarangam.net

அச்சூழலில் இயங்கும் பாத்திரங் களையும் படைக்கின்ற போதுதான் நடப்பியல் நெறி வெற்றிபெறும். சாதாரண மக்களின் வாழ்க்கைச் சூழல்கள் பற்றிய தரவுகள் படைப்பில் முதன்மை இடம்பெற வேண்டும்.

**3:7 எதார்த்தப் பண்பு.**

படைப்பாளியின் கலைப்படைப் பானது எதார்த்தப் பண்புடையதாக அமைதல் வேண்டும். படைப்பாளி தனது நுண்மையான அறிவின் மூலம் சமூகத்தைக் கூர்மையாக அவதானித்து சான்றாதாரங்களுடன் படைப்பை நகர்த்துதல் வேண்டும். நடப்பியல் நெறிக்கு இப்பண்பு மிக மிக அவசிய மானதாகும்.

தனியே சான்றாதாரங்களை மட்டும் தந்து படைக்கின்ற படைப்பு எதார்த்தப் படைப்பாக மாட்டாது. யதார்த்தப் படைப்பு என்பது புறவுலகை நகல் செய்யும் காரியமோ அல்லது போலச் செய்தலோ அல்ல. அதற்கும் மேம்பட்ட ஒன்று, எதார்த்தவாதப்படைப்பு என் பது புனைதலுக்கு அப்பால் வாசகனைச் சிந்திக்கத் தூண்டு வதாகவும் அமைதல் வேண்டும்.

எதார்த்தவாதத்தின் தன்மைகள் சிலவற்றை இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமானதாகும்.

(அ) உண்மை உலகினைப் பிரதிபலிப்ப தோடு மக்கள் புரிந்துகொள்ளும் மொழி நடையினைக் கலைப்படைப்பில் பயன்படுத்த வேண்டும்.

ஆ) படைப்பாளன் சமுதாயத்தை முன்னேற்றம் பெறச் செய்வதற்கு இதனைக் கருவியாகக் கொள்ள வேண்டும்.

இ) உலகின் மெய்ம்மைகளை அறிந்து அதன்படி மக்களின் வாழ்க்கையை மாற்றி அமைத்திட வேண்டும்.

ஈ) கலைப்படைப்பின் மூலம் மனித உணர்வுகளையும், உள்ளங்களை யும் நல்வழிப்படுத்த வேண்டும்.[17]

எதார்த்தத்தைக் கலைஞன் அவனு டைய அகவயமான விளக்கத்தோடு பிரதிபலிக்கம் முயற்சி கலையாகும். ஒரு கலைஞன் புறவயமான எதார்த் தத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக் கின்றான். அவனுடைய மனதிற்கு வெளியே காணப்படும் நிகழ்ச்சிகளைத் தன்வயப்படுத்திக் கொள்கிறான். இவற்றை மற்றொரு எதார்த்தப் படைப்பாக மாற்ற முற்படுகிறான். புதிய எதார்த்தம் புறவயமான உலகத்திலிருந்து வேறுபட்டும் இருக்கிறது. அதேநேரத்தில் அதைப் போலவும் காட்சி தருகிறது.

**4. நடப்பியலின் வகைகள்.**

திறனாய்வாளர்கள் நடப்பியலைப் பல்வேறு வகைகளாகப் பாகுபடுத்திக் காண்கின்றனர். ஆயினும் அவற்றில் பின்வரும் நான்கு வகைகளைப் பெரும்பாலான திறனாய்வாளர்கள் முதன்மைப்படுத்துகின்றனர். அவை வருமாறு.

அ) சுபாவ எதார்த்தவாதம்

ஆ) விமரிசன எதார்த்தவாதம்

இ) மிகை எதார்த்தவாதம்

ஈ) சோசலிச எதார்த்தவாதம்

**4: 1 சுபாவ எதார்த்தவாதம்.**

சமூகத்தில் ஏற்படுகின்ற மாறுதல் களையும், சமூகத்தில் உள்ள உள்ளக

www.tamilarangam.net

முரண்பாடுகளையும் மிக இயல்பாகச் சித்திரித்து நிற்கும் செயற்பாட்டைச் சுபாவ எதார்த்த வாதம் குறித்து நிற்கிறது.

ஒரு படைப்பாளி வெகு இயல்பாகச் சமூக மாறுதல்களையும் முரண்பாடுகளையும் சித்திரிப்பதை இவ்வாறு குறிப்பிடலாம். ஆரம்பகால எதார்த்த வாதக் கலைஞர்கள் இவ்வகையைச் சார்ந்தவர்களாகவே காணப்பட்டனர்.[18]

**4:2 விமரிசன எதார்த்தவாதம்.**

சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி விமர்சனம் செய்வது விமர்சன எதார்த்தவாதமாகும். இத்தகைய எதார்த்தவாதிகள் சமூகக் குறைபாடுகளையும் மாறுதல்களையும் சுட்டிக் காட்டுவதோடு அவற்றைச் சாடுவதனையும் தமது இயல்பாகக் கொண்டுள்ளனர். மேற்படி பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எவற்றையும் இவர்கள் முன்வைப்பதில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மாறும் சமூகத்தில் காணப்பட்ட குறைகளை, ஏழைகளின் இரங்கத்தக்க நிலைகளைத் தத்தமது படைப்புக்களில் விமர்சனம் செய்ய வேண்டிய நிலையில் இவ்வகைப் பிரிவினர் காணப் பட்டனர்.

''சொத்துடைமைச் சமூகத்தின் கூர்மையான முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் விமரிசன யதார்த்த வாதம் அதை எப்படி மாற்றுவது என்று தெரிந்து கொள்ளவில்லை. அது பெரும்பாலும் கருத்துக்களுக்கும், பகுத்தறிவுக்கும் மனச்சாட்சிக்கும் வேண்டுகோள் விடுவதுடன் நின்றுவிடுகிறது."[19]

என்று அறிஞர் எம். கிராப் செங்கோ குறிப்பிடுவது இவ்வகை எதார்த்த வாதத்தை நன்கு விளக்குவதாக உள்ளது.

**4: 3 மிகை எதார்த்தவாதம்.**

எதார்த்த வாழ்க்கையை இயல்பாகச் சித்திரிக்காமல் மிகைப்படுத்திக் காட்டுவதும், உடைமைச் சமூகத்தின் மோசமான பண்புகளைப் பலவாறு வெளிப் படுத்துவதும் மிகை எதார்த்தவாதத்தின் பண்புகளாகும்.

இன்று காணும் நடைமுறை வாழ்க்கையினைத் திட்டமிட்டு மிகைப் படுத்திக் கூறுவது, உடைமைச் சமூகத்தின் வெறுக்கத்தக்க இழிநிலைகளை வெளிப்படுத்தி அதன் முரண்பாடுகளைக் களைவது இதன் அடிப்படையாகும்.[20]

**4:4 சோசலிச எதார்த்தவாதம்.**

சமூகத்தில் நிலவும் குறைகளையும் முரண்பாடுகளையும் படைப்புக்களில் சுட்டிக்காட்டி மேற்படி குறைபாடுகளுக்குப் பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பது சோசலிச எதார்த்த வாதமாகும். தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியோடு இந்நடப்பியலின் பிறப்பு இணைந்திருந்தது.

மனிதனின் இயக்கத்தையும், அவன் உலகைத் தன் இயக்கத்தால் மாற்றியமைப்பதையும் அவன் தன்னைத் தானே புதியவனாகப் படைத்துக் கொள்வ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தையும் தன் விதியைத் தானே எழுதும் கடவுளாக அவன் மாறுகின்ற முறைகளையும் கூறுகின்ற தன்மை இந்நடப்பியலுக் குண்டு[21]

உண்மையினைத் தேடுதல், அறிவியல் ஆய்வுப் பாங்கு, படைப்பை ஆயுதமாகக் கையாளுதல், மானிடப் பார்வையினை விரிவுபடுத்துதல், கலைஇலக்கியப் போக்கினைக் கட்டுப்படுத்தும் சர்வாதிகாரத் தன்மை, வரலாற்றுணர்வு முதலானவை சோசலிச எதார்த்தவாதத்தின் பிரதான பண்புகளாகும்.

எஸ். தோதாத்திரி இந்நடப்பியலின் பண்புகளாக,

'கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடு, (தொழிலாளி வர்க்கச் சார்புடைய தத்துவம்), மக்களுக்குத் தொண்டு செய்தல், சார்புநிலை, உழைக்கும் மக்களின் போராட்டத்தினை அனுதாபத்துடன் சித்திரித்தல், வரலாற்றுத் தீர்க்க தரிசனம் அகவயப் போக்கையும் இயல்பு நெறிப் போக்கையும் புறக்கணித்தல்.......'[22]

ஆகியவற்றைக் குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கதாகும்.

**5. நடப்பியல் குறித்த பிறவகைப்பாடுகள்.**

பாத்திரப் படைப்பினையும் நாவலின் போக்கினையும் அடிப்படை யாகக் கொண்டு நடப்பியலை, பொது நிலை நடப்பியல் முறை, சிறப்பியலான நடப்பியல் முறை என இரண்டு வகையாக அறிஞர் இயன்வாட் பகுக்கின்றார்.[23]

பொது நடப்பியல் முறையானது மனிதர்களை அவர்களின் பெயர்களைச் சுட்டாமல் அவர்களின் கூட்டுப் பொதுப் பண்பு நிலைகளை நடப்புச் சித்திரிப் புடன் படைப்பதாகும்.

சிறப்பியலான நடப்பியல் முறையில் மனித உறவுநிலைகளின் மாற்றம் பற்றிய காரணங்களும் மனித உணர்வுநிலைகளின் சித்திரிப்புகளும் பாத்திரப் படைப்பு வளர்ச்சி நிலைகளும் குறிப்பாக அமைந்து இருக்கும்.

அறிஞர். டாமியன் கிராண்ட் நடப்பியலை,

அ) தாழ்ந்த நிலை மக்களைப் பற்றிய நடப்பியல்
ஆ) உயர்ந்த நிலை மக்களைப் பற்றிய நடப்பியல்
இ) இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள மக்களைப் பற்றிய நடப்பியல்
ஈ) மனச்சான்று வழி நடப்பியல்
உ) உணர்நிலை நடப்பியல்[24]

என்றவாறாகப் பிரித்துப் பாகுபடுத்துகிறார். வெ. ஜெயலட்சுமி என்பார் நடப்பியலை,

அ) சமுதாய மற்றும் அரசியல் முறை நடப்பியல்
ஆ) சமுதாய சுற்றுச் சூழல் நடப்பியல்[25]

என இரண்டு வகையாகப் பாகுபடுத்துகிறார்.

அறிஞர் சி.கனகசபாபதி நடப்பியலைப் பலவாறு வகைப்படுத்தியுள்ளார். அவை வருமாறு,

அ) தேர்ந்தெடுத்த நடப்பியல்
ஆ) இராசதக் குணாம்சம் உள்ள நடப்பியல்

www.tamilarangam.net

இ) புதிய புறவய நோக்கில் நடப்பியல்
ஈ) அங்கதச் சார்புள்ள நடப்பியல்
உ) மனித நேயமுள்ள நடப்பியல்
ஊ) விவரணத் தோரணை அமைந்த நடப்பியல்
எ) தாழ்வுநிலை, உயர்வு நிலை, பின்தங்கும் நிலை ஆகிய முறைகளில் அமைந்த நடப்பியல்.[26]

**6. முடிவுரை:**

நடப்பியல் குறித்த மேலைத்தேய, கீழைத்தேய வரையறைகளை உற்று நோக்கும் போது, 'நடப்பியல்'என்பது சமகாலச் சமுதாயத்தை அதன் முரண்பாடுகளுடன் காரணகாரியங்களுடன் சித்திரிப்பது; சமூகத்தை அறிவியல் நோக்குடன் அணுகுவது; சமூகத்தைப் புறவயமாக ஏற்றுக் கொண்டு அதனை ஆய்வுசெய்வது; சமூக நிகழ்ச்சிகளைத் தனித் தனியே நோக்காமல் முழுமையாக நோக்குவது; வரலாற்றுணர்வுடன் சமுதாய இயக்க விதிகளையும் எதிர்காலச் சமுதாய வளர்ச்சியையும் நன்கு விளங்கிக் கொள்வது என்ற தெளிவுக்கு வரமுடிகிறது.

நாவல்கள் புதிய நீதிநிலை மாற்றத்தை உண்மையான நவிற்சியுடன் நயமாக எடுத்து விளக்க வேண்டிய பின்னணியில் நடப்பியல் தோற்றம் பெற்றது. நாளடைவில் அது ஏனைய வகை இலக்கியங்களிலும் முனைப்புப் பெறலாயிற்று. 'கலை இலக்கியம் மனித சமூகத்தைப் பற்றியது' என்ற கருத்திய லின் விளைவே நடப்பியல் எனலாம்.

நடப்பியலில் பல்வேறு வகைப் பாடுகள் காணப்படுகின்றபோதிலும் சுபாவ எதார்த்தவாதம், விமரிசன எதார்த்தவாதம், சோசலிச எதார்த்த வாதம் ஆகிய மூன்று வகைகளையே திறனாய்வாளர்கள் முதன்மைப்படுத்து வதையும் அவதானிக்க முடிகிறது.

## அடிக்குறிப்புகள்


01. Arnold Kettle, (1974) An Introduction to English Novel-1, Hutchinson University Library, London, , P.26
02. சீனிச்சாமி. துரை., (1997) நாவல்கள் - நவீன விமரிசனங்கள், காவ்யா, பெங்களூர், , ப.31.
03. கனகசபாபதி., சி.(1989 - 1990) "இலக்கியமும் நடப்பியலும்" "மேலும்": டிசம்பர் - ஏப்ரல், பாளையங்கோட்டை, , ப. 40.
04. செல்லப்பா.சி.சு., (1992) 'நடப்பியல்', சுபமங்களா, மலர் 5, இதழ். 5, செப்டம்பர்,, ப. 58.
05. ஞானமூர்த்தி. தா.ஏ., (1980) இலக்கியத் திறனாய்வியல், சிந்தாமணி அச்சகம், கோயமுத்தூர், , ப.444.
06. வீராசாமி.தா.வே., (1986) தமிழ்நாவல் இயல், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, , ப.86.
07. வீராசாமி. தா.வே., (1979) தமிழ் நாவல் வகைகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, , ப.206.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

08. இராமலிங்கம்.ம., (1983) இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, , ப. 48
09. தோதாத்திரி. எஸ்., (1984) சோசலிச எதார்த்தவாதத்தின் அடிப்படைகள் - ஓர் அறிமுகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, , ப.70
10. பிச்சமுத்து. ந., (1980) இலக்கிய இயக்கங்கள், சக்தி வெளியீடு, சென்னை, , ப.170.
11. கைலாசபதி.க., (1987) தமிழ் நாவல் இலக்கியம், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, ,ப.33.
12. சிவத்தம்பி.கா., (1988) நாவலும் வாழ்க்கையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, ,ப.44
13. தோதாத்திரி. எஸ்., (1980) தமிழ்நாவல் சிலஅடிப்படைகள், அகரம், சிவகங்கை, , ப.6.
14. தோதாத்திரி. எஸ்., (1994) யதார்த்தவாதம், இலக்கிய இஸங்கள், (கட்டுரைத் தொகுப்பு), அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை, , ப.112.
15. கைலாசபதி.க., (1987), மு.கு.நூ. ப.275.
16. மேலது, ப. 279.
17. செல்வதுரை.பெ., (1990) தமிழ் நாவல்களில் எதார்த்தவாதமும் நாஞ்சில் நாடனும், நோக்கு (ஆய்வுக்கட்டுரைகள்), தமிழ்த்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், காரைக்கால், . ப. 137.
18. தோதாத்திரி.எஸ்., (1994), மு.கு.நூ., ப.117.
19. கிராப் செங்கோ.எம்., (1988) அக்டோபர் புரட்சியும் சோசலிச இயக்கத்தின் படைப்புக் கோட்பாடும், சோவியத் பலகணி, மலர் 2, இதழ். 32, ப. 22.
மேற்கோள்: அ.மாரியப்பன்: சோசலிச யதார்த்தவாதம், காவ்யா, பெங்களூர்,, ப.88.
20. செல்வதுரை.பெ. மு.கு.நூ., ப.137.
21. Ralph Fox, (1986) Novel and the people, P.129.
22. தோதாத்திரி.எஸ்., (1980), மு.கு.நூ., ப. 62
23. Ian watt, (1983), The Rise of the Novel, Penguin Book, London, PP. 9 - 35.
24. Damian Grant, (1985), Methuen ; London and New York, PP. 2- 3
25. ஜெயலட்சுமி. வெ., (1990) தமிழ் நாவல்களில் நடப்பியல், 1940 முதல் 1950 வரை, பதிப்பிக்கப்படாத ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, , ப.369.
26. கனகசபாபதி.சி., மு.கு.நூ., கட்டுரை, பக். 43 - 44

www.tamilarangam.net

# சிவானந்தலஹரி காட்டும் பக்திநெறி

விஜயலட்சுமி சிவச்சந்திரன்

## ஆய்வுச்சுருக்கம்

*அத்வைத தத்துவத்தை நிறுவிய ஸ்ரீ சங்கரர் அதனை எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதவர்களுக்காக தோத்திரங்கள் மூலம் பக்திநெறியைப் போதித்து அவர்களையும் ஆத்மீக வழிக்கு கொண்டுவர முயன்றுள்ளார். அத்தகைய தோத்திரங்களுள் சிவானந்த லஹரி நன்கு குறிப்பிடத்தக்கது.*

சிவானந்தலஹரீ சிவனை முழு முதற் தெய்வமாகக் கொண்டு பாடப் பட்ட வடமொழியில் அமைந்த தோத்திர நூலாகும். இது நூறு தோத்திரப்பாடல்களை உள்ளடக்கி உள்ளது. பக்தியினால் உள்ளத்தை சிவன்பால் இணைக்கும் போது பக்தனுக்கு ஏற்படும் சிவானந்த அனுபவத்தை விளக்கும் அடிப்படையில் இந்நூல் அமைந்தது போலுள்ளது. ''லஹரீ'' எனும் சம்ஸ்கிருதப் பதம் பேரலை என்று பொருள்படுவது[1]. கடலில் பொங்கி எழுந்து புரண்டு புரண்டு வருகின்ற பேரலையினையே இப்பதம் குறிக்கின்றது. சந்திரன் உதிப்பதனால் ஏற்படும் பொங்குதலை இது குறிப்பது என இது விதந்து கூறப்படுகின்றது.[2] இவ்வகையில், சிவானுபவத்தினால் கிடைக்கும் ஆனந்தம் முடிவற்றது அனுபவிக்குந் தோறும் ஆவலைத் தூண்டுவது போன்ற கருத்துக்களை உள்ளீடாகக் கொண்டது. ''லஹரீ'' எனும் பதம் எனக்கொள்வது பொருத்தமுடைய தாகின்றது. சிவனிடத்துப் பக்தி செலுத்துதலினால் உள்ளத்தில் ஏற்படு கின்ற ஆனந்தம் பேரலைகளாகப் பொங்கிவருவது ''சிவானந்த லஹரீ'' எனப்பொருள் கொள்ளல் ஏற்புடைத் தாகின்றது.

அத்வைத தத்துவத்தை நிறுவிய ஸ்ரீ சங்கரரே இத் தோத்திரத் தைப் பாடினார் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்வைத வேதாந்தியாகிய ஸ்ரீசங்கரர் குணம், குறிகளோடு கூடிய நிலையில் இறைவனை வைத்து இறைவன் மீது தோத்திரம் பாடியிருத்தல் முடியாது என மாறுபாடு கொள்வோரும் உளர்.. நிர்குணப் பிரம்மத்தையும் அத்வைத ஞானத்தையும் சித்தாந்தம் செய்த ஆதி சங்கரர் ஷண்மதஸ்தாபனம் செய்தார் என்பதும் அம்பிகை, சிவன், விஷ்ணு, கணபதி, குமரன் முதலிய வடிவங்களில் தெய்வங்களை வழிபடுவதற்குப் பல

www.tamilarangam.net

தோத்திரங்களைச் செய்தாரென்பதும் மறுக்கமுடியாத உண்மை என்றும் சிவானந்தலஹரீ ஆதி சங்கரருடையது தான் என சங்கரமடத்து பீடாதிபதிகள் ஐயப்பாட்டுக்கு இடமின்றிப்போற்றி வருகிறார்கள் எனவும், சிவானந்தலஹரீக்கும் அத்வைத சித்தாந்தத்திற்கும் யாதொரு முரண்பாடுமில்லை என்பது அனுபவ சித்தாந்தம் என்றும் "சிவானந்தலஹரீ பாஷ்யம்" எனும் நூலுக்கு அண்ணா எழுதிய முகவுரையில் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளமை இங்கு கருத்திற்கெடுத்துக் கொள்ளத்தக்கது[3].

ஸ்ரீசங்கரர் வாழ்ந்த காலம் இந்துசமயம் முற்றாக ஒழுங்கு குலைந்த நிலையில் இருந்துள்ளது. வேதம் கூறும் சமய மரபுகளை மறுக்கும் பௌத்த, ஜைனமதங்கள் மரபு ரீதியான கடவுட் கோட்பாடுக்கு எதிராக இயங்கிய காலம். இக்கால கட்டத்தில் இந்துமதத்தைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு தத்துவ ஞானியாகிய ஸ்ரீசங்கரருக்கு ஏற்பட்டது. இதனால் ஞானமார்க்கத்தால் பரம்பொருளை உணரமுடியாத சாதாரண மக்களுக்கு விளங்கும் முறையில், அவர்கள் இலகுவாகப் பின்பற்றும் வகையில் பக்தி மார்க்கத்தின் வழியாக அறுவகைச் சமய நெறிகளையும் விளக்க முயன்றார். அத்துடன் அச்சமயநெறிகள் சார்ந்த வழிபாட்டு முறைகளை எடுத்துக் கூறினார். மனிதனைப் பக்தி நெறிக்கு இட்டுச் செல்வதற்காகவே அவர் சிவானந்த லஹரீ போன்ற தோத்திரங்களைப் பாடினார் என்று கருதுவது பொருத்த முடையது. தென்னிந்தியாவில் பல்லவர் காலம் எனக் கூறப்படும் ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் சைவசமயத்தைக் காக்கும் பணியில் நாயன்மார்கள் ஈடுப்பட்டதை அறியமுடிகின்றது. மக்களைப் பக்திநெறிப்படுத்த இவர்கள் தேவார, திருவாசகங்களைப் பாடினார்கள். இத்தகையதொரு காலகட்டத்தில் ஸ்ரீசங்கரரும் வாழ்ந்தமையாற் போலும் பக்திநெறி பற்றி தனது தோத்திரங்களில் மிகவும் சிறப்பித்துக் கூறி உள்ளார்.

வழிபடுவோனுக்கும் தெய்வத்திற்கும் இடையேயுள்ள உறவினை உறுதிப்படுத்துவதே பக்தியென்பது. இது "பஜ்" எனும் சம்ஸ்கிருத வினையடியிலிருந்து பிறந்த சொல் ஆகும். இவ்வினையடி பகிர்தல், வழங்குதல், பங்காகப் பிரித்தல், ஒரு பொருளைத் தேடிச் சேர்த்தல், பங்கு பெறுதல், அனுபவித்தல், அன்பு காட்டுதல், வணங்குதல், சேவித்தல் எனப் பல பொருள்படுவது.[4] எனவே இவ்வினையடிப் பிறந்த "பக்தி" எனும் பதமும் மேற்குறிப்பிட்ட பல பொருட்படுமாயினும், குறிப்பாக இறைவனிடத்து ஆன்மாக்களுக்கு உண்டாகும் ஈடற்ற அன்பினையும் இறைவன் ஆன்மாவிடத்துள்ள கருணையினாற் கொள்ளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேரன்பினையும் சுட்டிநிற்கின்றது. பக்தியின் தன்மை, இலட்சணங்கள் பற்றி நாரதர், சாண்டில்யர் முதலியோர் விளக்கி உள்ளனர். எடுத்துக்காட்டாக, நாரதர் தமது பக்தி சூத்திரத்தில் "கடவுளிடத்துள்ள அபரிமிதமான அன்பே பக்தியாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.[5] சாண்டிலியர் பக்தி பற்றிக் கூறுமிடத்து "ஈஸ்வரனிடத்து ஏற்படும் மிக உயரிய அன்பு பக்தி" என்கிறார்.[6] பாகவதம் பக்தி பற்றிக் கூறுமிடத்து, கடவுளின் திருநாமங் களைக் கேட்டல், அவன் நாமங்களை ஓதுதல், அவனை நினைவுகூருதல், அவனைச் சேவித்தல், அவனைப் பணிதல், அவனிடத்து அன்பு பூணுதல், தன்னை அவனுக்கு அர்ப்பணித்தல் ஆகியன பக்திக்குரிய ஒன்பது லக்ஷணங்கள் என விபரிக்கின்றது.[7] பக்தி எனப்படுவது யாது என்பதை ஸ்ரீசங்கரர் தனது சிவானந்த லஹரியில் எடுத்துக்கூறியுள்ளார். அவ்விடத்தில் இறைவனுடைய இணையடிகளை மனமானது பற்றி எப்போதும் அதில் நிலைத்திருத்தலே பக்தி எனப்படுவது என்கிறார். இக்கருத்தைத் தெளிவுபடுத்த அவர் ஆங்கு எடுத்தாண்டுள்ள உவமானங்கள் தத்துவார்த்தம் பொதிந்தனவாயும், ஆழ்ந்த கருத்துத் தொனிப்புடையனவாயும் உள்ளன.[8] அதாவது, இறைவனுக்கும், பக்தனுக்குமிடையிலுள்ள தொடர்பு காந்தத்திற்கும் ஊசிக்குமுள்ள தொடரபினை ஒத்ததாகும். எவ்வாறு காந்தத்தின் முன் எதிர்ப்படும் ஊசி இழுத்து இணைப்பார் எவருமின்றித் தானே காந்தத்தினால் கவரப்பட்டு அதன் அசைவிற்கேற்பத் தானும் அசைய முற்படுகிறதோ, அவ்வாறே இறைவனிடத்து ஏற்படும் பக்தியும் பக்தனை இறைவன்பால் ஈர்த்துவிடும். ஏறழிஞ்சில் எனப்படும் ஒருவகை மரமும் அதன் விதைகளும் பற்றி இங்கு கூறப்படுகின்றது. இந்த மரத்து விதைகள் மரத்தினின்று உதிர்ந்த பின்பு தாமே மெல்ல நகர்ந்து தாய் மரத்தைத் தேடி அதன்மேல் ஏறி ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையன. பரமாத்மாவிலிருந்து தோன்றிய ஜீவாத்மாவை இறுதியில் பரமாத்மா வில் ஐக்கியமடையச் செய்வது பக்தி என்பதை இது சுட்டிநிற்கின்றது. பதிவிரதையான பெண்ணொருத்தியின் மனம் எப்போதும் அவனது கணவனையே நாடி நிற்பதை ஒத்து பக்தனின் மனமும் எப்போதும் இறை வனையே நாடுவதுடன் இறைவனுடன் இணைவதனையே அவாவி நிற்கும் தன்மையிலும் பக்தி தொடர்புபடுத்தப்படுகின்றது. இவ்வாறே நதியானது சமுத்திரத்தை நாடிச் சென்று சங்கமிப்பதும் உவமிக்கப்படுகின்றது. எத்தனை தடைகள் குறுக்கிடினும் அவற்றையெல்லாம் தாண்டி நதி சமுத்திரத்தை ஓடி அடைதல் போலவும் சமுத்திரத்தை அண்மிக்கும் போது அதன் வேகம் அதிகரிப்பது போலவும் பக்தனின் உள்ளமும் இறைவனை அடையும் இலட்சியத்தையுடையதாக இறையனுபவம் கிட்டும் போது தீவிரநிலையை அடையும்

www.tamilarangam.net

எனும் கருத்தினை உள்ளீடாக இது கொண்டுள்ளது.

இவ்வகையில் சிவானந்த லஹரீ பக்தியின் தன்மை, சிறப்பு, பயன் போன்ற இன்னோரன்ன விஷயங்களை எடுத்துக் கூறுகின்றது. ஞான வழி நின்று பரம்பொருளை (பிரமத்தை) உணர வழிகாட்டுகின்ற வேதாந்த தத்துவத்தை எளிதில் உணர்ந்து, அவ்வழி ஒழுகும் அறிவுப் பக்குவம் எளிதில் எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை. உலகியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சாதாரண மக்களுக்கு அன்புவழி நின்று அதன் வழி இறைவனை அணுக வழிகாட்டின் அவர்கள் இலகுவில் சமய நெறிப் படுவதற்கு வழியுண்டு. நிர்க்குணப் பிரம்ம நிஷ்டை உடலுணர்ச்சி உடையவர்களுக்கு அரிதானது என்பதை பகவத்கீதையும் சுட்டிக் காட்டுகின்றது[9] இதற்கு சித்பவானந்தர் வியாக்கியானம் கூறுமிடத்து "தேகப்பற்றுடையவனுக்கு எளிதாயிருப்பது சகுணப் பிரம்ம உபாசனை. அதில் துவக்கி மேல்நோக்கிப் போகின்றவனுக்கு சாதனத்தில் அதிக சிரமம் ஏற்படுவதில்லை" எனக் கூறுகிறார்.[10] ஸ்ரீசங்கரரும் இதனை உணர்ந்தவர் போன்று இறைவனை அடைய அல்லது உணர பக்திநெறியே சிறந்தது எனக்கொண்டு ஏனைய தெய்வங்களின் மீது தோத்திரம் பாடியது போன்று சிவன் மீதும் பக்தியைத் தூண்டும் வகையில் சிவானந்தலஹரீயையும் பாடியுள்ளார்.

இதனால் ஒருருவம் ஒருநாமம் இல்லாத பரம்பொருளுக்கு உருவங்களும், நாமங்களும் கூறி உணர்வு ரீதியில் படிப்போர் உள்ளத்தைத் தொடக்கூடிய வகையில் பாடப்பட்டுள்ள சிவானந்தலஹரீ பக்திநெறியைச் சிறப்பிப்பதாக அமைகின்றது.

சிவானந்தலஹரீயில் வரும் பாடல்கள் சில இறைவனையும், இறைவியையும் புராணங்களில் விபரிக்கப்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு குணங்குறிகளோடு விளித்து நமஸ்காரம் செய்வனவாக அமைந்துள்ளன.[11] சில பாடல்களில் ஸ்ரீசங்கரர் இறைவனின் பாதமகிமையைச் சிறப்பித்துக் காட்டுகிறார். இந்து சமயப் பக்திப் பாசுரங்கள் இறைவனின் இணையடி களைப் போற்றுவதனைச் சிறப்பம்சமாகக் கொண்டவை. பக்தியின் முதிர்ச்சியினால் இறைவனை மிகவும் அண்மைப்படுத்தித் துதிக்கும் மனப் பாங்கு கொண்ட அடியவர்கள் தம் பாடல்களில் இறைவனின் திருவடிகளைப் பாடுதல் இயல்பாகியிருத்தல் வேண்டும்.

"பிரம்மா, விஷ்ணுவினாலே காணப்படாதவை[12]" இறைவனது பாதங்களில் தேவர்கள் இடைவிடாது முடிசாத்தி வணங்குகிறார்கள்[13] என்பன போன்ற அடிகளால் பாதங்களின் மகிமை இங்கு விதந்து காட்டப்படுகின்றது. உலகவாழ்விற் காணும் சுகங்கள் யாவும் நிலையானவையல்ல;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறைவனது திருவடிகள் அளிக்கும் சுகமானது நிலைபேறுடையது. அவை; பயங்களைப் போக்கும் தன்மையுடையன என சிவானந்தலஹரீ கூறியுள்ளது.[14]

பக்தி தத்துவத்தில் கருணைக் கோட்பாடு மிக முக்கியமான ஓர் அம்சமாகும். இறைவனிடத்து பக்தி செலுத்துபவனுக்கு இறைவனிடமிருந்து கிடைக்கும் ஒப்பற்ற பயனே கருணையாகும். இறைவனின் கருணை இறைவனது கண்ணோக்கு மூலமும், அவர் புரியும் திருவிளையாடல்கள் மூலமும் பக்தனை வந்தடைகின்றது. கருணைச் சிறப்பு பற்றி கடோபநிடதம்[15] முண்டகோபநிடதம்[16] முதலியவையும் சிறப்பிக்கின்றன. இறைவன் இறை வியரது கருணை அவர்கள் கண்ணோக்கிலே நிரம்பியிருப்பதனைச் சிவானந்த லஹரீ சுட்டிக்காட்டுகின்றது.[17]

தெய்வத்திடம் பக்தி ஏற்படுவதற்கு அவசியம் வேண்டப்படுவது நம்பிக்கை. அவ்வகையிலே தெய்வ நம்பிக்கையையும் அதன் வழியாக தெய்வ ஈடுபாட்டினையும் ஏற்படுத்தும் வகையில் இறைவனின் மேலார்ந்த பண்புகள் இந்நூலில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன. இறைவனின் ஆற்றல், வீரம், கருணை, இரக்கம் முதலிய தன்மைகளை விளக்கும் புராணக் குறிப்புக்களை இங்கு சுட்டிக் காட்டுவதன் மூலம் இறை நம்பிக்கையை ஏற்படுத்தி அதன் மூலம் பக்தி நெறிப்படுத்த ஆசிரியர் முனைந்துள்ளார். இவ்வகையில், சைவமரபிலே பக்திச் சிறப்பையும், அதன் வழிப் பயனையும் விளக்கும் கண்ணப்பர் கதை, மார்க்கண்டேயர் கதை ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளார். புராணங்கள் வெளிப்படுத்திய பக்திநெறியை ஸ்ரீசங்கரரும் அடியொற்றிச் செல்வதை இது காட்டுவதாயுள்ளது. இவ்வாறே இறைவனின் மறக்கருணை முதலான இயல்புகளை விளக்கும் அடி முடி தேடியமை, திரிபுரம் எரித்தமை முதலியனவும் எடுத்தாளப்பட்டுள்ளன.

மக்களைப் பக்திமார்க்கத்தில் வழிநடத்துவதற்கு இறைவனிடத்துப் பக்தி செலுத்துதலினாற் பெறக்கூடிய பயன்களை எடுத்துக்கூறுவது அவசியமெனக் கருதியதனாற் போலும் சிவானந்தலஹரீ ஆசிரியர் பக்தி செலுத்துவதன் மூலமும் பக்தியின் வெளிப்பாடாயமைந்த பல்வேறுபட்ட வழிபாட்டு முறைகள் மூலமும் அடையக் கூடிய பயன்களை இந்நூலில் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் இறை தியானம் பாபங்கள் அகல வழிகோலும். ஆதியான அவவித்தை நீங்கவும் அதன் பயனாக நல்லறிவு பெறவும், முக்தி பெறவும், வழிவகுக்கும்.[18] பக்தி செலுத்துதலால் மேலும் மேலும் பக்திபெருக இடமுண்டாகும்; ஞானானந்த அமிர்தம்; பொங்கும்.[19] சிவானந்த அனுபவம் உண்டாகும்.[20] பக்தியோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடியவழிபாடு பாபத்தொல்லைகளைப் போக்கி ஐஸ்வரியம் தரவல்லது.[21] என்றிவ்வாறானவை அங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

பக்தியின் பயன்களில் ஜீவன் முக்தனாம் நிலை மிக உயரியதாகும். முக்தியின்பத்தையடைய உடல் அழியும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஞானானுபவநிலை உண்டானதும் உலகில் வாழ்ந்து கொண்டே முக்தியின்பத்தை அனுபவிக்க முடியும் இவ்வனுபவ நிலையே ஜீவன் முக்திநிலை என கடோபநிடதமும் கூறும்.[22] ஜீவன்முக்தர்கள் இந்த உலகில் வாழ்ந்தாலும் இந்த உலகுடன் வாழ்வதில்லை. அவர்கள் இறை சிந்தனையிலேயே வாழ்பவர்கள். இந்நிலையில் வினைகள் அவர்களைப் பற்றுவதில்லை. இந் நிலையினைப் பற்றியும் சிவானந்த லஹரீ விபரித்துள்ளது.[23]

சாரூப்யம், சாமீப்யம், சாலோக்கியம் என்ற படிமுறை முக்தி நிலைகள் மூலம் சாயுச்சிய முக்தி நிலை கைகூடுகின்றது. இந்நிலையை அடைபவன் இப்பிறவியைப் பயனுடைய தாக்கிக் கொண்டவனாகிறான் என சிவானந்த லஹரீ உணர்த்தி நிற்கின்றது.[24]

மேலும் பக்தியின் பயனாக நால்வகை முக்தி நிலைகளையும் பக்தன் அனுபவிக்கும் வகை பற்றியும் இங்கு கூறப்பட்டுள்ளது.

முக்தியின்பத்தை அளிக்கவல்ல பக்திநெறியில் பயன்பெறுதற்கு அவசியம் வேண்டப்படுவது இந்திரிய அடக்கமும், மன ஒடுக்கமும் ஆகும். சமய நூல்கள் பலவும் இதனை வலியுறுத்தி வருகின்றன. இந்திரியங்களை அடக்கியவன் ஞானத்தைப் பெறுகிறான் என்றும் இது மேலான சாந்தியை அடைவிக்கும் என்றும் இந்திரிய விஷயங்களினால் தோன்றுகின்ற போகம்தான் துன்பங்களுக்குக் காரணமாகின்றது என்றும் பகவத்கீதையும் கூறும்.[25] இந்திரிய விஷயங்களுக்கு மனமே காரணம். அதனை வழிப்படுத்துவதன் மூலம் இந்திரியங்கள் நல்வழிப்படும். மனத்தின் நல்ல இயல்புகளையும், தீய இயல்புகளையும் இந்நூலில் ஸ்ரீசங்கரர் கூறுமிடத்து கிளைக்குக் கிளை தாவும் குரங்கின் நிலையுடன் மனத்தின் அலையும் இயல்பினையும், மதம் கொண்ட யானையின் தன்மையுடன் மனத்தின் வலிமை, பலம், கட்டுக்கடங்காத் தன்மை போன்ற இயல்புகளையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இவ்வாறே மனத்தின் நல்ல தன்மை களையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இடையறாத சாதனையால் மனத்தை ஒருவழிப்படுத்த வேண்டும் என்பதையே ஆசிரியர் வலியுறுத்துகிறார். மனம் கட்டுப்படாதது, அலையும் தன்மையது என்பதைக் கிருஷ்ண பகவானும் ஒப்புக்கொள் கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பினும் இடைவிடாத சாதனையி னால் அதனை இறை சிந்தனையின் வசப்படுத்தலாமென பகவான் உபதே சித்துள்ளார்.[26] ஸ்ரீசங்கரரும் பக்தி வழிநின்று மனதை ஒருவழிப்படுத்தி பயன்பெறலாம் என்று அறிவுரை கூறுகிறார். மதங்கொண்ட யானை போல் அடக்குவதற்கரிதான மனதை பக்தியெனும் வலிய சங்கிலியினாலே இறைவன் திருவடிகளாகிய தூணில் பொருத்தப் பிணைக்க வேண்டுமென சிவானந்தலஹரீ போதிக்கின்றது.[27]

சிவானந்தலகஹரீ பாடல் களில் சில ஆசிரியர் தன் உள்ளத்திற்கு புத்திமதி கூறுவனபோல் அமைந் துள்ளன. ஆயினும் அவை ஆத்மீக பக்குவம் பெறாத மக்களை நோக்கி அவர் கூறும் புத்திமதியாகக் கருதப்படத் தக்கவை. ஏனெனில் சில மக்களின் சமய அறிவுக் குறைவையும் ஆங்காங்கு இந்நூலில் சாடுகின்றார். மூடபுத்தி கொண்ட ஜனங்கள் பெருங் காடு களிலும், ஆழமான குளங்களிலும் சென்று இறைபூசைக்காக மலர்கொண்டு வருகிறார்கள்; உள்ளமாகிய மலர் ஒன்றே அவனது பூஜையில் அர்ப் பணிக்கப் போதுமானது என்பதை அவர்கள் அறியவில்லையே என்று கருத்தினைத் தரும் பாடலை எடுத்துக் காட்டாகக் கூறலாம். பக்திநெறியை இலகுபடுத்தி உள்ளன்பு ஒன்றே உயர்ந்தது என்பதை ஆசிரியர் வலியு றுத்துகிறார்.

இந்நூல் இறைவழிபாடு பற்றி யும் சிறப்பித்துக் கூறுகின்றது. வழி பாடு சமயத்தின் மிக முக்கியமான தொரு அம்சமாகும். வழிபாடும் சமயமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறு படுத்த முடியாதளவு நெருங்கிய தொடர் புடையவை. சமய நம்பிக்கை வேரூன்ற வழிபாடு அவசியம். சமயமும் வழி பாடும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன.

கடவுளிடத்துள்ள பக்தியை வெளிப்படுத்தும் ஒரு சாதனமாக வழிபாடு அமைகின்றது. கடவுள் நம்பிக்கையையும் அதனாலேற்படும் பக்தியையும் மேம்படுத்தவும் பிறரை சமயநெறிப்படுத்தவும் இது உதவு கின்றது. அத்துடன் ஆத்மீக திருப்தி யையும், நன்மையையும் அளிப்பதுடன் அறக்கட்டுப்பாட்டுக்கும் வழிகோலு கிறது. பக்தனது மனத்தை ஒருவழிப் படுத்தி ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும் பல வழிபாட்டு முறைகள் பற்றிச் சிவானந்தலஹரீ குறிப்பிடுகின்றது. வழிபடுவோனது ஆத்மீகத் தகுதிக் கேற்ப வழிபாட்டு முறைகளும் வேறு படலாம். ஈடுபாட்டிலும் தாரதம்யம் ஏற்படலாம். இதனால் பல வழிபாட்டு முறைகளைப் பற்றிய குறிப்புக்கள் இங்கு காணப்படுகின்றன. வழி பாட்டின் மூலம் ஏற்படுத்தப்படும் ஆத்மீக உணர்வு உள்ளத்தைத் தூய் மைப்படுத்தவும் அதன் மூலம் மன ஒருமைப்பாட்டினையும் பக்தியையும் அதிகரிக்கச் செய்யவும் உதவுவது. இவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகையில் இது கடவுளை உணர வழிசெய்கின்றது. எனவேதான் இறைவனிடம் அன்பு செலுத்துதலாகிய பக்தி மார்க்கத்தை மக்களுக்குக் காட்டி அதனை வளர்த்துப் பயனடைதற்கான வழிபாட்டு முறைகளையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"முக்திக்கு வழிகாட்டும் சாதனங்களுள் பக்தியே சிறப்புடையது.[28] என அழுத்திக்கூறும் ஸ்ரீசங்கரர் தனது சிவானந்தலஹரியில் எளிமையான முறையில் இறைவனை வழிபாடாற்றி உள்ளத்தை இறைவனிடத்து ஒருமைப் படுத்தி உயர்ந்த ஆத்மீக உணர்வைப் பெற்று அதன் மூலம் பரம்பொருளை உணர்வதற்கும், இணைவதற்கும் பக்தி நெறிமூலம் வழிகாட்டியுள்ளார் எனலாம்

## அடிக்குறிப்புக்கள்

01.WilliamsMonier.M, (1963) SanskritEnglishDictionary,Oxford, P.259.
02.கிருஷ்ணசாமி ரெட்டியர், அ.வெ.ர (பதி) (1977) ஸௌந்தர்யலஹரீ, (தமிழாக்கப் பாடல்கள்),பக் - 12.
03.அண்ணா, (1957) சிவானந்தலஹரீ பாஷ்யம்,சென்னை.
04.Williams,Monier.M.(1963) SanskritEnglishDictionary, Oxford, P.743.
05.NaradaBhaktiSutrasSwamiSadanantaSaraswathi(Trans)Risikesh:DivinelifeSociety,(1952),சூத்.2.
06.SandilyaBhaktiSutras-SwamiHarshananda(Trans)Mysore,1978,1.1.2
07.பாகவாதம்7.5.23 - 24.
08.சிவானந்தலஹரீ.(சி.ல)(பதி),கைலாசம்ஐயர்.61.
09.பகவத்கீதை,12.5.
10.சித்பவானந்தர்(உரை)ஸ்ரீமத்பகவத்கீதை,திருச்சி,1972,ப.603.
11.சி.ல,55,90,91.
12.மேற்படி,16,18.
13.மேற்படி,17
14.மேற்படி, 60.
15.கடோபநிடதம்.2.23.
16.முண்டகோபநிடதம்III.2.3.
17.சில.18,29.
18.மேற்படி,11
19.மேற்படி,39.47
20.மேற்படி,38.
21.மேற்படி,41
22.கடாபநிடதம்,6.14
23.சி.ல,81
24.மேற்படி,28
25.பகவத்கீதை.4.39, 5,22
26.மேற்படி,4.35.
27.சி.ல,96 - 97.
28.JagadguruSriSankaracharya,H.H,Sankara and Shanmata,Madras(1969).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொழில் வாய்ப்பு மற்றும் பல்கலைக்கழகங்கள்: அடிப்படையும் பிரச்சினைகளும் - வளர்முகநாடுகளை அடிப்படையாகக் கொண்டது

மா.சின்னத்தம்பி,


## ஆய்வுச்சுருக்கம்

*இலங்கை போன்ற வளர்முகநாடுகளின் பல்கலைக்கழகங்களின் கல்வி, தொழில் வாய்ப்புப் பெறும் தகுதியை வழங்கத்தவறிவிட்டதென்ற கருதுகோளை இவ்ஆய்வுக்கட்டுரை அடிப்படையாகக் கொள்கிறது. தொழில் உலகின் தேவைகளினடிப்படையில் பல்கலைக் கழகங்களின் கல்விப்போக்கினை மதிப்பிட்டு அவை தொடர்பாகக் காணப்படும் குறைபாடுகள் அவற்றினைக் குறைக்கும் வழிமுறைகள் என்பன விவரண ஆய்வுமுறையில் இங்கு ஆராயப்படுகின்றது. பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான புதிய மாற்றங்களை இவ்வாய்வுக் கட்டுரை சிபார்சு செய்கின்றது.*


## அறிமுகம்

ஒரு நாட்டின் நிர்வாகம், வியாபாரம் மற்றும் தொழிற்துறை முன்னேற்றத்திற்கு உதவும் தகுதியும் தலைமைத்துவமும் மிக்கவர்களையும் ஆராய்ச்சிச் சிந்தனையுடையோரையும், சமூக முன்னேற்றத்திற்கான மதியுரை மற்றும் மானசீக பங்களிப்பையும் வழங்கக்கூடிய மேன்மைமிக்கோரையும் உருவாக்கும் தந்தக் கோபுரங்களே (Ivory Towers) பல்கலைக்கழகங்கள். இவை மரபு வழியாக உன்னதமான உயர் கல்வி நிறுவனங்களாக மதிக்கப்பட்டு வருகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அறிவாளிகள், விஞ்ஞானிகள், தொழிற் துறை மற்றும் அரசியல்துறை தலைவர்கள், தொழில்வல்லுனர்கள், தத்துவ ஞானிகள் போன்றவர்களை உருவாக்கும் சமுதாயத்தின் தலையான நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன.

அண்மைக் காலத்தில் பொருளாதார மேம்பாட்டில் அவற்றின் பங்களிப்பு முதன்மைப் படுத்தப்படுகிறது. தொழிற்சந்தையில் தொழில் பெறும் தகைமைமிக்கவர்களை உருவாக்கத் தவறிவிட்டதாகவும், தேசிய வளங்களை, குறிப்பாக கல்வி கற்ற மனிதவள விரயத்துக்கு துணை போவதாகவும் பல்கலைக்கழகங்கள் பற்றிக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இவற்றை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் பல்கலைக் கழகங்களின் நோக்கிலும் போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனடிப்படையில் தொழில், தொழில் வாய்ப்பு தொடர்பாக பல்கலைக்கழகக் கல்வி சார்ந்த சில அடிப்படைகளையும், பிரச்சினைகளையும் இவ் ஆய்வுக் கட்டுரை விளக்க முயல்கிறது.

## வாழ்தொழில் மற்றும் தொழில் வாய்ப்பு

## Career and Employment

சமூகத்தில் வாழும் ஒவ்வொரு தனிநபரும் தமது வாழ்வுடன் ஏதோ ஒரு தொழிலை இணைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. வாழ்வின் வசதிகள், விழுமியங்கள், முன்னேற்றம், சமூக அந்தஸ்து, நீண்டகால பாதுகாப்பு, தலைமுறை முன்னேற்றம் போன்ற அனைத்தும் ஒருவரது வாழ்தொழிலை (Career)ப் பொறுத்ததாகவே அமைகிறது. தனிநபர் மகிழ்ச்சி, சிறப்பு என்பவற்றையும் குடும்ப முன்னேற்றம், சமநிலை என்பவற்றையும் வாழ்தொழில் தீர்மானிக்கவல்லதாகும். வாழ் தொழில் தன்மை, முக்கியத்துவம் தொடர்பாக பலஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[1] தொழில்களின் மதிப்பு அல்லது தரநிலை என்பது சம்பள அளவு, வேலை நேரம், வேலை மாதிரி, தொழில் வசதிகள், மெய் ரீதியிலான சலுகைகள், மேலும் முன்னேறுவதற்கு அது கொண்டிருக்கும் இயலுமை போன்ற பல்வேறு காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகிறது. இவை வாழ்க்கைத் தரத்தையும், சமூக அந்தஸ்தையும் தீர்மானிக்க வல்லன.

இதனால் வாழ் தொழில் பெறும் தகைமையை உறுதி செய்வது முக்கியமான தாகியுள்ளது.

வாழ் நாளுக்கான வாழ் தொழில் (Career) என்பது முன்னேற்றம், வாண்மை, வாழ்நாள் முழுதற்குமான தொடர்ச்சிநிலை என்ற பல்வேறு கருத்து நிலைகளில் பயன்படுத்தப் பட்டு வருகிறது. ஒரு தனிநபரினால் வாழ்நாளுக்குரிய காலப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பதவிசார் தொடருரு நிலைமையைச் சுட்டி நிற்கிறது. மற்றொரு மாதிரியில் இது வேதனத்துடனோ, வேதனமின்றியோ ஒரு குறித்தகால நீட்சிக்கு ஒருவரால் ஆற்றப்படும் வேலையை குறிப்பிடுகிறது.

தனிநபர் நோக்கில் வாழ் தொழில் பின்வரும் வழிகளில் உதவுதல் வேண்டும்.

1. தொழில்சார் குறிக்கோள்களை இனங்காணல்.
2. குறிக்கோள்களை அடைதற்கு தேவைப்படும் தகைமைகள், தேர்ச்சிகள் என்பவற்றை அறிதல்.
3. பணியாற்றும் நிறுவனத்தின் உள்ளேயும், வெளியேயும் காணப்படும் நிலைமைகளை விளங்கிக் கொள்ளுதல்.
4. வேலை எங்கு மேற்கொள்ளப்படுகிறது என்பதைவிட வேலை நீட்சி என்பது முக்கியமானது என்பதை உணர்தல்.

www.tamilarangam.net

தனிநபர்கள் தாம் வாழ்நாள் முழுதும் எத்தகைய தொழிலில் இருப்பதென்பதை பகுத்தறிவு ரீதியில் தீர்மானித்தல் வேண்டும். இதற்கு எந்தவொரு பட்டதாரியும் பின்வருவன தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1. தமது தொழில்சார் நாட்டங்களை பதிந்து வைத்தல்.
2. வாழ்க்கைத் திட்டமிடுதற்கான பகுப்பாய்வை மேற்கொள்ளுதல்.
3. தேவையான வாழ்தொழில் ஆலோசனையை உரிய காலத்தில் தகுதிமிகவரிடமிருந்து பெறுதல்.
4. நீண்டகாலத்தில் தொழில் உயர்ச்சிக்குத் தேவையான முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல். புதிய தொழில் உலகின் மாற்றங்களுக்கு ஏற்ற புதிய தகைமைகளையும், தேர்ச்சியையும் பெற்றுக் கொள்ளுதல்.
5. எதிர்காலத்தில் எழக்கூடிய தொழில் சார் அறைகூவல்கள் மற்றும் நெருக்கடிகளை முற்கூறுதலும், மதிப்பீடு செய்தலும்.
6. சமூக தொடர்புகளினடிப்படையில் வாழ் தொழிலின் இயல்புகளை மதிப்பீடு செய்தலும். தொழிற் கௌரவம் சார்ந்த சமூக வாழ்வின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ளுதலும்.
7. தமக்குள்ள பலவீனமான (உடல், உள, சமூக) அம்சங்களை விளங்கிக் கொண்டு அவற்றிலிருந்து மீள்வதற்கான தொழில்சார் மாற்று ஏற்பாடுகளை இனங்காணுதல்.

இவற்றினடிப்படையிலேயே பட்டதாரிகள் தமக்குரிய தொழில் வாய்ப்பை (Employment) தேடிக் கொள்ளுதல் வேண்டும். பட்டதாரி ஒருவர் தமது தகைமைக்கும் விருப்பத்திற்கும் எதிர்கால முன்னேற்றத்திற்கும் உதவக்கூடிய தொழில் ஒன்றை உரிய வயதில் பெற்றுக்கொள்வதை தொழில் வாய்ப்பு என்று விளக்க முடியும். மிகவும் பொருத்தமான தொழில்வாய்ப்பைத் தெரிந்து, அதனை வாழ் தொழிலாக மேற்கொண்டு முன்னேறுதற்கு பின்வரும் பரிமாணங்களை (Dimensions) தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

1. தமது ஆற்றல், சுயமதிப்பீடு, இலட்சியம், ஊக்கம், சுய படிமம் (Image) என்பவற்றுக்கு பொருத்தமான தொழிலைத் தெரிவு செய்தல்.
2. வேலையை தேடுதலும், வேலைச் சூழலுடன் பொருந்துதலும், வேலை சார் உபாயங்களை அறிந்து கொள்ளுதலும், வேலையை திறமையாக நிறைவேற்றுதலும்.
3. தொழில் செய்யும் காலத்தில் காணப்படும் தடைகளை எதிர்கொள்ளுதல், நிபுணத்துவம் பெறுதல், போட்டி நிலையில் முந்திச் செல்லுதல் பற்றி பொறுப்புடன் சிந்தித்தலும், திட்டமிட்டு செயற்படுதலும்.
4. ஓய்வு பெறும் காலம் வரும்போது அதற்குரிய உளவியல் மாற்றங்களைப் பெறுதலும், புதிய மாற்றங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் தேடுதலும்.

5. இளைப்பாறும் போது உடல் ஆரோக்கியம், சமூக தொடர்பை வலுப்படுத்தல், வசதிகளைக் குறைத்துக் கொள்ளுதல் பற்றித் தெளிவான அறிவையும் எண்ணங் களையும் விருத்தி செய்தல்.

இத்தகைய பிரதான அம்சங் களை விளங்கிக்கொள்வதன் மூலம் தமக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்பை இனங்காண்பதும், அதைப் பெறுதற்கு திட்டமிடுதலும், அதற்கு ஏற்ற தகைமைகளைப் பெறுதலும், தொடர்புகளை (Contact) விருத்தி செய்தலும் மிகவும் அவசியம்.

பல்கலைக்கழகங்களில் கற்கும் போதே எல்லா மாணவரும் இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை பெறுதல் வேண்டும். இதற்கு பல்கலைக்கழக நிர்வாகம், தொழில் ஆலோசனை தொழில் வழிகாட்டல், தொழில் நிறுவன தொடர்பு என்பவற்றுக்கு உதவுதல் வேண்டும். சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள் மாணவ மன்றங் களூடாக இதனை மேற்கொள்ளுதல் வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங் கள் (NGOS), தனியார் துறை சார்ந்த கைத்தொழில் நிறுவனங்கள் (Industries) வியாபார மற்றும் சேவை நிறுவனங்கள் (Business Organisation) என்பவற்றுடன் பல்கலைக்கழகமும் மாணவ மன்றங் களும் இணைந்து திட்டமிட்டு, செயற் படுவது பட்டதாரிகள் தமது வாழ் தொழிலுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

## தொழில் உலகின் தேவைகளும் கற்கை நெறிகளும்.

Demand of the world of word and Course of Studies

1960களில் ஸ்புட்னிக்குப் பிந்திய காலத்தில் (Post - Sputnik Era) பொறியியலாளருக்கும், விஞ்ஞானி களுக்கும் அதிக மதிப்பும், தேவையும் ஏற்பட்டது. 1970களில் இத்துறை களிலான கலாநிதிப்பட்டம் பெற்றவர் களுக்கு (Ph.D.Holders) அதிக தேவையிருந்தது.

1960களில்"குழந்தைகள் வெடிப்பு"[2] (Baby Boom) என்று குறிப்பிடப்பட்ட காலப் பகுதியானது ஆசிரியர்களுக் கான தேவையை உயர்த்தியிருந்தது. பின்பு குழந்தைகள் பிறப்புக்கள் வீழ்ச்சியடைய ஆசிரிய தொழிலுக் கான சமூகத்தின் தேவையும் வீழ்ச்சி யடைந்தது.

அரசாங்கங்களினாலும், தொழிற் சங்கங்களினாலும் தொழில் பற்றியும் தொழில் புரிவோர் மற்றும் தொழில் இடவசதிகள் தொடர்பாகவும் விதிக் கப்படும் நிபந்தனைகள் தொழில் தொடர்பான தொழில் உலகின் தேவை களை மாற்றி வந்தன. பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான தொழில் தேவை களில் வாண்மைத்துறை சங்கங்கள்

www.tamilarangam.net

(Professional Societies) விதித்த நிபந்தனைகள் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தி வந்தன. மருத்துவர், சட்டவறிஞர் தொடர்பான தொழில் வாய்ப்புக்களில் இவை மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியதன் மூலம் இவ்வகைப் பட்டதாரிகளை உருவாக்கும் பல்கலைக்கழகங்கள் தொழில்சார் நிலைமைகளை அதிகம் கருத்தில் எடுக்க வேண்டியிருந்தது.

தொழில்களுக்கான சம்பள அளவுகளின் வேறுபாடுகள் தொழில் களின் தேவையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தின. பெரும்பாலான நாடுகளில் வியாபார, கைத்தொழில் வளர்ச்சி 1970களில் பெரியளவில் ஏற்பட்ட போது வணிக மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளை உருவாக்கும் பல்கலைக்கழகங்கள் தொழிற் சந்தை எதிர்பார்க்கைகளை கூர்ந்து அவதானிக்கவும், அதற்கமைய தமது கலைத்திட்டங்களை (Curriculum) மாற்றவும் கற்பித்தல் முறையையும் ஊடகங்களையும் (Methods and Medias) மாற்றவும் வேண்டியதாயிற்று

1990களில் மின்னியல் வளர்ச்சி, நகர்ப்புற விரிவாக்கம், சர்வதேச ரீதியிலான மூலதன, ஊழிய நகர்வுகள், குடும்பத்தின் இரு தலைவர்களும் (தாய் மற்றும் தந்தை) பணியாற்றத் தொடங்கியமை, பெண்ணுரிமை கோட்பாட்டிற்கான அங்கீகாரம் போன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய காரணிகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் கவனிப்புச் சேவைகள் (Caring Services) அதிக மதிப்பைப் பெற்றன. இதனால் பல்கலைக் கழகங்கள் தமது கற்கைநெறி களை அதற்கேற்ப மாற்றி, வடி வமைத்து செயற்படுத்த வேண்டிய தாயிற்று.

இன்று உலகமயமாதலில் தேசிய தொழில் என்பதை விட சர்வதேச தொழில் (International Job) என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தியலாக வளர்ந்திருப்பதால் பல்கலைக்கழகங்களும், அவற்றின் கற்கைநெறிகளும், கற்பித்தல் முறைகளும் அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பம் (Information and communication Technology) இவ்வாறு கவன ஈர்ப்புக்குரியதாகியதால் பல்கலைக்கழகங்கள் அத்துறைக்குரிய பட்டதாரிகளை உருவாக்குவதில் போட்டியிட்டன.

விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்கும் பல்கலைக்கழகங்களும் உற்பத்தித்துறையிலும் வியாபாரத் துறையிலும் நிகழ்ந்து வரும் மாற்றங்களுக்கு உதவக்கூடிய, அவற்றுடன் இணைந்து முன்னேற்றமடையக் கூடிய மாதிரியான கற்கை நெறிகளில் பட்டதாரிகளை உருவாக்க முனைந்தன. மரபணு முறை தொடர்பான அறிவு - ஆய்வுகள் உற்பத்தியில் கையாளப் படுதற்கு காலதாமதங்கள் ஏற்பட்ட போது, பிரயோக முக்கியத்துவம் புதிய

www.tamilarangam.net

மரபணு முறை, மரபணு முறைப் பொறியியல் (Genetic Engineering) போன்ற துறைகளில் பட்டதாரிகளை உருவாக்க முனைந்தன[3]. மரபணு முறையின்படி செம்மைப்படுத்தப்பட்ட தாவரங்களை வளர்க்கும் முறை வேகமாக பரவிய போது வியாபார நிறுவனங்கள் மிகப் பெரியளவு வருவாய்களைப் பெற்றன[4]. இதனால் இத்துறை உலகின் பெரிய பல்கலைக் கழகங்களின் விஞ்ஞானக் கற்கை நெறிகளில் முன்னுரிமை பெறலாயிற்று.

இவ்வாறே 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக நாடுகளின் பார்வையில் முரண்பாடுகள் (Conflicts) என்பது முன்னுரிமைக்குரியதாகக் கருதப்படலாயிற்று. உலகின் பல நாடுகளின் உள்ளே இன, மொழி, மத பிரதேச முரண்பாடுகள் வலுப்பெற்று, பரவி வந்ததால் குழப்பமும், யுத்தமும் அமைதியின்மையும், அச்சமும், இழப்புக்களும் அதிகரித்தன; இவை தொடர்பான சமநிலையை உலகம் முழுதும் ஏற்படுத்த வேண்டியிருந்தது; இந்த நிலைமைகள் நாடுகளிடையிலான உறவுகளையும் சீரழித்தது; சனநாயக கோட்பாடுகளையும் அச்சுறுத்தியது; உற்பத்தி வளங்களை மனித பயன்பாட்டுக்கு ஒவ்வாததாக்கியது. கைத்தொழில் மற்றும் வியாபார வருவாய்களை மோசமாகத் தாழ்த்தியது. உலகளாவிய தொழிலின்மை, வறுமை, வன்செயல்கள் என்பவற்றைத் தூண்டியது. இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசதுறை, தனியார் துறை என்பவற்றுக்கு அடுத்து மூன்றாவது சக்தியாக வளர்ந்து வலிமை பெற்றது, இவற்றைச் சுற்றி தொழில் வாய்ப்புக்கள் பெருகலாயின.

இத்தகைய நிலைமைகளை பல்கலைக்கழகங்கள் அவதானித்து அதற்கேற்ற கற்கை நெறிகளில் பட்டதாரிகளை உருவாக்க முயன்றன. இது சர்வதேச ரீதியில் பல்கலைக்கழக கல்வியின் பொது இயல்பாக மாற்றமடைந்து வருகிறது. இதனால் பின்வரும் துறைகள் சார்ந்த கற்கை நெறிகள் முதன்மை பெறுகின்றன.

- குடிமக்கள் கல்வி (Citizenship Education)
- மனித உரிமைக்கல்வி (Humam Rights Education)
- பன்மைக் கலாச்சாரக் கல்வி (Multi-Cultural Education)
- முரண்பாட்டு முகாமைத்துவக் கல்வி (Education for Conflict Management)
- முரண்பாடுக்கான தீர்வுகளுக்கான கல்வி (Eduction for conflict Resolutions)
- நல்லிணக்கத்திற்கும் அமைதிக்குமான கல்வி (Education for peace and Harmony)
- நல்லாட்சிக்கான கல்வி (Education for good Governance)
- சுற்றுச் சூழல் கல்வி (Environmental Education)
- அகதிகளுக்கான கல்வி (Refugees Education)

www.tamilarangam.net

- சமூகப் பணிக்கான கல்வி (Education for Social work)
- பால்வகைக்கல்வி (Gender Education)
- சமூக உளவியல் கல்வி (Social - Psycho Education)
- உள்வாங்கும் கல்வி (Inclusive Education)
- முரண்பாடுகளுக்குப் பிந்திய பிர தேசங்களுக்கான கல்வி (Education for post - Conflict areas)

இவ்வாறு புதிய கற்கைநெறி களைப் பல்கலைக்கழகங்கள் வடி வமைத்து, திட்டமிட்டு நடைமுறைப் படுத்தி, அடிக்கடி மீள் திருத்தம் செய்து வருகின்றன. இவற்றால் உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற் குரிய புதிய துறைகளுக்கு தேவைப்படு வோரைத் தயார் செய்வதன் மூலமாக புதிய சேவைத் துறைகளிலும், உற்பத்தித்துறைகளிலும் அதிக தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதையும் பல்கலைக்கழகங்கள் உறுதி செய்கின்றன.

## புதிய வழிகளும் செயற்பாடுகளும்

## New Paths and Actions

தொழில் உலகின் போக்கு, தேவை கள், எதிர்பார்க்கைகள், பிரச்சினைகள் என்பவற்றை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப புதிய பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்து, தொழில் இன்மையைக் குறைத்துக்கொள்ள பல்கலைக்கழகங்கள் முனைந்துள்ளன. பொருளாதாரத் துறைகளில் மேற் கொள்ளப்படும் முதலீடுகள், மாற்ற மடையும் தொழில்நுட்பம் பற்றிய முதலீட்டாளர் எண்ணங்கள், தொழிற் துறைகளின் படிமுறை மாற்றங்கள், தொழில்துறை இணைப்புக்கள் போன்ற பலவும் பொருளாதார துறை களில் வளர்ச்சியையும் அபிவிருத்தி யையும் தீர்மானிக்கின்றன. இத்தகைய அபிவிருத்திகளின் தொகை ரீதியி லான விரிவாக்கமும் அவற்றின் பண்பு நிலைகளும் தொழில் வாய்ப்புக்களைத் தீர்மானிக்கின்றன.

பல்கலைக்கழகங்களின் எண் ணிக்கையிலேற்படும் அதிகரிப்பு, அனு மதிக்கும் மாணவரின் எண்ணிக்கை களிலேற்படும் அதிகரிப்பு, அறிமுகப் படுத்தும் புதிய கற்கைநெறிகளின் தன்மை மற்றும் கற்கும் கால அளவு என்பனவும் பட்டதாரிகளின் பெருக் கத்தை நிர்ணயம் செய்கின்றன.

பொருளாதார துறைகளில் உருவா கும் தொழில் வாய்ப்புக்களுக்கும் தொழில் முனைவோரின் எதிர் பார்க்கைகளுக்கும் இசைந்து செல்லக் கூடிய மாதிரியிலான பட்டதாரிகளை பல்கலைக்கழகங்கள் உருவாக்கத் தவறும் போது தான் பட்டதாரிகளின் தொழிலின்மை அதிகரிக்கிறது. இவ் வகையில் நோக்கும் போது இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டதாரி களின் பலவீனங்கள் அவர்களது தொழிலின்மைக்கு பெரிதும் பொறுப்

www.tamilarangam.net

பாக இருந்து வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம் போன்ற சில வாண்மைக் கற்கைநெறிகள் தவிர்ந்த ஏனைய பட்டதாரிகளில் இத்தகைய பலவீனமான அடையாளங்களை இனங்கண்டுள்ளனர்[5]. அவை,

01. தலைமைத்துவ பண்புகள் போதாமை.
02. புத்தாக்கத்திறன் விருத்தியுறாமை.
03. குழு மனப்பாங்கு இன்மை
04. பொறுப்புணர்வு முழுமை பெறாமை.
05. தீர்மானம் மேற்கொள்ளும் திறன் போதாமை.
06. உள (சிந்தனை) ஒழுங்கு போதாமை.
07. மொழித்தேர்ச்சி (ஆங்கிலம்) இன்மை.
08. நேர்மையும் உண்மை விசுவாசமும் விருத்தி செய்யப்படாமை.
09. தொடர்பாடல் திறன் நிறைவின்றி இருத்தல்.
10. கல்வித்தரம் குறைந்தோருடன் அவர்களுக்குக் கீழ் பணியாற்றத் தயங்குதல்.
11. நடைமுறைகளை விட கோட்பாடுகளில் அதிக நம்பிக்கை கொண்டிருத்தல்.
12. குறைந்த மட்டத் தொழிலில் தொடங்கி உயர் நிலைக்கு வரும் செயன்முறையில் உடன்பாடற்றிருத்தல்.

நலன்புரி கொள்கைகளுடன் செயற்படும் அரசாங்கங்கள் மாத்திரம் தமது நிறுவனங்களில் இத்தகைய பலவீனங்களை ஏற்றுக் கொண்டு கீழ் உழைப்பு மாதிரி தொழில் வாய்ப்புக்களை (Under employment) தர்ம சிந்தனையுடன் வழங்கி வருகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் அரச துறையில் வினைத்திறனும். விளைதிறனும், சிக்கனமும் குறைவாயிருந்தமைக்கு ஏனைய காரணிகளுடன் இத்தகைய தொழில் வாய்ப்புக் கொள்கை மற்றும் நடைமுறையும் பொறுப்பாயிருந்துள்ளன. இத் தொழில் வாய்ப்புக் கொள்கைகளினால் நட்டமடைந்த அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் பொருளாதார துறைகளிலிருந்து பெரியளவு தோல்வியுடன் விலகியிருக்க வேண்டியதாயிருந்தது. இதனால் அரசதுறையில் கிடைத்து வந்த "கருணை சார் தொழில் வாய்ப்புக்களும் படிப்படியாக மூடப்பட்டன." இதனால் தனியார் துறையிலேயே தொழில் வாய்ப்பைத் தேடுவதற்கு பட்டதாரிகள் நிர்ப்பந்திக்கப் பட்டனர். சம்பளம் பெறும் தொழில் வாய்ப்பு (Salaried Employment) க்களைப் பெறும் போது தொழில் வழங்குவோரின் எதிர்பார்க்கைகளை தெரிந்து தமது பட்டங்களை விளைதிறன் மிக்கனவாக மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

தனியார் துறையில் தமது சுய உழைப்பு, சுய சேமிப்பு மூலம் திரட்டிய முதலீடுகளை அதிக இடர்கள் (Risks) சார்ந்த துறைகளில் இடும்போது தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணியாளர் பல்வகைத் திறன்களும், உண்மை ஈடுபாடும், கடினமான நீண்ட நேர உழைப்பையும் எந்தச் சூழ்நிலையிலும் நிறுவனத்திற்கு வழங்கக்கூடிய பட்டதாரிகளை எதிர்பார்ப்பது நியாயமானதே. இதற்கேற்றதாக பட்டதாரிகளுக்கான கல்வி, பயிற்சி மற்றும் தொழிலிட அனுபவம் என்பவற்றை உள்ளடக்கியவாறு புதிய மாதிரியிலான கற்கை நெறிகளைப் பல்கலைக் கழகங்கள் அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. பழைய கற்கை நெறிகளை புதிய தேவைகளுக்கு ஏற்றதாக மாற்றியமைக்கவும் வேண்டும்.

அச்சுறுத்தும் தொழில் உலகில் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை உறுதி செய்வதற்கு பல்கலைக்கழகங்கள் பல உபாயங்களை வடிவமைத்து செயற்படுத்துகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானது தனியார் - பொதுத்துறை பங்கேற்பு (Private - public parcipation) செயல்முறை ஆகும்.

**தனியார் துறை - பல்கலைக்கழக பங்கேற்பு**

பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை உறுதி செய்வதற்கு அண்மைக் காலத்தில் பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகின்றன.

1. மாணவர்களுக்குரியவாறு - கற்பித்தலுக்குரியவாறு விரிவுரையாளர்களை கற்பித்தல் முறையியல் தொடர்பாக ஆற்றல் பெறச் செய்தல்.
2. புதிய மாதிரியில் பாட உள்ளடக்கம், கற்பித்தல் செயன்முறை, மதிப்பீட்டு முறை என்பவற்றை வடிவமைத்தல்.
3. கற்கும் காலத்திலேயே பொருத்தமான தொழில்சார் கலாசாரத்தை (Work Culture) அறியும் வகையிலும், சரியான உளப்பாங்கை விருத்தி செய்யும் வகையிலும் தனியார் உற்பத்தி, வியாபாரசேவை நிறுவனங்களில் தொழில்சார், நுட்ப பயிற்சியை பெறுதற்கு ஏற்பாடு செய்தல்.
4. நிகழும் சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்றதாக பட்டதாரிகளின் திறன்களிலும், உளப்பாங்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையிலும் பாட உள்ளடக்கங்களை ஏற்படுத்தும் வகையிலும் பாட உள்ளடக்கங்களிலும் கற்பித்தல் முறையியலிலும் கல்வித்தொழில் நுட்பங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தல் வேண்டும்.
5. தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பெருகி வரும் தொழில் வாய்ப்புக்கள், தகவல் மூலகங்கள், தொடர்புகொள்ளக் கூடிய நிறுவனங்கள் பற்றிய தகவல்களை மாணவர் எந்த வேளையிலும் பெறக்கூடிய ஏற்பாடுகளை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளேயும், பல்கலைக் கழகங்களுக்கு

www.tamilarangam.net

வெளியேயும் மேற்கொள்ளுதல் வேண்டும். பல்கலைக்கழகங்கள் தமக்கிடையில் பொது ஏற்பாடு களையும் இது தொடர்பாக மேற் கொள்ள முடியும்.

6. தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பல்கலைக் கழகங்கள் தொடர்பு கொண்டு தொழில் வாய்ப்புக்கள் உருவாகும் போது தம்முடன் தொடர்பு கொள் ளுமாறு இணக்க முறையிலான ஏற்பாடுகளை மேற்கொண்டு, தக்க போது தகுதி மிக்க மாணவர்களை தொழில் பெற சிபார்சு செய்ய முடியும். இதற்கான நிறுவன அமைப்பையும் தகவல்வலையமைப் பையும் பல்கலைக் கழகங்கள் உருவாக்கிக்கொள்ள முடியும்.

உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் பல்கலைக்கழகங்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் செயற்படும் பல்கலைக் கழகங்கள் இத்தகைய செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

எதிர்காலத்தில் தனியார் துறை யினருடன் பங்காளராக பல்கலைக் கழகங்கள் செயற்படுவதன் மூலமாகவே பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை ஒழுங்குபடுத்துவதும், உறுதிப்படுத்துவதும் சாத்தியமாகும். உலக ரீதியாக தனியார் துறை, அரச துறை பங்கேற்பு (Private public participation) நிகழ்ச்சித் திட்டங்கள் பல்கலைக்கழக கல்வி தொடர்பாக முக்கியத்துவம் பெற்றுள்ளன. இது தனியார் மயப்படுத்தலன்று. பொது மக்களுக்குரிய சேவைகள் தொடர்பாக தனியார் துறை ஒப்பந்தங்களை உரிய முறையில் பயன்படுத்துவதைக் குறிக்கிறது ஜேர்மனியில் 1990களில் இத்தகைய முயற்சி பொதுத்துறை நிதி நெருக்கடியையும் பிற பலவீனங்களை யும் குறைக்கும் வகையில் தொடங்கப் பெற்றது.[6] இங்கிலாந்திலும் இத்தகைய தனியார் - அரசதுறை பங்களிப்பு முயற்சிகள் பல்வேறு துறைகளில் வெற்றியளித்துள்ளன.[7] இதே முயற்சி களை பல்கலைக்கழகங்கள் தொழில் வாய்ப்பை விருத்தி செய்யும் நோக்கில் கையாளுவதன் மூலம் பட்டதாரி களுக்கான தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்த முடியும். மெனா பிரதேச (MENA Region)த்தைச் சேர்ந்த ஏழு நாடுகளின் அனுபவங்களும் தனியார் - பொதுத்துறை தொடர்பை ஒழுங்கு படுத்துவதால் வேலை வாய்ப்பை அதிகரிப்பது சாத்தியமென விளக்கு கின்றன.[8]

பல்கலைக்கழகங்கள் பட்டதாரி களுக்கான தொழிலின்மையைக் குறைப்பதற்குரியதாக செயற்படுவதில் தனியாருடனான கூட்டுத் தொழிற் பாடு மிகவும் பயன்படுமென்பது பரவலாக எல்லா நாடுகளினாலும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றைப் பின்வருமாறு குறிப்பிட லாம்.

1. தனியார் தொழிற்துறை நிறுவனங் களுடன் பல்கலைக்கழகங்கள் இணைந்து தமது கலைத் திட்டங்களை (Curriculur and Co - Curriculur Activities) தயாரிப்பதும் காலத்துக்குக் காலம் அத்தகைய ஒத்துழைப்புகளின் அடிப்படையில் அவற்றை மாற்றியமைப்பதும்.
2. பல்கலைக்கழக மாணவர்களுக்கான செயல்முறை அனுபவங்களை வழங்குவதற்குத் தனியார்துறை யினரின் உதவி, ஒத்துழைப்பைப் பெறுதல். பகுதி நேர வேலை, வார இறுதி நாட்களுக்கான வேலை, பல்கலைக்கழக விடுமுறைகளின் போதான வேலை என்பவற்றுடன் செயல்முறை அனுபவங்களை வழங்குவதும் மாணவருக்கு பக்க வருமானங்கள் பெற உதவுதலும்.
3. பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமது நிபுணத்துவ அறிவை தனியார் துறை நிறுவனங்களுக்கு வழங்கும் போது தமது மாணவர் களின் தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றைத் தீர்க்கும் வகையில் செயற்திட்டங்களை தனியார் நிறுவனங்கள் வடிவமைக்க உதவுதல்.
4. தனியார் துறையினர் தமக்குரிய வளங்களைத் தேடுதல், சந்தை வாய்ப்பை மதிப்பிடுதல், தமது நிறுவன உற்பத்திகள் தொடர்பான பொதுமக்கள் கருத்துக்களை அறிதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களின் போது பல்கலைக்கழக பேராசிரியர், மாணவ அணியினர் ஆகியோரின் உதவியையும், ஒத்து ழைப்பையும் பெறுதல். விவசாய உள்ளீடுகள் மருந்து வகைகள், பாடநூல்கள் போன்றவற்றை உற் பத்தி செய்யும் நிறுவனங்கள் இத்தகைய முயற்சிகளில் அதிகம் ஈடுபடுகின்றன. இதனூடாக புதிய தொழில் வாய்ப்புக்களையும் அதற்கான அனுபவங்களையும் பல்கலைக்கழக மாணவர் பெறுதல் சாத்தியமாகிறது.
5. அண்மைக் காலங்களில் உற்பத்தித் துறைகளை விட சேவைத் துறை களிலேயே மிகுதியான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதை தனியார்துறை நிறுவனங்கள் கண்டறிந்துள்ளன. ஜேர்மனிய நாட்டின் அனுபவங்கள் இதனை வலியுறுத்துகின்றன[9]. கவனிப்புச் சேவைகளில் (Caring services) அதிக முதலீடுகளை மேற்கொள்வதில் தனியார் நாட்டம் கொள்ளும் போது அதற்கேற்ற கல்வியையும், பயிற்சியையும் பல்கலைக்கழகங்கள் வழங்கவேண்டும் என்பதில் உடன் பாடு ஏற்பட்டுள்ளது. பயிற்சி வசதி களுக்கு தனியார் தொழில் நிறுவனங்கள் உதவியும் ஊக்கமும் வழங்கி வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6. நாடுகள் பலவற்றில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கைகளை வடிவமைப்பதற்கு உதவக் கூடிய ஆராய்ச்சி முயற்சிகளில் பல்கலைக்கழகங்களும் பெரிய பொறியியல், மருத்துவ உற்பத்தி, சேவை முயற்சிகளில் ஈடுபடும் தனியார் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இணக்கம் காணப்பட்டு அவ்வாறே செயற்பட்டு வருகின்றன. பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் இத்தகைய கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ளன.[10] அடிப் படை ஆய்வு, தூய விஞ்ஞான ஆய்வு, சமூக விஞ்ஞான ஆய்வு தொடர்பாக சர்வதேச ரீதியாகவும் பல்கலைக்கழகங்களும், உலகின் மிகப்பெரிய தொழில் நிறுவனங்களும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதில் உடன்பாடு காணப் பட்டுள்ளது.

7. உலகின் மிகப் பெரிய தனியார் நிறுவனங்கள் மிகவும் மதிநுட்பம் வாய்ந்த பல்கலைக்கழக மாண வருக்கு புலமைப்பரிசில் வழங்கி மிகவும் சிறந்து விளங்கும் பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உயர் பட்டங்கள் பெற உதவவிரும்பி அவற்றுக்கென பெருமளவு நிதியை ஒதுக்கி வருகின்றன. தற்போது உலகின் மிகப் பெரிய எண்ணெய் வியாபார நிறுவனமாகிய ஷெல் நிறுவனம் (Shell Corporation) இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது[11].

8. பல்கலைக்கழகங்களுக்கு தனியார் நிறுவனங்கள் உதவுதல் என்ற நிலைமைக்கு மேலாக தற்போது அவை சுயமாகவே பல்கலைக் கழகங்களை நிறுவி நிர்வகித்து வருகின்றன. அவை வழங்கும் பட்டங்களை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென வற்புறுத்தி வெற்றியும் பெற்றுள்ளன. உலக வங்கியும் அதனை வெகுவாக ஆதரித்து வருகின்றது. இத்தகைய பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவது மிகவும் கடினமாகி உள்ளது. அவற்றின் பட்டதாரிகள் தர ரீதியில் முன்னணிவகித்து வருகின்றனர். அவை தமது தொழில் நோக்கு, பிரச்சினை, அனுபவம் என்பவற்றினடிப் படையில் காலத்துக் காலம் பாட உள்ளடக்கம், கற்பித்தல், செயல் முறை விளக்கம் என்பவற்றையும் மாற்றி வருகின்றன. இதற்கு பிற பல்கலைக்கழக நிபுணர்கள் மற்றும் பேராசிரியர்களின் உதவியும் பெறப்படுகிறது.

9. பல்கலைக்கழக மட்டத்திலும். பாடசாலை மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் மட்டத்திலும் கற்பித் தல் தொழில்நுட்பங்கள் மாற்ற

www.tamilarangam.net

மடைந்து வருகின்றன. இதனால் கல்வித் தொழில்நுட்ப உற்பத்தி (Production related to Educational Technology) துறைகளில் தனியார் நிறுவனங்கள் அதிகளவில் முதலீடு செய்கின்றன. இத்தகைய உற்பத்தி வடிவங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற பல்வேறு படிநிலைகளில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் இறுதியாண்டு மாணவர்களின் பங்களிப்பு பெறப்படுகிறது. இதில் இருந்து ஏராளமான தொழில் வாய்ப்பையும் பல்கலைக் கழக பட்டதாரிகள் பெற்றுக் கொள்வது உறுதிப்படுத்தப் படுகிறது.

இவ்வாறான பல்வேறு படிநிலைகளில் தனியார் துறை - பல்கலைக்கழக கூட்டுச் செயற்பாடுகள் வலுவடைந்த வருகின்றன. இதற்கு மேலாக பல்கலைக்கழகங்கள் பெருமளவில் தனியாரிடமே விடப்படுதல் வேண்டுமென உலகவங்கி வற்புறுத்தி வருவதும் கவனிக்கத்தக்கது.

## முடிவுரை

பல்கலைக்கழகங்கள் எதிர்காலத்தில் நன்கு சந்தைப்படுத்தக்கூடிய பட்டங்களை (Marketable Degrees) யும் எந்த நாட்டிற்கும் எடுத்துச் செல்லக்கூடிய பட்டங்களையும் (Portable Degrees) வழங்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றது. இதற்கு ஏற்றதாக புதிய சீர்திருத்தங்கள் உலக வங்கியினால் சிபார்சு செய்யப்படுகின்றன. இலங்கை போன்ற வறிய நாடுகள் தனியார் துறையுடனான பல்கலைக் கழக இணைப்புக்கான நிகழ்ச்சித் திட்டங்களையும், செயற்திட்டங்களையும் தயாரித்து, வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இத்தகைய புதிய நெறியில் செல்வதில் எந்தளவுக்கு பல்கலைக்கழகங்கள் வெற்றியடைகின்றன என்பதே இவை உயர் கல்வியை வழங்கும் பணியில் எவ்வளவு காலம் நீடித்திருக்கலாம் என்பதைத் தீர்மானிக்கும் என்பது நிச்சயமானது.

## அடிக்குறிப்புக்கள்

01. பார்க்க: BARTON. E. PAUL (1978), and others ; Directions for Education and work Jmplementing NewEducation -Workpolicies.SonFromcisco P-11-17,49-61, BAILARD E. THOMAS and, (1982), others Personal Money Management, Consumer Union of United States, New York.pp25- 41.
02. Bailard.E; Thomas and others; (1982) 1945இல் 2.7 மில்லியனாக இருந்த பிறப்புக்கள் 1960இல் 4.2 மில்லியனாக அதிகரித்ததால் அமெரிக்காவில் ஆசிரிய தொழிலுக்கானதேவைஅசாதாரணமாக அதிகரித்தது.

www.tamilarangam.net

03. Courier (1998); 1953ல் James watson (USA)Framas Crick (UK) ஆகியோர் DNA பற்றிய அடிப்படைகளைக் கண்டறிந்த போதிலும் விவசாய தாவரவியல் மீது பிரயோகிக்கும் நிலை 1983லிருந்துதான் வளர்ச்சி பெற்றது. இக்காலப் பகுதியிலிருந்து பல்கலைக்கழகக்கல்வியும்இத்திசைநோக்கித்திரும்பியது.

04. Courier (1998); மரபணு முறையில் செம்மைப்படுத்திய தாவர விதையினங்களை விற்பதன் மூலமாக Monsanto என்ற நிறுவனம் வருட வருமானமாக 6600 மில்லியன் டொலர்களை (Us 66 Billion) பெற்றிருந்தது. (UNESCO - The Courier - September1998:11)

05. Hemaka Amarasuriya, ( 1996);Workshop of "Teaching Methodologies in Urdergraduate CoursesinCommerce and Management,UGC.ppIV-V

06. பார்க்க: HANS JOACHIM RABE, (2000) Public-Private Partnerships, Development and corparation, DSE,BONN, pp9-17.

07. பார்க்க: GERRARD.B.MICHAEL, (2001) Public - Private Partnership, Finance and Development,IMF,WASHINGTON,September2001pp48-51.

08. பார்க்க: GARDNER, EDWARD, (2003) More Jobs, Finance and Deve!)pment, IMF, WASHINGTON, March2003pp18-21.

09. பார்க்க: SEIFERT, HARTMUT, (2001) Changes in the Labour Market, Deutsh and 2/2001April/Maypp16-18.

10. பார்க்க: YUKO HARAYAMA, (1997) The Contemporary Univer sity : Its Soci o-Economic higher EducationinEurope, Vo XXII, No.3, pp275-291.

11. இணையத்தளத்திலிருந்துபெறப்பட்டது, WWW.Shell a@Com uk

www.tamilarangam.net

# கந்தபுராணம் காட்டும் முருக வடிவங்கள்

கலாநிதி மா.வேதநாதன்,

## ஆய்வுச்சுருக்கம்

*கந்தபுராணம் முருகபரத்துவத்தையும், முருகவடிவங்களையும் சிறப்பாகச் சித்திரிக்கும் சைவப் பேரிலக்கியமாக விளங்குகின்றது. முருக வடிவங்கள் பற்றிய விரிவான விபரங்களைத் தமிழில் கூறும் முதற்பேரிலக்கியம் என்ற சிறப்பு கந்தபுராணத்திற்கேயுண்டு. முருகவழிபாட்டிற்கு அடிப்படையாக விளங்குவது முருக வடிவங்களாகும். இவ்வாய்வு கந்தபுராணத்தில் கூறப்படும் முருகவடிவங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.*

## முன்னுரை

முருகனின் புன்சிரிப்பில் உலகமே உவக்கும் இருபத்தொராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இன்று நாம் வாழ்ந்து வருவதாக கபில் சுவெலபில் என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார். பண்டைக் காலத்தில் குறிஞ்சி நிலக் கடவுளாக வழிபடப்பட்ட முருகனுக்கு இன்று உலகமெங்கும் திருக்கோயில் அமைத்து அவற்றுள் முருகனின் பல்வேறு திருவடிவங்களை வைத்து வழிபடும் வழிபாட்டு நிலை காணப்படுகின்றது. முருக வழிபாட்டிற்கு மிகவும் அடிப்படையாக விளங்குவது முருக வடிவங்கள் ஆகும். அவை பற்றிய விபரங்கள் சிவாகமங்கள், குமார தந்திரம், ஸ்ரீதத்துவநிதி போன்ற வடமொழி இலக்கியங்களில் மட்டுமன்றி திருமுருகாற்றுப்படை, கந்த புராணம், திருப்புகழ் முதலான தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களுள் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாசாரியர் என்பவர் இயற்றிய தமிழ்க் கந்தபுராணமானது முருகனின் எழில்மிகு திருவடிவங்களையும், முருக பரத்துவத்தையும் சிறப்பாகச் சித்திரிக்கும் சைவப்பேரிலக்கியமாக விளங்குகின்றது. இவ்விலக்கியத்துள் காணப்படும் ஆறு காண்டங்களுள் பத்தாயிரத்திமுந்நூற்றி நாறபத்தைந்து பாடல்கள் உள்ளன. இவ்விலக்கியம் கூறும் முருக வடிவங்களை வெளிப்படுத்துவதும், அவற்றுள் முக்கியமான முருக வடிவங்கள் அமைந்து விளங்கும் முருகன் ஆலயங்களை எடுத்துக் காட்டுவதும் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## முருகனின் அழகுத் திருக்கோலம்

"முருகன்" என்ற சொல்லுக்கு "அழகு" என்பது பொருள். முருகனின் எல்லாத் திருக்கோலங்களும் பேரழகாகவே விளங்குகின்றன. சைவ இலக்கியங்களுள் கந்தபுராணமே முதலில் முருகனின் திருக்கோலத்தினை அழகுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொருவரும் ஒவ்வாத தெய்வீகத் திரு வடிவமாகச் சிறந்த முறையில் சித்திரிக்கின்றது. முருகனின் ஒப்பற்ற அழகுத் திருக்கோலத்தினை சூரபன்மன் வாயிலாகவே கச்சியப்ப சிவாசாரியர் குறிப்பிடுவது நயக்கத்தக்கதாகும். ஆயிரம் கோடி மன்மத கூட்டத்தினர் அழகு முழுவதையும் ஒன்றாகத் திரட்டி அதனை ஓர் உருவமாக அமைத்தாலும் அது முருகனின் திருவடி அழகுக்கே ஈடாகாது என்றால், "முருகனின் திருமேனியின் அழகுக்கு உவமை வகுப்பவர்கள் எவர்" என்பது சூரபன்மன் வாயிலாகக் கந்தபுராணத்தில்,

**"ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி**
**மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்**
**தூயநல் எழிலுக்கு ஆற்றாது என்றிடல் இணைய தொல்லோன்**
**மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்"**[1]

என வருகின்றது. மேலும் முருகனின் "திருப்பெருவடிவத்தில்" காணப்படும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் ஆகிய அனைத்தும் உலகத்தில் எவரிடத்தும் காணமுடியாதெனவும், அதனை அதிசயத்துடன் பலமுறை பார்த்தவிடத்தும் தனது கண்கள் "போதும் என்று தெவிட்டிற்றில்லை" என்று அமைதி காண முடியவில்லையே, எனவும் சூரபன்மன் கூறுவது[2] முருகன் "என்றும் அதிசயத்தக்க அழகுத் திருக்கோலமுடையவன்" என்பதை நன்கு உறுதிப்படுத்துகின்றது.

## முருகனின் குழந்தை வடிவம்

முருகனின் திருக்கோலங்களுள் அவரது குழந்தைக் கோலம் தனிச்சிறப்புடையது. அதனைப் பாலமுருகன் என வழங்குவர். முருகனை ஒரு காலத்தில் "பாலன்"[3] என்றே சூரனும் கருதியதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. முருகன் குழந்தைக் கோலத்துடன் விளங்கும் வனப்பினைக் கந்தபுராணம் மிகச் சிறப்பாகச் சித்தரிக்கின்றது. அவர் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளங்கியதையும் அப்போது ஒரு குழந்தை தன் குழந்தைப் பருவத்தில் என்னென்ன செயல்களைச் செய்யுமோ அவ்வாறே முருகனும் குழந்தைக்குரிய செயல்களைச் செய்யும் திருக்கோலங்களுடன் விளங்குவது கந்தபுராணத்தில்,

**"ஓர் உருத்தவழ மெல்ல ஓர் உரு தளர்ந்து செல்ல**
**ஓர் உரு நிற்றல் செல்லாது ஒய்யென எழுந்து வீழ**
**ஓர் உரு இருக்க பொய்கை ஓருரு உழக்கிச் சூழ**
**ஓர் உரு தாய்கண் வைக ஒருவனே புரிதல் உற்றான்"**[4]

என்றும்,

**"ஆட ஓர் உருவம் செங்கை அறைய ஓர் உருவம் நின்று**
**பாட ஓர் உருவம் நாடிப் பார்க்க ஓர் உருவம் ஆங்கண்**
**ஓட ஓர் உருவம் ஓர்பால் ஒளிக்க ஓர் உருவம் யாண்டும்**
**தேட ஓர் உருவம் ஆக சிவன் மகன் புரியலுற்றான்"**[5]

என்றும்,

**"துயிலவோருருவம் துஞ்சித் துண்ணென எழுந்து மென்சொற்**
**பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவளவாய்வைத்**
**தயிலவோருருவம் நக்காங்கமரவோ ருருவம் ஆடல்**
**இயலவோருருவம் வாளா இரங்கவோ ருருவஞ் செய்தான்"**[6]

என்றும் வருவது இவற்றுக்குச் சிறந்த சான்றுகளாகும்.

கார்த்திகை மாதர் அறுவரினதும் அன்புக்குக் கட்டுப்பட்டே ஒருவராகிய முருகன் ஆறு குழந்தை வடிவங்

www.tamilarangam.net

களில் விளங்கினார். இது கந்தபுராணத்தில்,

''உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோன் ஆத லாலே
ஆறுமுகவொருவன் வேறாய் அறு சிறார் உருவங்
கொண்டான்''[7]

என வரும்.

## கந்தன் வடிவம்

முருக வடிவங்களுள் கந்தன் திருக்கோலம் தனிச்சிறப்புடையது. கந்தபுராண நோக்கில்''கந்தன்'' என்ற சொல்லுக்கு ''ஒன்றுசேர்க்கப்பட்டவன்'' என்பது பொருளாகும். இதுவே கந்தபுராணத்தில், ''சேயவன்'' வடிவ மாறுந் திரட்டிந்யொன்றாய்ச் செய்தாய் ஆயதனாலே கந்தனாமெனு நாமம் பெற்றான்''[8] வருகின்றது. சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைக் கோலத்துடன் விளங்கிய முருகனை உமையம்மை எடுத்து அணைத்து ஒன்று சேர்த்த போதே ''கந்தன்'' என்ற பெயர் ஏற்பட்டதை மேற்படி பாடற்குறிப்பு புலப்படுத்துகின்றது. ஆறுமுகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்ட முருகன் திருக்கோலமே கந்தன் என்பது கந்தபுராணக் கருத்தாகும். திருமால், பிரமன் என்போரது சிறுமையை நீக்கி இந்திரனுடைய துன்பத்தைப் போக்கி தேவர்களின் சிறையை மீட்டு உலகத்தை காத்தருளும் பொருட்டே ஆறு முகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்ட பாலன் வடிவத்தில் கந்தன் என்ற திருக்கோலம் தோற்றம் பெற்றதாக கந்தபுராணம் கூறும். சிவபெருமானே ''கந்தன் ''என்ற இத்திருக்கோலத்தில் வந்ததாக இந்நூல் மொழிகின்றது.[9]

கந்தன் என்ற திருக்கோலத்தினைக் ''கந்து'' என்ற பழந்தமிழ்ச் சொல்லுடன் தொடர்புபடுந்தி நோக்க முடியும். ''கந்து'' என்ற சொல் ''அன்'' என்ற ஆண்பால் விகுதி பெற்றுக் கந்தன் என்றாயிற்று. கந்தபுராணம் ''கந்து'' என்ற சொல்லைப் பசுவினங்களைப் பிணிக்கும் தண்டாகக் கூறுகின்றது.[10] அந்த இடத்தில் கந்தன் உறைவதாகவும் அந்நூல் குறிப்பிடுகின்றது. இதன்படி பசுக்களாகிய ஆன்மாக்களைக் கட்டும் நடுத்தறியினையே கந்தபுராணம் ''கந்து'' என்று குறிப்பிடுகின்றதெனலாம். ''கந்து'' என்ற சொல்லுக்குத் தண்டாயுதம் என்று பொருள் கொண்டால், தண்டாயுதம் கொண்டவன் என்று பொருள்வரும். உத்தரகாமிக ஆகமம், வலதுகரத்தில் தண்டாயு தத்தை ஏந்தி, இடது கையை இடுப்பில் ஊன்றி தலைமுண்டிதமாய் கோவணம் தரித்த நிலையில் ஒருமுகத்துடன் நிற்கும் திருக்கோலத்தில் விளங்கும் முருகனின் திருக்கோலத்தினையே கந்தன் உருவம் (ஸ்கந்தர்) என்ற பெயரினால் குறிப்பிடுகின்றது.''[11] இக் கந்த சுவாமி வடிவமே பழனியிலுள்ள தண்டாயுத பாணியின் திருக்கோலமாகும். அறிவைக் கொடுக்கும் இவ்வடிவத்தை மலைகளில் தாபனம் செய்து வழிபட வேண்டும் என்ற செய்தியையும் ஆகமங்

www.tamilarangam.net

குறிப்பிடுகின்றது.[12] கந்த புராணத்தில் "தண்டு" என்பது ஓர் ஆற்றல் வாய்ந்த படைக்கலம் எனக் கூறப்பட்டிருப்பதால் தண்டாயுதபாணியை ஞானத்தை மட்டு மன்றி போரில் வெற்றிதரும் வீரத் தெய்வமாகவும் கொள்ளலாம். இவ் வகையில் ஆகமம் கூறும் கந்தனின் தொன்மைத் திருக்கோலத்தினையே பழனித் தண்டாயுதபாணியின் திருவடி வம் சுட்டி நிற்கின்றது எனலாம்.

**புலிங்கமூர்த்தி வடிவம்**

முருகனின் திருக்கோலங்களுள் புலிங்கமூர்த்தி தனிச்சிறப்புடையவர். சிவனுடைய நெற்றிக்கண்களிலிருந்து தீப்பொறிகளாகத் தோன்றியருளலால் முருகக் கடவுள் புலிங்கமூர்த்தி எனப் பெயர்பெற்றார். இத்திருக்கோலத்தை சிவதேசகமூர்த்தி எனவும் அழைப்பர். சிவபெருமானின் ஆறு நெற்றிக்கண் களிலிருந்து தீப்பொறிகளாகத் தோன் றும் கந்தபுராணம் சுட்டும் முருகன் திருக்கோலத்தை சுவாமிமலையில் சுவரோவியமாகக் கண்டு வணங்குவர்.

**பிரமனைச் சிறையிடும் வடிவம்**

"ஓம்" எனப்படும் ஓர் எழுத் துண்மையை அறியாதிருந்த பிரம தேவரின் நான்கு தலைகளும் குலுங் கும்படி குட்டி, அவரைத் தனது திருப் பாதத்தால் உதைத்து சிறையில் அடை த்த செய்தியை கந்தபுராணம் குறிப்பிடு கின்றது[13] இத்தெய்வீகக் கதையைச் சுட்டி நிற்பதே பிரமனைச் சிறையிடும் திருக்கோலமாகும்.

**பிரமசாத்தன் வடிவம்**

பிரமனைத் தண்டித்த முரு கனின் வீரச் செயலைப் புலப்படுத்து வது பிரமசாத்தன் திருக்கோலமாகும். பிரணவத்தின் பொருள் தெரியாமல் படைப்புத் தொழில் செய்த நான் முகனாகிய பிரமனது ஆணவத்தை அடக்கி, அவனைச் சிறைப்படுத்தி முருகன் தானே படைப்புத் தொழில் செய்த திருக்கோலம் இதுவாகும். ஒருமுகமும், நான்கு கரங்களும் கொண்டு விளங்கும் இத்திருக்கோலம் கந்தபுராணத்தில்,

**"ஒரு கரம் தனில் கண்டிகை வடம் பரித்து ஒரு தன்**
**கரதலம் தனில் குண்டிகை தரித்து இரு கரங்கள்**
**வரதமொடு அபயம் தரப் பரம் பொருள்மகன் ஓர்**
**திருமுகம் கொடு சதுர்முகன் போல் விதி செய்தான்"[14]**

என வரும்.

கச்சியப்ப சிவாச்சாரியரின் குலதெய்வமாக விளங்கிய காஞ்சிபுரம் குமரகோட்டத்து முருகனும் இதே அங்க அமைப்புடன் விளங்குவதனை அவர்,

**"கொண்டலை யளக்கு நொச்சிக் குமரகோட்டத்துச்**
**செவ்வேள்**
**கண்டிகை வடமுந் தூநீர்க்கரமுங் கரத்திலேந்திப்**
**பண்டையிலயனை மாற்றிப் படைத் தருள் வேடந்தாங்கி**
**அண்டர்க ளெவரும் போற்ற வருள் புரிந்தமர்ந்**
**தானன்றே"[15]**

எனக் கூறுவர். சென்னைக்கு அருகிலுள்ள வளசர வாக்கத்திலும், பூவிருந்தவல்லிக்கு அருகிலுள்ள வாயிலா நல்லூரிலும் முருகனின் பிரமசாத்தன் திருக் கோலங்கள் காணப் படுகின்றன. சென்னையில் வளசர

www.tamilarangam.net

வாக்கத்தில் மிகப் பெரிய பிரம சாத்தாவின் திருக்கோலம் உள்ளது. சோழர் காலத்தைச் சேர்ந்த பிரமசாத்தாவின் முருகவடிவம் பூவிருந்த வல்லிக்கு அருகில் உள்ள வாயிலா நல்லூரில் காணப்படுகின்றது.

**பிரணவ வடிவம்**

ஆறுமுகனாகிய முருகன் பிரணவ வடிவமாக திருவேரகம் (சுவாமி மலை) என்னும் திருத்தலத்தில் தலைமை பொருந்தி எழுந்தருளியிருக்கின்றார் என்பதைக் கந்தபுராணம் "தாரகத் துருவமாம் தலைமையெய்திய ஏரகத் தறுமுகன்"[16] எனக்கூறும். முருகன் பிரணவ வடிவம் உடையவர் என்பதை வீரவாகுதேவர் சூரபன்மனுக்கு "ஆதியாகிய குலையும்..... குமரவேள் பொருவிலாவுருவம்" எனக் கூறுதலாலறியலாம். "ஓம்" என்ற பிரணவமாகிய குடிலையே முருகனின் திருமுகங்களில் ஒன்றாகும். இதனையே கந்த புராணம்" ஓமெனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன் மாமுகத்துளொன்றாம்"[17] என்றும், "முகத்திலொன்றதா அவ்வெழுத் துடையதோர் முருகன்"[18] என்றும் மொழிதலாலறியலாம். "ஓம்" என்பது அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்றும் சேர்ந்ததாகும். "உயிர்" அகாரம் என்றும், "இறை" உகாரமென்றும் "மலம்" மகாரம் என்றும் திருமந்திரம் கூறுகின்றது. ஓங்காரத்தில் இறையும் சக்தியும், தளையாகிய ஆணவமும், எழில் மாயையும், கன்மமும், ஆன்மாவும் பொருந்தி நிற்கும் என்று உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுவர். இவ் வாறு சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள், ஐந்தெழுத்து மந்திரம் என்பவற்றின் விளக்கமாகவே முருகனின் பிரணவ வடிவம் விளங்குகின்றதெனலாம்.

**சோமாஸ்கந்தர் வடிவம்**

சிவபெருமானுக்கும் உமைக்கும் நடுவே முருகன் காணப்படுவது சோமாஸ்கந்தர் திருக்கோலமாகும். இக்கோலத்தில் முருகன் அமர்ந்த நிலையில் அல்லது நின்றநிலையில் காணப்படுவர். முருகனின் திருவுருவம் உமையின் மடிமீது அமர்ந்திருக்கும் நிலையிலும் சித்திரிக்கலாம் என்பதற்கும் விதியுண்டு. பல்லவர் காலம் தொடக்கம் கந்தபுராண காலம் வரையிலும், அதன் பின்னரும் இத்திருக்கோலத்தைத் தமிழகக் கோயில்களில் சிற்பமாகக் கண்டு மகிழலாம். உமைக்கும் சிவனுக்கும் நடுவில் முருகன் விளங்குவதைப் பகலுக்கும், இரவுக்கும் நடுவில் தோன்றும் மாலைப்பொழுதோடு கச்சியப்ப சிவாச்சாரியர்,

**"ஏல வார் குழல் இறைவிக்கும் எம்பிரான் றனக்கும்**
**பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை**
**ஞால மேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாம்**
**மாலையானதோன்று அழிவின்றி வைகுமாறொக்கும்"[19]**

என்று குறிப்பிடுவர்.

திருப்பரங்குன்றத்தில் முருகனது திருமணத்தைக் காணவந்த சிவனும் உமையும் முருகனைத் தம்

www.tamilarangam.net

மடிமீது வைத்துத் தண்ணளி புரிந்தார் என்ற கந்தபுராணச் செய்தியும்[20] சோமாஸ்கந்த வடிவத்தை நினைவு படுத்துகின்றது. முகுந்தன் என்பவன் சோமஸ்கந்த திருக்கோலத்தை திருவாரூர், திருநாகைக்காரோணம், திருநள்ளாறு முதலிய ஏழு இடங்களில் நிறுவி வழிபட்டதையும் கந்தபுராணம் கூறும்[21] இத்திருக்கோலமானது கணவன் மனைவி மகன் என்ற தமிழரின் வாழ்வியல் கொள்கைக்கு ஓர் உரைகல் எனலாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலுள்ள தியாகராஜர் வடிவம் சோமாஸ்கந்தரின் வடிவமாகவே விளங்குகின்றது. இந்த உண்மை பலருக்குத் தெரியாது.

### மயிலூர்திப்பெருமான் வடிவம்

முருகன் மயில்மீதமர்ந்தருளும் திருக்கோலத்தை மயிலூர்த்திப் பெருமான், மயில்வாகனர், சிகிவாகனர், மயிலூர்திக் கோமான் ஆகிய பெயர்களால் வழங்குவர். இதனைக் கந்த புராணம் "மயிலூர்பரன்"[22] எனக் கூறுகின்றது. இந்திரனும்[23] சூரனும்[24] மயில் உருக்கொண்டு முருகனைச் சுமக்கும் திருக்கோலச் சிறப்பை முதன் முதலாகக் கந்த புராணமே குறிப்பிடுகின்றது. இடியேறு போல கூவியார்ப் பரிக்கும் இணையற்ற இந்திரனாகிய மயில் மீது (இந்திரமயில்) முருகன் விளங்கும் திருக்கோலத்தைக் கந்த புராணம் குறிப்பிடுகின்றது.[25] சூரனாகிய மயில் மீது முருகன் செல்லும் திருக்கோலக்காட்சி "அயலினையுடைய செவ்வேள் மரகதத்தழகு சான்ற மயிலிடை வைகியூர்த்தான்" என வருகின்றது. "முருகக் கடவுளை வாழ்க" என வாழ்த்தும் கந்தபுராணம் அதே பாடலில் முருகனின் வாகனமாகிய மயிலையும், "செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க"[26] என வாழ்த்துவது மயில் வாகனராக விளங்கும் முருகனின் திருக்கோலத் தனிச்சிறப்பை சுட்டி நிற்கின்றது. தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் மயிலூர்த்திப் பெருமானின் திருக்கோலங்களே மிகுதியாகவுள்ளன. முருகன் மயிலின் மீது ஊர்ந்து செல்வது போன்று, எண்கண் முருகன் கோயிலின் மூலவர் விளங்குகின்றார். அங்கு முருகனைச் சுமக்கும் மயில் ஊர்ந்து செல்வதைக் குறிக்கும் விதத்தில் ஒரு காலைத் தூக்கி நடப்பது போன்று விளங்குவது கண்டு மகிழ்தற்குரியது.

### களிற்றூர்திப் பெருமான்வடிவம்

முருகன்யானையை வாகனமாகக் கொண்ட திருக்கோலம் இதுவாகும். இத்திருக்கோலத்தினை கஜவாகனர் எனவும், கஜாரூடர் எனவும் அழைப்பர். முருகன் யானை வாகனத்தின் கண்ணே எழுந்தருளும் திருக்கோலம் கந்தபுராணத்தில், "கரியிற் செலும்"[27] என்றும், "பிணிமுக முயர்த்து நின்ற பெருந்தகை"[28] எனவும் வரும். முருகக் கடவுளின் யானைக்குப் "பிணிமுகம்" என்று பெயர். "கரியிற்

www.tamilarangam.net

செலும்'' என்ற குறிப்பு முருகன் ஆண்யானையிற் செல்வதைக் குறிக்கும். இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்ற யானை முகனுக்கு வாகனமாக விளங்கியதைக் கந்த புராணம் குறிப்பிடுகின்றது. யானை முகமுடைய தாரகாசுரனை முருகன் கொன்றதனையொட்டியும் முருகனுக்கு யானை வாகனம் திருக்கோலம் ஏற்பட்டிருக்கலாம். தஞ்சைப்பெருங்கோயிலின் கேரளாந்தகன் திருவாயிற் கோபுரத்தில் களிற்றூர்திப் பெருமான் திருக்கோலம் அழகுற அமைந்துள்ளது. முருகன் களிற்றூர்திப் பெருமான் என்பதையே சுவாமிமலை (திருவேரகம்) முருகனின் கொடிமரத்திற்கு முன்பாக மூலவரை நோக்கி நிற்கும் நிலையில் உள்ள யானை வடிவம் புலப்படுத்துகின்றது. திருத்தணிகை முருகன் கோயில், திருப்போரூர் முருகன் கோயில் ஆகிய திருத்தலங்களிலும் உள்ள இத்தகைய யானைச் சிற்பங்கள் முருகனின் களிற்றூர்திப் பெருமானின் திருக்கோலத்தை நினைவுபடுத்துகின்றன.

## ஆட்டுவாகனர் வடிவம்

முருகன் ஆட்டு வாகனத்தில் காட்சி தரும் திருக்கோலம் ''அஜாரூடர்''எனக் கூறப்படும். இது முருகனின் வீரத்திருக்கோலமாகும். நாரத முனிவர் செய்த வேள்வியிலிருந்து தோன்றிய ஆட்டுக்கடா அங்குள்ள அனைவரரையும் அழிக்கத் தொடங்கிய போது முருகன் வீரவாகு தேவரை அனுப்பி அந்த ஆட்டுகடாவை பிடித்துவரச் செய்து அதன் மீது அமர்ந்திருக்கும் வரலாற்றை விபரிப்பதாக கந்தபுராணத்தில் ''தகரேறு படலம்'' என்று ஒரு தனிப்படலமே காணப்படுகின்றது. இத்தெய்வீக வரலாற்றையும், முருகன் ஆட்டு வாகனத்தில் செல்வதான திருக்கோலத்தினையும் கச்சியப்பசிவாசாரியர்,

**''நவையில் சீர் முனிவர்தேவர் நயப்பர் நாரதன் என்று உள்ளோன்**
**புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன் முன்னர் வேள்வி**
**அவர் புரிதவத்தின் நீரால் அன்று தொட்டு அமலமூர்த்தி**
**உவகையால் அனைய மேடம் ஊர்ந்தனன் ஊர்தியாக''[29]**

எனக் குறிப்பிடுகின்றார். மேடம், தகர் என்ற சொற்களுக்கு ''ஆடு'' என்பது பொருளாகும். முருகன் ஆட்டுவாகனத்தில் ஒரு முகமும் நான்கு கைகளுடனும் விளங்கும் திருக்கோலத்தை திருப்போரூர்க் கந்தசுவாமி கோயிலில் கண்டு வணங்கலாம். திருச்செந்தூர், சிக்கல் முதலிய திருக்கோயில்களில் முருகன், கந்தஷஷ்டிப் பெருவிழாவில் ஆட்டு வாகனத்தில் பவனி வரும் திருக்கோலத்தைக் காணலாம். ஈழத்தில் உள்ள நல்லூர் கந்தன் ஆலயம் மற்றும் பிரதான முருகன் ஆலயங்களில் நடைபெறும் சூரசம்கார விழாவிலும் முருகன் ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளுவது குறிப்பிடத்தக்கது.

## தாரகாந்தகர் வடிவம்.

முருகன் தாரகாசுரனைக் கொன்ற வரலாற்றைக் கந்தபுராணத்திலுள்ள தாரகன் வதைப்படலம் விளக்கி நிற்கின்றது. முருகன் தனது வேற்

www.tamilarangam.net

படையினை ஏவி சூரனின் தம்பியும் யானை முகத்தவனுமாகிய தாரகா சுரனையும், கிரவுஞ்ச மலையினையும் அழித்து, அம்மலையுள் மயங்கிக் கிடந்த வீரவாகு தேவரையும் மற்றும் ஏனைய படைவீரர்களையும் காப்பாற் றிய அருட்செயலைப் புலப்படுத்தி நிற்பதே முருகனின் தாரகாந்தகர் திருக்கோலமாகும். முருகன் தனது வேலை விடுத்து தாரகாசுரனையும், கிரவுஞ்ச மலையினையும் அழித்த இந்தச் செயல் கந்தபுராணத்தில்,

**"தாரகன் என்பதோர் பேரோனைச் சஞ்சல**
**முறுகிர வுஞ்சத்தை**
**ஓரிறை செல்லுமுன் உடல் கீறி உள்ளுயி ருண்டுபுறத்தேகிப்**
**பாரிடர்தம்மை இலக்கத்தோன் பதின்மர்களாக**
**உரைக்கின்ற**
**வீரரை மீட்டிவண் வருகென்ற வேற் படை தன்னை**
**விடுத்திட்டான்[30]**

என வருகின்றது.

இங்கு வேற்படையை மீண்டும் வருக என்று முருகன் கூறுவது, முருகன் கரத்திலிருக்கும் வேற்படையானது அறிவுடைய ஓர் உயிர்ப்பொருளே என்பதை உணர்த்தி நிற்கின்றது.

### கிரவுஞ்ச பேதனர் வடிவம்

கிரவுஞ்சம் என்றால் "அன்றிற் பறவை" எனப்படும். பேதனர் என்பதற்கு "பிளந்தவர்" என்பது பெரு ளாகும். இவ்வகையில் அன்றிற்பறவை வடிவாகிய மாயமலையைப் பிளந்த முருகனின் திருக்கோலமே கிரவுஞ்ச பேதனர் திருக்கோலம் எனப்படும். கந்த புராணத்தின் தாரகன் வதைப்படலம் இத்திருவடிவம் பன்றியதான தெய் வீகக் கதையினைக் குறிப்பிடுகின் றது.[31] அற நெறி தவறிய கிரஞ்சனென் னும் அசுரன் அகத்திய முனிவரின் சாபத்தால் மலை வடிவாக விளங்கிய தாகவும், அம்மலையே தாரகாசுரனின் இருப்பிடமாகக் காணப்பட்டதாகவும் கந்தபுராணம் கூறும். முருகன் வீரவாகு தேவரை நோக்கி தாரகாசுரனை அழித்து வருமாறு கட்டளையிட தாரகா சுரன் தனது மாயங்களுக்கு இருப்பிட மான கிரவுஞ்ச மலைக்குள் மறைந்து கொண்டார். அம்மலைக்குச் சென்ற வீரவாகு தேவரும் பிறரும் அம்மலைக் குள் மதிமயங்கிப் போயினர். இதனை நாரதர் மூலம் அறிந்த முருகன் தனது வேற்படையினை ஏவி தாரகாசுரனைக் கொன்று கிரவுஞ்சமலையினைப் பிளந்து வீரவாகு தேவரையும் ஏனை யோரையும் விடுவித்த வீரத் திருக் கோலத்தை தமிழில் கந்தபுராணமே விரிவாகக் குறிப்பிடுகின்றது. இத் திருக்கோலத்தின் தொன்மத்தை பழந் தமிழ்இலக்கியமான குறுந் தொகை யின் கடவுள் வாழ்த்து "குன்றின் நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடு வேல்" எனக் கூறுகின்றது.

### வேல்வடிவம்

முருகனின் திருக்கோலங்களுள் வேல்வடிவமே மிகவும் தொன்மையான தாகும். வேல்தான் முருகனின் உண்மை யான உருவமாகும். முருகனின் அருவுரு வத் திருக்கோலமே வேல் எனலாம். வேல் இலைவடிவம் போன்றதென்

www.tamilarangam.net

பதை "இலைகுலாம் அயில்"[32] எனக் கந்தபுராணம் கூறும். முருகனாகிய கந்தனும் வேலும் ஒன்றே என்பதை விளக்கிக் கூறும் முதற்றமிழ் நூல் கந்த புராணமாகும். இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியார்,

**"அந்தமில் ஒளி யின் சீரால் அறுமுகம் படைத்தபண்பால்**
**எந்தை கண்நின்றும் வந்த இயற்கை யாற் சத்தி யாம்பேர்**
**தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்**
**கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை**
**நீத்தோம்"**[33]

என மொழிதலாலறியலாம்.

வேலினை இறைவனாகவும், கடவுளாகவும், தெய்வமாகவும் காட்டும் தனிச்சிறப்பு தமிழ்க் கந்தபுராணத் திற்கேயுண்டு. இதனையே "எண் ணரும் படைகட்கெல்லாம் இறைவ"[34] "வேற்கடவுள்"[35] "கடவுட் செவ் வேல்"[36] "தெய்வச் செவ்வேல்"[37] "உடம்பிடித் தெய்வம்"[38] என்ற கந்த புராணக் குறிப்புக்கள் உணர்த்தி நிற் கின்றன.

முருகனைத் திருவுருவத்தில் அமைத்து வழிபடும் மரபிற்கு முன்னர் ஆலயத்துள் வேல்வைத்து வழிபட்ட னர். இப்பண்டைய வழக்கத்தை "வேற் கோட்டம்" என்று சிலப்பதிகாரச் செய்தி உறுதிப்படுத்துகின்றது. ஈழத்தி லுள்ள யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தன் ஆலயம் உலகிலுள்ள வேற் கோட்டங்களுள் மிகப் பெரியதும் வரலாற்றுச் சிறப்புடைய வேற்கோயி லாகும்.

## சிவனிடமிருந்து வேல் வாங்கும் முருகன் வடிவம்

முருகன் ஒரு போர்த் தெய்வம். இத்திருக்கோலத்தில் அவரது வலது கையில் விளங்கும் "வேல்" முக்கிய மான ஒரு படைக்கலமாகும். இதனை முருகனுக்கு உமை கொடுத்ததாக "கல்லாடம்" என்ற நூல் குறிப்பிடு கின்றது.[39] ஆனால் சிவனிடமிருந்தே முருகன் "தன்னிச்சுடர்வேல்" பெற் றார் என்பதைக் கந்தபுராணம் "எப் டைக்கும் நாயகமாவதொரு தனிச்சுடர் வேல் நல்கியே மதலைக் கைக் கொடுத்தான்"[40] எனக் கூறுகின்றது. இவ்வகையில் சிவனிடமிருந்து வேல் வாங்கும் முருகன் திருக்கோலம் தோன்றுவதற்கு கந்தபுராணம் அடிப் படையாக அமைகின்றது.

## ஆறுமுகங்களுடன் கூடிய வேல் வடிவம்

ஆறுமுகங்களுடன் கூடிய முருகனின் வேல் வடிவத்தினையே கந்தபுராணம் "வேல் ஆறுமுகன்"[41] எனக் குறிப்பிடுகின்றது. காஞ்சிபுரம் குமரகோட்டத்து முருகன் கோயிலில் ஆறுமுகங்களுடன் கூடிய வேல் இன்றும் காணப்படுகின்றது.

## சிவன் வழங்கும் படைக்கலங் களைப் பெறும் முருகன் வடிவம்.

சூரபன்மன் முதலிய அசுரர் களை அழித்து தேவர்கள் படும் துன்பங் களை நீக்குதற் பொருட்டு சிவன் முருகனுக்கு பன்னிரு படைக்கலங்

www.tamilarangam.net

களை வழங்கியதாகக் கந்தபுராணம் கூறுகின்றது. பதினொரு ருத்திரர் களையும் பதினொரு படைக்கலன்க ளாக்கி முருகனின் பதினொரு கரங் களில் சிவன் கொடுத்ததாகவும்[42] மற்றும் வேலாயுதத்தையும் சிவனே முருகன் கையில் கொடுத்ததாகவும்[43] கந்தபுராணம் கூறும். தோமரம், கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரைப்பூ, தண்டு, வில், மழு வேல் என்பன சிவனால் முருகனுக்கு வழங்கப்பட்ட படைக்கலங்களாகும். இது கந்தபுராணத்தில்,

**''பொன்றிதழ் சடிலத் தண்ணல் தன் பெயரும் பொருவிலா உருவமுந் தொன்னாள்**
**நன்று பெற்றுடைய உருத்திரகணத் தோர் நவிலருந் தோமரங் கொடி வாள்**
**வன்றிறற் குலிசம் பகழியங் குசமும் மணிமலர்ப் பங்கயந்தண்டம்**
**வென்றிவின் மழுவுமாகி வீற்றிருந் தார் விறல்மிகும் ஆறுமுகன் கரத்தில்''**[44]

என்றும்,

**''..............................எப்படைக்கும்**
**நாயகமாவதொரு தனிச்சுடர் வேல் நல்கியே மதலைகைக் கொடுத்தான்''**[45]

என்றும் வருவதால் அறியப்படும்.

மேலே கூறப்பட்ட படைக்கலங் களுள் கொடி, மணி, பங்கயம் என்பன அவ்வவ்வடிவுடையனவாகச் செய்யப் பட்ட ஆயுதங்களென்லாம். உருத்திரர் களே முருகனின் ஆயுதங்களாயினர் எனக் கந்தபுராணம் கூறுவதால் முரு கனின் படைக்கலங்கள் அறிவுடைய உயிர்ப் பொருட்களே என்பது தெளிவு. வேலும் அறிவுடைய உயிர்பொருள் என்பதை கந்தபுராணம் குறிப்பிடு கின்றது. மேலும் திருமுருகாற்றுப் படை காட்டும் முருகனின் திருக்கரங் களிலும் மணி, வேல், பங்கயம் ஆகியவை விளங்குவது குறிப்பிடத் தக்கது.

**சூரபன்மனோடு போர்புரியும் முருக வடிவம்.**

முருகன் சூரபன்மனோடு போர் புரியும் பொருட்டு மனவேகக் குதிரை பூண்ட திருத்தேரில் அமர்ந்து கொண்டு மழு, குலிசம், சூலம், சக்திவேல், வாள், பரிசை, சக்கரம், தண்டாயுதம், எழுப் படை, வில், அம்பு, கைவேல் ஆகிய பன்னிரண்டு படைக்கலங்களை தனது பன்னிரண்டு திருக்கைகளிலும் ஏந்திக் கொண்ட திருக்கோலத்தைக் கந்த புராணம் குறிப்பிடுகின்றது. இப்பன் னிரெண்டு போர்க்கலங்களைக் கையில் கொண்டு விளங்கும் முருகனைச் கச்சியப்பசிவாச்சாரியர்,

**''புத்தலர் நீபத் தாரான் புகர்மழுக் குலிசஞ் சூலஞ்**
**சக்திவாள் பலகை நேமி தண்டெழுச் சிலைகோல்கைவேல்**
**கைத்தலங்கொண்டான்''**[46]

என மொழிவர்.

**உருத்திர சருமனாக விளங்கும் முருக வடிவம்**

முருகன் உருத்திரசருமனாக விளங்கும் திருக்கோலத்தில் அவரது திருக்கரங்களில் கணிச்சி, சூலம், ஆழி,

www.tamilarangam.net

தண்டு, எழு என்ற ஐந்து படைக் கலங்கள் காணப்பெறும். இது கந்த புராணத்தில்,

"திருத்தமிழ் மதுரை தன்னிற் சிவன்பொருள்
நிறுக்குமாற்றால்
உருத்திர சருமனாகி உற்றிடு நிமலன் வெம்போர்
உருத்திகொள் கணிச்சி சூலம் ஆழி தண்டெழுவதாகுங்
கரத்தினிற் படைகள் ..........[47]"

என வரும்.

**சயந்தன் கனவிற் கண்ட முருக வடிவம்**

இந்திரன் மகனாகிய சயந்தன் முருகனின் திருக்கோலத்தைக் கனவிற் கண்டு தொழுததைக் கந்தபுராணத்திலுள்ள சயந்தன் கனவுகாண் படலம் குறிப்பிடுகின்றது. சயந்தன் கண்ட கனவில் ஆறுமுகங்களுடனும், பன்னிரெண்டு கரங்களுடனும் விளங்கும் முருகனின் வலது பக்கக் கரங்களில் கொடி, வச்சிராயுதம், அங்குசம், பாணம், வேல், அபயம் என்பனவும் இடது பக்கக்கைகளில் வரதம், தாமரை மலர், மணி, மழு, தண்டாயுதம், வில் என்பனவும் விளங்கின. இதனைக் கச்சியப்பசிவாச்சாரியர்,

"வீறு கேதனம் வச்சிரம் மங்குசம் விசிக
மாறிலாதவே லபயமே வலமிடம் வரத
மேறு பங்கய மணி மழுத் தண்டு வில்லிசைந்த
வாறிரண்டுகை யறுமுகங் கொண்டு வேளடைந்தான்"[48]

**முருகனின் விசுவரூப வடிவம்**

முருகன் தனது திருக்கோலத்தில் அண்டத்திலுள்ள அனைத்தையும் காட்டி நிற்பதே அவரின் விசுவரூபத்திருக்கோலம் எனப்படும். முருகன் இத்திருப்பெரு வடிவத்தை சூரபன் மனுக்கும்[49] இந்திரன் முதலான தேவர் களுக்கும்[50] காட்டியதாகக் கந்த புராணத்தால் அறிய முடிகின்றது. இத்திருக் கோலத்தில் முருகனின் திருமேனியில் எட்டுத் திக்குகள், பதினான்கு உலகங்கள், எட்டு மலைகள், ஏழு கடல்கள் போன்ற எல்லாப் பொருட்களும் விளங்குவதைக் கந்த புராணம் குறிப்பிடுகின்றது.[51] அனைத்துப் பிரபஞ்சப் பொருட்களையும் உள்ளடக்கிய முருகனின் இத்திருக் கோலத்தை "இறுதியு முதலுமில்லா வில் பெருவடிவம்" எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

**விருத்தர் வேட வடிவம்**

முருகன் "மானுட வடிவம்" கொள்பவர் என்பது கந்தபுராணத்தில், "தொல்லை மானுட நல்வடிவம் கொடு நின்றான்"[52] என வருகின்றது. சைவ நெறி வாழும் சந்நியாசி வடிவம் கொண்ட வயோதிபக் கோலத்தில் வேடர் முன் முருகன் காட்சியளித்தா ரென்பது கந்தபுராணத்தில், "குமரேசன் நாடுபுகழ் சைவநெறி நற்றவவிருத்த வேடமது கொண்டுவரும் வேடனெதிர் சென்றான்"[53] என வரும். விருத்தர் என்பதற்கு வயோதிபர் என்பது பொருளாகும்.

**வேட்டுவத் திருக்கோல வடிவம்**

முருகன் வள்ளிநாயகிக்குப் பேரருள் செய்யக் கருதி எடுத்த மானுட வடிவமே வேட்டுவத் திருக்கோல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகும். இத்திருக்கோலம் கந்தபுராணத்தில்,

**காலிற் கட்டிய கழலன் கச்சினன்**
**மாலைத் தோளினன் வரிவில் வாளியன்**
**நீலக் குஞ்சியன் நெடியன் வேட்டுவக்**
**கோலத்தைக் கொடு குமரன் தோன்றினான்''**[54]

என வருகின்றது. சுவாமிமலை முருகன் கோயிலில் வேட்டுவக் கோலத்துடன் விளங்கும் முருகனின் உற்சவ மூர்த்தமும், முருகனின் வேட்டுவ ஓவியக் கோலமும் காணப்படுகின்றன. அங்கு பங்குனி மாதத்தில் நிகழ்த்தப்படும் "வேட ரூபக்காட்சி" என்னும் திருவிழா இத்திருக்கோலத்தினை நன்கு நினைவுபடுத்தி நிற்கின்றது.

### வேங்கை மரவுருவமாகி நிற்கும் முருகவடிவம்

வள்ளிநாயகியின் தந்தையாகிய நம்பியரசன் வருதலைக் கண்டதும், வள்ளிநாயகியின் முன்நின்ற முருகன் ஒரு வேங்கை மரத்தின் வடிவமாய் மாறினார் எனவும், அந்நிலையில் வேதங்கள் வேங்கை மரத்தின் அடியாகிய முதல் ஆகவும், சிவாகமங்கள் அவ்வேங்கை மரத்தின் நடுப்பகுதியாகவும், பலவாகிய கலைகள் அனைத்தும் பக்கங்களிற் பொருந்திய சுவடுகளாகவும் விளங்கின என்பது கந்தபுராணத்தில்,

**''ஆங்கது காலை தன்னி னடிமுதல் மறைகளாக**
**வோங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூலதாகப்**
**பாங்கமர் சுவடு முற்றும் பல்கலையாகத் தானோர்**
**வேங்கையி னுருவமாகி வேற்படை வீரனின்றான்''**[55]

எனவரும்.

இவ்வாறு வேங்கை மரவுருவமாகி நின்ற முருகன் திருக்கோலத்தில் "பலகலை யாகமவேதம் யாவையிலுங் கருத்து பதி பசு பாசம் தெரித்தல்" என்ற சைவசித்தாந்தக் கருத்து பொதிந்துள்ள தெனலாம். வேங்கை மரவுருவமாகி நிற்கும் முருகனின் அதிசயமான சிற்பவடிவத்தை தஞ்சைப்பெருவுடையார் கோயில் வளாகத்துள் அமைந்துள்ள முருகன் கோயிற் பின்புறச் சுவரில் மட்டுமே கண்டு மகிழலாம்.

### வள்ளிநாயகி கண்ட முருகன் திருக்கோலம்

முருகன் வள்ளிநாயகிக்கு பன்னிரண்டு புயங்களும் ஆறு திருமுகங்களும், கூர்மை பொருந்திய வேலாயுதமும், குலிசப்படையும், ஏனைய படைக்கலங்களும், பொன் போலும் மயிலுமாகத் தன் திருக்கோலத்தை காட்டியருளியமை கந்த புராணத்தில்,

**''முந் நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்**
**கொன்னார்வை வேலுங் குலிசமுமே னைப் படையும்**
**பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்**
**மின்னாள் கண்காண வெளிநின் றனன் விறலோன்''**[56]

என வருகின்றது.

### தெய்வயானையைத் திருமணம் செய்யும் முருகவடிவம்

முருகன் தெய்வயானையைத் திருமணம் செய்யக் கொண்ட திருக்கோலத்தின் தெய்வீக வரலாற்றை கந்தபுராணத்திலுள்ள தெய்வயானையம்மை திருமணப் படலம்[57] நன்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளக்குகின்றது. இந்திரன் தனது மகளாகிய தெய்வயானையை முருகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தற் பொருட்டு முருகனின் திருக்கரத்தில் தெய்வயானையின் திருக்கரத்தைத் தூக்கி வைத்து நீரை வார்த்து கன்னிகாதானம் செய்வதையும் அதனை முருகன் ஏற்ற அருள்புரிதலும் கந்தபுராணத்தால் அறியமுடிகின்றது.[58] இத்திருமணத் திருக்கோலக் காட்சியை திருப்பரங் குன்றத்து முருகன் கோயில் முன்மண்டபத்திலுள்ள தூணில் சிற்பமாகக் கண்டு மகிழலாம்.

**வள்ளி தெய்வயானை சமேத முருக வடிவம்**

முருகன், வள்ளி தெய்வயானை என்ற இரு மனைவியர்களுடன் சமேதரராக வீற்றிருக்கும் திருக்கோலத்தினைக் கந்தபுராணம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. வள்ளிதெய்வயானை சமேதரராக முருகன் விளங்குவது கங்கையும் யமுனையும் கடலில் கலத்தல் போன்றதாகவும்,[58] ஞாயிறும் திங்களும் சேர்ந்திருக்கும் போது அவற்றில் தோன்றும் கனலிப்புத்தேள் போன்றதாகவும்[59] சிவபெருமானுடைய முகத்தில் உள்ள முக்கண்கள் போன்ற தென்றும்[60] கந்தபுராணத்தால் அறியமுடிகின்றது. மேலும் முருகனை ஒரு மரமாகவும்; கிரியாசக்தி, ஞானா சக்திகளான வள்ளியையும் தெய்வானையையும் அம்மரத்தின் கிளைகளாகவும் கச்சியப்பசிவாச்சாரியர் குறிப பிடுகின்றார்.[61]

**தெய்வயானை வள்ளி சமேத வேல்வடிவம்**

முருக வடிவங்களுள் "வேற்கோலம்" தனிச்சிறப்புடையது. வேலின் இருமருங்கிலும் தெய்வானையம்மையும் வள்ளியும் விளங்குவது சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவில் அக்கினி விளங்குவது போலத் திகழுமென கச்சியப்ப சிவாச்சாரியர் மொழிவர். இது கந்தபுராணத்தில்,

**"கற்றையங் கதிர் வெண் டிங்கள் இருந்துழிக் கனலிப்புத்தே**
**உற்றிடு தன்மைத் தென்ன உம்பர்கோன் உதவுமாதும்**
**மற்றைவில் வேடர் மாதும் வழிபடல் புரிந்து போற்ற**
**வெற்றியந் தனிவே லண்ணல் வீற்றிருந்தருளினானே"[62]**

என வருகின்றது.

இத்திருக்கோலத்தினைப் புலப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தன் ஆலயக் கருவறைக்குள் உள்ள மூல மூர்த்தியாக விளங்கும் வேலின் இரு மருங்கிலும் தெய்வானையம்மையும் வள்ளியும் காணப்படுகின்றனர்.

**நடன முருக வடிவம்**

முருகன் மணியை அடித்தும், வேங்குழல் ஊதியும், கொம்புவாத்தியம் ஒலித்தும், வீணைகள் இசைத்தும் சிறுவாத்தியங்களை முழங்கியும், கீதம் பாடியும் களிப்புடன் நடனம் புரியும் திருக்கோலம் கந்தபுராணத்தில்,

**"பாடின்படு மணியார்த்திடும் பணை மென்குழல் இசைக்கும்**
**கோடங்கொலி புரிவித்திடும் குரல் வீணைகள் பயிலும்**
**ஈடொன்றிய சிறு பல்லிய மெறியும் மெவ ரெவரும்**
**நாடும்படி பாடுங்களி நடனஞ் செயும் முருகன்[63]**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவரும் முருகனின் நடனத்திருக் கோலத்தை சேயூர் திருக்கோயிலிலும், திருப்போரூர் கோயில் மண்டபத் தூணிலும் காணலாம். சென்னை அருங் காட்சியத்திலும் நடனமுருகன் திருக் கோலத்தைக் காண முடியும்.

**மாவடிக் கந்தர் வடிவம்.**

ஆறுமுகங்களும் பன்னிரு புயங்களும் கொண்டு விளங்கும் காஞ்சியிலுள்ள மாவடிக்கந்தனின் திருக்கோலம் கந்தபுராணத்தில்,

''மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்கநின்ற விராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி''[64]

என வருகின்றது.

இன்றும் காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயிலிலுள்ள மாமரத்திற்கு இடதுபுறம் காணப்படும் மாவடிக் கந்தர் எனப்படும் சிறு கோயிலுக்குள் மேற்படி பாடல் புலப்படுத்தும் திருக்கோலத் துடன் விளங்கும் மாவடிக்கந்தன் திருக் கோலத்தைக் கண்டு வணங்கலாம்.

**சிவனை வணங்கும் முருக வடிவம்**

சிவனை முருகன் வணங்கு வதற்கான செய்தி கந்தபுராணத்தில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளன. தாணு எனப்படும் சிவலிங்கத்தை தாபித்து பலவகையான உபசாரங் களுடன் முருகன் சிவனை வணங்கியது பற்றியும், சிவாகம விதிப்படி எக்காலத் தும் நிலைத்திருக்கும்படி உருவாக்கப் பட்ட சிவவடிவத்திற்குப் பல்வேறு உபசாரங்களை அளித்து முருகன் வழி படுதல் குறித்தும், முருகன் தெய்வ யானை என்போரது திருமணத்தைக் காணவந்த சிவனதும் உமையினதும் திருவடிகளை முருகனும் தெய்வயானை யும் தொழுதல் குறித்தும் கந்தபுராணத் தால் அறிய முடிகின்றது.[65] சிவனை முருகன் வணங்குவதற்கான சிற்பங் களின் உருவாக்கத்திற்கு மேற்படி கந்த புராணக் குறிப்புக்கள் அடிப்படை யெனலாம். தமிழகத்திலுள்ள பிரதான முருகன் கோயில்களில் சிவலிங்க வடி வமும் அமைந்து விளங்குவதற்கு கந்த புராணத்தின் தாக்கமும் காரண மெனலாம்.

**முருகனின் பிற திருவடிவங்கள்**

முருகனின் திருக்கோலத் தினை கும்பம், அக்கினி, திருவுருவம் என்ற மூன்று நிலைகளில் குமார தந்திர நெறிப்படி ஸ்தாபித்து வழி படும் செய்தி கந்தபுராணத்தில் ''குடங் கர் முதல் மூவகையிடத்தும்''[66] என வருகின்றது. முருகன் மயில், யானை, ஆடு ஆகிய வாகனங்களில் மட்டுமன்றி எருது, குதிரை, தேர், சிங்கம், விமானம், மேகம் முதலிய பல்வேறு வாகனங்களிலும் எழுந்தருளும் வடி வழகு கந்தபுராணத்தால் அறியப்படும் அரிய செய்தியாகும். முருகன் பல்வேறு வாகனங்களில் எழுந் தருளியிருக்கும் திருக்கோல எழிலை தஞ்சைப் பெரு வுடையார் ஆலயத் திருச்சுற்றி லிருக்கும் முருகன் கோயிலில் காண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிகின்றது. மேலும் முருகன் இளை யோனகாவும், காளைப் பிராயமுடைய வராகவும், அந்தணரைப்போலவும், முனிவரைப் போலவும், வீரரைப் போலவும், திருக்கோலங்கள் கொள் வதையும்; மற்றும் ஒருமுகமுடையவ ராகவும், ஆறு முகங்கள் கொண்டவரா கவும், விளங்கும் வனப்பும் கந்தபுரா ணத்தில்[67] காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

**முடிவுரை**

இவ்வாறாக முருகக் கடவுள் உவமையில்லா அழகுத் திருக்கோல முடையவராகவும், குழந்தைக் கோல முடையவராகவும், குமரனாகவும், வயோதிபராகவும், வேட்டுவ உருவ முடையவராகவும், வேங்கை மர வடிவினராகவும், விஸ்வரூபமுடைய வராகவும், போர் வீரராகவும், மயில், ஆடு, யானை, சிங்கம், தேர் முதலிய வாகனங்களில் அமர்ந்திருப்பவராக வும், சிவனுக்கும் உமைக்கும் நடுவே விளங்கும் திருக்கோலத்தவராகவும் ஒருமுகமுடையவராகவும், ஆறுமுகங் கள் கொண்டவராகவும், வேல் வடிவின ராகவும், எனப் பல்வேறு வடிவங்களில் விளங்குவதை தெய்வீக வரலாற்றுக் கதைகளினூடாக சிறப்பாகச் சித்திரிக் கும் தொன்மையான சைவத்தமிழ் இலக்கியம் என்ற சிறப்பு கந்தபுராணத் திற்கே உண்டு எனலாம். இவ்விலக்கி யத் தாக்கத்தினால் தோன்றிய முருகனின் வடிவங்களைச் சிற்பங் களாகவும் ஓவியங்களாகவும் தமிழகத்தி லுள்ள முருகன் கோயில்களில் மட்டு மன்றி அங்குள்ள பிரதான சிவாலயங் களிலும் கண்டு வணங்க முடிகின்றது. கந்தபுராண கலாசாரம் மிகவும் சிறப் புற்று விளங்கும் ஈழத்தில் முருக வணக்கமும், முருக வடிவங்களும் சிறப் புற்று விளங்குவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## அடிக்குறிப்புகள்

01) கந்தபுராணம், யுத்தகாண்டம், சூரபன்மன்வதைப்படலம், பா.எ.439.
02) மேலது, பா.எ.437.
03) மேலது, பா.எ.433.
04) மேலது, உற்பத்தி காண்டம், திருவவதாரப்படலம், பா.எ.120.
05) மேலது, பா.எ.121.
06) மேலது, பா.எ.119.
07) மேலது, பா.எ.116.
08) மேலது, திருவிளையாட்டுப்படலம், பா.எ.17.
09) மேலது, பா.எ.18,19.
10) மேலது, பா.எ.4.
11) உத்தரகாமிக ஆகமம், படலம், 64.

www.tamilarangam.net

12) மேலது.,
13) கந்தபுராணம், உற்பத்தி காண்டம், அயனைச்சிறைபுரிபடலம், பா.எ.13 - 14
14) மேலது, பா.எ.17.
15) மேலது, திருநகரப்படலம், பா.எ.109.
16) மேலது, கடவுள்வாழ்த்து, பா.எ.15.
17) மேலது, மகேந்திரகாண்டம், அவைபுகுபடலம், பா.எ.134.
18) மேலது, உற்பத்தி காண்டம், அயனைச்சிறை புரிபடலம், பா.எ.10.
19) மேலது, சரவணப்படலம் பா.எ.26.
20) மேலது, தேவகாண்டம், தெய்வயானைஅம்மை திருமணப்படலம், பா.எ.223.
21) மேலது, தக்ஷகாண்டம், கந்தவிரதப்படலம், பா.எ.27 - 119.
22) கந்தபுராணம், அவையடக்கம், பா.எ.13.
23) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன்வதைப்படலம், பா.எ.463.
24) மேலது, பா.எ.502.
25) மேலது, பா.எ.378 - 382.
26) மேலது, தக்ஷகாண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ.261.
27) மேலது, உற்பத்திகாண்டம், திருவிளையாட்டுப்படலம், பா.எ.11.
28) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன்வதைப்படலம், பா.எ.453.
29) மேலது, உற்பத்தி காண்டம், தகரேறுபடலம், பா.எ.25.
30) மேலது, தாரகன்வதைப்படலம், பா.எ.180.
31) மேலது, பா.எ.1 - 203.
32) மேலது, பா.எ.169.
33) மேலது, யுத்தகாண்டம், மூன்றாம்நாட் பானுகோபன்யுத்தப்படலம், பா.எ.212.
34) மேலது, பா.எ.213.
35) மேலது, தக்ஷகாண்டம், கந்தவிரதப்படலம், பா.எ.126.
36) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம், பா.எ.483.
37) மேலது, பா.எ.482.
38) மேலது, பா.எ.487.
39) தல்லாடம், முருகக்கடவுள் வாழ்த்து, 12 - 15.
40) கந்தபுராணம்: உற்பத்தி காண்டம், விடைபெறுபடலம், பா.எ.38.
41) மேலது, யுத்தகாண்டம், சிங்கமுகாசுரன் வதைப்படலம், பா.எ.395.
42) மேலது, உற்பத்தி காண்டம், விடைபெறுபடலம், பா.எ.37.
43) மேலது, பா.எ.38.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

44) மேலது, பா.எ.37.
45) மேலது, பா.எ.38.
46) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன்வதைப்படலம், பா.எ.46.
47) மேலது, பா.எ.261.
48) மேலது, மகேந்திரகாண்டம், சயந்தன்கனவு காண்படலம், பா.எ.4.
49) மேலது, யுத்தகாண்டம், சூரபன்மன்வதைப்படலம், பா.எ.422-427.
50) மேலது, உற்பத்தி காண்டம், திருவிளையாட்டுப்படலம், பா.எ.89.
51) மேலது, பா.எ.88.
52) மேலது, தக்ஷகாண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ.82.
53) மேலது, பா.எ.94.
54) மேலது, பா.எ.66.
55) மேலது, தக்கன் சிவபூசை செய்படலம், பா.எ.75.
56) மேலது, வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ.116.
57) மேலது, தேவகாண்டம், தெய்வயானையம்மை திருமணப்படலம், பா.எ.1-268.
58) மேலது, தக்ஷகாண்டம், வள்ளியம்மை திருமணப்படலம், பா.எ.256.
59) மேலது, பா.எ.257.
60) மேலது, பா.எ.259.
61) மேலது, பா.எ.258.
62) மேலது, பா.எ.257.
63) மேலது, உற்பத்தி காண்டம், திருவிளையாட்டுப்படலம், பா.எ.12.
64) கந்தபுராணம், பாயிரம், பா.எ.3.
65) மேலது, உற்பத்திகாண்டம், குமாரபுரிப்படலம், பா.எ.67-71.
66) மேலது, யுத்தகாண்டம், மீட்சிப்படலம், பா.எ.24.
67) மேலது, உற்பத்தி காண்டம், திருவிளையாட்டுப்படலம், பா.எ.10.

## துணை நூல்கள்

01) சுவாமிநாதசிவாசாரியர்,சி., (1977), காமிகாகமம், கிரியாபாதப்பூர்வபாகம், தமிழ் சந்திரிகையுடன் முதற்பகுதி,தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

02) சோமசுந்தரனார்,பொ.வே.,(உ.ஆ), (1963), கல்லாடம், சைவசித்தாந்தக் கழக வெளியீடு, சென்னை .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

03) பட்டுச்சாமிஓதுவார்,தி;(ப.ஆ.), (1953), கந்தபுராணம் முதல் மூன்று காண்டங்கள் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

04) பட்டுச்சாமிஓதுவார்,தி;(ப.ஆ.), (1953), கந்தபுராணம் (யுத்த தேவ காண்டங்கள்) திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

05) பட்டுச்சாமிஓதுவார்.தி;(ப.ஆ.), (1953), கந்தபுராணம் (தக்ஷகாண்டம்), திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

06) Venkataraman, K.R;(1956); "The skanda cult in south India " The cultural Heritage of India, Vol.iv, Sri Ramakrishan Mission Institute of Culture, Calcutta.

07) Zvelebil Kamil, V., (1981), Tiru Murugan, International Institute of Tamil Studies, Adaiyaru, Madras.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டானியலின் படைப்புக்களில் நடைநயம்

கலாநிதி ம. இரகுநாதன்.

## ஆய்வுச்சுருக்கம்

*டானியலின் நாவல்களில் யாழ்ப்பாணத்துப் பிரதேசக்கிளைமொழிகளும் சாதிக்கிளை மொழிகளும் இணைந்து நின்று அவரின் தனித்த நடைப் பாணியை உருவாக்குகின்ற தன்மையும், அதனூடாகச் சமூக மெய்ம்மை புலப்படுத்தப்படும் விதமும் இந்த ஆய்வினூடாக எடுத்துக்காட்டப்படுகின்றது.*

ஈழத்து இலக்கிய வானிலே அறுபதுகளின் முற்பகுதியில் சிறுகதை ஆசிரியராக அடியெடுத்து வைத்த டானியல் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் இலக்கியக் குரலாகத் தன்னை வெளிக் காட்டிக் கொண்டார். "மக்களிடம் படிப்பது அவர்களிடம் படித்ததைப் புடமிட்டு அவர்களுக்கே திருப்பிக் கொடுப்பது" என்ற வார்த்தைகளோடு 1972இல் தனது முதல் நாவலான பஞ்சமரை வெளியிட்ட டானியல் எட்டு நாவல்களையும் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார் எனத் தெரிகின்றது.

இந்த ஆய்விலே டானியலின் படைப்புக்களில் காணப்படும் நடையியல் கூறுகள் பற்றிய தேடல் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தேடுதல் டானியலின் அனைத்துப் படைப்புக்களையும் உள்ளடக்கியதாக அமையாமல் அடிமைகள், தண்ணீர், பஞ்சமர், கானல், போராளிகள் காத்திருக்கின்றனர், டானியலின் குறுநாவல்கள் ஆகிய படைப்புக்களை வகைமாதிரியாகக் கொண்டு ஆரம்ப நிலைத் தேடலாகவே மேற்கொள்ளப் படுகின்றது.

இத்தேடலை மேற்கொள்வதற்கு முன்னர் இலக்கிய ஆய்வாளர்கள் நடைபற்றிக் கூறும் கருத்துக்களை நோக்குவது அவசியமாகும். இந்த வகையில் இலக்கிய ஆய்வுகளிலே நல்ல நடை, மோசமான நடை, தாவித்தாவிச் செல்லும் நடை என்றெல்லாம் பலரும் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இவ்வாறு கூறுபவர்கள் தமது கருத்திற்கு ஆதாரமாக எதையும் கூறியதாகத் தெரியவில்லை. இந்த நிலை நமக்கு மட்டும் உரியதல்ல மேலைநாடுகளிலும் நிலைமை இதுவே எனக்கூறும் எம். ஏ.நுஃமான் ஒருபடைப்பாளியின் நடை பற்றி ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்கள் கூறப்படுவதையும் சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.[1] கல்கியின் நடை பற்றிக் கூறும் அகிலன்,

www.tamilarangam.net

''இவருடைய தனி நடையில் வாழ்க்கையைச் சுவைத்து அனுபவிக்கும் ஒரு ருசி உண்டு: தென்றலின் மெல்லிய சுகம் உண்டு: மாலை நேர வானத்தின் வர்ண ஜாலங்கள் உண்டு. இவர் நம்மை அறியாமலே நம்முடைய தோள்மேலே கைபோட்டுத் தம்மிடம் இழுத்துக் கொண்டு நம்மிடம் சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லி விடுவார்.''[2]

எனக் கூறிச் செல்கின்றார். ஆனால் கைலாசபதி,

''கல்கி என்றுமே நடைச் சிறப்பிற்குப் பாராட்டப்பட்டவர் அல்லர். சுருக்கமாகக் கூறுவதாயின் தற்புதுமையும் சிருஷ்டித் திறனுமற்ற ஓர் உரை நடையைக் கருவியாகக் கொண்டு மாமூலான அடிக் கருத்துக்களைக் கதைப்புணர்ப்பிலே பயன்படுத்தி பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் சராசரித் தமிழில் மரியாதையான இல்லங்களில் குடும்பத்தோடு படிக்கத்தக்க கதைகளை எழுதினார்.''[3]

எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறே க, நா. சுப்ரமண்யம்,

''புதுமைப் பித்தன் எழுதிய சிறப்பான கலாசிருஷ்டித் தன்மை வாய்ந்த நடையை இது நடைதானா? என்று கேலி செய்தவர்களும் உண்டு.''[4]

என்கின்றார். இங்கு கல்கியின் நடை பற்றிக் கூறிய அகிலனோ, கைலாசபதியோ புதுமைப் பித்தனின் நடை பற்றிக் கூறிய சுப்ரமண்யமோ மற்றவர்களோ எவருமே தமது கருத்திற்கு ஆதாரமாக எதையும் காட்டவில்லை. இத்தகைய நிலையிலேதான் ''எழுத்து நடை என்பது உணர்ச்சியால் மட்டுமே உணரத்தக்கது''[5] என்ற கருத்தும் எழுந்திருக்கலாம் போலத் தெரிகின்றது.

''ஆக்க இலக்கியமும் மொழியியலும்'' என்னும் விடயம் பற்றி ஆய்வு செய்த எம். ஏ. நுஃமான்,

''ஒரு குறிப்பிட்ட மொழிப் பிரயோகத்துக்கும் பிறிதொரு மொழிப் பிரயோகத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடுதான் நடை எனலாம். வேறுபாடுகள் இல்லாவிட்டால் நடை என்பதொன்று இருக்கமுடியாது. இவ்வேறுபாடுகள் பற்றிய ஆய்வே நடையியல் எனப்படும்.''[6] என்கிறார். மேலும்

''நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப் பாங்கே அது''.[7]

என்ற அண்மைக்கால மொழியியல் ஆய்வாளரான முர்ரே என்பவரின் கருத்தினையும் நுஃமான் எடுத்துக் காட்டியுள்ளார். எமது வசதிக்காக நடைபற்றிய இந்த விளக்கத்தினை

www.tamilarangam.net

அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளலாம்.

படைப்பாளியின் பெயர் குறிக்கப் படாத ஒரு படைப்பினைக் கொடுத்து விட்டு இது யாருடைய படைப்பு எனக் கேட்டால் தமிழ் நாவல்களில் பரிச்சயமுள்ள ஒரு வாசகனால் இது டானியலுடையது எனக் கூறமுடியு மானால் அந்த வாசகனுக்கு டானி யலை இனங்காட்டிய கூறுகள் எவை? என்பதைத் தேடுவதே டானியலின் தனித்தன்மையினைக் காணும் நிலைக்கு எம்மை இட்டுச் செல்லும். அதுவே அவரது நடையினை அறிந்து கொள்ளவும் உதவும். அத்தகைய தொரு ஆரம்பநிலைத் தேடலே இங்கு மேற் கொள்ளப் படுகின்றது. இத்தேடுதலின் மூலமாகக் காட்டப்படும் தரவுகள் டானியலின் நடை என்று கூறுவதற்கு அவை ஏனைய படைப்பாளிகளின் நடை யியற் கூறுகளோடு ஒப்பிடப்பட வேண்டும். அத்தகைய விரிந்த ஆய்வு இங்கு மேற்கொள்ளப்படாததால் இவை டானியலின் நடையியற் கூறு களாகவே கொள்ளப்பட முடியும்.

**உறவுப் பெயர்கள்**

டானியலின் நாவல்களில் இடம் பெறுகின்ற உறவுப்பெயர்கள் ஆன வன், ஆனவள் ஆகிய உருபுகளோடு புணர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக தாயானவள்[8], கிழவியானவள்[9], மனைவி யானவள்[10], பெண்ணானவள்[11], அன்னை யானவள்[12], பேரனானவன்[13], தந்தை யானவன்[14], கணவனானவன்[15], ஆகியவற் றைக் காட்டலாம்.

**அருகிப்போன சொற்கள்**

சாதாரண மக்களின் பேச்சு வழக் கிலே பயின்று வந்து இப்பொழுது அருகிப்போன சில சொற்களை டானி யலின் நாவல்களில் காண முடிகின்றது. இச் சொற்கள் கதை நிகழும் காலத்து மொழி நிலையையும் களப்பின்னணி யையும் உணர்த்துவதற்கு உதவு கின்றன. சான்றாக. சங்கடப்படலை[16], சோற்றுக் கல்யாணம்[17], குல்லம்[18], குறிச்சி (நித்திரை)[19]

**மரபுத் தன்மையான சொற்றொடர்கள்**

பேச்சு வழக்கிலே மரபுத்தன்மை யுடன் பயின்று வருகின்ற சில சொற் றொடர்களை டானியல் கையாள் கின்றார். இவை அவரின் மொழிக்கு உயிரூட்டுவதுடன் பாத்திரங்களைப் பிரதேசப் பண்புடன் நிலை நிறுத்தவும் உதவுகின்றன. சான்றாக.

"அன்னப்பிள்ளை நாச்சியாரின் கலியாணத்திற்கு உறவினர்களில் பெரும்பாலானவர்கள் வரவில்லை. வாய்நனைக்காத இடத்துச் சம்மந் தத்தை அவர்கள் பகிஷ்கரித்து விட்ட னர்." [20]

"இருளி நாச்சியார் என்னிலை வலு வாரப்பாடெணை"[21]

www.tamilarangam.net

" உனக்கும் இருளி நாச்சியாருக்கும் தொடசல் இருந்திருக்கு மாப்போல நினைக்கிறன்." [22]

"தன்ரை தங்கச்சியின்ரை சீத்துவக் கேட்டை உடையார் நயினா ரெட்டை அவ சொல்லுவாவோ" [23].

"கொப்பரும் செத்துப் பத்துநாள் ஆகையில்லை அதுக்கிடையிலை ஊர் மேச்சலுக்கே போனனீ" [24]

மேற்படி பகுதிகளில் வந்துள்ள வாய் நனைக்காத, வாரப்பாடு, தொடசல், சீத்துவக்கேடு, ஊர்மேச்சல் ஆகிய சொற்றொடர்கள் குறிப்பால் பொருளை உணர்த்துகின்றன. பிரதேச பேச்சு மொழியில் பரிச்சயமுள்ளவர்களுக்கு இவை உணர்த்தும் பொருள் ஆழமானது. இச்சொற்றொடர்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானவையாக அமைந்துவிடுகின்றன.

**பத்தியமைப்பு :**

சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களையாக்குவதிலும் அவற்றைப் பத்திகளாக்குவதிலும் டானியலின் மொழியில் சில பொதுமை விலகல்களை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் அண்மைக் காலங்களில் செல்வாக்குப் பெற்று விளங்கும் புதுக் கவிதையின் அமைப்பினை ஒத்ததாக சிறிய சிறிய சொற்றொடர்களை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கிச் செல்லும் முறையை இவரிடம் காண முடிகின்றது. எடுத்துக்காட்டாக. "அடிமைகள்" என்னும் நாவலில் கயிலாயரால் தாக்கப்பட்ட கறுத்தான் ஆத்திரங் கொண்டு தீட்டப்பட்ட கொடுவாக் கத்தியுடன் கயிலாயரின் மீது பாய்ந்த விதம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

"ஒரு விசுக்கு!
ஒரு கொத்து!
ஒரு இழுவை!
சணத்தில் எல்லாம் நடந்து விட்டது." [25].

இவ்வாறே வேலுப்பிள்ளையரின் சொத்துக்களுக்கு அதிபதியாக வந்த மருமகன் சூரியரின் புதிய வாழ்வு பின்வருமாறு சித்திரிக்கப்படுகின்றது.

" புதிய புதிய நண்பர்கள்
புதிய புதிய வாழ்வு முறைகள்
புதிய புதிய கேளிக்கைகள்
புதிய புதிய சுகபோகங்கள்" [26]

இங்கு ஒரே சொற்களையே திரும்பத் திரும்பக் கையாள்வதாலும் முடிக்கும் சொற்களுடன் ஒரே விகுதியையே திரும்பத் திரும்பக் கையாள்வதாலும் வாக்கியங்களில் தனித்துவமான தன்மை காணப்படுகின்றது.

இவ்வாறே அம்பாளின் திருப்பூசையன்று பல்லக்கு முதலியரின் குடிமைக்காரனான கந்தன் தாக்கப்பட்டதும். ஸ்தலத்துக்கு ஓடிவந்த பல்லக்கு முதலியரின் கண்டிப்புக் குரலால் மழை ஓய்ந்தது போல ஓய்ந்த தாக்குதலை

www.tamilarangam.net

பின்வருமாறு காட்டுகின்றார்.

"அடி ஓசைகள் இல்லை!
சல சலப்புக்கள் இல்லை!
ஆரவாரங்கள் இல்லை!
எதுவுமே இல்லை![27]

இங்கும் ஒரே சொல்லே முடிக்கும் சொல்லாக அமைந்துள்ளது. இவ்வாறாக ஒரே சொற்களையும் ஒத்த ஓசையுள்ள சொற்றொடர்களையும் பயன்படுத்துவதால் இவரின் பத்தியமைப்புக்களில் உணர்ச்சியைத் தொடக்கூடிய தன்மை காணப்படுகின்றது. ஆனால் சில இடங்களில் உணர்ச்சியைத் தொடும் தன்மை குறைந்து வெறும் வார்த்தை அடுக்குகளாகவே காணப்படுகின்ற பகுதிகளும் உள்ளன. சான்றாக "தண்ணீர்" என்னும் நாவலில் சின்னியின் கல்யாணச் சாப்பாடு பற்றிக் கூறும்போது.

"அரிசிச் சோறு,
பயித்தம் பருப்பு வறட்டல்,
கத்திரிக்காய்க் குழம்பு
கிழங்குச் சழிச்சல்,
வாழைக்காய்ப் பொரியல்
பயத்தங்காய் வதக்கல்,
பனங்கீரைப் பிரட்டல்,
தக்காளிக்குழம்பு."[28]

இங்கு ஓசை நயம் குறைந்த சொற்களைக் கையாண்டதால் உணர்ச்சியைப் புலப்படுத்தும் தன்மை குறைந்து வெறும் வார்த்தை அடுக்குகளாகி விடுகின்ற தன்மையைக் காணமுடிகின்றது. இதற்கு மேலும் சில சான்றுகளைக் காட்டலாம். "அடிமைகள்" என்னும் நாவலில் கால ஓட்டத்தோடு ஓடாத கந்தனின் வாழ்க்கையினைக் கூறும் போது,

" நயினார்மார் வீட்டுத் தொட்டாட்டு வேலை!
பரவைக்குளத்துக் குளிப்பு!
வேலுப்பிள்ளையர் வீட்டுத் தட்டுவச் சோறு!
சிரட்டைத் தண்ணீர்
இத்தினியால் விட்டுச் செல்லப்பட்ட கொட்டில்படுக்கை
புழுதி புரண்ட வாழ்க்கை".[29]

இவ்வாறே தண்ணீர் என்னும் நாவலில் சிங்கியின் திவச நாளுக்கு முன்னர் தண்ணீர் காண வேண்டும் என்று துடித்து நின்ற தொழிலாளர்களின் முயற்சியினைக் கூறும்போது.

"குழிக்கிடங்கு நான்கு முழத்துக்குப் போய்விட்டது
அதிலும் சிறு படிக்கட்டு வெட்டப்பட்டது
ஐந்து நாள் தீர்ந்தது.
இன்னும் இருப்பதுவோ ஐந்தே நாள் தான்.
அடுத்த வெள்ளிக்கிழமை சிங்கி ஆச்சியின் திவச நாள்
தண்ணீராவது கசிவாவது....."[30]

இங்கு வார்த்தைகள் வெறுமனே அடுக்கப்படுகின்றனவேயன்றி. அவை உணர்ச்சியை வெளிப்படுத்தக்கூடியனவாக அமையவில்லை. அத்தகைய பகுதிகள் ஆசிரியரின் மனக் குழப்பத்தையே எடுத்துக் காட்டுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிதானமாக இருந்து தெளிவாக உணர்ச்சியைப் புலப்படுத்தக்கூடிய . முறையில் எழுத முடியாத நிலையில் கூறவந்த விடயத்தையாவது எழுதி முடிக்கவேண்டிய நிலையில் ஏற்கென வே பயன்படுத்திய பத்தியமைப்பையும் கைவிடத்துணியாது குழம்பியிருக்கின்ற நிலையினையே இவை காட்டுகின்றன.

**வருணனைப் பகுதிகள்:**

பாத்திரங்களை வருணிக்கும்போது அவற்றின் இயல்புகளை ஒவ்வொன் றாக அடுக்கிக் கூறும் முறை பின்பற்றப் படுகின்றது. இதனால் கட்புலரீதியா கவும் தோற்றப் பொலிவு மனக்கண்முன் கொண்டுவரப்படுகின்றது. எடுத்துக் காட்டாக கானல் நாவலில் சிங்கியின் தோற்றப் பொலிவு பின்வருமாறு காட்டப்படுகின்றது.

''அப்பழுக்கற்ற அந்தக் கறுப்பு நிறம்!
அழகான அள்ளு கொண்டை!
இறுக்கமான குறுக்குக் கட்டு!
கிண்கிணி நாதக்குரல்!
எல்லாமே இனிப்பானதுதான்![31]

வெள்ளைச்சியம்மாளின் தோற்றம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

''செவ்வந்திப் பூவின் நடுவில் இருக்கும்
மஞ்சள் நிறத்தின் மினுமினுப்பு!
புழுதி நிறமான பெருத்த அள்ளி முடியப்பட்ட கூந்தல்!
கபில நிறமான கண்கள்!
வளவளப்பான மகரந்தச் சொண்டு!
எடுப்பான நெஞ்சுக் கும்பிகள்!
சுருக்கம் விழுந்த கழுத்து!
மார்பை இறுக்கி முடியப்பட்ட சட்டை:
அரைமட்டத்திற்குக்
கீழாக வயிற்றுநெறி தெரியக் கூடிய தாக
வரிந்து கட்டப்பட்ட பாவாடை.''[32]

இங்கு நிறத்தின் மினுமினுப்பில் இருந்து கழுத்துவரை அடுக்கிக் கூறியவர் பின்னர் குழம்பிவிடுகின் றார்.

''தண்ணீர்'' என்னும் நாவலில் மாந்திரிகன் சின்னப்பிள்ளையனின் தோற்றப்பொலிவு பின்வருமாறு காட்டப்படுகின்றது.

''நீண்டு நெடுத்த அவனின் தோற்றம்,
மாம்பழ நிறம்
முன்குஞ்ச வெட்டு
பின் குடுமி,
நீண்டு வளர்ந்த புருவ மயிர் வளர்த்தி
கழுத்துச் சால்வை,
கால்முட்டிய சாயவேட்டி,
கழுத்து மிளகு மாலை,
சுருக்கு விழுந்த திரேகம்'' [33]

**நிகழ்ச்சி வருணனை**

நிகழ்ச்சிகளை வருணிக்கும் போதும் வார்த்தைகளை அடுக்கடுக்காகக் கூறி நிகழ்ச்சியினை மனதிற் பதியவைப் பதிலும் உணர்ச்சிபூர்வமாக அவற்றைக் காணச் செய்வதிலும் ஆசிரியர் வெற்றிபெற்றிருக்கின்றார். எடுத்துக் காட்டாக ''அடிமைகள்'' என்னும்

www.tamilarangam.net

நாவலில் பொன்னனின் மீது ஊத்தை சூடி வயிரவன் உருக்கொாண்ட காட்சி பின்வருமாறு சித்திரிக்கப்படுகின்றது.

"பொன்னனின் தலை அசைந்தது!
பொன்னனின் கொண்டை குலைந்தது!
பொன்னனின் மேனி வியர்த்தது!
பொன்னன் ஆடத் தொடங்கி விட்டான்!
அவன்மேல் ஊத்தைகுடி வயிரவன் வந்துவிட்டான்" [34]

இங்கு ஒரே சொற்களும் ஒரே விகுதிகளும் திரும்பத் திரும்ப வந்து உணர்ச்சியை எற்படுத்துகின்றன.

போராளிகள் காத்திருக்கின்றனர் என்ற நாவலில் விருந்து வைபவம் ஒன்றில் நடந்த கலவரமொன்றின் வருணனை பின்வருமாறு சித்திரிக்கப் படுகின்றது.

"சற்றுவேளைக்குள் ஏகக் கலவரம்!
விருந்து வைபவம் தறிகெட்டுப் போயிற்று!!
குருவானவர் அறைவீட்டை நோக்கி விரைந்தார்!
சந்தியாவை ஒருவன் அடித்தான்!
சந்தியாக் கிழவனை அடித்தவனை வேறொருவன் உதைத்தான்!
கூட்டங் கூட்டமாக அடிபாடுகள் நடந்தன!
பெட்டிகள் கோப்பைகள் பறந்தன.
சோறு கறிகள் சிதைந்தன.
கிடாரங்கள் புரண்டு மோதின.
குழந்தை குட்டிகள், பெண்கள் ஆகியோரின் குரல்கள் குமைந் தெழுந்தன.
சில நிமிட வேளைக்குள் நான் கைந்து பேர்கள் நினைவிழந்து கிடந்தனர்." [35].

இங்கு விரைந்தார் என மூன்றாவது வாக்கியம் முடிந்தபோது உருவான உணர்ச்சியும் எதிர்பார்ப்பும் அடித் தான், உதைத்தான் எனத் தொடரும் வாக்கியங்களால் விறுவிறுப்பையும் உச்சக் கட்டத்தையும் அடைந்து பறந்தன. சிதைந்தன, மோதின என முடியும்போது உணர்ச்சி படிப்படியாகக் கீழிறங்கி வருணனை முடிகின்றது.

"பஞ்சமர்" என்னும் நாவலில் இரத்தி னத்தை எதிரிகள் கூட்டம் தாக்கிய சம்பவம் பின்வருமாறு வருணிக் கப்படுகின்றது.

"உயர்த்திப் பிடித்துச் சுற்றிய சயிக் கிளுடன் இரத்தினம் முன்னேறினான்.
எதிரிகள் பின்வாங்கினர்
மறுபடியும் சுற்றி வளைத்தனர்.
சுமார் பத்து நிமிடங்கள்!
போர்க்களத்தில் தன்னந் தனியாக
தன்னேரில்லா வீரனாக
இரத்தினம் சமர் புரிந்தான்.
அதன்பின்.......?
அதன்பின் ..............?" [36]

முன்னேறினான் என ஆரம்பித்த காட்சி பின்வாங்கினர். சுற்றி வளைத் தனர் என உச்சக்கட்டத்தை அடைந்து

www.tamilarangam.net

மீண்டும் அந்த விறுவிறுப்புக் குறை யாது 'சுமார் பத்து நிமிடங்கள்' எனும் போது எதிர் பார்ப்பை உருவாக்கி உணர்ச்சி படிப்படியாகக் குறைந்து முடிவு கூறப்படாமலேயே வாக்கியம் முடிவுறுகின்றது. மனவேகம், உணர்ச்சி ஆகியன சிறப்பாகப் புலப்படுத்தப்படு கின்றன.

பொதுவாக நோக்கும்போது கவி தையோ உரைநடையோ என்று இனங் காண முடியாது தடுமாறக்கூடிய தன் மையில் இவரது உரைநடைப் பகுதிகள் அமைவது, கூறவந்த காட்சி களை உணர்வுபூர்வமாக அனுபவித்துத்தா னும் கலந்து நின்ற தன்மையின் வெளிப்பாடாக இருக்கலாம்போலத் தோன்றுகின்றது. உணர்ச்சிபூர்வமாக நின்று கவிதைபோல் எழுதுவதும் மனம் சோர்வடைய கவிதைத் தன்மை குறைந்து குழப்பம் நிகழ்வதும் இதன் வெளிப்பாடாகவே இருக்கலாம் போலத் தெரிகின்றது.

**பாத்திர உரையாடல்கள்:**

பாத்திரங்களின் உரையாடல்களில் அவர்களின் கல்வித்தரம் சமூகநிலை முதலியவற்றின் தாக்கம் காணப் படுவது இயல்பு, பிரதேசத்திற்குரிய பேச்சுமொழியிலேயே பாத்திரங்கள் பேசுவது நாவலுக்கு மெய்ம்மைத் தன்மையைக் கொடுக்கும். இங்கு டானியலின் பாத்திரங்களின் உரை யாடல்களில் குறிப்பிடக்கூடிய அம்ச மாக இடம்பெறுவது பிரதேச. சாதி வேறுபாடுகளுக்கேற்ற பேச்சு மொழி யின் தன்மையே எனலாம். எடுத்துக் காட்டாக: " கானல்" என்னும் நாவலில் தம்பாபிள்ளை நயினார் அடிமை நன்னி யனோடு உரையாடுவது பின்வருமாறு அமைகின்றது.

"எடே நன்னியன்........!
என்னவாக்கும்......... இண்டைக்குப் பட்டைத்தண்ணி
முறை இல்லையாக்கும்........
எட நன்னியன்:.நான் கேக்கிறதுக்கு ஒழுங்காகப் பதில்
சொல்லிப்போடு: நேத்து இஞ்சை ரெண்டு சிலுப்பா
வெட்டுக்காரங்களும், தாடிச் சாமியும் வந்திட்டுப் போனவங்களாம்.
ஏனடா வந்தவங்கள்?

"சும்மா இதாலை வந்தாப்போலை வந்தவையாக்கும்
நம்மாணை வேறை ஒண்டும் இல்லையாக்கும்."[37]

"அடிமைகள்" என்னும் நாவலில் மழுவராயர் அம்மாளும் குடிமைக் கோவிச்சி இத்தினியும் பேசுவது பின்வருமாறு அமைந்துள்ளது:

"செல்லன் பெண்டில் செல்லிச் சியைப் புடிச்சால் என்னவாக்கும்? - இத்தினி.
"ஆரையடி இத்தினி: பள்ளி செல்லி யையோ.....?
கண்டறியாத கதை கதைக்கிறாய் என்ன: - அம்மாள்
"ஏனாக்கும் கொட்டைப்பெட்டி ஆறுமுகத்தார் பள்ளியின்ரை பால்

www.tamilarangam.net

குடிச்சுத்தானை வளர்ந்தவர்'' - இத்தினி.[38]

மேற்படி இரு உரையாடற் பகுதிகளிலும் முறையே நன்னியன், இத்தினி ஆகிய கீழ்த்தட்டு வர்க்கப்பாத்திரங்கள் மேல்தட்டு வர்க்கத்தினருடன் பேசும்போது 'ஆக்கும்' என்ற சொல்லை இணைத்து 'என்னவாக்கும்', இல்லையாக்கும், 'ஏனாக்கும்' என்றவாறு பேசுகின்றனர். இது அவர்களின் அடிமை நிலையை எடுத்துக் காட்டவே பயன் படுத்தப் படுகின்றது.

மேல்தட்டு வர்க்கத்தினர் கீழ்த்தட்டு வர்க்கத்தினருடன் பேசும் போது எடி, எடே என்ற அதிகாரக்குரல் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

மேல்தட்டு வர்க்கத்தினர் அடிமை வர்க்கத்தினரோடு பேசும்போது காணப்படும் அதிகாரத் தொனி குடிமைகளோடு பேசும்போது சற்றுத் தளர்வதையும் அவதானிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக. ''பஞ்சமர்'' என்னும் நாவலில் குடிமைக் கட்டாடி செல்லப்பனுடன் நாச்சியார் பேசுவது பின்வருமாறு அமைகின்றது.

''அப்ப நான் போட்டு வாறன் நாச்சியார்''

''என்ன கட்டாடியார் அவசரப் படுகிறீர்? சம்மந்தி வீட்டார் வந்திட்டினமெண்டு பார்க்கிறீரே? மாம் பழத்தியின்ரை மாமன் மாமியவை இவைதான் கட்டாடியார்.''[39]

இங்கே அதிகாரத்தொனி காணப் படாமல் ஒருவித மரியாதை கலந்த சொற்கள் இடம்பெறுகின்றன.

கீழ்த்தட்டு வர்க்கப் பாத்திரங்கள் தமக்குள் பேசும் போது அவர்களின் சாதாரண பேச்சுமொழி வெளிப்படுவதையே காண முடிகின்றது. எடுத்துக் காட்டாக: பஞ்சமர் நாவலில் சலவைத் தொழிலாளி செல்லப்பனும் மகள் முத்துவும் பேசுவது பின்வருமாறு அமைகின்றது.

''அப்பு சோத்தைத் தின்னணை!
எனக்கு வேண்டாம் மோனை, நீ தண்ணியை ஊத்து!
''எணை கொஞ்சமாய்த் தின்னணை.
சும்மா குடிச்சுக் குடிச்சுச் சாகாமை!
''எனக்கு வேண்டாம்மோனை.
பொடியன் திண்டுட்டுதே?
''ஓமணை அவர் திண்டிட்டாரணை.
நீவாணை அப்பு''.[40]

**முடிவுரை**

டானியல் யாழ்ப்பாணத்து உடைமை வர்க்கத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து கொடுமைகளை நேரடியாகவே அனுபவித்தவர். அந்த வாழ்வின் கொடுமைகளை, தனது துயர அனுபவங்களை, சாட்சியாக நின்று உலகிற்குக் காட்ட விரும்பியவர். தனது சாட்சியத்தின் பதிவுகளாகவே இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியபோது அப்படைப்புக் களில் யாழ்ப்பானத்து

www.tamilarangam.net

மண்வாசனை யை உருவாக்குவது அவசியமாகவே இருந்தது. இதனை உருவாக்குவதில் அவர் கையாண்ட மொழிவழக்குப் பெரும்பங்கினை வகித்துள்ளது. யாழ்ப்பாணச் சமூகத்தில் பயின்றுவந்து தற்போது அருகிப்போன சொற்களும் சொற்றொடர்களும் டானியலின் மொழியில் இடம்பெற்று யாழ்ப்பாணத்தின் மண்வாசனையை உணர்த்துகின்றன. சாதியம் சார்ந்த விடயங்களை இவர் பெரிதும் கையாள்வதால் யாழ்ப்பாணத்துச் சாதிக்கிளை மொழிகளும் மண்வாசனையை உருவாக்குகின்றன.

மற்றொரு வகையில் நவீன கவிதையினை ஒத்த அமைப்பு முறையில் சொற்களை அடுக்கி - ஓசை நயத்தை இடம்பெறச் செய்யும்போது அங்கு கவிதை போன்ற ஓசைநயமும் உணர்ச்சியும் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய பத்தியமைப்பு முறைகள் சில இடங்களில் ஓசை நயமின்றிக் குழம்பியும் காணப்படுகின்றன. இவை ஆசிரியரின் கவனக் குறைவினையே வெளிப்படுத்துகின்றன. அத்துடன் ஆசிரியர் தான் கூறவந்த விடயத்தைத் தெளிவாகக் கூறுவதை விடுத்து உணர்ச்சி மேலீட்டால் வெறும் வார்த்தை ஜாலங்களைக் காட்டி மனதளவில் திருப்தி பெற முயற்சிப்பதாகவும் கருத முடிகின்றது.

முடிவாக டானியலின் மொழியினை ஆய்வு செய்யும் போது டானியலுக்கு மட்டுமே உரிய தனிக் கூறுகளை இனங்காண முடியுமானால் அது அவரது நடைப்பாணியை வகுத்துரைக்க வழிவகுக்கும். அத்தகைய விரிந்த ஆய்வு இங்கு மேற்கொள்ளப்படாததால் இது அந்த வழியில் ஒரு ஆரம்ப முயற்சியே.

டானியலின் நடையினை விளங்கிக் கொள்ள அவர் வாழ்ந்த காலத்துச் சமூக வரலாற்றினை அறிந்துகொள்வதும் அவசியமாகும். துரதிஷ்டவசமாக அந்த வரலாறு இதுவரை எழுதப்படவேயில்லை. எழுதப்படாத வரலாற்றிற்கு டானியலின் எழுத்துக்கள் நல்லதொரு சாட்சியமாக அமையலாம். ஆனால் வரலாற்றை எழுதப்போகின்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கை இது பாதிக்கப்பட்டவனின் சாட்சியம் என்பதை மறந்துவிடக்கூடாது.

## அடிக்குறிப்புக்கள்

01. எம்.ஏ.நுஃமான், (1977) "ஆக்க இலக்கியமும் நடையியலும்" ஆக்க இலக்கியமும் அறிவியலும் அ.சண்முகதாஸ் (பதிப்பாசிரியர்) யாழ்ப்பாணம் ப.77
02. அகிலன், (1972) கதைக்கலை, சென்னை ப.122 மேற்கோள் எம்.ஏ.நுஃமான் மேலது.
03. க.கைலாசபதி, (1968) தமிழ் நாவல் இலக்கியம் சென்னை, ப. 98 மேற் கோள் எம். ஏ.நுஃமான் மேலது.
04. க.நா.சுப்ரமணியம்,(1985)நாவல்கலை, சென்னை, ப.153.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

05. மா.இராமலிங்கம், (1972)நாவல் இலக்கியம், சென்னை, ப.164.
06. எம்.ஏ.நுஃமான், மேலது.
07. மேலது.
08. டானியல், (1995) அடிமைகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை பக்:36, 40, 182 தண்ணீர், 1987, யாழ்ப்பாணம் ப.46 போராளிகள் காத்திருக்கின்றனர், 1975, கொழும்பு, பக்.68,108. குறுநாவல்கள், 1989, யாழ்ப்பாணம், பக்.62, 71, 106
09. டானியல், போராளிகள் காத்திருக்கின்றனர்: ப. 74
10. அடிமைகள்: பக்:24, 28, 71, 143 தண்ணீர் : ப. 24.
11. குறுநாவல், ப.207.
12. அடிமைகள் : ப: 24.
13. போராளிகள் காத்திருக்கின்றனர்; ப. 68
14. அடிமைகள்: ப.31
15. தண்ணீர் : ப: 143.
16. அடிமைகள் : பக்: 18,21,19,31
17. தண்ணீர் : பக். 93,94.
18. குறுநாவல் : ப. 193.
19. பஞ்சமர்: 1972, யாழ்ப்பாணம், ப: 15.
20. தண்ணீர்: ப: 22
21. மேலது, ப: 47
22. மேலது, ப: 52
23. மேலது, ப: 56
24. மேலது, ப: 74
25. அடிமைகள், ப:225.
26. மேலது, ப: 171
27. மேலது, ப: 59
28. தண்ணீர், ப: 197
29. அடிமைகள், ப: 255.
30. தண்ணீர், ப: 223
31. கானல், 1986, சென்னை, ப: 162.
32. மேலது, ப : 140
33. தண்ணீர், ப : 112
34. அடிமைகள் : பக் : 109 - 10
35. போராளிகள் காத்திருக்கின்றனர், ப: 59
36. பஞ்சமர் : ப: 154
37. கானல், ப : 73
38. அடிமைகள், ப : 76
39. பஞ்சமர், ப : 5 - 6
40. மேலது, ப : 18.

www.tamilarangam.net

# தென்னிந்திய சாஸ்திரீய இசையில் 32 தாய்ராகப் பட்டியலை நடைமுறைக்குக் கொண்டு வருதல் -ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

ஸ்ரீர. தர்ஷனன்.


## ஆய்வுச்சுருக்கம்

*தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ராகக் கட்டமைப்புக்கு அத்திவாரமாகத் திகழ்வது 72 தாய்ராகப் பட்டியலாகும். தற்போது வழக்கிலுள்ள 72 தாய்ராகப் பட்டியலிலுள்ள 40 தாய்ராகங்களும் தாய்ராகத்திற்குரிய தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதும், மீதி 32 தாய்ராகங்களையும் உள்ளடக்கி 32 தாய்ராகப் பட்டியலைப் புதிதாக அறிமுகப்படுத்துவதும் இவ்வாய்வின் பெறுபேறுகளாக அமைகின்றன.*


## 1.1 அறிமுகம்

தென்னிந்திய இசையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இராகங்கள் உள்ளதாகக் கணிப்பிடப் படுள்ளது. அவை யாவும் 72 தாய் ராகங்களை அடிப்படையாக் கொண்டு பாடப்பட்டு வருகின்றன. 72 தாய் ராகங்களும் ஒரு பட்டியலாக அமைக்கப்பட்டு அப்பட்டியல் "72மேளகர்த்தா அமைப்பு முறை" என்று அழைக்கப்படுகிறது. அவற்றுள் 40 தாய் ராகங்கள் விவாதிதோச முள்ளவை என்றும் மீதி 32 தாய்ராகங் களும் விவாதிதோஷ மற்றவை என்றும் கருதப்படும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ராகங்களுள், 72ஐ மட்டும் தாய்ராகப் பட்டியலில் சேர்த்துக் கொண்டமைக்காக, 4 விதிகளை தாய் ராகத்திற்கு இருக்க வேண்டிய பண்பு களாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் **அந்தப்பண்புகள் நான்கையும் 32ராகங்** கள் மட்டுமே திருப்திப்படுத்துகின்றன என்பதால், 32 தாய்ராகப்பட்டியலை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டு மென்பது இவ்வாய்வின் முடிவாக அமையும்.

## 1.2 இலக்கிய மீளாய்வும் முறையியலும்.

72 மேளகர்த்தா அமைப்பு முறை, ஒரு தாய்ராகத்திற்குரிய 4 இலக்கணங் கள், 32 தோஷமற்றராகங்கள்,40 விவாதி தோஷமுள்ள இராகங்கள் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட் டுள்ள நூல்களுக்கு உதாரணங்களாக வெங்கடமஹி எழுதிய சதுர்த்தண்டிப் பிரகாசிகை, பேராசியர் சாம்பமூர்த்தி எழுதிய A Practical Course in Carnatic Music Part-3, K.பொன்னையாப்பிள்ளை எழுதிய இசையியல், டாக்டர் பி.டி. செல்லத்துரை எழுதிய தென்னக இசை யியல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட கருத்துக்குவலுச்சேர்க்கும் நூல்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உ தா ர ண ங் க ளா க மதுரை K.Nபொன்னுச்சாமிப்பிள்ளை எழுதிய பூர்வீக ஸங்கீத உண்மை, டாக்டர் வீ.ப. கா.சுந்தரம் எழுதிய தமிழிசையியல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### 1.3 விவரிப்பும் முடிவுகளும்

72மேளகர்த்தாத் திட்டம் 12 சிறிய சக்கரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றினுள்ளும் 6ராகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (12x6= 72). 1,6, 7,36, ஆகிய 4சக்கரங்களிலுள்ள (4x6=24) ராகங்கள் அனைத்தும் தோஷமுள்ள ராகங்களாகும். மீதி 8 சக்கரங்களிலுமுள்ள முதல் ராகமும் கடைசி ராகமும் தோஷமுள்ள ராகங்களுள் சேர்க்கப்படும். இந்த வகையில் 16 (8X2) ராகங்கள் வருகின்றன. மொத்தமாக 40 (24+16) ராகங்கள் தோஷமுள்ளவையாகின்றன.

தாய்ராகத்திற்குரிய வரைவிலக்கணங்களாக மேற்காணும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவை 4 ஐயும் எடுத்து நோக்குவோம்.

1. ஸரிகமபதநி என்ற 7ஸ்வரங்களையும் ஆரோகணத்திலும், அவரோகணததிலும் கொண்டிருக்க வேண்டும்.
2. அந்த 7 ஸ்வரங்களும் மாறி மாறி வராமல் ஒழுங்கு வரிசையில் ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் காணப்படவேண்டும்.
3. ஆரோகணம் மேல்ஸ்தாயி ஸட்ஜத்தில் முடிவடைவதுடன் அவரோகணமும் மேல்ஸ்தாயி ஸட்ஜத்தில் ஆரம்பிக்க வேண்டும்.
4 ஆரோகணத்தில் வருகின்ற ஸ்வரஸ்தானங்கள் தான் அவரோகணத்திலும் வர வேண்டும்

இந்த 4 விதிகளையும் திருப்தி செய்யும் ஒரு ராகம் தான் தாய் ராகமாக இருக்க முடியும். இதுவரை கூறப்பட்ட கருத்துகள் நூல்களில் காணப்படுபவையும், இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவையுமாகும்.

இனி மேற்குறிப்பிட்ட 4 விதிகளையும் விவாதி தோஷமுள்ள 40 ராகங்களும் எப்படி மீறுகின்றன என்பதைப் பார்க்கலாம்.72தாய் ராகங்களுள் முதலாவதுராகம் கனகாங்கி அதற்குரிய ஸ்வரஸ் தானங்கள் ஸட்ஜம், சுத்த ரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், சுத்தநிஷாதம், என்பனவாகும். இதிலே காணப்படுகின்ற சுத்தகாந்தாரமும், சுத்தநிஷாதமும், ஸ்வரஸ்தானங்களே அல்ல; அவை ஸ்வரப் பெயர்கள் என்று அதே இசை நூல்களே கூறி நிற்கின்றன. அவை தமக்கெனப் பிரத்தியேகமான ஒரு அதிர்வெண்ணைக் கொண்டிருக்க

www.tamilarangam.net

வில்லை. சுத்தகாந்தாரமானது அச்சொட்டாக சதுஸ்ருதி ரிஷபத்திற்குரிய அதிர்வெண்ணிலேயே ஒலிக்கிறது. சுத்தநிஷாதமானது சரியாக சதுஸ்ருதி தைவதத்தின் அதிர்வெண்ணிலேயே ஒலிக்கிறது. இவற்றையும் அந்த இசை நூல்கள் ஏற்றுக் கொள்கின்றன. (உ-ம் தென்னக இசையில் -பக்கம்23) அப்படியானால் கனகாங்கியின் உண்மையான ஸ்வரஸ் தானங்களாவன ஸட்ஜம், சுத்தரிஷபம், சதுஸ்ருதிரிஷபம் சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், சதுஷ்ருதி, தைவதம், ஆகியவையாகும். இதிலே காந்தாரமும், நிஷாதமும் இடம்பெறவில்லை ஆகையால் இந்த ராகம் முதலாவது விதியைத் திருப்தி செய்ய வில்லை. அதாவது ஸரிகமபதநி என்ற 7ஸ்வரங்களும் ஆரோகணத்திலும் அவரோ கணத்திலும் காணப்பட வில்லை.

இதே போன்று இன்னொரு வகையான உதாரணத்துக்காக 36வது தாய்ராகமாகிய சலநாட்டையை எடுத்துக்கொள்வோம். இதன் ஸ்வரஸ் தானங்கள் ஸட்ஜம், ஷட்ஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், ஷட்ஸ்ருதி தைவதம் காகலி நிஷாதம் என்பன வாகும். ஷட்ஸ்ருதி ரிஷபமானது சாதாரண காந்தாரத திற்குரிய அதிர்வெண்ணிலும், ஷட்ஸ்ருதி தைவதமானது கைசிகி நிஷாதத்திற்குரிய அதிர்வெண்ணிலும் ஒலிக்கின்றன. ஆகையால் இதன் உண்மையான ஸ்வரஸ்தானங்களாவன ஸட்ஜம், சாதராண காந்தாரம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம், காகலி நிஷாதம், ஆகியவையாகும். இதிலே ரிஷபமும், தைவதமும்இடம் பெறவில்லையாதலால் இதுவும் தாயிராகத்துக்குரிய முதலாவது விதியைத் திருப்தி செய்யத் தவறி விட்டது.

அட்டவணை -1ல்காட்டப்பட்ட விளக்கங்களின்படி குற்றமுள்ள 40 ராகங்களும் தாய் ராகத்துக்குரிய இயல்புகள் இல்லாதவை. ஆகவே மீதி 32 ராகங்களை மட்டுமே தாய்ராகங்களாக ஏற்றுக் கொள்ளமுடியும். அந்த 32 ராகங்களிலிருந்துதான் மீதி 40 ராகங்களுட்படக் கர்நாடக இசையிலுள்ள அனைத்து ராகங்களும் தோன்றின என்ற முடிவுக்கு வருவதே அறிவு பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் படத்தக்கது. தென்னிந்திய இசையைப் பொறுத்தவரை ஒரே ஸ்வரத்தின் இரண்டு வகையான ஸ்வரத்தானங்களும் ஒரே இராகத்தில் காணப்பட்டால் அவற்றுள் ஒரு ஸ்வரஸ் தானத்தை அந்நிய ஸ்வரம் அல்லது தாய்ராகத்தில் வராத ஸ்வரம் என்று குறிப்பிடுவர். ஆகவே அந்த 40 ராகங்களும் அந்நிய ஸ்வரங்களைக் கொண்ட வர்ஜ ராகங்கள் என்ற வகுப்பினுள்ளடக் கப்பட வேண்டும். (வர்ஜராகம் என்றால் ஒரு ஸ்வரம் அல்லது ஒன்றுக்கு

www.tamilarangam.net

அட்டவணை:-1

| மேளகர்த்தா இலக்கம் | இராகத்தின் பெயர் | இல்லாத ஸ்வரம் ; ஸ்வரங்கள் |
|---|---|---|
| 01 | கனகாங்கி | காந்தாரம், நிஷாதம் |
| 02 | ரத்னாங்கி | காந்தாரம் |
| 03 | கானமூர்த்தி | காந்தாரம் |
| 04 | வனஸ்பதி | காந்தாரம் |
| 05 | மானவதி | காந்தாரம் |
| 06 | தானரூபி | காந்தாரம், தைவதம் |
| 07 | ஸேனாவதி | நிஷாதம் |
| 12 | ரூபவதி | தைவதம் |
| 13 | காயகப்பிரியா | நிஷாதம் |
| 18 | ஹாடகாம்பரி | தைவதம் |
| 19 | ஜங்காரத்வனி | நிஷாதம் |
| 24 | வருணப்ரியா | தைவதம் |
| 25 | மாரரஞ்சனி | நிஷாதம் |
| 30 | நாகாநந்தினி | தைவதம் |
| 31 | யாகப்ரியா | ரிஷபம், நிஷாதம் |
| 32 | ராகவர்த்தனி | ரிஷபம் |
| 33 | காங்கேயபூஷணி | ரிஷபம் |
| 34 | வாகதீச்வரி | ரிஷபம் |
| 35 | சூலினி | ரிஷபம் |
| 36 | சலநாட்டை | ரிஷபம், தைவதம் |
| 37 | ஸாலகம் | காந்தாரம், நிஷாதம் |
| 38 | ஜலார்ணவம் | காந்தாரம் |
| 39 | ஜாலவராளி | காந்தாரம் |
| 40 | நவனீதம் | காந்தாரம் |
| 41 | பவானி | காந்தாரம் |
| 42 | ரகுப்ரிய | காந்தாரம் ,தைவதம் |
| 43 | கவாம்போதி | நிஷாதம் |
| 48 | திவ்யமணி | தைவதம் |
| 49 | தவளாம்பரி | நிஷாதம் |
| 54 | விஸ்வம்பரி | நிஷாதம் |
| 55 | ச்யாமளாங்கி | நிஷாதம் |
| 60 | நீதிமதி | தைவதம் |
| 61 | காந்தாமணி | நிஷாதம் |
| 66 | சித்ராம்பரி | தைவதம் |
| 67 | ஸு"சரித்ர | ரிஷபம், நிஷாதம் |
| 68 | ஜ்யோதிஸ்வரூபிணி | ரிஷபம் |
| 69 | தாதுவர்த்தனி | ரிஷபம் |
| 70 | நாஸிகாபூஷணி | ரிஷபம் |
| 71 | கோஸலம் | ரிஷபம் |
| 72 | ரஸிகப்ரிய | ரிஷபம், தைவதம் |

# 32தாய்ராகப்பட்டியல்

| சக்கரம் | தொடர் எண் | சுத்த மத்திம மேளங்கள் | ரிக | தநி | பிரதி மத்திம மேளங்கள் | தொடர் எண் | சக்கரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சந்திரன் | 01<br>02<br>03<br>04 | ஹனுமத் தோடி<br>தேனுக<br>நாடகப்பிரியா<br>கோகிலப்பிரிய | ரி$_1$ க$_1$ | த$_1$ நி$_1$<br>த$_1$ நி$_2$<br>த$_2$ நி$_1$<br>த$_2$ நி$_2$ | பவப்பிரியா<br>சுபபந்துவராளி<br>ஷட்விதமார்க்கினி<br>ஸுவர்னாங்கி | 17<br>18<br>19<br>20 | அம்பு |
| 2. சந்திரன் | 05<br>06<br>07<br>08 | வகுளாபரணம்<br>மாயாமாளவகௌள<br>சக்கரவாகம்<br>ஸுர்யகாந்தம் | ரி$_1$ க$_2$ | த$_1$ நி$_1$<br>த$_1$ நி$_2$<br>த$_2$ நி$_1$<br>த$_2$ நி$_2$ | நாமநாராயணி<br>காமவர்த்தனி<br>ராமப்பிரிய<br>கமனச்ரம | 21<br>22<br>23<br>24 | 6 பருவகாலம் |
| 3. சந்திரன் | 09<br>10<br>11<br>12 | நடபைரவி<br>கீரவாணி<br>கரஹரப்பிரியா<br>கௌரிமனோஹாரி | ரி$_2$ க$_1$ | த$_1$ நி$_1$<br>த$_1$ நி$_2$<br>த$_2$ நி$_1$<br>த$_2$ நி$_2$ | ஷண்முகப்ரிய<br>ஸிம்மேந்திரமத்திமம்<br>ஹேமவதி<br>தர்மவதி | 25<br>26<br>27<br>28 | 7 ரிஷி |
| 1. சந்திரன் | 13<br>14<br>15<br>16 | சாருகேஸி<br>ஸரஸாங்கி<br>ஹரிகாம்போதி<br>தீரசங்கராபரணம் | ரி$_2$ க$_2$ | த$_1$ நி$_1$<br>த$_1$ நி$_2$<br>த$_2$ நி$_1$<br>த$_2$ நி$_2$ | ரிஷபப்பிரியா<br>லதாங்கி<br>வாசஸ்பதி<br>மேசகல்யாணி | 29<br>30<br>31<br>32 | 8 வஸு |



www.tamilarangam.net

www.tamilarangam.net

மேற்பட்ட ஸ்வரங்களைக் கொண்டிராத ராகங்கள் ஆகும்) அதாவது வர்ஜ பாஷாங்க ராகம் என்றால் தாய் ராகத்தில் வராத ஸ்வரத்தை அல்லது ஸ்வரங்களைக் கொண்டுள்ள ராகம்.

இந்த மாற்றத்தின் வழியாகப் பின்வரும் அனுகூலங்கள் தென்னிந் திய இசையிலே அடையப்பட முடியும்.

1. தென்னிந்திய இசையை முரண் பாடுகள் இன்றிவிளக்க முடியும்.
2. தென்னிந்திய இசையைப் பயிலும் மாணவர்கள் ஒரே அதிர்வெண் ணைக் கொண்ட ஒலியைச் சில ராகங்களில் "ரி"என்றும் வேறு சில ராகங்களில் "க" என்றும் உச்சரிக்காமல், எந்த ராகம் பாடி னாலும் அந்தந்த ஸ்வரஸ் தானத்தை அதற்குரிய சரியான குறியீட்டைப் பயன்படுத்தியே உச்சரிக்கக் கூடிய, தெளிவான நிலை உருவாகும்.
3. இதுவரை காலமும் அறிவியல் ரீதியான விளக்கமில்லாமல் 72 மேளகர்த்தாப் பட்டியலை மனப்பாடம் செய்து பரீட்சைகளில் ஒப்பித்து வந்த மாணவர்கள் போதிய விளக்கத்துடன் 32 மேளகர்த்தாப் பட்டியலைக் கொள் ளக் கூடியதாக இருக்கும்.
4 தென்னிந்திய இசையல்லாத வேறு துறைகளைச் சேர்ந்த அறி வியலாளர்களும் எமது 32தாய் ராகங்களை ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகும்.

இந்த ஆராய்சியின் நிறைவாக உருவாக்கப்பட்க்கூடிய பட்டியல் பின்வருமாறு அமையும்.

## உசாத்துணைநூல்கள்


1) சுந்தரம், வீ.ப.கா., (1994) ஜுன், 1வது தமிழிசையியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2) செல்லத்துரை, பி.டீ, (1995), தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.
3) R.Ranagaramanuja Iyyangar, R., (1972) History of South Indian Music, Madras.
4) Sambamoorthy.P, (1960), History of Indian Music, The Indian Music Publishing House, Madras.
5) ................................,(2001), A Practical Course in Carnatic Music III, The Indian Music Publishing House Madras.

www.tamilarangam.net

# மாறிவரும் பால்விகித மாற்றத்தில் பெண்கள் ஒரு சமூக குடிப்புள்ளியியல் நோக்கு

பேராசிரியர் கா.குகபாலன்


## ஆய்வுச்சுருக்கம்

*பாரம்பரியம், மூடநம்பிக்கை மற்றும் வறுமை ஒரு புறமும் விருத்தி பெற்று வரும் மருத்துவ தொழில்நுட்பம் மறுபுறமுமாக செயற்பட்டு வருவதன் விளைவாக உலகில் குறிப்பாக விருத்தி பெறாத, வளர்முக நாடுகளில் பெண் பிறப்புக்களைப் பெரிதும் விரும்பாத நிலை அதிகரித்து வருகின்றது. இதனால் பாலினத்தேர்வு, கருக்கலைப்பு, சிசுக்கொலை, பாலியல்வல்லுறவு, தகாப்புணர்ச்சி, விபச்சாரம். பெண்களது அந்தஸ்தினை அங்கீகரிக்காமை போன்ற பல்வேறு வகைப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகளினால் பால்விகிதத்தில் பெண்களை விஞ்சிய ஆண்கள் அதிகரித்து வரும் நிலை தொடர்கின்றது. இது எதிர்காலத்தில் பல்வேறுபட்ட பாதகமான சமூக பண்பாட்டு விளைவுகளை தோற்றுவிக்க வாய்ப்புண்டு. எனவே இது பற்றிய இவ்வாய்வு இந்தியாவை சிறப்புதாரணமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.*


## முன்னுரை

உலகில் விரைவாக அதிகரித்து வரும் குடித்தொகையினால் ஏற்பட்டு வரும் பிரச்சனைகள் பல. உணவு, உடை, உறையுள் என்பவற்றில் காணப் படுகின்ற போதாக்குறை அல்லது சமபங்கீடின்மை போன்றவற்றால் அல்லலுறும் உலகின் பெரும்பாலான மக்கள் தாமாகவே தமது மனச் சாட்சிக்குப் புறம்பாக வேண்டத்தகாத மனித நடத்தையின் விளைவாக பலவிடயங்களில் உலக சமூகத்தின் ஆரோக்கியத்திற்கும் பால் அமைப்பின் சமநிலைக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதற்கு மிக வேகமாக விருத்தி பெற்று வரும் விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவி யலின் வளர்ச்சியும் சில சந்தர்ப்பங் களில் விரும்பியோ விரும்பாமலோ சார்பு ரீதியிலான பங்களிப்பினை நல்கிவருகின்றது என்பதை மறுக்க முடியாது. இதன் விளைவாக பெண்கள் சமூகம் பல்வேறு வழிகளில் துன்பத்துக் குள்ளாக்கப்பட்டு வருவதுடன் பால் அமைப்பில் குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் உலகில் குறிப்பாக வளர்முக நாடுகளில் ஏற்பட்டு, அதன் விளைவாக சமூக, பொருளாதார, பண் பாட்டுப் பிரச்சனைகளைத் தோற்று வித்து வருகின்றது. இவை எதிர் காலத்தில் அதிகரிப்பதற்கான வாய்ப் புக்களே தென்படுகின்றன. அதாவது கருக்கலைப்பு, பாலினத்தேர்வு என்பன மருத்துவ, தொழில் நுட்ப அறிவியலு டன் தொடர்புடையதாக அமைய சிசுக் கொலை, பாலியலுறவு, பாலியல் வல்லுறவு, தகாப்புணர்ச்சி, விபச்சாரம், வரதட்சணைக்கொடுமை, பெண்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தஸ்தினை செயல்வடிவில் அங்கீ கரிக்காமை போன்ற பாதகமான சமூக, பண்பாட்டு நிலைகளாக வளர்ச்சி பெற்று வருவதனால் உலகில் குறிப் பாக வளர்முக நாடுகளில் பெண்கள் மட்டுமல்லாது முழுச்சமூகமுமே பல் வேறுபட்ட பிரச்சனைகளை நேரடி யாகவோ அன்றில் மறைமுகமாகவோ எதிர்கொள்ளவேண்டி வருவதை உணரத்தொடங்கியுள்ள போதிலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதுள்ளதைக்காண முடிகின்றது. (Kumari. R, Singh. R & Dubey. A, 1990,p. 76).

**ஆண் பிறப்பை விரும்புதல்**

இன்றைய உலகில் விருத்திபெற்ற நாடுகளிலாயினும் சரி வளர்முக நாடு களிலாயினும் சரி பாலினத் தேர்வில் ஆண்பிறப்புக்களையே விரும்பியேற் கும் நிலை காணப்படுகின்றது. விருத்திபெற்ற நாடுகளில் மருத்துவ அறிவியலின் வளர்ச்சியினால் கருவிலே பாலினத்தைக் கண்டுகொள் ளும் நிலை உருவாகவே விருப்பக் குறைவான பெண் குழந்தைப் பிறப்பு களைத் தவிர்த்து வருகின்றனர். அண்மைக்காலங்களில் குடும்ப அளவு மிகச்சுருங்கி விட்ட நிலையில் பெற் றோர் தமது பிற்காலத்தில் அரசுக ளின் உதவியினால் பிள்ளைகளின் உதவி பெரும்பாலும் தேவையற்ற நிலையினாலோ அல்லது பிள்ளை களால் சுமை என்ற நிலை காணப்படாத தனாலோ அந்நாடுகளில் பெண் குழந்தைகளை முற்றாக வெறுக்கும் நிலையினை அதிக அளவில் காண முடியவில்லை. பெண்களின் அந்தஸ்து உயர்ந்து காணப்படல், வேலைவாய்ப் பினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக விருக்கின்றமை, சீதனப்பேரம் சார்பு ரீதியாக தாழ்ந்த நிலையில் காணப் படுகின்றமை போன்ற காரணிகளின் விளைவாக பெண்கள் சம அந்தஸ்து டன் வாழ்ந்து வருகின்றனர்.

ஐ.நா சபையின் குடித்தொகைப் பிரிவின் மதிப்பீட்டின்படி உலகின் சராசரியாக 100 ஆண்களுக்கு 99 பெண் பிறப்புக்கள் நிகழ்கின்றன. ஆனால் வளர்முக நாடுகளில் சராசரி 100 ஆண் பிறப்புகளுக்கு 88-93 பெண்பிறப்பு களே நிகழ்வதாக தெரிவிக்கப்ப டுகின்றது. (World Development Report, 1997) இந்நாடுகளில் குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களில் பெண்பிறப் புக்களைக் கட்டுப்படுத்துவதையும் அவர்களுக்கான அந்தஸ்தினை வழங் காது பல்வேறு வழிகளில் துன்புறுத்தல் களுக்கு ஆளாக்கி வருகின்றமையையும் பல்வேறு மனித நேய அமைப்புக்களால் வெளிக் கொணரப்பட்டு வருகின்றன. உதாரணமாக இந்தியாவில் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் 54 நிமிடத்திற்கொருமுறை ஒரு பாலியல் வல்லுறவும் 26 நிமிடத்திற்கொருமுறை ஒரு மானபங்கப்படுத்தலும் 43 நிமிடத் திற்கொருமுறை கடத்தல் என ஒட்டு மொத்தமாக 7 நிமிடத்திற் கொருமுறை

www.tamilarangam.net

பெண்களுக்கெதிரான ஏதாவது ஒரு குற்றம் நிகழ்கின்றது. இவை தவிர பதிவு செய்யப்படாத குற்றங்கள் இவற்றை விட அதிகமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (India Today, April 2001)

கடந்த காலங்களில் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் பண்பு உலகில் எல்லாச் சமூகங்களிலும் காணப்பட்டிருந்தது. ஆனால் கைத்தொழிற் புரட்சியினைத் தொடர்ந்து மேற்கு நாடுகளில் இறப்பு வீதத்தில் வீழ்ச்சி நிலை ஏற்படவே பிறப்புக்களைக் கட்டுப்படுத்தும் நிலையானது மறைமுக, நேரடிக் காரணிகளால் உருவாகலாயின. (Chandna. R, 2001, pp 32-69) ஆனால் விருத்தியடையாத மற்றும் வளர்முக நாடுகளில் சென்ற நூற்றாண்டின் பின்னரைப்பகுதிகளில் சுகாதார, மருத்துவ விருத்தியின் விளைவாக இறப்பு வீதத்தில் வீழ்ச்சி நிலை ஏற்பட்ட போதிலும் பிறப்பு வீதத்தில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படவில்லை. எனினும் சில வளர்முக நாடுகளில் பிறப்பு வீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளதையும் காணமுடிகின்றது. (Asha Blende & Tara Kanikkar, 1987, p 111) இலங்கையில் 1999/2000 ஆம் ஆண்டில் பிறப்பு வீதம் 1000: 18.6 ஆகவும் இறப்பு வீதம் 1000:6.5 ஆகவும் காணப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (Population Data Sheet 2000/ 2001 Sri Lanka.) 1940களின் முற்பகுதி வரை 1000: 42 என்ற நிலையில் பிறப்பு வீதம் காணப்பட 1000: 38 என்ற நிலையில் இறப்பு வீதம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆண்-பெண் இரு பாலரும் ஒரே அளவினராக உலகில் வாழ வேண்டும் என்பது பொதுவான எடுகோளாகும். எனினும் இறப்பு, பிறப்பு, இடப்பெயர்வு ஆகிய குடித்தொகை இயக்கப்பண்புகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் ஆண்-பெண் சமநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. பொதுவாக பெண் பிறப்பிலும் பார்க்க ஆண் பிறப்புக்களே அதிகமாக நிகழ்கின்றது. எனினும் இறப்பினைப் பொறுத்தவரை அண்மைக்காலங்களில் பெண்களை விஞ்சிய ஆண்களின் இறப்புக்கள் அதிகமாகவுள்ளது. கருவளவாக்க காலத்திற்கு பிற்பட்ட காலப்பகுதிகளிலேயே பெண்களின் இறப்பு சார்புரீதியாக குறைவடைந்து செல்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1990 இல் 65 வயதிற்குள் 100 பெண்களுக்கு 85 ஆண்களே வாழ்கின்றனர். அதே போலவே 85 வயதிற்கு மேல் 100 பெண்களுக்கு 44 ஆண்களே வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்களை விட அதிகம் என்பது இதிலிருந்து புலனாகின்றது. (John.R.Weeks, 1992, p231)

உலகில் மிக நீண்டகாலமாக ஆண் பிறப்புக்களை விரும்பி ஏற்பதும் பெண் பிறப்புக்களை வெறுப்பதும் பொதுவாக எல்லாச் சமூகங்களிலும் காணக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்புகளாகவிருந்து வருகின்றன. உணவு, உடை, கல்வி, மருத்துவம், தொற்று நோய்த்தடுப்பு, நலன், நல்லெண்ணம் போன்றவற்றில் பெரும் பாலான பெண்கள் பெரிதும் புறக் கணிக்கப்படும் நிலையையே காணமுடி கின்றது. (Mita Bhadra, 1999 p.116) இந்திய காலாசாரத்தில் பெண்கள் ஒரு சுமையாகவும் ஆண்கள் பெறுமதி மிக்க வளமாகவும் கருதப்படுகின்றது. (Indian culture view daughter as a liability and the son as a valuable resource) இவற்றிற்கு சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள் முதன்மை பெறுகின்றன. குறிப்பாக மதம், சமய நிகழ்ச்சிகள், புராணக்கதைகள், கட்டுக்கதைகள், நடைமுறையிலுள்ள வழக்குகள் போன் றவற்றில் ஆண்களுக்கும், ஆண் பிறப் புக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக் கப்பட்டு வருகின்றது. கி.பி 600ஆம் ஆண்டில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு எழுத்தாளரின் கருத்தினை 1976இல் வில்லியம்ஸ் என்பவர் வெளியிடுகை யில் இருக்கு வேதகாலத்தில் ஆண் களுக்கே முக்கியத்துவம் கொடுக் கப்பட்டுள்ளதுடன் ஆண் குழந்தைகளைப் பெற இறைவனிடம் வேண்டிக் கொள்வ தும் வழக்கமாக இருந்துள்ளது என்கிறார்.

மதரீதியாக இந்துமதம் மட்டுமல்லாது பிற மதங்களும் ஆண்பிறப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. யூத கலாசாரத்தில் ஆண்குழந்தையைப் பெற்ற குடும்பத்தினருக்கு விசேட அந்தஸ்தும் மதரீதியிலான வாழ்வில் முக்கியத்துவமும் அளிக்கப்படுகின்றது. பெண்குழந்தைப்பிறப்பின் போது மதச் சடங்குகளோ அன்றில் மகிழ்ச்சிக் கொண் டாட்டங்களோ நடாத்துவதில்லை. இஸ் லாமிய வழக்கிலும் ஆண்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதாவது முஸ்லீம் விவாகத்தில் மணப் பெண்களை வாழ்த்துபவர்கள் கூட நீண்டகாலம் வாழ்வதுடன் ஆண் குழந்தைகளைப் பெற்று வளமாக வாழ வேண்டும் என வாழ்த்துவர். இந்துசமய வழக்கிலும் ஆண் பிறப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன் சமய, சமூக பண்பாட்டு நிகழ்வுகளிலும் ஆண்களுக்கே முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது.

ஆண்பிறப்புக்களை விரும்பி யேற்கும் நிலையில் பெற்றோர்களிடையே அபரிதமாக ஆசை கொண்டிருப்பதாக பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. ஒரு குடும்பத்தில் பெண் குழந்தைப் பிறப்பானது வந்து போகும் ஒரு அங்கத்தவராகவே கருதப்படுகின றது. (A daughter is considered transient member by her family) (Vinaya Prabha V. Baligar,1999, p.48) அதே வேளை ஆண்பிறப்புக்களைப் பொறுத்தவரை பரம்பரை அல்லது வம்சத்தின் தொடர்ச் சியினையும் குடும்பப் பெயரையும் உறுதிப்படுத்துகின்றது என்கின்றார். அதாவது குடும்பத்தின் பரம்பரையை ஆண் வர்க்கத்தை வைத்தே கண்டறி யப்படுகின்றது. மிகப்பழமையான பண் பாட்டினைக் கொண்ட குடும்பங்களில்

www.tamilarangam.net

ஆண்களின் மறுமணத்திற்கு ஆண் குழந்தைப் பிறப்பு இல்லாமையும் ஒரு காரணமாக அமைகின்றது என்பர் சமூகவியலாளர்கள். மேலும் சமூக மற்றும் உளவியல் பார்வையில் ஆண் குழந்தையைப் பிரசவித்த தாய்க்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்கின்றனர். ஆண் குழந்தைகள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பாக விருப்பர் எனவும் தம்மை பிற்காலத்தில் பராமரிப்பர் எனவும் கருதுகின்றனர். அதாவது ஆண்குழந்தையைப் பிரசவிப்பவள் தனது கணவரின் குடும்பத்தாரிடம் நன்மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக்கொள்ளும் நிலை மட்டுமல்லாது கணவனிடமிருந்து பாதுகாப்பு மற்றும் செல்வாக்கினையும் அன்பினையும் பெற்றுக்கொள்கின்றாள் என இந்தியாவை சிறப்புதாரணமாகக் கொண்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்குழந்தைகளைப் பெற்றவர்கள் இத்தகைய கௌரவத்தைப் பெற்றுக் கொள்வதில்லை. எனினும் சில சந்தர்ப்பங்களில் பெண்குழந்தை பிறக்கும் நிலையில் வீட்டுவேலை, உடல்வலுக் குறைந்த மற்றும் வயதானவர்களைப் பராமரித்தல் போன்றவற்றிற்கு அதிகம் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்ற குற்றச் சாட்டுக்களை பெண்கள் தொடர்பான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (Yadava. R. C. & others, 2001, pp 78-84)

பொருளாதார ரீதியாகவும் பெண் குழந்தைப் பிறப்புக்களை வெறுக்கும் நிலையும் பல சமூகங்களில் காணப்படும் பண்பாகவுள்ளது. அவர்களில் பெரும் பாலானோர் பொருளாதார உற்பத்தியில் ஈடுபடாதவர்களாக விருப்பர் எனவும் நிறுவனமயப்படுத்தாத துறைகளில் பெண்கள் வேலை செய்வதாயினும் குறைந்தளவு ஊதியமே பெற்றுக் கொள்கின்றனர் எனவும் உழைக்கும் ஆற்றல் பெண்களிடத்தில் இல்லை எனவும் வாதிடுகின்றனர் சிலர். எனினும் ஐ.நா சபையின் புள்ளிவிபர அறிக்கை யொன்றின் பிரகாரம் உலகில் மொத்த வேலை நேரங்களில் 67.0 சதவீதத்தை பெண்களே செய்கின்றனர் எனவும் உலக வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கினை பெண் களாலேயே பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுகின்ற போதிலும் பெண்கள் பெற்றுக் கொள்ளும் நேரடி வருமானம் 10.0 சதவீதமாகவும் உலகின் சொத்துக் களில் 1.0 சதவீதத்திற்கும் குறைவான பங்கினைக் கொண்டவர்களாகவு முள்ளனர். (Mridula Bhadauria, 1997, p 80) இவற்றிலிருந்து பெண்கள் சுரண்டப் படும் வர்க்கமாகவுள்ளனர் என்பதையே காட்டி நிற்கின்றது. தொழிலில் ஈடுபடும் பெண்கள் விவாக காலத்தின் போது தமது உழைப்பினை கணவனின் குடும்பத்துடன் இணைத்து விடும் பண்பினை பெரும்பாலான இந்திய சமூகங்களில் அவதானிக்கக் கூடிய நிகழ்வாக அமைந்துள்ளது. தெலுங்கு வழக்கில் வேறொரு வீட்டு தோட்டத்திற்கு நீர் இறைப்பதைப் போலவே பெண்களின் நிலையுமாகும். (Bringing up a daughter is like watering plants in a neighbor's garden) (Vinaya Prabha Baligar, 1999 p.10) மேலும் பெண் குழந்தைகளைப் பெற்றால் அவர்களுக்

www.tamilarangam.net

கான செலவீடு அதிகமாக விருக்கும். குறிப்பாக சீதனத்துக்காக பெற்றோர் கடினமாக உழைக்க வேண்டிவரும். விநாயகா பிரபா என்ற சமூகவியலாளரின் அவதானிப்பின்படி பெண்பிறப்புக்களால் வாழ்நாள் முழுவதும் பெற்றோர் பொருளாதார மற்றும் உளவியல் ரீதியாக பாதிக்கப்படும் நிலையையே இந்திய சமூகங்களிடையே காணமுடிகின்றது என்கிறார்.

வரலாற்றுக்காலங்களிலிருந்து பெண்கள் கௌரவத்துடனும் அறிவாற்றலுடனும் வாழ்ந்து வந்துள்ளனர் என பல்வேறு வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக வேத காலத்தில் பெண்களில் பலர் கல்வி கேள்விகளில் சிறப்புற்று இருந்தனர் என அறிய முடிகின்றது. இந்து சமய மரபின் படி ஆணும் பெண்ணும் சம அந்தஸ்துடன் வாழும் தத்துவத்தினையே கொண்டிருக்கின்றது. (Vijaya. G. Babras & others, 1999, p.38) இதே போலவே ஏனைய மதங்களும் பின்பற்றுகின்றன. ஆனால் நடைமுறையில் அவ்வாறாகக் காணப்படவில்லை.

**மகளிர்க்கெதிரான வன்முறை**

உலகின் குடித்தொகையானது 2001ஆம் ஆண்டில் 6000 மில்லியனாக உயர்ந்துள்ளது. இவர்களில் 60.0 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். பொதுவாக பலவீனமான பொருளாதார நிலை, வசதிகளற்ற குடியிருப்புக்களில் வாழல், வேலைவாய்ப்பற்றநிலை, அதிகளவு பிறப்பு, இறப்புப்போக்குகள், சமூகப் பிரச்சனைகள் அதிகரித்துள்ளமை, நீர்ப்பிரச்சனைகள் ஒருபுறமிருக்க பாதுகாப்பற்ற, பலருடனான பாலியலுறவு நடத்தைகள், சிறுவர் துஷ்பிரயோகம், கருக்கலைப்பு, குழந்தைக் கொலை, பாலியல் வல்லுறவு, தகாப் புணர்ச்சி, விபச்சாரம், சீதனக் கொடுமை, பெண்களின் சமூக அந்தஸ்தை அங்கீகரிக்காமை, உணவு உட்கொள்ளலில் போதாநிலை போன்ற பல விடயங்களில் பெண்கள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் உலகில் குறிப்பாக பிரதேச ரீதியில் பால்விகிதத்தில் (Sex Ratio) மாற்றங்கள் ஏற்படக்கூடியதாக விருப்பதால் பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன.

**பாலினத்தேர்வு**

கற்பத்திலுள்ள சிசுவினை பரிசோதனை மையங்களின் மூலம் பாலினத்தேர்வு செய்து பெண் சிசுவாயின் அதனைக் கருக்கலைப்புச் செய்வதன் மூலம் அழித்துவிடும் நிலை விருத்தி பெற்ற நாடுகளில் ஆங்காங்கே காணப்பட்டாலும் விருத்தியடையாத நாடுகளில் பொருளாதார ரீதியில் நடுத்தர வர்க்கத்தினரிடமும் அதற்கு மேற்பட்டோரிடமும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகளில் தெரிவிக்கப்

www.tamilarangam.net

படுகின்றது. இத்தகைய கருக்கலைப் பானது சட்டவிரோதமாக இருப்பினும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங் களில் சட்டத்தினை இசைவுக்குட் படுத்தி கருச்சிதைவினை நிறைவேற்று கின்றனர். இவை தவிர பின்தங்கிய பிரதேசங்களில் சட்டவிரோதமாக பாதுகாப்பற்ற நிலையில் மேற்கொள் ளப்பட்டு உயிர்ச்சேதமும் ஏற்படுகிறது. 1983/1984 காலப்பகுதியில் இந்தியா வில் பிரதான நகரமொன்றில் 78000 கற்பத்திலுள்ள பெண் குழந்தைகள் கருக்கலைப்பின் விளைவாக உயிர்ப் பிறப்பாக அமையவில்லை என New Scientist என்ற சஞ்சிகையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. மும்பாயில் உள்ள பிரபல மருத்துவ நிலையத்தில் 8000 பெண்களுக்கு கருக்கலைப்பு செய்யப் பட்டபோது 7999 பெண்களுக்கு கருவிலே பெண்குழந்தைகள் காணப் பட்டதாலேயே கருக்கலைப்பு செய்யப் பட்டதாக தகவல்கள் வெளியாகியுள் ளன. (Mita Bhadra, 1999, p.7) இந்தியா வில் மேற்கொள்ளப்படும் கருக்கலைப் பில் 8 பெண்களில் 7 பெண்கள் பாது காப்பற்ற முறையில் மேற்கொள்வ தால் பலர் இறப்பினைத் தழுவிக்கொள் கின்றனர். சார்புரீதியாக இந்தியாவில் 2 அல்லது 3 பெண் குழந்தைகளை பிரசவித்த மத்தியதர வர்க்கத் தாய்மார் களிடையே கருக்கலைப்பு பெருமளவில் மேற் கொள்ளப்படுகின்றது. (NIPCCD, 1987) பொதுவாக விருத்தியடையாத நாடுகளில் கிராமப்புறங்களில் பாரம் பரிய முறையில் அமைந்த பாதுகாப் பற்ற கருக்கலைப்பு பெருமளவில் மேற்கொள்ளப்படுவதால் அதனைத் தடுப்பதற்கு பெரும்பாலான நாடு களின் அரசுகள் பெருமுயற்சி எடுத்துவ ருகின்றன. உலகில் அதிகூடிய குடித் தொகையைக் கொண்ட சீனாவில் பாது காப்பற்ற கருக்கலைப்புக்கு எதிராக நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆபிரிக்கா வில் குறிப்பாக உபசகாரா நாடுகளில் வறுமையின் காரணமாக சட்டவிரோத மாக கருக்கலைப்புக்கள் மேற் கொள்ளப் படுவதாக உலக சுகாதார நிறுவனத் தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. பாலினத்தேர்வு செய்யும் மையங்கள் இந்தியாவில் மட்டுமல்ல உலகின் பெரும்பாலான நாடுகளில் செயற்பட்டு வருகின்றன. ஸ்கேன், அம்னியோ சேன்டசிஸ் (Amniocentesis) முதலானவை மூலமாக கருவுற்ற பாலினத்தைக் கண்டறியும், நுட்ப முறையை பயன்படுத்துதல் பெரும்பா லான நாடுகளில் சட்டப்படி குற்றமாகும். இருப்பினும் வளர்முக நாடுகளில் கருவிலுள்ள குழந்தையைக் கண்டறி வதற்கே பெருமளவிற்கு பயன்படுத்தி அதிகளவில் பணத்தினை வைத்திய சாலை நிர்வாகத்தினர் சம்பாதிக் கின்றனர் என அரசு சார்பற்ற பெண் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

**பாலினத்தை முன்கூட்டி அறிதல்**

கருவில் ஆணா, பெண்ணா என கண்டறிந்து கருச்சிதைவு செய்யும் முறை ஒருபுறம் வளர்ச்சி பெறும்

www.tamilarangam.net

அதேவேளை, கருவுறமுன்னர் எந்தக் குழந்தை வேண்டும் என்பதைத் தீர் மானிக்கும் நுட்ப முறையினைச் செயற் படுத்தல் அண்மைக் காலங்களில் வளர்ச்சி பெற்று வருகிறது. இதனால் ஆண் குழந்தைகளை விரும்பிப் பெற்றுக்கொள்ளுதலே அதிகரித்து வரு கிறது. இந்தியாவில் பாலினத்தை கண்டறிவது சட்டப்படி குற்றமாகும். (Indian Express, 20.09.2001, p6) ஆனால் கருவுற முன்னர் பாலினத்தை தீர் மானித்து கருவுறச் செய்வது பற்றி சட்டத்தால் குறித்துரைக்கப்பட வில்லை. இதனால் இவற்றை மேற் கொள்ளும் நிலையங்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கொள்கின்றன என்கின்றனர் குடும்பநல அதிகாரிகள். உதாரணமாக மதுரையில் இயங்கி வரும் (centre for Fertility Tests and Assisted Reproductive Technologies CFTART) என்ற உயிரணுத் தேர்வு மையத்தின் செயற்பாட்டினை பல்வேறு மகளிர் அமைப்பினரின் எதிர்ப்பின் விளைவாக இழுத்து மூடப்பட்டுள்ளது என அதன் நிறுவனர் பீ.ஏ. சந்திரசேகரன் தெரிவிக் கின்றார். இருப்பினும் வடஇந்தியாவில் பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதே சம், மகாராஸ்திரா, உத்தராஞ்சல் போன்ற மாநிலங்களில் சிறப்பாக செயற்பட்டு வருவதாக அறிய முடிகி றது. (India Today, July 18,2001, pp 34-37)

**சிசுக்கொலை**

கருக்கலைப்பு, கருவுறுமுன் பாலினத் தேர்வு என்பவற்றால் பால்விகிதத்தில் பெண்களின் பங்கு குறைவடைவது ஒருபுறமிருக்க சிசுக்கொலையானது வளர்முக நாடுகளில் நலிநத பொருளா தார அமைப்புள் அடங்குபவர்களி டையே சாதாரண விடயமாக பரிண மித்துள்ளதைக் காணமுடிகிறது. உல கில் அதிக குடித்தொகையைக் கொண்ட சீனா, இந்தியாவில் சிசுக் கொலையானது அதிகரித்து வரு வதாகப் பல்வேறு ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன. இதற்கான காரணி களாக வறுமை பொருளாதார நடவடிக் கைகளில் பெண்கள் ஈடுபாடு குறை வாக உள்ளமை, குடும்பச்சுமை, வம்ச சமூக அமைப்பு (Patriarchal Social Structure) மத நம்பிக்கை, மிகப்பெரிய ளவிலான சீதனக்கேள்வி (Huge Dowry Demands) பகட்டான விவாகங்கள் (Ostenatious Marriage) மற்றும் சில சடங்கு முறைகள் போன்ற பல காரணி களால் பெண்சிசுக் கொலையினை செய்கின்றனர். குறிப்பாக இந்தியா வில் சட்டத்துக்குப் புறம்பாக பெண் குழந்தைகளைக் கொல்வது நாளொன் றுக்கு சராசரி 35-45 ஆகக் காணப்படு கிறது. (India Todat, July 18, 2001 pp 34-36) இந்தியாவில் பெண் குழந்தைகளின் மொத்த இறப்பில் ஆறிலொரு பங்கு சிசுக்கொலையின் மூலம் நிகழ்கின்றது (Mita Bhadra, 1999, p.16) எனத் தெரிவிக் கப்படுகின்ற போதிலும் வருடாந்தம் பிறக்கும் 12.0 மில்லியன் பெண் குழந்தைகளில் 3.0 மில்லியன் அல்லது 25.0 சதவீதமானவர்கள் இறந்து விடுகின்றனர். இவர்களில் மூன்றி

www.tamilarangam.net

லொரு பங்கினர் 15 வது நாளினை எட்டிப்பிடிப்பதில்லை எனவும் மூன்றி லொரு பங்கினர் முதலாவது பிறந்த தினத்தை கூடக் கொண்டாடுவ தில்லையெனவும் தெரிவிக்கப்படுகின் றது. (Adarsh Sharma & Shanta G, 1999 p6) பிரபல்யமான குடிப்புள்ளியியலாள ரான ஏ.போஸ் என்பவரின் அவதானிப் பின்படி Rohtak District ல் 1000:866 பெண்குழந்தைகளையே காணமுடிகி றது என்கிறார் (Ashish Bose, 1996 p 28) தமிழ்நாடு சேலம் மாவட்டத்தில் 501 தாய்மாரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய் வில் 316 பெண்குழந்தைகள் பல்வேறு காரணிகளால் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றது. ராஜஸ்தான் மாநிலத்தில் Bhati சமூகத்தில் அண்மை யில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் பால் விகிதம் 1000: 550 பெண்களாகவே இருந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக சிசுக்கொலை இருந்துள்ளது. தமிழ்நாட்டில் சேலம், உசிலம்பட்டி, மதுரை, தர்மபுரி, கோவை பகுதிகளில் பெண் சிசுக் கொலை அதிகரித்துள்ளதாக தமிழக அரசே ஒப்புக்கொண்டுள்ளது. (The Hindu 14.08.2001 p 6) உதாரணமாக தர்மபுரி மாவட்டத்தில் ஆண், பெண் குழந்தைகளின் இறப்பு வீதம் முறையே 1000 : 35, 1000: 65 ஆகவுள்ளது. சேலம் மாவட்டத்தில் முறையே 1000: 31, 1000: 69 ஆகும். (UNICEF - George Thomas, 2000) இதே போலவே சீனாவிலும் பெண் சிசுக்கொலை அதிகரித்திருப்ப தால் 10.0 மில்லியன் பெண்கள் விவாக நிலையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள தாகவும், குறிப்பாக கிராமப் புறங்களி லேயே இதனை அவதானிக்கக் கூடிய தாக உள்ளது என அறியவருகிறது.

சிசுக்கொலையினை கள்ளிப்பால் கொடுத்தல், அலரிவிதையினைக் கொடுத்தல், நெல்மணிகளைக் கொடுத் தல், கிருமிநாசினியினைப் பருக்குதல், மூக்கைப்பொத்தி திணறடிப்பது, வெந்நீரில் அமுக்குவது, பட்டினி போடுவது, குரல் வளையை அறுத்தல், விஷத்தைக் கொடுத்தல், உயிருடன் மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளில் வீசிவிடல் போன்ற செயற்பாடுகளின் மூலம் செயற்படுத்துகின்றனர் (Guruswamy. G, 1995, pp 163-170, Mowli.V.C., 1992 p.62) இந்தியாவில் பழங்குடி மற்றும் நாடோடிகள் பெற்றெ டுக்கும் குழந்தைகளை குறிப்பாக பெண் குழந்தைகளை காவிச்செல் வதிலும் உணவு வழங்குவதிலும் உள்ள சிரமங்களைப் போக்கவே சிசுக் கொலையினைச் செய்கின்றனர். எனினும் பழங்குடிகள் எல்லோரும் சிசுக்கொலையினைச் செய்கின்றனர் எனக் கூறமுடியாது. உதாரணமாக ஆந்திர மாநிலத்திலுள்ள லம்பாடியர் பழங்குடிகளிடையே நீண்டகாலமாக விவாகநிலையைப் பொறுத்தவரை தமக்கேயுரித்தான நடைமுறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். பெண்கள் விவாகம் செய்வதற்கு முன்னர் கணவ னாக வரவிருப்பவர் சில மாதங்களுக்கு முன்னரேயே பெண் வீட்டில் தங்கி

www.tamilarangam.net

வாழ்தல் அவசியமாகும். அதாவது அவனது நடத்தை, சுபாவம் போன்ற வற்றில் திருப்தி கண்டால் மட்டுமே விவாகத்திற்கு பெண் வீட்டார் உடன் படுவர் (வேங்கடராமன். எஸ். ஆர். 1983, ப.26) அத்துடன் கணவனாக வரும் குடும்பத்தைச் சேர்ந்தோர் சில ஆடுகளை வரதட்சணையாக கொடுத்து விட்டே பெண்ணை அழைத்துச் செல் வது வழக்கமாகும். ஆனால் இந்நிலை அவர்களிடையே முற்றாக மறைந்து விட்டது. லம்பாடியர் இளைஞர்கள் தற் போது படித்து தகுதியான தொழில் பார்க்கத் தொடங்கவே பெண் வீட்டா ரிடமிருந்து வரதட்சணையை எதிர் பார்க்கின்றனர். இதனால் இச்சமூகத்தி னர் பெண் குழந்தைகளை கொன்றோ அல்லது குறைந்த விலைக்கு விற்றோ வருகின்றனர். (India Today 14.06.2000 p30).

**எச். ஐ.வி. எயிட்ஸ்**

பாலினத் தேர்வு கருக்கலைப்பு, சிசுக்கொலை என பல்வேறு நிலை களில் பெண்களின் எண்ணிக்கை யானது குறைந்து வருகின்ற நிலையில் இளவயதுத் திருமணம். பாதுகாப்பற்ற நிலையில் பாலுறவு கொள்ளல், தகாப்புணர்ச்சி, விபச்சாரம், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற நிகழ்வுகளால் பெண்கள் இறப்பினைத் தழுவிக் கொள்வதும் வளர்முக நாடுகளில் காணப்படும் பொதுவான நிகழ்வாகும். 2000 ஆம் ஆண்டில் உலகில் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயினால் குழந்தைகள், சிறுவர் வளர்ந்தோர் என 36.0 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள் ளனர் இவர்களில் 70.0 சதவீதத்திற்கு மேற்பட்டோர் ஆபிரிக்க உபசகாரா நாடுகளில் காணப்படுகின்றனரென UNAIDS தகவல்கள் தெரிவிக்கின்றன. 1970-2000 ஆண்டுகளிடையில் 17.0 மில்லியன் ஆபிரிக்கர்கள் எயிட்ஸ் நோயினால் இறந்துள்ளனர். இவர் களில் 3.7 மில்லியன் குழந்தைகள், சிறுவர்கள் அடங்குகின்றனர். ஆபிரிக்க நாடுகளில் வாழும் மொத்த மக்களில் 8.8 சதவீதமான வளர்ந்தோர் இந் நோய்க்கு ஆளாக்கப்படுகின்றனர். பொட்சுவானா, சுவாசிலாந்து, சிம் பாவே, லெசேத்தோ, சம்பியா, தென்னாபிரிக்கா, நபீமியா ஆகிய ஏழு நாடுகளில் சராசரி ஐந்து வளர்ந் தோரில் ஒருவருக்கு எச்.ஐ.வி. கிருமி தொற்றியுள்ளதாக அறிய வருகிறது. தென், தென்கிழக்காசிய நாடுகளில் 5.8 மில்லியன் மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். (Time, Feb 19, 2001. pp 38 - 50)

இந்நோய்க்கான காரணிகளில் முக்கியமானது பாதுகாப்பற்ற பாலி யலுறவாகும். வறுமை காரணமாக வாழ்வாதாரத்தைத் தேடுவதற்காகவே தமது உடலினை விற்கின்றனர். இந்தியாவில் 2.0 மில்லியன் மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றபோதிலும் இவ் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் எனவும் 2010 ஆம் ஆண்டில் உலகில் இந்தியா

www.tamilarangam.net

வே அதிகளவிலான எயிட்ஸ் நோயா ளர்களை கொண்ட நாடாக இருக்கும் என UNAIDS தெரிவிக்கின்றது. தென், தென்கிழக்காசிய நாடுகளில் தரகர்கள் மூலமாக கிராமங்களிலிருந்து சிறுமி கள், இளம்பெண்களை நகரப்பிரதேசங் களுக்கு கூட்டிச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்த வைப்பதாலும் பாலுறவில் திருப்தி நிலையினை எய்துவதற்கு பாதுகாப்பற்ற முறையில் உறவினை மேற்கொள்வதாலும் எச்.ஐ.வி. கிருமி களை உள்வாங்கிக் கொள்கின்றனர் இதில் பெண்களே அதிகளவில் பாதிக் கப்படுவதுடன் பிறக்கும் குழந்தை களும் இந்நோயுடன் பிறக்கின்றனர். தற்போது வரை மருத்துவ ரீதியாக குணமாக்க முடியாத இந்நோயினால் விரைவில் இறப்பு நிச்சயப்படுத் தப்படுவதால் எதிர்கால சந்ததியினர் குறிப்பாக பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

**விபச்சாரம்.**

விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களில் 80.0 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கிராமங்களிலிருந்து வறுமை, புறக்கணிப்பு, பெற்றோருக்கு பாரமாக இருத்தல், சீதனக் கொடுமை, தரகர்களின் ஆசைவார்த்தை போன்ற காரணிகளால் நகரத்தைச் சார்ந்து தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். National Commission of Women ஆல் அண்மையில் வெளியிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்தியாவில் வர்த்தக ரீதியிலான விபச்சாரத்தில் (Commercial Sex Workers) ஈடுபட்டவர் களில் 60.0 சதவீதமானவர்கள் சிறுமி கள் என தெரிவிக்கப்படுகின்றது. (Mita Bhadra. 1999, p17) சிறுவர் விபச்சாரத் திற்கு முக்கிய காரணிகளாக வறுமை, கடத்தல் (Abduction) பாலியல் வல்லு றவு, தகாப்புணர்வு (Incest) என்பன முக்கியமானதாக உள்ளது. மும்பாயில் விபச்சாரத்தில் 20.0 சதவீதமானோர் 8.14 வயதுச்சிறுமிகளே ஈடுபடுத்தப் பட்டு உள்ளனர். அத்துடன் பெண்களா லேயே நிர்வகிக்கப்படும் மதுபான நிலையங்கள் பல விபச்சார மையங் களாக வளர்ச்சி பெற்றுள்ளன. இவை இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் பெரும்பாலான நகரங்களில் காணப் படுகின்றது.

சிறுவர் விபச்சாரத்தின் மிக முக்கிய மான மையங்களாக சேரிகள் விளங்கு கின்றன. சில சந்தர்ப்பங்களில் பெற் றோர்களே சிறுமிகளை வலுக்கட்டா யப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடவைக் கின்றனர். (Umareddy Venkateswaralu, 1998, p48) தற்போது 400,000 சிறுமிகள் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர் களில் 40.0 சதவீதமானோர் வலுக் கட்டாயப்படுத்தி ஈடுபட வைத்துள் ளனர். 6.0சதவீதமானோர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதனால் சமூகத்தவர்களால் வெறுக்கப்பட்டவர் களாகவும் 8.0 சதவீதமானோர் தகாப் புணர்வின் காரணமாக பெற்றோர் உறவினர்களால் கைவிடப்பட்டவர் களாகவும் உள்ளனர் என கணிப்பிடப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டுள்ளது. (Vinaya Prabha V.Baligar, 1999, p.38)இந்தியாவில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் பிரகாரம் கிராமப் புறங்கள் நோக்கிய எயிட்ஸ் நோயின் வரவுக்கு தூரப் பிரதேசங்களுக்கான பொருட்களை ஏற்றி இறக்கும் பாரவூதி ளின் ஓட்டுனர்களும் அவர்களது உதவியாளர்களும் பிரதான பங்கினை வகிக்கின்றனர் என தெரிய வருகின் றது. இவர்கள் போக்கு வரவினை மேற்கொள்ளும் பாதைகளில் கிராமப்புற வறிய பெண்கள் பணத்திற்காக இவர் களுடன் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர் எனவும் இதனால் எச்.ஐ.வி. கிருமி பரப்பப்படுகின்றது எனவும் தெரிவிக்கப் படுகின்றது. இதனை "வீதியோர விபச்சாரம்" என அழைக்கப்படு கின்றது. சென்னை அடையாற்றில் உள்ள எயிட்ஸ் தடுப்பு அமையத்தின் ஆய்வின் பிரகாரம் பாரவூர்திகளின் சாரதி, உதவியாளர்களுடன் உறவு கொள்ளும் பெண்கள் 38.0 சதவீதத்தி லிருந்து 18.0 சதவீதமாக குறைவடைந் துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின் றது. இருப்பினும் மாணவர்கள் மற்றும் சேரிவாழ் இளைஞர்களிடையே பலருட னான பாலியலுறவு அதிகரித்து வருவ தால் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் இதனைப்பரப்புபவர்கள் இவர்களாகவே இருப்பர் என்கின்றனர். (வி.எச்.எஸ் எயிட்ஸ் தடுப்பு மையம், அடையாறு)

**இளவயது விவாகம்**

இளவயது விவாகம் விருத்தி அடை யாத நாடுகளில் காணப்படும் பொது வான பண்பாகும். இவ்விவாகத்திற்கு அவ்வச் சமூகங்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளே பெரும் பங்கினை வகிக்கின்றது. பின் தங்கிய சமூக, பொருளாதார அமைப் பினரிடையே இதனை அதிகமாகக் காணலாம். ஆபிரிக்க, தென், தென் கிழக்காசியா நாடுகளில் இதன் தாக் கத்தை உணரமுடிகின்றது. 2001ஆம் ஆண்டுக் குடித்தொகையின்படி சென்னை நகரத்தில் வாழும் மக்களின் 25.6 சதவீதமானவர்கள் சேரிகளில் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக் கின்றன. (இந்தியக் குடிக்கணிப்பு, 2001) இவர்களிடையே சராசரி விவாக வயது 16 ஆகும். இந்தியாவின் சராசரி விவாக வயது பெண்ணுக்கு 17.9 ஆகவும் ஆணுக்கு 23.3ஆகவும் உள்ளது. 4.5 மில்லியன் விவாகங்கள் வருட மொன்றுக்கு நிகழ்கின்றன. இதில் 3.0 மில்லியனுக்கு மேல் 19 வயதிற்குட் பட்ட பெண்கள் அடங்குவர். (Vinaya Prabha. V.Baliger 1999, p.28) 1981 ஆம் ஆண்டு கணிப்பின் பிரகாரம் 10.14 வயதிடைவெளியில் 7.7 சதவீதமான பெண்கள் கிராமங்களிலும் 2.4 சதவீத மான பெண்கள் நகரங்களிலும் விவா கம் செய்துள்ளனர். 15-19 வயதிடை வெளியில் 48.8 சதவீதத்தினர் கிராமங் களிலும் 28.1 சதவீதத்தினர் நகரங்களி லும் விவாகம் செய்துள்ளனர். (Ministry of Human Resource Development, India 1995) இவை தவிர புதுடில்லியிலுள்ள சமூக ஆராய்ச்சி மையம் ஒன்றினால் டில்லி, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் 12 கிராமங்களில் 400 விவாகமான கிராமப்பெண்களிடையே மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 8 - 10 வயதிடைவெளியில் 10.0 சதவீதத் தினரும் 11-12 வயதிடைவெளியில் 33.0 சதவீதத்தினரும் 13- 14 வயதிடை வெளியில் 21.0 சதவீதத்தினரும் விவாகம் செய்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (Centre for Social Research, New Delhi 1996) இவ்வாறான இளவயது விவாக நிலையானது பிரசவத்தாய் மற்றும் குழந்தை இறப்பு களை அதிகரிக்கச் செய்வதுடன் பல்வேறு சமூக பண்பாட்டுச் சிக்கல் களையும் தோற்றுவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. 2001ஆம் ஆண்டு பிற்பகுதியில் ராஜஸ்தான் மாநிலத் தில் 80 பெண் குழந்தைகளுக்கு விவாகம் செய்து வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர்களில் பெரும்பாலா னோர் பிறந்து ஒருவருடத்தைக் கூடப் பூர்த்தி செய்யாதவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

#### சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர் துஷ்பிரயோகத்தில் சிறுமி களே அதிகளவில் பாதிக்கப் படுகின் றனர். வறுமை, பெற்றோர் புறக் கணிப்பு, வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கான நிர்ப்பந்தம், கூடா நட்பு, பிச்சை எடுக்க வைத்தல், பாலியற் தொழில்களுக்கு அனுப்புதல் போன்ற பல்வேறு காரணிகள் சிறுவர் களை துஷ்பிரயோகம் செய்வதற்கு தூண்டுகின்றன. வளர்முக நாடுகளில் 10.0 சதவீதமான சிறுவர் பாலவினை நோய்களால் அவதிப்படு கின்றனர். இவர்களில் 65.0 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். இந்தியாவில் 25.0 சதவீதமான பாலியல் வல்லுறவில் 16 வயதிற்குட்பட்ட பெண்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். (India; Country Report 1995) மேலும் இந்தியாவில் பின்தங்கிய வகுப்பினரிடையே சிறுமிகளை தேவதாசிகளாக்கும் (Devadasi) வழக்கம் உண்டு. வட கர்நாடகாவில் 8-10 வயது சிறுமிகளை தேவதாசிகளாக்கும் வழக்க ம் இன்றுவரை நிலவுகின்றது. இதற்கு வறுமையும் மூடநம்பிக்கையுமே காரண மாகும். (Adarsh Sharma & Shanto. G, 1999 p.27) மேலும் அண்மைக்கால மதிப்பீடு களின் பிரகாரம் ஒவ்வொரு நான்கு மணித்தியாலத்திற்கு மூன்று அல்லது வருடத்திற்கு 7500 பாலியல் வல்லுற வுச் சம்பவங்கள் நிகழ்கின்றன. 16-30 வயதிடைவெளியில் 64.1 சதவீதமான தாகவும். 10-16 வயதிடை வெளியில் 20.5 சதவீதமானதாகவும் 10 வயதுக் குள் 2.6 சதவீதமானதாகவும் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. (Ahuja. R.1992, pp 188-211)

#### வரதட்சணைக் கொடுமை

விருத்தியடையாத கீழைத்தேசங் களில் விவாகத்தின் போது வரதட்சணை வழங்கும் வழக்கு நீண்ட காலமாக உள்ளது. வரதட்சணை என்பது தனது மகள் விவாக காலத்தின் ஆரம்பத்தில் தனிக்குடித்தனம் நடாத்துவதற்கு தேவையான அடிப்படைப் பொருட்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்குவதையே குறித்து நிற்கின்றது. ஆனால் இன்று பல வடிவங்களைப் பெற்று குடும்ப வாழ்வை சீர்குலைப் பதுடன் நின்றுவிடாது சில சந்தர்ப் பங்களில் இறப்பினையும் ஏற்படுத்தி வருவதை இந்தியப் பண்பாட்டில் காணமுடிகிறது. பெண்குழந்தைகளைப் பெற்றவர்களிடையே வரதட்சணை என்பது விவாகத்தின் முன்னரும் பின்னரும் துன்பத்தையே அளிக்கின்றது. (Kapur. p, 1995, p 127) இந்தியாவில் ஒரு நாளைக்கு வரதட்சணைக் கொடுமை யினால் சராசரி 45 பெண்கள் தற்கொலை செய்கின்றனர். தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 904 வரதட்சணை முறைப்பாடுகளும் 445 கற்பழிப்பு முறைப்பாடுகளும் 1614 பாலியல் பலாத்கார முறைப்பாடுகளும் 224 பெண் கடத்தல் முறைப்பாடுகளும் 2422 ஆபாசமாக பேசியதான முறைப் பாடுகளும் காவல்நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர முறைப்பாடுகளை தெரிவிக்காத வர்கள் அதிகமாக இருப்பர் என காவல் துறையினர் தெரிவிக்கின்றனர். (India Today 26 Sep, 2001, P 4)

**முடிவுரை**

உலக மக்களிடையே பால் விகிதத் தில் ஏறத்தாழ சமபங்கு இல்லாது விடின் பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. இயற் கைக்குப் புறம்பான செயற்பாடுகளி னால் பெண்களின் எண்ணிக்கை குறைக்கப்படுமிடத்து பல்வேறுபட்ட பிரச்சனைகளை நேரடியாகவோ அன் றில் மறைமுக மாகவோ எதிர்கொள்ள வேண்டியது தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது. உலகில் குறிப்பாக வளர்முகநாடுகளில் இதன் தாக்கம் பெருமளவிற்கு அதிகரித்து வரும் நிலையினை அண்மைக்காலங்களில் காணமுடிகின்றது.

விஞ்ஞான மருத்துவ வளர்ச்சி யானது அண்மைக்காலங்களில் துரிதமாகிவருகின்ற போதிலும் அதனை சில சந்தர்ப்பங்களில் வேண்டத்தகாத விடயங்களுக்கு உட்புகுத் தப்படுவதால் பால்விகிதம் செயற்கையாகக் குறைவடைவதற்கு உதவி புரிகின்றது. உதாரணமாக இந்தியாவில் கருவழிப் புக்கு மிகவும் அடிப்படைக்காரணியாக ஸ்கானிங் மூலம் கருவில் பாலினை அறிந்து கொள்வதுதான் என சமூக மற்றும் மருத்துவத்துறையினரின் கருத் தாக வுள்ளது. தமிழ் நாட்டில் 2001ஆம் ஆண்டு முதல் ஸ்கானிங் முறையின் மூலம் கருவில் இருக்கும் சிசுவின் பாலினத்தை அறிந்து கொள்வதற்கு சட்டரீதியாக தடை செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

சிசுக்கொலைக்கான முக்கிய காரணி வறுமையும் பண்பாட்டுச் சீரழிவுமே யாகும். இந்நிகழ்வானது பாரம்பரியமாக பின்தங்கிய சமூகங்களில் காணப்பட்டி ருந்த போதிலும் அண்மைக்காலங் களில் கிராமங்கள், நகரங்களிலும்

www.tamilarangam.net

ஆங்காங்கே காணப்படுவதாக அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் எச்சரித்து வருகின்றதைக் காண முடிகின்றது. இந்திய அரசின் ஊடகவியற்றுறையினர் இதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.

வறுமையே பலதரப்பட்ட பாலியலுறவுக்குப் பிரதான காரணியாகவுள்ளது. இதனால் தீர்க்க முடியாத எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயினை ஏற்படுத்திவிடுகின்றது. இந்நோயினால் ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்ற்றில் ஈடுபடுபவர்களின் மீள் இனப்பெருக்கத்தினால் நோய் பரவுவதுமட்டுமல்லாது பலர் விவாக வாழ்வினை இழந்துவிடுகின்றனர்.

ஆண் பிறப்புக்களை மதங்களும் பாரம்பரிய பண்பாட்டுக் காரணிகளும் நீண்ட காலமாக ஆதரித்து வருகின்றன. இதற்குப் பல காரணிகள் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் ஆண்கள் தொழிலில் ஈடுபட்டு குடும்ப வருமானத்தை உயர்த்தக்கூடியவர்கள் என்ற தப்பான கருத்து தொடர்கின்றது. விருத்தி பெற்ற நாடுகளில் பெண்களில் பெரும்பாலானோர் தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்நிலை வளர்முக நாடுகளிலும் ஏற்பட வேண்டும். அப்போது பெண் பிறப்புக்கள் குடும்பத்திற்கு சுமை என்ற கருத்து அற்றுப் போக வாய்ப்புண்டாகலாம். பெண் கல்வியிலும் அரசுகள் அக்கறை காட்ட வேண்டியதுடன் அரசியலிலும் பங்கு கொள்ள வைத்தல் வேண்டும்.

பால்விகித வேறுபாடு படிப்படியாக அதிகரித்து வருவதற்கு பொருளாதார சமூகக் காரணிகளே முதன்மையான காரணிகளாகவிருந்துள்ளதை அறிய முடிகின்றது. பெண்கருவழிப்பு, சிசுக் கொலைகளுக்கு முக்கிய காரணியாக விருப்பது தாழ்ந்த பொருளாதார நிலைமையேயாகும். இதற்கு ஆதாரமாக இந்தியா, சீனா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பல் வேறு ஆய்வுகள் துலாம்பரமாகத் தெரிவித்துள்ளன. எனவே இத்தகைய வேண்டத்தகாத நிலையிலிருந்து விடுபடவேண்டுமாயின் கிராமிய பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கு அரசுகள் பாடுபடல் வேண்டும். குறிப்பாக சகலருக்கும் வேலைவாய்ப்பினையும் அவர்களது வாழ்வாதாரங்களை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தலின் மூலமே இதனை போக்க முடியும். அத்துடன் பாலியற் கல்வியை சகலரும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்பாடுகள் அமையும் பட்சத்தில் பால்விகித வேறுபாட்டினால் ஏற்படும் விளைவுகளை அகற்ற முடியும்.

சிசுக்கொலை, கருக்கலைப்புச் செய்வதற்குப் பெண்களும் உடந்தையாகவிருப்பதை பல்வேறு ஆய்வுகள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் பெண்களின் மனநிலையில் மாற்றம்

www.tamilarangam.net

ஏற்பட வேண்டும். உளவியல் ரீதியாக பெண்களே பெண்களை வெறுக்கும் நிலை அகல வேண்டும் அத்துடன் அதிக பிறப்புக்களை கட்டுப்படுத்தல் வேண்டும். இதற்கு மிகவும் முக்கியமான காரணியாக கல்வியறிவற்ற நிலை காணப்படுவதேயாகும். எனவே கல்வியறிவினை மேம்படுத்தும் பட்சத்தில் பெண்களினது அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு. அத்துடன் ஆண் - பெண் சம அந்தஸ்து நிலைநிறுத்தப்படல் வேண்டும். குடும்ப ரீதியில் மட்டுமல்லாது சமூக, பிரதேச, பிராந்திய, சர்வதேச ரீதியில் பெண்களின் முக்கியத்துவத்தினையும் உணர்த்துதல் அவசியம். பெண்கள் விபச்சார விலைப் பொருளாக மாறுவதைத் தடுப்பதற்கான வழிவகைகளை குறிப்பாக அதனால் ஏற்படக்கூடிய தீங்குகளை ஊடகவியலூடாக குக்கிராமம் வரை எடுத்துச் செல்லுதல் வேண்டும். அப்போதுதான் பால் விகித சமநிலையைப் பேண முடியும்.

## Reference


1) Adarsh Sharma & Shanta Gopalakrishnan; (Mita Bhandra)(ed); (1998) Girl child in India, A guest for equality. Rawat Publication, New Delhi.

2) Ahuja.R; (1992); Social Problems in India, Rawat Publication, Jaipur,

3) Chandna. R.C; (2001) Geography of Population, Kalyani Publishes, Culcutta.

4) Desingu Setty,E. (1990) The Valayar of South India - Sex and Divorce, Inter - India Publications, New Delhi.

5) Guruswamy.G., (1995) Development Sociology: A Reader, Sterling Publishers Private Ltd, New Delhi.

6) John. R, Weeks;(1992), Population, Oxford University Press, London.

7) Kapur, P. (1995): "Girl Child Abuse: Violation of her human Rights", Social Change, Vol.25, No:2-3, July - Sept.1995.

8) Kar.S; (1997); "Missing Bracket" The Statesman, January 12.

9) Kumari.R, Singh.R and Dubey A, (1990), Growing up in Rural India: Problems and Needs of Adolesent Girls, New Delhi.

10) Mita Bhadra (Ed)(1999) Girl child in Indian Society, Rawat Publication, Jaipur,

11) Mowli. V.C., (1992); "Jogen" (Girl child Labour Studies), Sterling Publishers Pvt, Ltd. New Delhi,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12) Mridula Bhadauria: (1997) Women in India, some issues, APH Publishing Corporation, New Delhi.

13) Satish Balram Agnihotri: (2000) Sex Ratio Pattern in the Indian Population, sege Publications, New Delhi.

14) Savita Thakur Joshi; (1999) Women and Development, Mittal Publications, New Delhi.

15) Susanne Thorbe K; (1994) Gender and Slum Culture in Urban Asia; Vistaar Publications, New Delhi.

16) Ummareddy Venkateswarlu;(1998) Urbanization in India: Problems and Prospects, New Age International Publishers, New Delhi.

17) Viyaya. G. Babras and Vijaya Kottapalle; (1999) The Position of Women - During the Yadava Period - 1000 AD - 1300, AD, Himalaya Publishing House New Delhi.

18) Vinaya Prabha,.V Baligar, (1999) Mother and girl child: Reconstructing Attitutes, Rawat Publication, New Delhi.

19) Yadava.R.C; Yadava K.N.S; & Singh. K.K; (2001) Dynamics of Population Change, Emerging Issue of 21st Century, SHIPRA Publication New Delhi.

20) பக்தவத்சல பாரதி.சி; (1990) பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

www.tamilarangam.net

கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர். அவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதோ அல்லது சிந்தனை ஆசிரியர் குழுவினதோ கருத்தாக அமையாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# CINTANAI
The Journal of the Faculty of Arts,
University of Jaffna.


## CONTENTS


1. A Perspective Of Saivism In Contemporary Sri Lanka - A Review.
   Prof. N. Gnanakumaran

2. Suffixes Denoting The Gender Of Nouns In Jaffna Tamil.
   Sivarany Srisatgunarajah

3. The Basis Of Gender Classifications In Tamil Grammar.
   K. Ragubaran

4. Mrcchakatika - A Sanskrit Drama Reflecting Contemporary Social Life
   Srikala Jeganathan

5. An Introduction To Realism
   Dr. K. Visagaruban

6. The Path Of Bhakti As Depicted In Sivananda Lahari
   Vijayalaxmy Sivachchandiran

7. Employment And Universities: Bases And Problems - Special Reference To Developing Countries.
   M. Sinnathamby

8. Divine Forms Of Lord Muruka As Portrayed In Kandapuranam.
   Dr. M. Vethanathan

9. Stylistic Excellence In The Creative Writings Of Daniel.
   Dr. M. Ragunathan

10. A Review Of The Practical Application Of 32 Original Ragas In South Indian Classical Music.
    Srira. Dharsanan

11. Women In Changing Sex - Ratio : A Socio - Demographic Study.
    Prof. K. Kugabalan



| Vol. IX | March, 2004 | No. 1 |
|---|---|---|

Harikanan Printers, 424, K.K.S Road, Jaffna, T.P:021-2222717


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்